Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.30
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

பக்கம் 56 | சுடர்: 28 | கதிர்: 160 | வள்ளுவர் ஆண்டு: 2044 | சித்திரை 22, ஞாயிறு 05.05.2013



தெளிவான வானிலை
சிறு மழைக்கான
சாத்தியம் உண்டு

34°c 28°c

**உள்ளூர்**



பக். 05

அராலி - வேலணை
கடற்கரைப் பாதைக்கு
அபிவிருத்தியில்லை

**செய்திகள்**



பக். 10

காதல் விவகாரம்
கைகலப்பில் முடிந்தது:
5 பேருக்கு வாள்வெட்டு

**விளையாட்டு**



பக். 23

கொல்கத்தா நைட்
ரைடர்ஸ் அசத்தல்
வெற்றி

**சூரியகாந்தி**

**கட்டுரை**



பக். 01

புலிகளின்
புதுத் தலைவர்
புனைவுகள்

**மகளிர்**



பக். 11

நீங்களும் உலக
அழகிதான்...
சில குறிப்புகள் இதோ...

**அரசியல்**



பக். 02

கூட்டமைப்பின் பதிவுப்
பிரச்சினை வடமாகாணத்
தேர்தலைப் பாதிக்காது.

## காணி, பொலிஸ்

# அதிகாரங்களை பறித்த பின்னரே வடக்கு தேர்தல்

### அரசமைப்பு மாற்றத்தின் பின்னரே தேர்தல் அறிவிப்பு
### ஜனாதிபதி மஹிந்த இரகசியத் திட்டம்



கோப்புப்படம்

கொழும்பு, மே 5

மாகாண சபைகளிடமிருந்து பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களைப் பறித்தெடுத்த பின்னரே வடமாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி அரசு தீர்மானித்துள்ளது என்று நம்பகரமாக அறியவந்தது.

இன்னும் மூன்று வாரங்களுக்குள் அரசமைப்பில் திருத்தம் கொண்டுவருவதற்கான திட்டம் முன்வைக்கப்படும் என்றும், அதன் பின்னரே வடக்குத் தேர்தலுக்கான கட்டளையை ஜனாதிபதி பிறப்பிப்பார் என்றும் தெரியவருகின்றது.

அரசமைப்பில் 13ஆம் சரத்தில் திருத்தங்களை செய்வதன் மூலம் காணி அதிகாரங்களை முழுமையாக மத்திய அரசின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவும், பொலிஸ் அதிகாரங்களில் முக்கியமானவற்றை மத்திய அரசின் கீழ் கொண்டுவரவும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

இதுதொடர்பான வரைவுத் திட்ட யோசனைகளைத் தயாரிக்கும் பணி ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த வரைவு பரிந்துரைக்காக சட்ட மா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பப்படும்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்திலிருந்து பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை நீக்காது வடமாகாண சபைத் தேர்தலை அரசு நடத்தினால், அரசுக்கான ஆதரவு விலக்கப்படும் என அரசின் கடும்போக்குடைய பங்காளிக் கட்சிகளும், சிங்கள அமைப்புகளும் தொடர்ச்சியாக மிரட்டி வருகின்றன.

அதேவேளை, ஆறு வருடங்களாகவுள்ள ஜனாதிபதியின் பதவிக்காலத்தை ஐந்து ஆண்டுகளுக்கு வரையறுக்கவும் மூன்று வருடங்களில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தவும் வழிவகுக்கும் வகையிலும் அரசமைப்பில் திருத்தம் கொண்டுவரப்படவுள்ளது.

இவை அனைத்தும் அரசமைப்பின் 19ஆவது திருத்தமாகக் கொண்டு வரப்படவுள்ளன. இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர,

"பொலிஸ், காணி அதிகாரங்களைப் பறித்தெடுத்த பின்னரே, வடக்குத் தேர்தலுக்கான அறிவிப்பை ஜனாதிபதி விடுப்பார் என எமக்கு உறுதியான தகவல்கள் கிடைத்துள்ளன. ஜனாதிபதியின் இந்த முடிவுக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்." - என்றார்.

(த-சி)

> ❝
> **ஹெல உறுமய போர்க்கொடி**
>
> கொழும்பு,மே 05
>
> எதிர்வரும் செப்ரெம்பரில் திட்டமிட்டபடி வடமாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தால், அரசில் இருந்து வெளியேறுவோம் என ஜாதிக ஹெல உறுமயவும் எச்சரித்துள்ளது.

## ஊடக சுதந்திரத்தில் இலங்கை 162 ஆவது இடம்

பரிஸ், மே 5

ஊடக சுதந்திரம் பேணப்படும் நாடுகளில் இலங்கை 162 ஆவது இடத்தில் உள்ளது. இந்தப் பட்டியலை எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பு வெளியிட்டுள்ளது. இந்த ஆண்டுக்கான அட்டவணையில் இந்தியாவுக்கு 140ஆவது இடம் கிடைத்துள்ளது. இந்தியாவில் கடந்த 2012ஆம் ஆண்டு மட்டும் பத்திரிகையாளர்கள் நால்வர் கொல்லப்பட்டுள்ளனர். இந்தப் பட்டியலில், பின்லாந்து முதல் இடத்தை பெற்றுள்ளது. இங்கிலாந்து 29 ஆவது இடத்திலும், அமெரிக்கா 32 ஆவது இடத்திலும் இருக்கின்றன. ரஷ்யா 148 ஆவது இடத்தை பிடித்துள்ளது. சீனா 173 ஆவது இடத்திலும், பாகிஸ்தான் 159 ஆவது இடத்திலும் உள்ளன. (த)

## வலி.வடக்கில் மேலும் 25 ஏக்கர் சுவீகரிப்பு

யாழ்ப்பாணம், மே 5

வலி.வடக்கில் 6 ஆயிரத்து 381 ஏக்கர் காணிக்கு மேலதிகமாக மேலும் 25 ஏக்கர் காணி சுவீகரிக்கப்படவுள்ளது. இதற்கான அறிவித்தல்கள் ஒட்டப்பட்டுள்ளன.

கடந்த மாதம் 22ஆம் திகதி வலி.வடக்கு மற்றும் வலி. கிழக்குப் பிரதேசங்களில் 6 ஆயிரத்து 381 ஏக்கர் காணிகளை சுவீகரிப்பதற்கான அறிவித்தல்கள் ஒட்டப்பட்டன.

இதனைவிட மேலதிகமாக 25 ஏக்கர் காணியை சுவீகரிப்பதற்கான அறிவித்தல்கள் கடந்த வாரம் அங்கு ஒட்டப்பட்டுள்ளன.

தென்மயிலை கிராமத்திலேயே இந்த அறிவித்தல்கள் ஒட்டப்பட்டுள்ளன. காணி சுவீகரிப்புச் சட்டத்தின் கீழேயே இந்தக் காணிகளும் சுவீகரிக்கப்படவுள்ளன.

(த-5)

# ரூ.2 1/2 கோடி கொள்ளை

### 4 மாதங்களில் குடாநாட்டில் கொள்ளையர்கள் காட்டில் மழை

யாழ்ப்பாணம்,மே.05

யாழ்.மாவட்டத்தில் கடந்த நான்கு மாதங்களில் நகைகள் உட்பட இரண்டரைக் கோடி ரூபாவுக்கு அதிகமான பெறுமதிகொண்ட பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். கொள்ளையடிக்கப்பட்டவற்றில் குறிப்பிட்டளவான பொருள்களை மாத்திரமே தாம் மீட்டுள்ளனர் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

வாராந்தம் நகைகள் உட்பட இலட்சக்கணக்கான பெறுமதி கொண்ட பொருள்கள் திருட்டு, கொள்ளை மூலமாக குடாநாட்டில் பறிபோகின்றன. கடந்த மாதம் 52 இலட்

தொடர்ச்சி: பக்கம் 24

# பலாத்கார காணி பறிப்பல்ல

### பஸில் அளிக்கும் விளக்கமிது

கொழும்பு, மே 5

வடக்கில் காணி சுவீகரிப்புத் தொடர்பான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் குற்றச்சாட்டுகளை நேற்று திட்டவட்டமாக நிராகரித்த பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, வடக்கில் ஓர் அங்குலக் காணியைக் கூட அரசு பலாத்காரமாக எடுத்ததில்லையென்

காணிகள் எதனையும் அரசு எடுத்திருக்குமாயின் தமிழ்க் கூட்டமைப்பு அதனை நிரூபித்துக் காட்டட்டும் என்றும் சவால் விடுத்தார்.

வடமாகாணசபைத் தேர்தல் குறித்து நேற்று கருத்துத் தெரிவித்த அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, தேர்தலுக்கு முன்னர் தமிழ் மக்க

தொடர்ச்சி: பக்கம் 24

## வரணி துயிலும் இல்ல காணி தாரை வார்ப்பு

யாழ்ப்பாணம், மே 5

கொடிகாமம் வரணி மாவீரர் துயிலும் இல்லம் அமைந்திருந்த காணி 522 ஆவது படைப் பிரிவுக்கு விற்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவீரர் துயிலும் இல்லம் இருந்த இந்த 7 ஏக்கர் காணி, படையினரின் தேவைக்கானது எனக் காணி சுவீகரிப்புச் சட்டத்தின் கீழ் அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த 7 ஏக்கர் காணியும் இரண்டு உரிமையாளர்களுக்கு சொந்தமானது. இந்தக்காணியை இராணு வத்தினர் சுவீகரிப்பதற்கு அதன் உரிமையாளர்கள் சம்மதித்துள்ளனர் என பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

துயிலும் இல்லம் அமைந்திருந்த காணி என்பதால் வேறு யாரும் அதனை வாங்க முன்வர மாட்டார்கள் என்பதால் விற்பதற்குச் சம்மதித்ததாக உரிமையாளர்கள் தெரிவித்தனர். (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# உறுதிகள் பெயர் மாற்றாமையால் வழக்குகள் தொடுப்பதில் சிக்கல்

## வலி.வடக்கு மக்கள் சிலர் சிரமத்தில்

யாழ்ப்பாணம், மே 5

வலி.வடக்கில் காணி சுவீகரிப்புக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கு மக்கள் தயாராக உள்ள போதும், அவர்களின் உறுதிகள், ஆவணங்கள் பெயர் மாற்றம் செய்யப்படாமையினால் சிக்கல்களை எதிர்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வலி.வடக்கில் இராணுவத் தலைமையகம் அமைப்பதற்காக 6 ஆயிரத்து 381 ஏக்கர் காணி சுவீகரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் கடந்த 22 ஆம் திகதி ஒட்டப்பட்டுள்ளன.

இதனை எதிர்த்து வலி.வடக்கு மக்களினால் வழக்குத் தாக்கல் செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழ்த் தேசிய கூட்டமைப்பினால் நீதிமன்றில் வழக்குத் தொடரப்படவுள்ளது.

இதற்காக வலி.வடக்கு மக்களின் காணி உறுதிகள், தேசிய அடையாள அட்டைகள் என்பவற்றைப் பதிவு செய்யும் நடவடிக்கைகள் கடந்த சில தினங்களாக இடம்பெற்று வருகின்றன.

இதுவரை ஆயிரம் பேர் வரையில் தமது ஆவணங்களைப் பதிவு செய்துள்ளனர்.

பெருமளவான வலி.வடக்கு மக்கள் ஆவணங்களை வைத்திருக்கின்ற போதிலும் அவர்கள் அவற்றைப் பெயர்மாற்றம் செய்யாமல் வைத்துள்ளதால் வழக்குத் தாக்கலுக்கான பதிவுகளில் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

சிலர் தமது தந்தை, தாயின் பெயரில் உறுதிகளை வைத்துள்ளனர். அவை பெயர் மாற்றம் செய்யப்பட்டாலே வழக்குத் தாக்கல் செய்ய முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. வழக்குத் தாக்கல் செய்வ தற்கு மக்கள் ஆயிரக்கணக்கில் தயாராக இருக்கின்றபோதும், பெயர் மாற்றம் செய்யப்படாமையினால் சிக்கல்களை எதிர் கொள்கின்றனர். (த-5-86)

> “ பெருமளவான வலி.வடக்கு மக்கள் ஆவணங்களை வைத்திருக்கின்ற போதிலும் அவர்கள் அவற்றைப் பெயர்மாற்றம் செய்யாமல் வைத்துள்ளதால் வழக்குத் தாக்கலுக்கான பதிவுகளில் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

# அஸாத் சாலியின் கைது திட்டமிட்ட பழிவாங்கல்

## மனோ கணேசன் கண்டனம்



கொழும்பு, மே 5

முஸ்லிம் மக்கள் தொடர்பில் அரசு முன்னெடுக்கும் கொள்கைகளை அஸாத் சாலி கடுமையாக விமர்சனம் செய்கின்றார். இவரது கைது என்பது திட்டவட்டமான பழிவாங்கலே.

இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் கூறியுள்ளார். தேசிய ஐக்கிய முன்னணி செயலாளர் அஸாத் சாலியை கைது செய்தமையை எதிர்த்து கொழும்பு பெரிய பள்ளி வாசல் பகுதியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

அஸாத் சாலி ஒரு காலத்தில் இந்த அரசுடன் இருந்தவர் தான். அரசின் மீதான நம்பிக்கையீனத்தால் எம்முடன் இணைந்தவர். அவர் மீதான பயங்கரவாதக் குற்றச்சாட்டுக்கள் என்ன?

புதிதாக அவர் மீது குற்றம் சுமத்தும் கோவைகள் கிடைத்துள்ளனவா? அரசில் இருக்கும் வரை இல்லாத கோவைகள் இப்போதுதான் கிடைத்தனவா? அப்படியானால் இன்று அரசில் இருப்பவர்களுக்கும் எல்லாம் கோவைகள் இருக்கின்றனவா?

தமிழக பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலும் அவர் கைதுக்குக் காரணம் என்று சொல்லப்படுகின்றது. சில வேளைகளில் தற்செயலாகப் பத்திரிகைகளில் கருத்துக்கள் மாறி பிரசுரமாவது சகஜம். இந்த சில்லறைத்தனமான காரணங்களை வைத்துக் கொண்டு ஒருவரை பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்ய முடியாது.

அஸாத் சாலியின் மீது குற்றம் இருந்தால் அதை சட்டத் தின் படி நீதிமன்றுக்கு கொண்டு வாருங்கள். அதற்கு முன்னர் அவர் விடுவிக்கப்பட வேண்டும். அவரது ஜனநாயக அரசியலை முன்னெடுக்க சுதந்திரம் உறுதியாக வேண்டும்- என்றார். (த-5-ரி)

# திருக்கேதீஸ்வரத்துக்கு திருமலை பாவநாச தீர்த்தம்



திருகோணமலை, மே 5

திருக்கேதீஸ்வர ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் ஆரம்பமாவதை முன்னிட்டு திருகோணமலையிலிருந்து பாவநாசத் தீர்த்தம் அங்கு எடுத்துச் செல்லப்படவுள்ளது.

திருக் கேதீஸ்வரப் பெருமானின் வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 15 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகவுள்ளது. இந்த ஆலயத்தின் முதலாவது நாள் இரவுத் திருவிழா இவ்வாண்டும் வழமை போன்று திருகோணமலை மாவட்ட சைவ அடியார்களால் நடத்தப்படவுள்ளது. இதற்கென திருக்கோணேஸ்வரத்திலிருந்து பாவநாசத் தீர்த்தம் திருகோணேஸ்வர ஆலய பரிபாலன சபையினரால் திருக்கேதீஸ்வர ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்படவுள்ளது. திருக்கோணமலை அடியார்கள் திருக்கேதீஸ்வரம் செல்வதற்கு போக்குவரத்து ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. திருக்கேதீஸ்வரம் செல்ல விரும்பும் அடியார்கள் தமது பெயர்களை திருகோணமலை வில்லூன்றி ஸ்ரீ முருகன் தொண்டர் சபையில் பதிவு செய்து கொள்ள முடியும் எனவும் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு வில்லூன்றி கந்த சுவாமி ஆலய முன்றலில் இருந்து அடியார்களை ஏற்றிச் செல்லும் பஸ் புறப்படும் எனவும் திருகோணமலை மாவட்ட திருக்கேதீஸ்வரர் ஆலய திருவிழாச் சபையின் செயலாளர் ந.செல்வஜோதி அறிவித்துள்ளார். (க-40)

# மஹிந்தவை சந்தித்தார் அசோக் கே.காந்தா

கொழும்பு, மே 05

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் பதவியில் இருந்து விடைபெறும் அசோக் கே காந்தா நேற்றுமுன்தினம் காலை ஜனாதிபதி மஹிந்தவைச் சந்தித்துப் பிரியாவிடை பெற்றுக் கொண்டார்.

அலரி மாளிகைக்கு நேற்று முன்தினம் காலை தனது பாரியாருடன் சென்று அசோக் கே காந்தா, ஜனாதிபதியைச் சந்தித்து விடைபெற்றார்.

இந்தச் சந்திப்பின் போது ஜனாதிபதியுடன் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உமற்றும் அதிகாரிகளும் பங்கேற்றனர்.

அசோக் கே காந்தா இந்திய வெளிவிவகார அமைச்சின் கிழக்காசியாவுக்கான செயலராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அதேவேளை இலங்கைக்கான புதிய தூதுவராக வை. கே.சின்ஹா விரைவில் கொழும்பில் கடமைகளைப் பொறுப்பேற்பார் என்று கூறப்படுகிறது. (த)

# கைதடி அரச சிறுவர் இல்ல குழந்தை காய்ச்சலால் சாவு

## தாயாரால் விற்கப்பட்டு மீட்கப்பட்ட பின் பரிதாபம்

யாழ்ப்பாணம், மே.5

யாழ்ப்பாணத்தில் தாயாரால் சட்டவிரோதமாக 4 ஆயிரம் ரூபாவுக்கு விற்கப்பட்ட பெண் குழந்தை கைதடி அரச சிறுவர் இல்லத்தில் காய்ச்சலால் பீடிக்கப்பட்டு யாழ். போதனா வைத்திய சாலையில் உயிரிழந்தது.

சட்ட விரோதமாக விற்கப்பட்ட குறித்த 6 மாதப் பெண் குழந்தை பொலிஸாரால் மீட்டுச் சிறுவர் நீதிமன்றினால் கைதடி அரச சிறுவர் இலத்தில் ஒப்படைக்கப்பட்டு வளர்க்கப்பட்டு வந்தது.

ஊர்காவற்றுறையைச் சேர்ந்த கணவனைப் பிரிந்த பெண்ணே குழந்தையைப் பெற்றுள்ளார். அதனைச் சுன்னாகத்தைச் சேர்ந்த தம்பதியினருக்கு 4 ஆயிரம் ரூபாவுக்கு விற்றுள்ளார்.

குழந்தையை விற்ற தாயாருக்கும் வாங்கிய தம்பதியினருக்கும் எதிராக பொலிஸார் யாழ். சிறுவர் நீதிமன்றில் மார்ச் 12 ஆம் திகதி வழக்குத் தொடர்ந்தனர்.

இரு பெற்றோரையும் 2 வாரங்கள் விளக்கமறியலில் வைக்கவும் பெண் குழந்தையை கைதடி அரச சிறுவர் இல்லத்தில் வைத்து பராமரிக்கவும் உத்தரவிட்டிருந்தது நீதிமன்றம்.

கடந்த 29 ஆம் திகதி காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட குழந்தை யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு கடந்த புதன் கிழமை உயிரிழந்தது.

திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் விசாரணை மேற்கொண்டார். குழந்தையின் தாயின் விருப்பத்தின் பேரில் சடலம் தாயாரிடம் ஒப்படைக்கப்பட்டது. சட்ட விரோதமாக குழந்தையை விற்பனை செய்தமை தொடர்பான வழக்கு நீதிமன்றில் நிலுவையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-4)

# ‘லயன் எயார்’ விமானத்தின் பாகங்கள் நேற்று கடலில் மீட்பு

யாழ்ப்பாணம், மே 5

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினால் சுட்டு வீழ்த்தப்பட்டதாகக் கூறப்படும் ‘லயன் எயார்’ நிறுவனத்தின் அன்ரனோவ் விமானத்தின் சில பாகங்கள் இரணைதீவு கடலுக்கு அடியிலிருந்து நேற்று சனிக்கிழமை மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



விமானத்தின் பாகங்கள் கடலில் இருந்து மீட்கப்படுகின்றன

1998ஆம் அண்டு செப்ரெம்பர் மாதம் பலாலி விமான நிலையத்திலிருந்து 48 பயணிகள் மற்றும் 6 பணியாளர்களுடன் புறப்பட்ட விமானம் 10 நிமிடங்களிலேயே தரைக் கட்டுப்பாட்டு நிலையத்துடனான தொடர்பை இழந்து காணமற் போயிருந்தது.

இந்த விமானம் பூநகரி கடல் பகுதிக்கு அண்மையில் சுட்டு வீழ்த்தப்பட்டிருந்ததாகக் கூறப்படுகிறது.

இந்த நிலையில் இந்த விமானத்தின் பாகங்களைத் தேடும் பணிகள் கடந்த பெப்ரவரி மாதம் ஆரம்பிக்கப்பட்ட போதும் காலநிலை சீர்கேடுகள் காரணமாக அந்தப் பணிகள் இடை நிறுத்தப்பட்டிருந்தன.

நேற்றுமுன்தினம் முதல் மீண்டும் விமானப் பாகங்களை மீட்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. நேற்று மதியம், விமானத்தின் இயந்திரம், மோட்டாரின் பின்புறப் பகுதி என்பன கண்டுபிடிக்கப்பட்டன. (த-5)

# யாழ்.அக்கரைப்பற்று பஸ் சேவை ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே.05

யாழ்ப்பாணத்திலிருந்து அக்கரைப்பற்றுக்கான பஸ் சேவை நளைமுதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக இலங்கைப் போக்குவரத்து சபையின் வடமாகாண பிராந்திய முகாமையாளர் செ. அ.அஸ்கார் அறிவித்துள்ளார்.

பொது மக்களின் வேண்டுகோளிற்கிணங்க ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தச் சேவை தினமும் பிற்பகல் 4 மணிக்கு யாழ்.பஸ்நிலையத்திலிருந்தும் நண்பகல் 12 மணிக்கு அக்கரைப்பற்று பஸ் நிலையத்திலிருந்தும் புறப்படவுள்ளன.

மேற்படி பஸ்களுக்கான ஆசனப்பதிவுகளை யாழ். மற்றும் அக்கரைப்பற்று பஸ் நிலையங்களில் பெற்றுக் கொள்ள முடியுமென அஸ்கர் தெரிவித்துள்ளார். (த-16)

# ஐரோப்பிய ஒன்றியத்தின் வதிவிடப் பிரதிநிதியாக டலி

## இலங்கையில் கடமைகளைப் பொறுப்பேற்கிறார்



கொழும்பு, மே 5

ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதி நிதியாக டேவிட் டலி நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கைக்கான தற்போதைய வதிவிடப் பிரதிநிதியான பேர்னாட் சவேஜ் ஜின் இடத்துக்கு இவர் நியமிக்கப்பட்டுள்ளார். தற்போது டேவிட் டலி அவுஸ்திரேலியா மற்றும் நியூஸிலாந்துக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் வதிவிடப் பிரதிநிதியாக கன்பராவிலிருந்துகொண்டு செயற்பட்டு வருகிறார்.

பதவி விலகிச் செல்லவுள்ள பேர்னாட் சாவேஜ் 2009 ஆம் ஆண்டின் இறுதிப் போர் வேளையில் இலங்கையில் ஐரோப்பிய ஒன்றியத்தின் வதிவிடப் பிரதிநிதியாக சிரமமானதொரு வேளையில் பணியாற்றிய அனுபவம் கொண்டவர்.

அவரது நான்கு ஆண்டுகள் கால பதவி வேளையிலேயே இலங்கை மனித உரிமை மீறல்கள் தொடர்பான ஐரோப்பிய ஒன்றியத்தின் விமர்சனங்களுக்கு உள்ளாக நேர்ந்தது டன் ஜீ.எஸ்.பி.பிளஸ் வரிச் சலுகையையும் இழக்க நேரிட்டது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-5678844, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@utnayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# அந்த வேகம் இந்தப் பிரதேசத்துக்கு இனி எப்போதுதான் வருமோ...?!

கல்வி நிர்வாக சேவைக்கான நியமனத்தில் அரசியல் செல்வாக்கும் தலையீடும் இடம்பெற உள்ளதாகச் சுட்டிக்காட்டி, அதனை எதிர்த்து, ஆசிரியர் சங்கம் ஒன்று நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

மேற்குறிப்பிட்ட நியமனத்துக்கென நடத்தப்பட்ட பரீட்சைக்குச் சுமார் 37,000 பேர் தோற்றியிருந்தனர். அவர்களில் 416 பேர் பரீட்சையில் தேறினர். ஆனால், பரீட்சைக்குத் தோற்றாத 600 பேருக்கு நியமனம் வழங்குவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யவிருப்பதாகத் தெரிவித்தே, இலங்கை ஆசிரியர் சங்கம் நீதி கோரி, நீதிமன்றத்தை நாடி உள்ளது.

கல்வி நாட்டினதும் மாணவர்களினதும் பெறுமதிமிக்க சொத்து. அதற்குக் குந்தகம், பாதிப்பு உண்டாக்கப்படுவதால் எதிர்காலச் சந்ததியினரான இன்றைய மாணவர்களும், நாடும் பலப்பல வகையான பின்னடைவுகளை எதிர்கொள்ள நேரிடும் என்பது சொல்லித் தெரிய வேண்டிய ஒன்றல்ல.

மேலும், போட்டிப் பரீட்சையில் சித்தி எய்திய திறமைசாலிகளை ஓரங்கட்டிவிட்டு, அரசாங்கத்துக்கு வேண்டப்படுபவர்களை உள்வாங்கும் முடிவு கண்டிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

இதே வரிசையில், இதேவழியில் ஏனைய அரசாங்கப் பதவிகளும் நிரப்பப்பட்டால், அரச நிர்வாக இயந்திரம் வினைத்திறனற்ற கையாள்களால் நிரப்பப்பட்டு, மக்களுக்குச் சேவையாற்றும் முதன்மைப் பணி முடக்கமுதையாக மாறிவிடும், உருவெடுக்கும்.

அரசின் இத்தகைய செயல்கள், நடவடிக்கைகள் எதிர்காலப் பிரசைகளான மாணவர்களை மட்டுமன்றி, நாட்டின் வளர்ச்சியையும் அதன் அபிவிருத்தியையும் சிதிலமாக்கிவிடும்.

மேற்குறிப்பிட்ட வரிசையில் ஆசிரியர்களின் இடமாற்ற விடயமும் எப்போதும் ஒரு விவகாரமாகவே மாறிவருகிறது. அதிகாரிகளின், அரச அதிகாரிகளின் விருப்பு வெறுப்பின் பேரில்– அதன் அடிப்படையில்– ஆசிரியர் இடமாற்றங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இப்போது, தமிழ்ப் பிரதேசங்களில் அரசியல் செல்வாக்குகளின் ஊடாகவே மிகப் பெரும் எண்ணிக்கையில் ஆசிரியர் இடமாற்றங்கள் மேற்கொள்ளப்படுவதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

ஆசிரியர்களின் இடமாற்றங்களில் தேசிய இடமாற்றக் கொள்கை கடைப்பிடிக்கப்பட்ட நிலை, இப்போது அனேகமாக அற்றுப்போய்விட்ட நிலையே காணப்படுவதாக ஆசிரியர்கள் தரப்பில் குறை கூறப்படுகிறது. வடக்கை, குறிப்பாக வன்னி மாவட்டங்களில் தேவைக்கேற்ற விகிதத்தில் ஆசிரியர்கள் சேவையில் இணைக்கப்படவில்லை.

வன்னி மாவட்டத்தின் மிகப் பல பாடசாலைகளில், பல வருடங்களாக கணித, விஞ்ஞான பாடங்களைப் போதிக்க நிரந்தர ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை. அதிகாரிகளினாலும், அரசாங்கத்தினாலும் இது குறித்து வேண்டிய கவனம் எடுக்கப்படவில்லை என்று பெற்றோரால் மிகுந்த கவலையுடன் சுட்டிக்காட்டப்படுகிறது.

அந்த மாவட்டத்தில் நீடித்த போர் முடிவுற்று இன்னும் இரண்டு வாரங்களில் நான்கு வருடங்கள் கழிந்து ஏகுகின்றன. ஆனால் பாடசாலைகளுக்கான பௌதிக வளங்களை அடிமட்ட நிலையில் ஏனும் பேணுவதிலோ, ஆகக் குறைந்த தேவையான எண்ணிக்கையில் ஆசிரியர்களை நியமிப்பதிலோ வேண்டிய அக்கறையும் கவனமும் கொள்ளப்படுவதாகத் தெரியவில்லை.

அரசும், அதன் அதிகாரிகளும், அரசியல் பிரதானிகளும் வன்னி மாவட்டத்தில் மக்கள் நலத் திட்டங்கள் மேற்கொள்ளப்படுவதாக சொல்லளவில் இனிக்கப் பேசினாலும்–

அந்த மாவட்டத்தில் கல்வித் துறையை அதன் வளர்ச்சியை உண்டாக்குவதில் உணர்வுபூர்வமாகச் செய்றபடவில்லை என்று அந்தப் பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கிறார்கள்.

மொத்தத்தில், இடம்பெயர்ந்த மக்களில் மிகப் பெரும் எண்ணிக்கையானோர் இன்னமும் மீள்குடியேற்றம் என்ற 'லேபல்' ஒட்டப்பட்டு தகரக் கொட்டில்களிலேயே விஷஜந்துக்களின் மத்தியில் நாள்களைக் கழிக்கிறார்கள். வன்னிச் சிறார்களின், மாணவர்களின் கல்வி நிலையும், அதன் வளர்ச்சி நாடிய துரிதமான செயற்பாடுகளும் ஆகக் குறைந்த தேவைக்குத்தானும் கைக்குக் கிடைத்ததாகக் கூறவும் முடியவில்லை.

தனது உள்ளார்ந்த அரசியல்சார் வஞ்சகத் திட்டங்களை நிறைவேற்றுவதில் அரச தரப்பு, அதன் அதிகாரிகள் காட்டும் வேகம், வன்னி மக்களின் வாழ்வு நிலையை, எதிர்காலச் சந்ததியினரின் கல்வி நிலையை உயர்த்துவதில் காட்டப்படவில்லை என்பதே கள நிலைமை. அவ்வாறிருக்க, அவர்[illegible] அவற்றில் மனதார்ந்த மாற்றம் எப்போது வரும் [illegible] எதிர்பார்க்கத் தானும் இயலவில்லையே...!

# சொந்த வாழ்விடங்களை அபகரிப்பது அடிப்படை மனித உரிமை மீறலாகும்

## யாழ்.மறைக் கோட்ட பொதுநிலையினர் கழகம் கண்டனம்

யாழ்ப்பாணம்,மே 5

பொதுமக்களதுசொந்த வாழ்விடங்களை அபகரிப்பது அடிப்படை மனித உரிமை மீறலாகும். இதனை வன்மையாகக் கண்டிக்கிறோம் என்று யாழ்.மறைக் கோட்ட பொது நிலையினர் கழகம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக அனுப்பி வைக்கப்பட்டுள்ள கண்டன அறிக்கையின் முழு வடிவம் வருமாறு:-

கடந்த இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாக இடம்பெயர்ந்து பல்வேறு இடங்களில் அகதிகளாக வாழும் தமிழ் மக்களின் பூர்வீக வாழ்விட நிலங்களை அபகரிப்பது அடிப்படை மனித உரிமை மீறலாகும். இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

குறிப்பாக வலிகாமம் வடக்கு மக்களின் வாழ்விடங்களையும் அவர்களுடைய விவசாய நிலங்களையும் அபகரிப்பது தமது சொந்த இடங்களில் மீள குடியமர்ந்து வசிக்க முடியும் என்ற அந்த மக்களின் நீண்ட எதிர்பார்ப்பைத் தகர்ப்பதாகவே அமைந்துள்ளது.

இங்கு மட்டுமல்ல வடக்கு, கிழக்கின் பல்வேறு பகுதிகளிலும் இவ்வாறான செயற்பாடுகள் தீவிரமாக முன்னெடுக்கப்படுவது தேசிய நல்லிணக்கத்துக்குக் குந்தகமாக அமையும் என்பதையும் சுட்டிக்காட்டுகின்றோம்.

போரால் மோசமாகப் பாதிக்கப்பட்டு தமது வாழ்விடங்களை இழந்து துன்புறும் மக்களுக்கு அவர்களுடைய வாழ்விடங்களையும், நிலங்களையும் வழங்கி மீளக் குடியமர்த்துவதே அரசின் தலையாய கடமை என்பதையும் குறிப்பிட விரும்புகின்றோம்.

இந்தச் செயற்பாடுகளுக்கு எதிராக மக்களால் முன்னெடுக்கப்படும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் எமது பூரண ஆதரவையும் தெரிவித்துக் கொள்கின்றோம்– என்றுள்ளது. (ம)

> “ கடந்த இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாக இடம் பெயர்ந்து பல்வேறு இடங்களில் அகதிகளாக வாழும் தமிழ் மக்களின் பூர்வீக வாழ்விட நிலங்களை அபகரிப்பது அடிப்படை மனித உரிமை மீறலாகும்.

# மாறி வரும் இன்றைய உலகில் கைவிடப்படும் பாரம்பரியம்

## பேராசிரியர் சத்தியசீலன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 5

மாறிவரும் உலகில் எமது பாரம்பரியம் கைவிடப்படுகிறது. யாழ்ப்பாணத்தின் பாரம்பரியம், மருத்துவம், மொழி, வாழ்க்கை முறை, குடும்பஉறவு போன்றன இன்று சிதைவடைந்து விட்டன.

பழையதைப் பாதுகாப்பது அநாகரிகம் என்று நாம் கருதி அவற்றை குறைந்த விலைக்கு விற்று நாம் புதிய பொருள்களை வாங்குகிறோம்.

ஆனால் விற்கப்படுவது பழைய பொருள்கள் மட்டுமல்ல. அதனூடாக சொற்களையும் மொழியையும் பாரம்பரியத்தையும் விற்கின்றோம் என்பதை மறந்து விடுகிறோம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறையினரின் முயற்சியால் வெளிவந்த ''யாழ்ப்பாண வாழ்வியல்'' நூல் வெளியீட்டு விழா கைலாசபதி கலையரங்கில் வியாழக்கிழமை இடம்பெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறைத் தலைவர் பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் தலைமையில் இடம்பெற்ற இந்த விழாவில் பல்கலைக்கழகப் பதில் துணைவேந்தர் பேராசிரியர் ச.சத்தியசீலன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கும்போது யாழ்ப்பாணத்தின் கலை, பண்பாடு போன்றவற்றை ஆவணப்படுத்த பல்கலைக்கழகம் முன்வரவேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தனர்.

அதனை இன்று வரலாற்றுத்துறை செய்து முடித்துள்ளது. ஆனாலும் இவ்வாறாக ஆவணப்படுத்தும் பொறுப்பு அனைத்து துறைகளுக்கும் உண்டு என்று அவர் மேலும் கூறினார். (ம-ரி)

# ஓய்வுபெற்ற இ.போ.ச பணியாளர் 64 பேருக்கு பணிக்கொடை

## 6.5 மில்லியன் ரூபா வழங்கப்பட்டது

யாழ்ப்பாணம்,மே 5

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் சாலைகளில் பணியாற்றி ஓய்வுபெற்ற பணியாளர்களில் 64 பேருக்கு பணிக்கொடைகள் வழங்கப்பட்டுள்ளன.

மொத்தமாக 6.5 மில்லியன் ரூபா நிதி இவ்வாறு பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்று வட மாகாணப் பிரதித்தொழில் ஆணையாளர் கே.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

2007ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஓய்வுபெற்ற பணியாளர்களுக்கே இது வழங்கப்பட்டது. இந்தக் கொடுப்பனவு வழங்கப்படாமை குறித்து பணியாளர்கள் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இதேவேளை, இன்னும் சில பணியாளர்களுக்கு இந்தப் பணிக் கொடை வழங்கப்படவில்லை. அவர்கள் குறித்த தரவுகள் திரட்டப்பட்டு வருகின்றன. விரைவில் அவர்களுக்கும் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் மேலும் கூறினார். (ம-17)

# ஜனநாயகத்தைப் பின்பற்றாமையே ஊடகங்கள் தாக்கப்படக் காரணமாம்

## புதிய ஜனநாயக மாக்ஸிச லெனினிசக் கட்சியின் வடக்கு செயலாளர் கூறுகிறார்

யாழ்ப்பாணம்,மே 5

ஊடக ஜனநாயகத்தை பின்பற்ற மறுப்பதால்தான் ஊடகங்கள் மீண்டும் மீண்டும் தாக்கப்படுகின்றன.

அவ்வாறு தாக்கப்படுகின்ற போதெல்லாம் முதல் முதலாக அதனைக் கண்டித்து அறிக்கை விடுவது எங்களது கட்சிதான்.

புதிய ஜனநாயக மாக்ஸிச லெனினிசக் கட்சியின் வட பிராந்திய செயலாளர் கா.செல்வம் கதிர்காமநாதன் இவ்வாறு தெரிவித்தார்.

மேற்படி கட்சியின் ஏற்பாட்டில் மேதினப் [illegible] (முதலாம் திகதி) [illegible] கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

இதில் தலைமையுரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இங்குள்ள ஊடகங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் படங்களையே பத்திரிகையில் பிரசுரிக்கின்றன.

ஆனால் எங்களுடைய கட்சியின் பெயரைக்கூடப் போடுவதில்லை. ஆனால் நாங்கள் இதற்காக அரசியல் நடத்துவோர் அல்ல.

வலி.வடக்கு மக்களது போராட்டத்தில் எங்களது கட்சியும் பங்குபற்றியது. இதைச் சில பத்திரிகைகள் கண்டும் காணாததுபோல் இருந்து விட்டன. பெயரைக்கூட பிரசுரிக்காது விட்டு விட்டன.

ஊடகங்களின் விருப்பு வெறுப்பும் ஓரவஞ்சனையும் எங்களை ஒன் றும் செய்ய முடியாது. இன்று (முதலாம் திகதி) நடைபெறும் மேதினக் கூட்டம் குறித்த செய்தியச் சில பத்திரிகைகள் பிரசுரிக்கத் தவறி விட்டன.

இந்த ஊடக ஜனநாயக மறுப்புத்தான் ஊடகங்கள் மீது மீண்டும் மீண்டும் இடம்பெறும் தாக்குதல்களுக்குக் காரணம். நாம் சரி பிழைகளை, நியாயங்களை விளங்கிக் கொண்டு செயற்படுகின்றோம்.

இன்று ஊடகங்கள் தீர்மானிப்பது தான் நடைபெறுகிறது. ஏன் என்றால் ஊடகங்களுக்குத் தலைமை தாங்குபவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாக உள்ளனர் என்று தெரிவித்தார். (ம-14-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கோமதி சடாட்சரம்



காரைநகரைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கோமதி சடாட்சரம் நேற்று (04.05.2013) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சடாட்சரத்தின் அன்பு மனைவியும், துசியந்தினி, கண்ணதாசன்(பிரான்ஸ்), கிருசாந்தினி, குகரஞ்சினி ஆகியோரின் தாயும், பிரியதர்சினி, சிவானந்தன், கஜேந்திரன் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.05.2013) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

11, வளாக வீதி, திருநெல்வேலிதெற்கு,
திருநெல்வேலி. (கர்பஸ்லேன்)

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி மரகதம் ஆறுமுகம்



அல்வாயைப் பிறப்பிடமாகவும், 177/1, முரசுமோட்டையை வதிவிடமாகவும், தற்போது வேலணை மேற்கு 6ஆம் வட்டாரம் சிற்பனையில் வசித்தவருமான திருமதி மரகதம் ஆறுமுகம் நேற்று (04.05.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் -சின்னப் பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ் சென்ற ஆறுமுகத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற மாணிக்கம் மற்றும் பரமேஸ்வரி ஆகியோரின் சகோதரியும், வளர்மதியின் அன்புத் தாயும், நகுலேஸ்வரனின் மாமியும், நிலோஜன் (ஆஸ்திரேலியா), நிரோஜன், நிஷாந்தினி, அர்ச்சனா, தர்ஷனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.05.2013) திங்கட்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அம்பலவி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிற்பனை வீதி, வேலணை மேற்கு,
வேலணை-06.
0217210219

(37116)(16.14.9)

தகவல்:
திரு.நகுலேஸ்வரன் (மருமகன்)

## செல்லப்பா தியாகராசா

(ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)



கேசரி வீதி, தையிட்டி காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் கல்லூரி வீதி, கந்தரோடையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா தியாகராசா நேற்று (04.05.2013) சனிக்கிழமை அகாலமரணமாகிவிட்டார்.

அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் வதனி (கனடா), ராஜினி ஆகியோரின் அன்புத் தந்தையும் பாஸ்கரனின் (கனடா) அன்பு மாமனாரும் கீர்த்தனா, விதுசன், தனுசன், டக்சிகா, ஜனார்த்தன், நிவேதிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.05.2013) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக பிற்பகல் 2 மணியளவில் சங்கம் புலவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கல்லூரி வீதி,
கந்தரோடை.

(37113) (23-16-14)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## திருமதி பராசக்தி சிவசுந்தரம்



அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் நல்லூர் செட்டித் தெருவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பராசக்தி சிவசுந்தரம் நேற்று (04.05.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுந்தரம் சாமியாரின் (சிவசுந்தரம்) அன்பு மனைவியும் பிரேம்குமாரின் (வருமான பரிசோதகர், நல்லூர் பிரதேச சபை) பாசமிகு தாயும் யசோதாவின் (ஆசிரியை, திருக்குடும்ப கன்னியர்மடம், யாழ்ப்பாணம்) அன்பு மாமியும் சானுஜென், தர்மிதன், கிஷோபிகா ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.05.2013) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 2 மணியளவில் தகனத்துக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

செட்டித்தெரு, நல்லூர்.

(37109) (23-16-14)

தகவல்:
சி.பிரேம்குமார் (மகன்)
0779080354

## காலத்தை வீணடிக்காதீர்கள்.......



மிகவும் வித்தியாசமாகவும் இலகுவான முறையிலும் கற்றுத்தரப்படும் தையல் வகுப்புகள்.
(காலத்திற்கு ஏற்ப நவீன முறையிலான கட்டிங்குகள்)
★ வெளிநாடு செல்ல இருக்கும் பெண்களுக்கு மிகவும் உகந்தது.
(அதிக வருமானத்தை பெற்றுத் தரக்கூடியது)
★ குறுகிய காலத்திற்கான நிறைவான பயிற்சிகள்

(அரிவையர் மட்டுமே)

உடனே அழையுங்கள் :
சஞ்சிகா ரெயிலரிங்,
5ஆம் ஒழுங்கை, கஸ்தூரியார் சந்தி, பிறவுண் வீதி, யாழ்.
077 0421662/ 077 1882907

ஒரு பிரிவில் 10 விண்ணப்பங்கள் மட்டுமே

## விற்பனைக்கு

மந்திகை பாடசாலையிலிருந்து 100m தூரம் கொடிகாம வீதியில் வளவுடன் கூடிய பெரிய அளவிலான வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-
077 1349125

## கார் விற்பனைக்கு

18 - XXXX
தொடரிலக்கமுடைய
NISSAN Palsure
கார் உடன் விற்பனைக்குண்டு.
தொ.பே: 0778835798

(8853.17)

## கார் விற்பனைக்கு

கண்டியில் SUZUKI ASTAR 1000cc 2012 model, Automatic transmission, KT-0xxx கார் விற்பனைக்கு உண்டு. தரகர்கள் அவசியமில்லை.
தொ.பே: 0814929545, 0717295620
(பி.ப 4 மணிக்கு பிறகு)

# மரண அறிவித்தல்கள்

## இளையதம்பி -முத்துலிங்கம் (செட்டியார்)



ஊர்காவற்றுறை பருத்தியடைப்பை வதிவிடமாகக் கொண்ட இளையதம்பி முத்துலிங்கம் (செட்டியார்) நேற்று (04.05.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் இளையதம்பி மாசிமுத்து தம்பதியரின் அன்புப் புதல்வனும், றூபா, புனிதலிங்கம் (புனிதன்) யோகா, யோகேஸ்வரன் (உடையான்), ஜீதா, புவனேந்திரன் (அண்ணாவி), லக்ஷமணன், ரூபராஜ் (குட்டான்), கல்பனா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற கருணா, நிர்மலாதேவி, அன்ரனிதாஸ் (அமுதம்), மேனகா, சிவரஞ்சன், டவீந்திரராணி, நிசாந்தினி, லோஜினி, ரூபிகாந்தன் ஆகியோரின் மாமனும், பானுஜா, விசிகேசன், புருஷோத்மன், போஜிதா, தேஷகன், தேவசிங், ஷதுர்ஷன், கீர்த்தன், தமிழிதன், சேதா, சீரன், மணியரசன், ஈதைநிலவன், கதிரன், ஷதுஷா, ஐஸ்வர்யா, கருணி, நிலவெழில், திருஷா, கனிபன், மருதினி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.05.2013) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக பி.ப 2.00 மணியளவில் ஊர்காவற்றுறை ஊறுண்டி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பருத்தியடைப்பு, ஊர்காவற்றுறை. (சி/8856)(18.14.9)

தகவல்: குடும்பத்தினர்.

## இராமலிங்கம் கந்தசாமி



நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் குப்பிளானை வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் கந்தசாமி நேற்று (04.05.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம் மற்றும் அருளம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் (வந்தனம்), சௌந்தரம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் பராசக்தியின் (பட்டு), அன்புக் கணவரும் இராசமணி, சின்னமணி ஆகியோரின் சகோதரனும் தாட்சாயினி, தர்சிகா, ஆகியோரின் அன்புத் தந்தையும் ஈஸ்வரன் (ராயு), கரன் ஆகியோரின் அன்பு மாமனும் திசானா, திவானா, றக்ஷன், றக்ஷா ஆகியோரின் அன்புப் பேரனும் விநாயகமூர்த்தி, திருச்செல்வம், றஞ்சன் ஆகியோரின் மைத்துனரும் துஷாரா, நர்த்தனன் ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 05/05/2013 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு ஊரங்குணை, குப்பிளான் வடக்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கராகடம்பை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: மனைவி, பிள்ளைகள்.
மனைவி:-0776125329 மகள்:-0019056191661

(37112) (23-16-14)

## திருமதி லஸ்சுமி கிருஷ்ணசாமி (கச்சேரி ஆச்சி)



பெருமாள் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் இல.55, பாற்பண்ணை வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணசாமி - லஸ்சுமி கடந்த 01.05.2013 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஷ்ணசாமியின் அன்பு மனைவியும் பரமேஸ்வரி (பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான கனகாம்பிகை, கதிர்காமநாதன், செல்வம், மதிவர்ணன் மற்றும் பாலசரஸ்வதி (இலங்கை) ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்றவர்களான சிட்டுமாமா, கணேசலிங்கம், பாலசந்திரன் (இலங்கைப் புகையிரதத் திணைக்களம்), காலஞ்சென்ற கதிரவேற்பிள்ளை மற்றும் பவானி (கொழும்பு), அன்னம் (கனடா) ஆகியோரின் மாமியும் விஜியகுமார் (கோப்பாய்), ஜெயக்குமார் (ஜேர்மனி), பிறேம்குமார் (பிரான்ஸ்), ராஜ்குமார் (பிரான்ஸ்), காலஞ்சென்ற குமுதா (பிரான்ஸ்) மற்றும் சுரேஸ்குமார் (பிரான்ஸ்), சதீஸ்குமார் (பிரான்ஸ்), காலஞ்சென்ற வனிதா (லண்டன்), சாந்தி (திருநெல்வேலி), குட்டி (பிரான்ஸ்), ரவி (பிரான்ஸ்), கண்ணன் (பிரான்ஸ்), கோகிலா (பிரான்ஸ்), சேகர் (சுவிஸ்), சாந்தி (கொழும்பு), மாம்பழம் (சுவிஸ்), பிரகாஷ் (கனடா), சுதா (கனடா), காலஞ்சென்ற முகுந்தன், சங்கர் (கனடா), சிவகுமரன், துஷாந்தன், டிஷாந்தன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.05.2013) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக கோண்டாவில் கட்டை அலம்ப இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.55, பாற்பண்ணை வீதி,
திருநெல்வேலி.

(37107) (23-16-14)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அராலி – வேலணை கடற்பாதை அபிவிருத்தி; இதுவரை நடவடிக்கைகள் எதுவும் இல்லை

## 2005 இல் இது குறித்து ஆராயப்பட்டிருந்தது

யாழ்ப்பாணம், மே.5

தீவகத்தையும் வலிகாமத்தையும் இணைக்கும் அராலி - வேலணை கடற்பாதை அபிவிருத்தி குறித்து இதுவரை வீதி அபிவிருத்தி அதிகாரசபை நடவடிக்கை எதுவும் எடுக்காது மௌனமாக உள்ளது.

2005 இல் இருந்து ஆராயப்பட்டுவந்த இந்த விடயம் இன்றுவரை செயலுருப் பெறாமல் உள்ளது.

இது வீதி அபிவிருத்தி நடவடிக்கை திட்டமிடலில் பெரும் பின்னடைவாகும்.

இவ்வாறு பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் ச.செல்வரத்தினம் தெரிவித்தார்.

வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான அராலி - வேலணை கடற்பாதை அபிவிருத்தி குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் வலுவான நிலையில் இருந்த கடற்பாதை வேலணை -அராலி கடற்பாதை ஆகும். இந்தப் பாதை போரின் போது அழிவடைந்தது.

இந்தப் பாதையை மீளப் புனரமைக்குமாறு வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கும், அரச அதிபருக்கும், வேலணை பிரதேச செயலருக்கும், சுழிபுரம் பிரதேச சபைக்கும் 2005 இல் இருந்து கடிதம் மற்றும் மகஜர்கள் சமர்ப்பித்திருந்தோம்.

ஆனால் எமது கோரிக்கையை ஏற்று முன்னாள் அரச அதிபர் க.கணேஷ் வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் இருந்து மதிப்பீட்டை பெற்று ஜப்பான்-ஜெய்க்கா நிறுவனத்தின் ஊடாக திட்டத்தை நகர்த்துவதற்கான அடிப்படை வேலைகளை ஆரம்பித்திருந்தார்.

எனினும் வீதி அபிவிருத்தி அதிகார சபை மேற்படி விடயத்தில் கூடுதல் அக்கறை செலுத்தாத காரணத்தால் இன்றுவரை திட்டம் முன்நகர்வின்றி உள்ளது. இது வேதனை தருகின்றது.

தற்போது ஏனைய உட்கட்டுமான அபிவிருத்திகளை விட வீதி அபிவிருத்திக்கே அரசு முன்னுரிமை அளித்து வருகின்றது.

இந்த நிலையில் வேலணை - அராலி கடற்பாதை புனரமைப்புக்கு முன்னுரிமை வழங்க வேண்டியது இன்றைய தேவையாகும்.

வல்லை - அராலி வீதி காப்பெற் வீதியாக மாற்றப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் அராலியுடன் தொடர்புபட்ட வீதியாக வேலணை - அராலி கடற்பாதை உள்ளது. எனவே வீதி அபிவிருத்தி அதிகார சபை மூலம் வேலணை - அராலி கடற்பாதை அபிவிருத்தி திட்டத்தை விரைந்து செயற்படுத்த அனைவரும் ஒருங்கிணைந்த ரீதியில் செயற்பட வேண்டும்.- என்று தெரிவித்தார். (ம-41)



# 5 வயது சிறுமி துஷ்பிரயோகம் முதியவர் கைது

யாழ்ப்பாணம், மே 5

5 வயதுச் சிறுமியைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் 59 வயது முதியவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியைச் சேர்ந்த சிறுமியே இவ்வாறு துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தக் குற்றச்சாட்டில் கைதான முதியவர் யாழ். நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார். அவரை எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிமன்றம் உத்தரவிட்டது எனப் பொலிஸார் தெரிவித்தனர். (த-4-86)

# கண்காட்சியும் சான்றிதழ் வழங்கலும்

தென்மராட்சி, மே 5

வட மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் தென்மராட்சி பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி நிலையத்தால் நடத்தப்பட்ட ஆடை வடிவமைத்தல் கைவேலை, அழகுக்கலை, மனைப் பொருளியல், பயிற்சி நெறிகளில் பங்கு பற்றியோரால் வடிவமைக்கப்பட்ட பொருள்களின் கண்காட்சி நடைபெறவுள்ளது.

இந்தக் கண்காட்சி நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச கிராம அபிவிருத்தி அலுவலர் சு.ரவிகரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வட மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் ஜே.ஜே.சி பொலிஸியன், தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட கிராம அபிவிருத்தி அலுவலர் திருமதி நவமணி அலோசியஸ் ஜெயராசா, சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் சூசைமுத்து அலெக்ஸாண்டர் ஆகியோரும் கலந்து கொள்வர்.

நிகழ்வில் பயிற்சிகளை நிறைவு செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கலும் இடம் பெறும். (ந-9)

# கைதடி முதியோர் இல்லத்தில் நூலக நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், மே.5


கைதடி அரச முதியோர் இல்லத்தில் தங்கியிருக்கும் முதியோர்களின் வசதி கருதி யாழ். பொது நூலகம் நடமாடும் நூலக சேவை ஒன்றை நடத்தியது.

இல்லத்தில் தங்கியிருக்கும் முதியோர்களின் பொழுதுபோக்கு மற்றும் அவர்களின் வாசிப்புத் திறனை ஊக்குவிக்கும் முகமாக இந்த நூலக நடமாடும் சேவை இடம்பெற்றது.

இந்த நடமாடும் நூலக சேவையை மாதத்தில் இரண்டு தடவைகள் இல்லத்தில் நடத்துவதற்கும் தீர்மானிக்கப் பட்டுள்ளதாக இல்ல அத்தியட்சகர் த.கிருபாகரன் தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்ற இந்த நூலக நடமாடும் சேவையில் இல்லத்தில் தங்கியிருக்கும் அதிகமான முதியோர் கலந்துகொண்டு பயன்பெற்றனர்

பார்வைக் குறைபாடு மற்றும் வாசிப்பு திறன் அற்ற வயோதிபர்களுக்கு நூல்கள் வாசித்தும் காட்டப்பட்டன. (ம-17)



முன்னாள் யாழ். நகர பிதா அமரர் எஸ்.எஸ். நடராஜா நினைவாக கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையில் கல்வி கற்கும் அனைத்து மாணவர்களுக்கும் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.தேவமனோகரன் மாணவி ஒருவருக்கு கற்றல் உபகரணங்களை வழங்குகிறார். (ஒ)

# மணியந்தோட்டத்தில் புதிய பொதுச் சந்தை

யாழ்ப்பாணம்,மே 5

மணியந்தோட்டத்தில் புதிய பொதுச் சந்தை ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மீள் குடியேற்ற அமைச்சின் நிதி உதவியுடன் இந்தப் புதிய சந்தையை நிர்மாணிப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதாக நல்லூர் பிரதேச சபையின் உறுப்பினர் அ.இரவீந்திரதாசன் தெரிவித்தார்.

இந்தப் பகுதியில் பொதுச் சந்தை ஒன்று இல்லாத காரணத்தால் பிரதேசமக்கள் தமக்கான மரக்கறி மற்றும் கடல் உணவுகளைப் பெறுவதற்கு நீண்டதூரம் செல்ல வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

அண்மையில் நல்லூர் பிரதேச செயலகத்தில் இடம் பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் இந்தப் பகுதியில் பொதுச்சந்தை ஒன்றை அமைதது தருமாறு பிரதேச பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்திருந்தன.

இதனை அடுத்து இந்தப் பிரதேசத்தில் மரக்கறி மற்றும் கடல் உணவுகளை வைத்து விற்பனை செய்வதற்காகப் பொதுச் சந்தை ஒன்று விரைவில் அமைக்கப்படவுள்ளது. (த-17)

> பொதுச் சந்தை ஒன்று இல்லாத காரணத்தால் பிரதேசமக்கள் தமக்குரிய மரக்கறி மற்றும் கடல் உணவுகளைப் பெறுவதற்கு நீண்டதூரம் செல்லவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

# பதின்ம வயதுச் சிறுமியுடன் இருந்த இளைஞன் கைது

யாழ்ப்பாணம்,மே 5

பதின்ம வயதுச் சிறுமியுடன் 7 மாதங்களாகக் கணவன் - மனைவி போல் வாழ்ந்த குற்றச்சாட்டில் 24வயதுடைய இளைஞன் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

[illegible] பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தியபோது அவருக்கு விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் கூறினர். (த-4)

# 34 ஆவது ஆண்டு பொதுக்கூட்டம்

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் 34 ஆவது ஆண்டு பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மன்றத் தலைவர் வ.ஸ்ரீபிரகாஸ் தலைமையில் நடைபெறும் கூட்டத்துக்கு முதன்மை விருந்தினராக சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் திருமதி இமெல்டா சுகுமார், தென்மராட்சி பிரதேச செய லர் திருமதி அ.சாந்தசீலன், தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் உட்பட பலர் கலந்துகொள்வர்.

கூட்டத்தில் பாடசாலை மாணவர்களுக்கு கல்வி ஊக்குவிப்பு நிதி வழங்கல், விதவை நிதியம் வழங்கல் மற்றும் மன்ற அங்கத்தவர்களின் சேமிப்புத் திட்டத்தில் முன்னிலையில் நிற்பவர்களைக் கௌரவித்தல் போன்றவை இடம்பெறுமென மன்றச் செயலாளர் க.சுதாகரன் தெரிவித்துள்ளார். (ந-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், ராஜேந்திரா வீதியில் 2 வீடுகளுடன் 1 ¾ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. 85 லட்சம். 077 927 6801 (C9003)(6.2)


# நாய் குறுக்கே பாய்ந்து விபத்து

நுணாவில் மீசாலைப் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் விலா எலும்பு உடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். நாய் குறுக்கே ஓடியதால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. நாயுடன் மோதுண்ட நிலையில் மோட்டார் சைக்கிளில் இருந்து தூக்கி வீசப்பட்டவர் அயலவர்களின் உதவியுடன் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார். சுப்பிரமணியம் தயாபரன் (வயது -45) என்பவரே இவ்வாறு காயமடைந்தவராவார். (ம-86)


## உயர் கல்வியும் தொழில் வாய்ப்பும்

விசிட், வசிப்பிடம், மைக்ரேஸன், Bபிஸ்னஸ் விசாக்கள்



விசா பெற்றுக் கொள்ள உள்ளவர்களுக்கு
- உயர்கல்விக்கு ஒரு வாரத்தில் ஒஃபர் லெட்டர்
- வங்கியில் கடன் வசதி
- வங்கியில் பணவைப்பு
- விசாவுக்கான உதவி
- தேவையான ஆவணங்கள்
- தாய், தந்தை கூடவே செல்ல
- கணவன், மனைவி செல்ல
- தேவையான பாடநெறி தெரிவு செய்தல்

விசாவுக்கு பின் பணம் செலுத்தல்
- மெசின் இயந்திரங்கள் வாங்கச் செல்லுதல்
- வைபவங்களுக்கு செல்லுதல்
- உறவினர்களிடம் செல்லுதல்
- விளையாட்டுகளுக்கு செல்லுதல்
- கண் காட்சிகளுக்கு செல்லுதல்
- வசிப்பிடம் / தொழில் / பயிற்சிகளுக்கு செல்ல

எல்லா ஏற்பாடுகளும் வசதிகளும்
- எம்பசிக்கு தேவையான ஆவணங்கள் விண்ணப்பங்கள், கழகங்கள், File வேலைகள், டிக்கட், ஹோட்டல், இன்சூரன்ஸ், செய்து கொடுக்கப்படும்

நிராகரிக்கப்பட்ட விசாவை மீள பெற்றுக் கொடுத்தல்
- விசா கிடைக்க பெற்றவர்களின் அனுசரணையுடன் சேர்ந்து விசா பெற்றுக் கொள்ள விரும்புகின்றவர்களுக்கு ஏற்பாடுகள்.
- திருமணம் செய்து செல்ல விரும்புகின்றவர்கள்.
- வெளிநாட்டு வெள்ளையர்களை நேரில் கதைத்து செல்வதற்கு வசதிகள் உண்டு.

லண்டன் / கனடா / அமெரிக்கா / அவுஸ்திரேலியா / நியூசிலாந்து / சுவிஸ்லாந்து / போலாந்து / டென்மார்க் / ஜப்பான் / இத்தாலி / பிரான்ஸ் / நெதர்லாந்து / ஸ்பெயின் / லத்வியா / ஸ்கோட்லாந்து / மலேசியா / சிங்கப்பூர்

CPIT ICL LCCI

**LONDON VISA CENTRE**
No.52, Devidson Road, Bambalapitiya, Colombo 4.
0778 63 44 49 / 077 91 22 234



## சவுதி அரேபியா விமான நிலையத்தில்




**GROUND SERVICES**
உடனடி தொழில் வாய்ப்பு

**GENERAL WORKERS**
பொது வேலையாள்கள்

சம்பளம் - SR 750/- + உணவு
(1 SR = Rs. 35/- )

வயது: 21 -38

**Terms & Conditions:**
- உணவு, தங்குமிடம், மருத்துவ வசதி, போக்குவரத்து, விமான பயண டிக்கட் இலவசம்.
- நாளொன்றுக்கு 8 மணித்தியால வேலையுடன், வாரத்தில் 1 நாள் விடுமுறை.
- 2 வருட ஒப்பந்த காலம்
- ஏனையவை சவுதி அரேபியாவின் தொழிலாளர் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது

பாஸ்போட்டுடன் உடன் நேரே வாருங்கள்

உடன் தொடர்புகளுக்கு: 077 310 3100

**QP Employment (pvt) Ltd,**
இல: 06, கெம்பல் டெரஸ், கொழும்பு - 10.
(பாஸ்போட் காரியாலயம் அருகில்) AL1316/Advt:/06/13



## இலவச அழகுக் கலைப் பயிற்சிநெறி

பேசியல், மேக்கப், கொய்ஸ்டைல், பிளவுஸ் கட்டிங், சாறிவேக், ஐசிங் கேக், ஐசிங் பூக்கள்

பயிற்சி நெறியில் இணைய விரும்புவோர் சுயவிவரக் கோவையுடன் நேரில் வரவும். வகுப்பு ஆரம்பம் : 06.05.2013

பதிவு இல.: 1039413
தொ.பே.: 077 210 6155
(நிபந்தனைகளுக்கு உட்பட்டது) (37075)(5-6)

219, நாவலர் றோட், (பிறவுன் றோட் சந்தி அருகில்) யாழ்ப்பாணம். (Oriflame)



## விற்பனைக்கு

மில் இற்குரிய சகல கிறைண்டர்களும், மோட்டர்களும் (England - (தேங்காய் எண்ணெய் கிறைண்டர் உட்பட) விற்பனைக்கு உண்டு. (கடைவசதியும் உண்டு)

தொடர்பு: 077 608 1693 (37077)(45.6)



## பணியாளர்கள் தேவை

யாழ்.நகரில் இயங்கும் பிரபல வர்த்தக நிலையம் ஒன்றுக்குக் கீழ்க்காணும் பணிநிலைகளுக்குப் பணியாளர்கள் தேவை.

01) சேல்ஸ்மன் (பொதி கட்டுபவர்)
02) களஞ்சியக் காப்பாளர் (ஸ்ரோர் கீப்பர்)

விண்ணப்பிக்க விரும்புவோர்
தொடர்புகளுக்கு:
077 776 8835
இல.:344, ஆஸ்பத்திரி வீதி.
யாழ்ப்பாணம்.
(37073)(6.2)



## மணமகள் தேவை

மணமகள் தேவையா? ஒரு sms இனூடான உங்களின் பதிவினை மேற்கொண்டு காத்திருங்கள். உங்களின் டயலொக் மொபைலில் (Dialog) REG bride என ரைப் செய்து 77000 இலக்கத்திற்கு sms பண்ணவும். மேலதிக தகவலிற்கு www.realmatrimony.com Call : 011- 4346130 011-4380900.021-4923739

## மணமகன் தேவை

மணமகன் தேவையா? ஒரு sms இனூடான உங்களின் பதிவினை மேற்கொண்டு காத்திருங்கள். உங்களின் டயலொக் மொபைலில் (Dialog) REG groom என ரைப் செய்து 77000 இலக்கத்திற்கு sms பண்ணவும். மேலதிக தகவலிற்கு www.realmatrimony.com Call : 011- 4346130 011-4380900,021-4923739

## sms ஊடாக வரன் தேடல்

sms இனூடாக Realmatrimony இல் பதிவதாயின், உங்களின் மொபைலில் <உங்களின் பெயர்>, <பிறந்த திகதி>, ரைப் செய்து 0777 111 786 என்ற இலக்கத்திற்கு sms பண்ணுங்கள். 30 நாட்கள் இலவச சேவையினையும் பெறலாம். மேலதிக தகவலுக்கு அழையுங்கள் Call : 011-4346130, 011-4380900, 021-4923739



## சித்த ஆயுள்வேத வைத்தியம்

### கிருஷ்ணா நேத்திர சிந்தாமணித் தைலம்

நீண்ட அழகிய கூந்தலை விரும்பும் நங்கையர்க்காகவும், மொட்டைத்தலை இளைஞர்களுக்காகவும் தயாரிக்கப்பட்டதே இந்தத் தைலம். இத்தைலத்தைப் பாவிப்பதால் தலைமயிர் உதிர்வதைக் கட்டுப்படுத்துவதோடு, கூர்மையான கண் பார்வையும், நல்ல ஞாபகசக்தியும் ஏற்படுகிறது.

### இராஜ வாஜீகரண லேகியம்

பாலியல் பலவீனமுள்ள ஆண், பெண் இருபாலார்க்கும் இது நன்கு பலன் கொடுக்கும். நரம்புகளுக்குச் சக்தியைக் கொடுத்து நீண்டநேர இன்பத்தை அனுபவிக்க உதவும் இந்திரியத்தில் உயிர் அணுக்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும்.

இருதய நோயினால் அவதிப்படுபவர்க்கு, இரத்தத்தில் உள்ள கொழுப்பைக் கரைக்கவும், நெஞ்சுநோவுக்குப் பூசுவதற்கு விசேடமான எண்ணையும் உள் மருந்துகளும் உண்டு.

ஆஸ்துமா மற்றும் சளி சம்பந்தமான ரோகங்கள், மூட்டு வாதவலிகள், பெண்களின் மார்பகப் பிரச்சினைகள், மாதவிலக்கு ஒழுங்கின்மை, வெள்ளைபடுதல், இடுப்புவலி போன்றவற்றிற்கும் சிறந்த சிகிச்சை அளிக்கப்படும்.

தொடர்பு: Dr. த. கிருஷ்ணபகவான் தொ.பே. 077 972 3369
கிருஷ்ணா சித்த ஆயுள்வேத வைத்தியசாலை,
நீர்வேலிச் சந்தி, பருத்தித்துறை றோட், நீர்வேலி.
(37103)(45.6)



கோயம்புத்தூர் எலும்பு மற்றும் மூட்டு மருத்துவமனை

வைத்தியர்களை இலங்கையில் இருந்து சந்தித்து ஆலோசனை பெற அரிய வாய்ப்பு

மருத்துவ ஆலோசனை முற்றிலும் இலவசம்



0750 252 141
0777 262 932
Langaa Medical Mission



## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நகரில் இல.155, 157 மானிப்பாய் வீதியில் பிள்ளையார் இன் ஹோட்டலுக்கு அருகில் சமுர்த்தி வங்கி இயங்கிய கட்டடத்துடன் கூடிய இரண்டு பரப்புக் காணி உடனடி விற்பனைக்குள்ளது. இன்று ஞாயிறும் நாளையும் நேரடியாகப் பார்வையிடலாம். விலை கோரப்படுகின்றது.

தொடர்பு: 077 549 8376 (C/9005)(6.11)



லண்டன் / கனடா / அமெரிக்கா / சுயிஸ் / ஜேர்மனி பிரான்ஸ் / இத்தாலி / டென்மார்க் / அவுஸ்திரேலியா நியூஸிலாந்து மற்றும் ஏனைய நாடுகளுக்கு செல்ல இருப்பவர்களுக்கு

## வங்கியில் பணவைப்பு

அரச வங்கியில் 3, 6, 12 மாதங்களுக்கான முன் பின் வங்கியில் பணவைப்பு

**Saving Book - FD - Statement**

For: Student | Business | Migration | PR | Visit Family | Dependant | Refused | Visas

077 4789289 / 077 9122334

விசா பெற்றுக்கொள்வதற்கு தேவையான சகல உதவிகளும் எம்பசி வேலைகளும் செய்து தரப்படும்

No.52, Davidson Road, Colombo -04.



giz Deutsche Gesellschaft für Internationale Zusammenarbeit (GIZ) GmbH

**SRI LANKAN-GERMAN DEVELOPMENT COOPERATION**

## Project Coordinator – Diary Project (Jaffna District)

The Deutsche Gesellschaft für Internationale Zusammenarbeit (GIZ) is an international cooperation enterprise for sustainable development with worldwide operations. As a federally owned enterprise, we support the German Government in achieving its objectives in the field of international cooperation for sustainable development. GIZ drives projects that support Sri Lanka's development objectives and works with stakeholders from across the spectrum in the government, public and private sectors.

The Dairy Development Project Northern Province aims at improving milk production and income for dairy farmers in Chavakachcheri division in Jaffna district. It will be jointly implemented by Tetra Laval Food for Development Office, Cargills (Ceylon) PLC and GIZ. The project will use unique methodologies developed and tested in a number of Asian countries. The objective is to replicate the successes of these pilot projects commencing in Chavakachcheri into other divisions, districts and eventually nationwide.

In this regard, the project invites applications from highly motivated and committed professionals possessing a background in agriculture, ideally dairy, Tamil speaking and familiar with the local context. Most of all, the candidate must have 'mover qualities' combined with a strong sensitivity in order to bring in and motivate farmers, connect with local institutions as well as stakeholders based in Colombo. The selected candidate will start work by attending a 30 day training in Bangladesh prior to implementing the project in the Chavakachcheri division.

The **Project Coordinator** is responsible for planning, coordinating, and directing the milk improvements initially among 100 (gradually expanded to 400 or more) smallholder dairy producers included in the local commercial dairy value chain in the Chavakachcheri division with special focus on the key areas of:
- Implementation of the Programme as per proven methodology from other developing countries - the successful candidate will be fully trained to implement the methodology.
- Coordination and Management of project activities in the Programme area.
- Networking, Partner and Key stakeholder Relationship Management and
- Efficient and cost effective Programme Management.

**The ToR will be further developed in detail on completion of the training program.**

**Required qualifications, experience**

FORMAL EDUCATION:
- Degree in Agricultural Engineering with specialization in Animal Husbandry Science or Veterinary Science

PROFESSIONAL EXPERIENCE:
- At least 5 years of proven ability and experience in dairy management systems with a minimum of 2 years management experience in program implementation at district or national level

The selected candidate must be in good physical shape since the job involves a substantial amount of time being spent hands on at various small dairy farms (80% of time spent in field).

Qualified applicants must submit an updated CV including 1) a one page-writing sample that describes how you would develop a plan to motivate local farmers, connect with local institution as well as the stakeholders based in Colombo; 2) email & telephone contacts of two professional referees to **giz-hrsrilanka@giz.de** or by post to the Human Resource Unit, GIZ-Colombo, No. 6, Jawatte Avenue, Colombo 5, **before cob 18 May 2013.**

*Candidates who had applied for the previous advertisement need not apply again. We thank all applicants but only the short listed candidates will be contacted.*


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



செலிங்கோ லைப் நெல்லியடி கிளையின் வாடிக்கையாளரான நெல்லியடியைச் சேர்ந்த திருமதி சொபகரன் அனற் நிஷாந்தியின் இறப்பீட்டு கொடுப்பனவான ஒரு லட்சம் ரூபாவை விற்பனை அபிவிருத்தி முகாமையாளராகிய கு.நிரோஜன் அவரது கணவரிடம் வழங்கி வைக்கிறார். அருகில் உதவி கிளை முகாமையாளர் திருமதி ஐ.சோபனா, விற்பனை நிறைவேற்று அதிகாரி கு.அஜித்குமார், விற்பனை அணித் தலைவர் இ.இளங்குமரன், விற்பனை ஆலோசகர் யோ.ஜெரோசன் ஆகியோர் உள்ளனர். (ம 253)

# மாணவர்களுக்கு ஓரேஞ்ச் நிறுவனம் பயிற்சி

ஆறு வயதுக்கு மேற்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு ரொபோ தொழில்நுட்பம் தொடர்பாக பயிற்றுவிக்கும் செயற்றிட்டமொன்றை ஒரெஞ்ச் இலக்ட்ரிக்ஸ் நிறுவனம் ஆரம்பித்துள்ளது.

அதற்கமைய பொரளையிலுள்ள நோர்த்வுட் குளோபல் சர்வதேச பாடசாலையைச் சேர்ந்த 6 முதல் 12 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கு ரொபோ நிர்மாணிப்பது தொடர்பில் கற்பிக்கப்படுகின்றது. மாணவர்களுக்கு நிகழ்கால உலகில் துரிதமாக வளர்ச்சியடைந்து வரும் ரோபோ தொழில்நுட்பம் தொடர்பாகப் பயிலுவதற்கும் அவற்றை நிர்மாணிப்பதற்கும் இதன்மூலம் சந்தர்ப்பம் கிடைக்கின்றது.



இந்த பயிற்சிகள் தொடர்பில் கருத்து தெரிவித்த ஒரேஞ்ச் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் குஷான் கொடிதுவக்கு, இத்தகைய செயன்முறை பயிற்சிகள் மூலம் மாணவர்களின் அறிவை மேம்படுத்த முடியும். மாணவர்களுக்கு கல்வி நடவடிக்கைகளை போன்றே தமது அனுபவங்கள் மூலம் கற்பதற்கு சந்தர்ப்பம் வழங்கினால் அவர்களது ஆற்றல்களை மேம்படுத்தலாம். அத்துடன் புத்தகங்களை படிப்பதைவிடத் தமது அனுபவங்கள் மூலம் செயற்திறன் நடவடிக்கைகளில் ஈடுபடுவது சிறந்தது. எனக் குறிப்பிட்டார்.

கற்பிக்கும் நடவடிக்கைகளுக்குத் தமது பாடசாலையில்முக்கியத்துவம் கொடுக்கும் அதே வேளை நல்ல பழக்க வழக்கங்களை கொண்ட மாணவர் சமுதாயமொன்றை கட்டியெழுப்புவதே முக்கிய நோக்கம் என நோர்த்வுட் குளோபல் கல்லூரியின் அதிபர் குமாரி விக்கிரமசிங்க கூறினார்.

பிரதி சனிக்கிழமை தோறும் ஒரெஞ்ச் இலக்ட்ரிக்ஸ் இனோவேஷன் மத்திய நிலையத்தில் நடைபெறும் ரோபோ தொழில்நுட்பம் தொடர்பான பாடங்களை மத்திய நிலையத்தின் பிரதானி மனோஜ் இலங்கசூரிய மற்றும் ஒரேஞ்ச் நிறுவனத்தின் ஆய்வு மற்றும் அபிவிருத்தி பிரிவின் பொறியியலாளர் இந்திக்க குலதுங்க ஆகியோர் கற்பிக்கின்றனர்.



சர்வதேச மகளிர் தினத்தையொட்டி சாவகச்சேரி மக்கள் வங்கியினர் சரசாலை வடக்குப் பிரதேச மகளிர்களுக்கான வனிதா வாசனா சேமிப்புத் தொடர்பான கருத்தரங்கை சரசாலை வடக்கு நித்திலா மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடத்தினர். மக்கள் வங்கியின் சாவகச்சேரி கிளை முகாமையாளர் ச.சண்முகலிங்கம் மற்றும் வங்கி உத்தியோகத்தர்களுடன் கருத்தரங்கில் கலந்துகொண்டவர்களைக் காணலாம். (ம-9)

# பாடசாலைகளுக்கு உதவும் CBL

மஞ்சி வர்த்தக நாமத்தின் சமூக பொறுப்புணர்வுத் திட்டங்களில் ஒன்றான மஞ்சி சமக காம சரண திட்டத்தின் கீழ் பன்னிப்பிட்டிய மாலப்பல்ல விஜயகோஷ வித்தியாலயம் மற்றும் மூதூர் ஆலிம்சேனை முஸ்லிம் பாடசாலை போன்றவற்றிற்கு வாசிகசாலை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

மேலும் கேகாலை கனிஷ்ட பாடசாலையின் அத்தியாவசியத் தேவையாகவிருந்த புதிய வகுப்பறை கட்டடமும், களுத்துறை பயாகல ஹெல்கந்தவில மகா வித்தியாலயத்திற்கு சுத்தமான குடிதண்ணீர் வசதியும் செய்து கொடுக்கப்பட்டன. இப் புதிய திட்டத்தின் மூலம் அப்பாடசாலைகளைச் சேர்ந்த 1000 இற்கும் அதிகமான மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் அனுகூலங்களை பெற்றனர்.

நாடுபூராகவும் முன்னெடுக்கப்பட்ட பின்தங்கிய கிராமங்களை அபிவிருத்தி செய்யும் திட்டங்களுள் ஏற்கனவே 60 திட்டங்கள் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்

## முதல் இடத்தில் இலங்கை வங்கி

இலங்கை வங்கி தொடர்ந்து 5ஆவது வருடமாக இலங்கையின் முதல்தர வங்கி என்ற வணிகப்பெயரை வென்றுள்ளது என்று வணிக மதிப்பீடுகளை மேற்கொள்ளும் ஐக்கிய இராச்சியத்தில் அமைந்துள்ள பிராண்ட் பினான்ஸ் அதன் வருடாந்த வெளியீடு ஒன்றில் தெரிவித்துள்ளது.

2013ஆம் ஆண்டு வருடாந்த வணிகக் குறியீடுகள் மதிப்பின் பிரகாரம் இலங்கை வங்கியின் வணிகக் குறியீட்டுப் பெறுமதி 2013 ஆம் ஆண்டில் ரூபா 15.19 பில்லியனிலிருந்து ரூபா 24.15 பில்லியனை அதிகரித்துள்ளது. இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 62 வீத வளர்ச்சி ஆகும்.



செலான் வங்கி சாவகச்சேரி கிளையின் இரண்டாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு வங்கியில் சிறுவர் சேமிப்புக் கணக்கு வைத்துள்ள சாவகச்சேரி மகளிர் கல்லூரி மாணவர்களில் சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு இலங்கை வலைப்பந்தாட்ட அணியின் தலைவி செல்வி தர்ஜினி சிவலிங்கம் பரிசில்கள் வழங்குகிறார். (ம 9)

# கொழும்பு பல்கலையில் மைக்ரோசொப்ட் Imagine Cup 2013 தொழில்நுட்பப் போட்டி

இலங்கை மாணவர்களுக்கான முதற்தர தொழில்நுட்ப போட்டியான Imagine Cup 2013 கொழும்பு பல்கலைக் கழகத்தின் கணினி மற்றும் தகவல் தொழில்நுட்ப பரதான அரங்கில் எதிர்வரும் 10ம் திகதி நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் வெற்றிபெறும் அணிக்கு ரஷ்யாவின் பீற்றர்ஸ்பேர்க் நகரில் மைக்ரோசொப்ட் நிறுவனத்தால் நடத்தப்படும் சர்வதேச Imagine Cup போட்டியில் பங்குபற்றுவதற்கான சந்தர்ப்பம் கிட்டுகின்றது.

இலங்கையில் இவ்வருடத்திற்கான போட்டிகளுக்காக அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த 700 இற்கும் அதிகமான மாணவர்கள் கலந்துகொண்டதுடன் இறுதிச்சுற்றில் 14 அணிகள் மோதுவதற்கு தகுதிபெற்றுள்ளன. அவற்றில் மூன்று அணிகள் இறுதிப்போட்டியில் [illegible] வெற்றிபெறும் அணிக்கே ரஷ்யாவில் தமது திறமைகளை வெளிக்காட்ட சந்தர்ப்பம் கிடைக்கும்.

இவ்வருட போட்டிகள் புதிய பரிமாணத்துடன் பூகோள குடியுரிமை, புத்தாக்கம், விளையாட்டு ஆகிய மூன்று பிரிவுகளின் கீழ் நடைபெறவுள்ளன. மாணவர்களுக்கு புதுமைகளை படைப்பதற்கும் தமது சிந்தனை ஆற்றல்களை வெளிப்படுத்துவதற்கும் இப்போட்டி உதவுகின்றது. இறுதிச்சுற்றில் 14 அணிகள் பங்குபற்றுவதுடன் இரண்டு அணிகள் விளையாட்டுப் பிரிவிலும், தலா ஆறு அணிகள் பூகோள குடியுரிமை மற்றும் புத்தாக்கம் ஆகிய பிரிவுகளின் கீழும் போட்டியிடுகின்றன. துறைசார் அனுபவம்வாய்ந்த மூன்று நடுவர்கள் குழாமினால் போட்டிகள் மத்தியஸ்தம் செய்யப்படவுள்ளது.

புத்தாக்க பிரிவில் ஊக்கமளிக்கும் மென்பொருள் உற்பத்தி தொடர்பாகவும் பூகோள குடியுரிமை பிரிவில் [illegible] தேவை [illegible] காரணிகள் தொடர்பாக தயாரிக்கப்படும் மென்பொருள் தொடர்பாகவும் விளையாட்டுப் பரிவில் வர்த்தக ரீதியான பெறுமதி தொடர்பாகவும் கவனம் செலுத்தப்படும்.

இலங்கையில் Imagine Cup போட்டிகள் முதற்தடவையாக 2005 ஆம் ஆண்டு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. உள்ளூர் பல்கலைக்கழகங்களுக்கும் தனியார் உயர் கல்வி நிறுவனங்களுக்கும் இப்போட்டிகளில் பங்குபற்றுவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியுள்ள மைக்ரோசொப்ட் நிறுவனம் அதன்மூலம் மாணவர்களின் திறமைகளை இனங்கண்டுள்ளது. மாணவர்களது தலைமைத்துவ பண்பு, அணியென்ற உணர்வு, சிந்தனை ஆற்றல் ஆகியவற்றை மேம்படுத்தவும் இப்போட்டி உதவுகின்றது.

தேசிய போட்டி தொடர்பாக மைக்ரோசொப்ட் னு"நு பணிப்பாளர் வெலிங்டன் பெரேரா கருத்துத் தெரிவிக்கையில் "இப்போட்டிகளில் வெற்றிபெறும் அணி ரஷ்யாவில் நடைபெறும் சர்வதேச போட்டியில் வெற்றிபெறும் என்ற எதிர்பார்ப்பு எமக்குள்ளது. இலங்கை மாணவர்கள் தமது சமூக சூழல் தொடர்பாக சிந்திக்காமல் புதிய தொழில்நுட்பத்துடன் இணைந்து அதற்கான வழிமுறைகளை பின்பற்றி வெற்றிப் பாதையை நோக்கிச் செல்ல வேண்டும் என்பதற்காகவே இப்போட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது" என குறிப்பிட்டார்.

சர்வதேச Imagine Cup போட்டிகளில் வெற்றிக்கிண்ணம் தவிர இறுதிச்சுற்றுக்கு தகுதிபெறும் அணிகளுக்கு தமது படைப்புக்களை அபிவிருத்திக் கொள்வதற்கு நிதி உதவிகளை வழங்கும் திட்டமொன்றையும் மைக்ரொசொப்ட் நிறுவனம் வகுத்துள்ளது. குழு ஒன்றினால் நிதி உதவிகள் தொடர்பான விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு நிதி உதவி செய்யப்படுவதுடன் தமது நாடுகளிலுள்ள மைக்ரோசொப்ட் நிறுவன பிரதிநிதிகளின் ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களையும் வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய சுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 114



# முதியோர் சுகத்தை நோக்கிய வெற்றி

செல்வி.பெ.றஜீலாதேவி, அதிபர்,
தாதியக் கல்லூரி, யாழ்ப்பாணம்.

**1.உடல் நலம் (Physical health)**

★ ஒழுங்கான மருத்துவப் பரிசோதனை (Regular medical checkup)
★ நோய்களுக்கான போதியளவும், பொருத்தமானதுமான சிகிச்சை (Adequate and appropriate treatment for diseases)
★ போதியளவு போசாக்கு (Adequate Nutrition)
★ நல்ல தனிநபர், சுற்றாடல் சுத்தம் (Good personal environmental hygiene)
★ நல்ல தனிநபர், தோற்றம் (Good individual appearance)
★ போதியளவு ஓய்வும் நித்திரையும் அளித்தல் (Adequate rest and sleep)
★ நாளாந்தம் செயற்பாடுகளுக்கு உதவுதல் (Assisting for daily activities)

**2.உடற்தொழிற்பாடுகள் (Physiological Functions)**

★ உயிர்ப்பான, உயிர்ப்பற்ற அப்பியாசங்கள் (Active, passive exercises)
★ தினமும் நடத்தல் (Regular walk)
★ வெளி, உள் விளையாட்டுக்களில் பங்குபெறல் (Outdoor, indoor games)
★ வீட்டுவேலைகளில் பங்குபெறல் (Engaging home work)
★ தனக்கு பழக்கமான வேலைகளில் ஈடுபடத் தூண்டுதல் (Encourage the wok which used to them)
★ உடல் அங்கவீனமுற்றோருக்கு புனருத்தாரண உதவியளித்தல் (Rehabilitation measures to disabled)

**3.உளநலம் (Psycho logical health)**


★ பயன்தரும் தொடர்பாடல் திறனை உபயோகித்தல் (Using effective commu nication skill)
★ பெயர் கூறி அழைத்தல் (Call the name)
★ கவனமாக செவிமடுத்தல் (Careful listening)
★ பார்வையாளரை/விருந்தினரை அறிமுகம் செய்தல் (Introducing the visitors)
★ மெதுவாகவும் தெளிவாகவும் கதைத்தல் (Talking slowly and clearly)
★ கேள்விகளை கேட்டு சந்தேகங்களைத் தீர்க்க ஊக்குவித்தல் (encourage to ask questions and clear the doubts)
★ நாள், நேரம் என்பவற்றைத் தினமும் அறிமுகம் செய்தல் (Introduce daily the date and time)
★ பார்வையாளரை அனுமதித்தல் (Allowing visitors)
★ சிகிச்சை பெறுபேறுகளை விளக்கல் (Explain the treatment results)
★ நோயாளியுடன் நிற்க யாரையாவது ஒழுங்குபடுத்தி தனிமையைப் போக்குதல் (Alleviate lonliness by allowing a bystander)
★ வாசிப்பு பழக்கம் இருப்பின் (பத்திரிகை, கதைப் புத்தகம்) வழங்குதல் (Provide paper, story books if having reading habit)
★ கட்புல, கேட்டல் சாதனங்களை வழங்கி உதவுதல் (Provide audio visual aids)
★ பொழுது போக்கு வசதிகளைக் குழுக்களாக ஏற்படுத்திக் கொடுத்தல் (Make group recreational facilities)
★ நல்ல செயல்களை செய்து முடித்தால் பாராட்டிக் கௌரவித்தல் (Appre ciationwhen performing good acti vities)
★ கண்ணாடி, கேட்கும் கருவிகள் பெற உதவுதல் (Helping to get spectacles and audio aids)

**4.சமூக செயற்பாடுகள் (Social activities)**

★ சமூகச் செயற்பாடுகளுக்கு ஊக்குவித்தல் (பிறந்தநாள், கூட்டம்) (Encourage to celebrate birthday meeting)
★ சமய நிகழ்ச்சிகள் ஒழுங்குபடுத்தி உதவுதல் (Arranging spirtual activities)
★ சிநேகிதரை சந்திக்க வாய்ப்பு ஏற்படுத்தி கொடுத்தல் (Make opportunity to meet friends )
★ தொலைக்காட்சி, தொலைபேசிக்கான வழிஏற்படுத்தல் (TV, phone facilities)
★ சுதந்திரமாக நடமாட அனுமதி அளித்தல் (Allowing to independence)
★ பகுதிநேர வேலை முடியுமாயின் ஒழுங்குபடுத்திக்கொடுத்தல் (Arrange part time job)
★ ஒழுங்கான புற்றுநோய் பரிசோதனை
★ யோகப் பயிற்சி
★ புனருத்தாரண சேவை (யோகாப் பயிற்சி தொழில்பயிற்சி)
★ உணவு ஊட்டல் சாதனங்கள் பயிற்சி (குழாய் மூலம்)
★ ஊசி மருந்து போடும் பயிற்சி (இன்சுலின்)

**5. விபத்துக்கள் ஏற்படாது தடுத்தல் (Prevent From accidents)**

★ விழுதல் ( Fall)
★ நிலம் வழுக்காது பேணுதல் (Floor safe)
★ நீர் தேங்காது பேணுதல் (Stagnation of water)
★ நடக்கும் தடி (Walking stick)
★ ஒருவரை உதவிக்கு விட்டு நடக்க உதவுதல் (Assist to walk with the help)
★ பதிவான கட்டில் (Low bed)
★ அளவான இறுக்கமான செருப்பு (குதி தவிர்ந்த)
★ கண்ணாடி அணிய தூண்டல் (Encourage to wearglass)
★ மருந்து எடுத்திருந்தால் பாதுகாப்பு வழங்கல் (Security if in medicine)
★ சூட்டு புண் எரிகாயம் (Scalds and burns) என்பவற்றிலிருந்து பாதுகாத்தல்.
★ நீரின் சூடு சரி பார்த்தல்
★ மின்சாரம்- பாதுகாப்பு/ கவனம்
★ நஞ்சூட்டு கொள்ளலைத் தடுத்தல் (Avoid poisoning)
★ நச்சுப் பொருள்களை தூர/ எட்டாது வைத்தல்.
★ சிவப்பு லேபல் போட்டு தனித்தனியாக/ கலக்காது வைத்தல்.




**6.சுகாதார போதனை (Health Education)**

★ ஒழுங்கான உடற் பரிசோதனை
★ ஒழுங்கான கேட்டல், பார்வை, பற்கள் பரிசோதனை

**7.பொருளாதார வளங்கள் (Economic Resources)**

★உடல் நிலைக்கு ஏற்ப பகுதிநேர வேலை.
★வேலை செய்து இளைப்பாறியவர் ஓய்வூதியம் பெற ஒழுங்குபடுத்தல்.

---




# கண்வெண்படலம்

மருத்துவர் ஆரணி மதன்,
கண் கிளினிக், யாழ்.போதனா வைத்தியசாலை

கண்வெண்படலம் என்பது கண்வில்லையின் ஒளி ஊடுருவுந் தன்மையைக் குறைக்கும் ஒரு நிலைமை ஆகும்.

இது உலகிலேயே கண்பார்வைக் குறைவிற்கான முதன்மையான காரணியாகக் காணப்படுகின்றது.

பொதுவாக முதிர்ந்த வயதில் ஏற்படுகின்ற ஓர் நோய் நிலைமை ஆகும்.

இது கண்வில்லையில் உள்ள புரத மாற்றத்தால் ஏற்படுகின்றது.

**கண்வெண்படல வகைகள்**

1. முதுமையில் ஏற்படுவது (Senile cataract)
பொதுவாக 50 வயதுக்கு மேற்பட்டவர்களில் ஏற்படுகிறது
2. பிறவியில் ஏற்படுவது (Congenital cataract)
இது கர்ப்ப காலத்தில் தாய்க்கு ஏற்படும் சில நோய்களினாலோ அல்லது பரம்பரைக் காரணிகளினாலோ ஏற்படலாம்.
3. கண்ணில் அடிபடுவதனால் ஏற்படுவது (Traumatic cataract)
4. ஏனைய நோய்களினால் ஏற்படுவது
நீரிழிவு
கண் அழற்சி (Uveitis)
கண் அழுத்தநோய் (Glaucoma)
5. நீண்ட கால ஸ்ரீரொயிட் (Steroid) மருந்துப் பாவனையால் ஏற்படுவது.

**அறிகுறிகள்**

★தூரப் பார்வை/ கிட்டப் பார்வை குறைவடைதல்.
★ இரவுப் பார்வை குறைவடைதல்.
★ வெளிச்சம் பார்க்கும்போது கண் கூச்சம் ஏற்படல்.
★ பொருள்கள் இரண்டாக, பலதாக தெரியும் நிலை ஏற்படல்.
★ கண்வெண்படலம் மிகவும் கருமையாக இருப்பின் கண் அழுத்தம் அதிகரிப்பதனால் கண் சிவந்து நோ ஏற்படலாம்.

**கண்வெண்படலம் ஏற்படுதலைத் தூண்டும் காரணங்கள்**

1. வயது அதிகரித்தல் (aging)
2. சூரியக் கதிர்களுக்கு நீண்ட காலமாக கண்வெளிப்படுத்தப்படுவது
3. சலரோக நோயின் தாக்கம்
4. கண்ணில் அடிபடுதல்
5. கதிர்வீச்சு தாக்கம்
6. ஸ்ரீரொயிட் (Steroid) மருந்து வகையை அதிகமான காலம் பாவிக்கின்றமை
7. உடலின் நீரிழப்புத் தன்மை (Dehy-dration)

**சிகிச்சை முறை**

தற்காலிக சிகிச்சை முறை- கண்வெண்படல ஆரம்ப நிலையாயின் மூக்குக் கண்ணாடி பாவித்தலின் மூலம் பார்வையைக் கூட்டலாம்.

நிரந்தர சிகிச்சை முறை
சத்திரசிகிச்சை
(Cataract surgery)

இதன் மூலம் கண்வெண்படலம் அகற்றப்பட்டு செயற்கையாகச் செய்யப்பட்ட வில்லைகள் பொருத்தப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் மானியத்தை முழுமையாக வழங்கவும்

## கடல் தொழில் அமைச்சருக்கு செல்வம் எம்.பி. கடிதம்

மன்னார், மே 5
மீனவர்களின் எரிபொருள் மானியத்தை தொடர்ந்தும் முழுமையாக வழங்குமாறு கோரும் கடிதமொன்றை நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கடற்றொழில் மற்றும் நீரியல் தொழில் அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ளார். மீனவர்களுக்கு வழங்கப்பட்ட எரிபொருள் மானியம் குறைக்கப்பட்டுள்ளதால் மீனவர்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.
எரிபொருள் விலையேற்றத்தினால் மீனவர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வந்த நிலையில் அவர்களின் நலன் கருதி கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சு எரிபொருள் மானியத்தை வழங்கி வந்தது.
இந்த நிலையில் தற்போது மன்னார் மற்றும் முல்லைத்தீவு மீனவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த எரிபொருள் மானிய முத்திரைகளில் குறைப்புச் செய்யப்பட்டுள்ளது.
இதனால் மீனவர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். ஆனால் மன்னார் மாவட்ட கடற்றொழில் பணிமனையின் அதிகாரிகள் குறித்த மானியக் குறைப்புத் தொடர்பாக எவ்வித அறிவித்தல்களையும் உரிய முறையில் வழங்கவில்லை.
எனவே கடல் தொழில் அமைச்சர் என்ற வகையில் பாதிக்கப்பட்ட மன்னார் மாற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்களுக்கு எவ்வித குறைப்பும் இன்றி எரிபொருள் மானிய முத்திரையை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுவதாக இந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-12)

### விதிகள் மீறப்படுவதால் பாதிப்பு

முல்லைத்தீவு,மே 5
வீதிப்புனரமைப்பின் போது உரிய விதிகள் பின்பற்றப்படாமையால் தாம் பாதிப்புக்களை எதிர்கொள்வதாக ஒட்டுசுட்டான் வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.
வீதிப் புனரமைப்பின் போது நீர் ஊற்றப்பட வேண்டுமென்பது விதியாகும். ஆனால் இது பின்பற்றப்படாமையால் தூசிப் படலம் எழுந்து தமது வர்த்தக நிலையங்களைப் பாதிப்படையச் செய்வதாக வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.
எனவே உரிய அதிகாரிகள் இதில் தலையிட்டு உரிய விதிகளை ஒப்பந்தகாரர்கள் பின்பற்றுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் இவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-500)


# மாந்தை கிழக்கில் மணல் தொடர்பான அவசர கலந்துரையாடல்



மன்னார், மே 5
மணலைப் பெற்றுக் கொள்வதில் ஏற்படுகின்ற பிரச்சினைகள் தொடர்பான அவசரக் கலந்துரையாடல் ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை மாந்தை கிழக்கு பிரதேச சபையில் அதன் தலைவர் தலைமையில் நடைபெற்றது.
இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன் மற்றும் எஸ்.வினோநோகராதலிங்கம், பிரதேச சபை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.
இதன் போதே அந்தப் பகுதி மக்கள் தமது பிரச்சினைகளை முன் வைத்தனர்.
தற்போது மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் இடம் பெற்று வரும் இந்திய வீட்டுத் திட்டத்துக்குரிய மணலைப் பெற்றுக்கொள்ளுவதில் தாம் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருவதோடு இராணுவத்தின் தாக்குதல்களுக்கும் உள்ளாவதாக அவர்கள் தெரிவித்தனர்.
மாந்தை கிழக்குப் பிரதேச செயலரினால் மண்ணை அகழ்வதற்கான அனுமதிகள் வழங்கப்படுகின்ற போதிலும் மண் அகழ்கின்ற இடத்தில் இருந்து சுமார் 3 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள இராணுவத்தின் காவலரணுக்குச் சென்று அனுமதியை பெற்ற பின்பே மண்ணை அகழ வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.
எனினும் இராணுவம் அனுமதி வழங்குவதில் தாமதம் ஏற்படுவதாகவும்,சில வேளைகளில் உழவு இயந்திரங்களின் உரிமையாளர்கள் இராணுவத்தினரால் கடுமையாகத் தாக்கப்படுவதாகவும் அந்த மக்கள் தெரிவித்தனர்.
இந்த நிலையில் மக்களின் கோரிக்கைகளுக்கு அமைவாக குறித்த பிரச்சினை தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபரின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளனர்.
மேலும் இராணுவத்தினர், பொலிஸார் திணைக்கள அதிகாரிகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளை மாவட்டச் செயலகத்துக்கு அழைத்துப் பேசி இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறும் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (க-12)

### கடன் பெறுவதில் சிக்கல்

முல்லைத்தீவு,மே5
முல்லை மாவட்டத்தில் சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவுச் சங்கத்தில் கடன்களைப் பெற்றவர் அவற்றைத் திருப்பிச் செலுத்தத் தவறுவதால் ஏனைய பயனாளிகள் பாதிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவுச் சங்கக் கடன் மீன் எழுச்சி மூலம் வாழ்வாதாரக் கடன், கமக்கார வங்கி மூலம் பெறும் கடன் மற்றும் சிறு சேமிப்புக் கடன் ஆகிய கடன்களை பெறுவோர் உரிய காலத்தில் அவற்றைச் செலுத்தத் தவறுவதால் கடன் பெறுவதற்குக் காத்திருக்கும் ஏனைய பயனாளிகள் ஏமாற்றமடைந்து வருகின்றனர்.
எனவே ஏனைய பயனாளிகளும் பயன்பெறும் வகையில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனப் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர். (க-500)



வவுனியா மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் மலைநாட்டு மரக்கறி வகைகளை உற்பத்தி செய்வதில் அதிகளவு நாட்டம் கொண்டுள்ளனர். உற்பத்தி செய்யப்பட்ட பூக்கோவாக்களை வவுனியா விவசாய அலுவலகத்தின் பாட விதான உத்தியோகத்தரான ஆர்.தர்மதேவன் பார்வையிடுகிறார். (கு 402)

### ஆரம்பமானது மானிய உர விநியோகம்



கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் கீழான சிறுபோக பயிர்ச் செய்கைக்குரிய மானிய உர விநியோகம் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
கிளிநொச்சியில் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள சிறுபோக பயிர்ச் செய்கைக்கான மானிய உரம் வழங்கப்படுவதில் தாமதம் ஏற்படுவதால் விவசாயிகள் பாதிப்புக்களை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.
இந்த நிலையில் சிறுபோக செய்கைக்கான மானிய உர விநியோகம் இந்த வாரம் தொடக்கம் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.
தற்போது கிளிநொச்சி கமநல சேவை நிலையத்தில் உள்ள உரக்களஞ்சியத்தில் சுமார் 4 ஆயிரம் அந்தர் உரம் உள்ளதாகவும் இதனை வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கிளிநொச்சி கமநல சேவை நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (க-6)

# சிவபுரம் வீதியை புனரமைக்குக

கிளிநொச்சி,மே5
நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாது காணப்படும் பரந்தன் சிவபுரம் வீதியைப் புனரமைத்துத் தருமாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
சிவபுரம் கிராமத்தில் 300 இக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.
இந்த மக்கள் வெளி இடங்களுக்கு சென்று வருவதற்கு சீரான பாதையோ, போக்குவரத்து வசதியோ இல்லை என்று கவலை தெரிவிக்கப்படுகிறது.
தமது கிராமம் அபிவிருத்தி நடவடிக்கைகளில் இருந்து புறக் கணிக்கப்படுவதாகவும், இதனால் தாம் பல்வேறு நெருக்கடிகளை எதிர் நோக்க வேண்டி ஏற்பட்டுள்ளதாகவும் நிரந்தர வீட்டு வசதிகள் இன்றி அல்லல்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.
குறித்த வீதியைப் புனரமைத்து உட்கட்டுமான வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஜ-426)

# தாக்குதலுக்கு கண்டனம்

வட பகுதியில் உள்ள தமிழ் ஊடகங்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்களை வன்னி சுதந்திர ஊடகப் பேரவை வன்மையாகக் கண்டித்துள்ளது.
வட பகுதியில் உள்ள தமிழ் ஊடகங்கள் மீது தொடர்ச்சியான தாக்குதல்களை நடத்தி அவற்றை இயங்கவிடாது தடுக்கும் நோக்கில் அரசு ஈடுபட்டுள்ளது.
இதன் ஒரு அங்கமாகவே உதயன் பத்திரிகை நிறுவனம் மீது தாக்குதல் நடத்தப்பட்டு அச்சு இயந்திரங்களைத் தீக்கிரையாக்கிய சம்பவம் இடம்பெற்றுள்ளது.
ஒவ்வொரு மக்களின் மனம் நிறைந்த நாளிதழ் ஒன்றை இல்லாது ஒழிக்கும் செயலாகும். இலங்கையில் ஊடக சுதந்திரம் மோசமாக இருப்பதாகவும், தாக்குதல்கள் மூலம் மேலும் மக்களை ஆத்திரமடையச் செய்யப்படுவதாகவும் பேரவையினர் கடும் கண்டனத்தையும் கவலையையும் வெளியிட்டுள்ளனர். (க-500)

# காடு மண்டிய நிலையில் ஒதியமலை பிரதான வீதி

நெடுங்கேணி,மே 5
நெடுங்கேணி பட்டிக்குடியிருப்பில் இருந்து ஒதியமலை செல்லும் பிரதான வீதி புனரமைப்பின்றிக் காடு மண்டிக் கிடப்பதாக இந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.
1984 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்த வீதியில் புனரமைப்புப் பணிகள் எதுவும் மேற்கொள்ளப்படாமையே இதற்கான பிரதான காரணம் எனவும் தெரிய வருகின்றது.
மேலும் வீதியின் மோசமான நிலை காரணமாக இந்த வீதியூடான பஸ் சேவைகளும் நிறுத்தப்பட்டுள்ளன. இதனால் ஒதியமலையில் வசிக்கும் மக்கள் நீண்ட தூரம் சைக்கிள்களிலும்,நடந்தும் நெடுங்கேணிக்குச் சென்று தமது அவசிய தேவைகளைப் பூர்த்தி செய்து வருவதாகவும் தெரிய வருகின்றது.
மேலும் வீதியில் காடு மண்டிக் காணப்படுவதால் மக்கள் அச்சத்துடன் பயணிப்பதையும் அவதானிக்க முடிகின்றது.
எனவே உரிய அதிகாரிகள் தமது அவல நிலையை உணர்ந்து குறித்த வீதியின் புனரமைப்புப் பணிகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர். (கு-435)

# சிறந்த வகையில் வீதிகள் புனரமைப்பு

நெளுக்குளம்,மே5
வவுனியா மகா இறம்பைக் குளம் பகுதியில் அமைந்துள்ள இரு வீதிகள் சிறந்த முறையில் புனரமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
வவுனியா மகா இறம்பைக் குளம் பகுதியில் அமைந்துள்ள மதுரைவீரன் கோயில் வீதி மற்றும் பாடசாலை சுற்றுவட்ட வீதி ஆகியனவே மேற்குறித்தவாறு புனரமைக்கப்பட்டுள்ளன.
கடந்த பல வருடங்களாக மழையினால் தேங்கி நின்ற



வெள்ளத்தினால் இந்த வீதிகள் குன்றும் குழியுமாகக் [illegible] நிலையிலும் இருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-421)

# நிவாரணம் வழங்குமாறு குஞ்சுக்குளத்தில் கோரிக்கை

அக்கராயன்,மே5
முழுமையாக உவரடைந்து விட்டதால் தமக்கு நிவாரண உதவிகளை வழங்குமாறு குஞ்சுக்குளம் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
குஞ்சுக்குளம் கிராமம் தற்போது முழுமையாக உவரடைந்த நிலையில் காணப்படுகின்றது. இதனால் மக்களின் வாழ்விடங்கள், வயல் நிலங்கள் என்பன பயனில்லாத [illegible] உள்ளன. [illegible] இந்தக் கிராம மக்கள் பெரியளவிலான தண்ணீர்த் தட்டுப்பாட்டையும் எதிர்கொண்டு வருகின்றனர். இவர்கள் தமக்குத் தேவையான குடிதண்ணீரைப் பெறுவதற்கு நீண்ட தூரம் அலைந்து திரிவதைக் காண முடிகின்றது.
உவர் காரணமாக பயிர்ச் செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத நிலையில் மக்கள் உள்ளனர். இதனால் இவர்களது வாழ்வாதாரம் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.
இங்கு வசிக்கும் 35 குடும்பங்களும் தமது அன்றாட உணவுத் தேவையை நிவர்த்தி செய்வதற்குப் பெரும் இன்னல்களைத் தாம் எதிர்கொள்வதாகத் தெரிவித்துள்ளன.
எனவே தமது அவல நிலையை உணர்ந்து அதிகாரிகள் தமக்கு நிவாரண உதவிகளை வழங்க வேண்டுமென இந்த மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
வன்னேரிக்குளமும், தேவன்குளமும் இணைக்கப்பட்டால் குஞ்சுக்குளம் கிராம மக்களுக்கு வயல் நிலம் வழங்கப்படுமென அதிகாரிகள் ஏற்கனவே தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கார் விற்பனைக்கு

GB xxxx இலக்கமுடைய TOYOTA COROLLA 110 வெள்ளைநிற நல்ல நிலையில் உள்ள கார் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0776158963

## காணி விற்பனைக்கு

[illegible] 2½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. [illegible]

தொடர்பு: 075 060 9358 (36950) (5.11)

## வேலையாள்கள் தேவை

25,000/= சம்பளத்திற்கு எங்களுடைய க்ளவுஸ் உற்பத்தி செய்யும் கம்பனிக்கு 18-55 வயது வரையான ஆண்கள், பெண்கள் தேவை. சாப்பாடு, தங்குமிட வசதி உண்டு. குழுக்களாகவும் வரலாம். வரும் அன்றே வேலைக்கு சேர்த்துக் கொள்ளப்படுவர்.

தொடர்பு: 077 303 2004 அனுராதபுரம்.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



ஸ்ரீவல்லிபுராழ்வார் தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ.க.புருஷோத்த மக்குரு - ஸ்ரீமதி ரஜனிஅம்மா தம்பதியரின் புதல்வி

### செல்வி சௌமியா

அவர்கள் 21.04.2013 அன்று கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவிலே B.A (Communication – 2nd Upper) பட்டத்தை பெற்றமையையிட்டு பாராட்டுவதோடு அவர் மேன்மேலும் உயர் கல்விகளை கற்று உயர்வடைய சித்தன்கேணி சிவசிதம்பரேஸ்வரரையும் வல்லிபுர மாயவனையும் வேண்டி எமது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சிவன் கோயில், சித்தன்கேணி.

சபா மாமா குடும்பம் அத்தான், அக்கா, ஸ்ரீநயா, ராம்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

திருமதி
**செல்வராசா இரத்தினம்**



தோற்றம்
21*05*1948

மறைவு
05*04*2013

கடந்த 05.04.2013 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம்

**அமரர் செல்வராசா இரத்தினம்**

அவர்களின் 31 ஆம் நாள் நினைவஞ்சலிக் கிரியைகள் இன்று (05.05.2013) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அன்னாரின் 31 ஆம் நாள் நினைவஞ்சலியிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

என்றும் உங்கள் நினைவோடு
குடும்பத்தினர்.

ஆதியாமலை, உடுப்பிட்டி. (C/8825) (2.6)


## கார் விற்பனைக்கு

65-xxxx இலக்கமுடைய ரொயாரா கொர்லா டீசல் வகன் கார் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 071 427 5724

## காணி விற்பனைக்கு

யாழ். கொட்டடி சீனி வாசகம் வீதியில் ஒரு பரப்பும் 15½ குளியும் கொண்ட காணி உடன் விற்பனைக்கு.

தொடர்பு: 077 673 7272 (37019)(6.11)

## வீடு வாடகைக்கு

திருநெல்வேலிக்கு அருகில் (மருத்துவ பீடத்துக்கு முன்பாக) 5 அறையும் 2 ஹோலும் கொண்ட வீடு வாடகைக்குண்டு. (சகல வசதிகளும் கொண்டது.)

தொடர்பு: 077 309 9649

## பணியாள்கள் தேவை

25,000/=, 35,000/=, 40,000/= வரையான சம்பளத்துக்கு எங்கள் தனியார் நிறுவனத்தில் பல் வேலைக்கு 18-55 வயது வரையான ஆண்கள் தேவை.

தொடர்பு: 077 3033 803 அனுராதபுரம். (35152) (6.11)

## காணி விற்பனைக்கு

கோப்பாய் தெற்கு, கிளுவானை ஒழுங்கையில் 10¼ பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.

T.P: 077 500 2162


## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்
02 ★ 12 ★ 1981

விண்ணில்
05 ★ 05 ★ 2006

### செல்வி கணபதிப்பிள்ளை கலாமதி (அபிராமி)

(இ.போ.ச.கணக்காய்வாளர், வவுனியா)



அன்று எம் சக்தியின் மூச்சானவளே
இன்று எம் செயலில் வீச்சானாய்
வளர்ந்து வரும் மானி! மாண்புக்குள்
உந்தன் நற்குணமும் நற்சேவையும்
ஒரு மைல் கல்லம்மா.
ஆண்டுகள் ஏழு கடந்தென்ன!
ஏழேழு ஜென்மத்திற்கும் எம் நினைவுக்குள்
நீ தானம்மா
உன் ஆத்மா சாந்தியடைய உம் நினைவு நாளில்
கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்கி
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உன்பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, அண்ணன்மார்,
அண்ணிமார், மருமகள்மார்,
உற்றார், நண்பர்கள்.

சி.கணபதிப்பிள்ளை (தந்தை),
சிறி மூர்த்தியகம், நீர்வேலி.

(36897)(2.6.7)

# மரண அறிவித்தல்

## திருமதி மங்களேஸ்வரி பாலேந்திரன்



கே.கே.எஸ். வீதி, கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் டச்வீதி, உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மங்களேஸ்வரி பாலேந்திரன் கடந்த 02.05.2013 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை தில்லையம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற பாலேந்திரனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் இராஜேஸ்வரி, சந்திரசேனா, காலஞ்சென்ற கணநாதன் மற்றும் துரைசிங்கம் (அப்பையா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் இராஜேஸ்வரி, காலஞ்சென்ற இரட்ணசிங்கம் மற்றும் அழகம்மா, புனிதவதி ஆகியோரின் மைத்துனியும் இராஜசிங்கம் (சுவிஸ்), விமலகுமாரி (ஆசிரியர், யா/முருகமூர்த்தி வித்தியாசாலை, ஈசன் (சுவிஸ்), ஜெயம் (லண்டன்), சுகந்தன் (சுவிஸ்), சீலன் (இரட்ணம் கிறீம் ஹவுஸ்) ஆகியோரின் பாசமிகு சிறியதாயும், கலாவதி, தயானந்தன், பாமினி, கீதாஞ்சலி, கோமளா, காயித்திரி ஆகியோரின் பாசமிகு மாமியும் நிரோன், நிரேஸ், நிவேத், சாரங்கி, சுயான், ஷாளினி, திவ்வியா, தளிர்னா, இனிந்தா, அனாமிகன், வக்ஷன்யா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.05.2013) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 11.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இ.சீலன்

ரட்ணம் கிறீம் ஹவுஸ், டச் றோட், உடுவில்.

(C/8831) (23-16-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்டக்களப்பில் மாசிக் கருவாடு உற்பத்தி



மட்டக்களப்பு மாவட்ட கடற்றொழில் திணைக்களத்தின் ஏற்பாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் மாசிக் கருவாடு தயாரிக்கும் நடவடிக்கை வெற்றியளித்துள்ளது என்று மாவட்ட கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் டொமின்கோ ஜோர்ஜ் தெரிவித்தார்.
சூரை மீன்களிலிருந்து தயாரிக்கப்பட்ட மாசிக் கருவாடுகளை மட்டக்களப்பு மாவட்டத்தின் கடற்றொழில் அதிகாரிகள் பார்வையிட்டனர்.
மட்டக்களப்பு மாவட்டத்தின் கடற்றொழில் திணைக்கள வளாகத்தில் முதல் தடவையாக மாசிக் கருவாடு தயாரிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# தமிழர் காணி அபகரிப்பை உடன் தடுத்து நிறுத்துங்கள்

## செல்வராசா எம்.பி. வேண்டுகோள்

மட்டக்களப்பு,மே 5
மட்டக்களப்பு மாவட்டத்தின் மேற்கு எல்லையிலும் தமிழர்களுக்கு சொந்தமான காணிகளை பெரும்பான்மை இனத்தவர்கள் அபகரிப்பதற்கான முயற்சிகள் இடம்பெறுகின்றன. எனவே அதனை தடுத்து நிறுத்துமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா மாவட்ட அரச அதிபரைக் கேட்டுள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:-
மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களின் எல்லையிலுள்ள கண்ணபுரம் கிராமத்திலுள்ள காடுகள் தற்போது கனரக இயந்திரங்கள் மூலம் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன.
பட்டிருப்புத் தொகுதியைச் சேர்ந்த தமிழர்கள் 1990 ஆம் ஆண்டுக்கு முன்னர் கண்ணியம்பை பகுதியில் விவசாய செய்கையில் ஈடுபட்டு வந்தனர். போர்க்காலத்தில் எதிர்நோக்கிய பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் காரணமாக விவசாயச் செய்கையைக் கைவிட்டதன் காரணமாக தற்போது அந்தப் பகுதி காடுகளாக மாறியுள்ளன.
தற்போது அந்தப் பகுதிகள் கனரக இயந்திரங்கள் மூலம் துப்புரவு செய்யப்படுவதாக காணி உரிமையாளர்களினால் தெரிவிக்கப்பட்ட புகார்களையடுத்து, அந்தப் பகுதிக்கு நான் நேரில் சென்றபோது காடுகள் துப்புரவு செய்யப்படுவதைக் காண முடிந்தது . பிரதேச செயலருக்குத் தெரியாமலே துப்புரவுப் பணி நடக்கின்றது.
காடுகள் துப்பரவு பண்ணும் இடத்தில் இராணுவம், சிவில் பாதுகாப்பு படை, சிவில் அதிகாரிகள் மற்றும் சில பெரும்பான்மையின மக்களும் காணப்பட்டனர்.
இந்த நடவடிக்கையை, தமிழர்களுக்குரிய விவசாய நிலங்களை அபகரித்து பெரும்பான்மையினத்தவர்களுக்குப் பகிர்ந்தளிப்பதற்கான முயற்சியாகவே கருத வேண்டியுள்ளது.
எனவே இந்த விடயத்தை அரச அதிபரின் கவனத்துக்குக் கொண்டு வந்த போது, அதிகாரிகளை அந்தப் பகுதிக்கு நேரில் அனுப்பி விவரங்களைப் பெற்று ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுப்பதாக அவர் என்னிடம் உறுதியளித்துள்ளார்.-என்றார். (ச)



## பால்மாவை பரிசோதிக்க வேண்டாம்; நியூசிலாந்தின் கோரிக்கை நிராகரிப்பு

கொழும்பு,மே 5
நியூசிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்படும் பால்மா வகைகளை கதிரியக்க பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டாம் என்று நியூசிலாந்து விடுத்த கோரிக்கையை தேசிய அணுசக்தி அதிகார சபை நிராகரித்துள்ளது.
இலங்கைக்கு வருகை தந்துள்ள நியூசிலாந்தின் சிறு கைத்தொழில் அமைச்சின் பிரதிநிதிகளுடன் இது தொடர்பாக நடைபெற்ற பேச்சின்போதே அதிகார சபை இந்தத் தீர்மானத்தை அறிவித்துள்ளது.
தமது நாட்டு பால்மா வகைகளை கதிரியக்க பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டாம் என கேட்டுக்கொண்டபோதிலும் அவர்கள் எவ்வித அழுத்தங்களும் கொடுக்கவில்லை என்று தேசிய அணுசக்தி அதிகார சபையின் தலைவர் ரஞ்சித் விஜேவர்தன குறிப்பிட்டார்.
கதிரியக்க பதார்த்தங்கள் அடங்கியுள்ளனவா என்பதைக் கண்டறிய தேசிய அணுசக்தி அதிகார சபையினால் மேற்கொள்ளப்படும் பரிசோதனைகளின் பின்னரே இறக்குமதி செய்யப்படுகின்ற பால்மா வகைகள் நாட்டுக்குள் அனுமதிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

### சுற்றுலா விடுதிகளுக்கு

## அதிக கட்டணம் அறவீடு செய்யும் நாடு இலங்கை



கொழும்பு,மே5
ஆசிய நாடுகளில் சுற்றுலா விடுதி அறைகளுக்கு அதிக கட்டணங்களை அறவிடும் நாடுகளின்பட்டியலில்இலங்கை முதல் இடத்தில் உள்ளது.
ஏனைய பிராந்திய நாடுகளைக் காட்டிலும் இலங்கையின் விடுதி அறைக்கான கட்டணங்கள் 30 முதல் 40 சதவீதம் அதிகமாகக் காணப்படுகிறது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
ஏற்கனவே விடுமுறை காலங்களை இலங்கையில் கழிப்பதற்கு, அதிக செலவினங்களை மேற்கொள்ள வேண்டிய நிலை காணப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.
இந்தநிலையில் மீண்டும் அறைகளுக்கான கட்டணங்களும் அதிகரிக்கப்பட்டுள்ளன. இந்த அதிகரிப்பானது சுற்றுலாத்துறையை மேலும் பாதிப்படைய செய்யும் என்று சுற்றுலா அபிவிருத்தி முகவர்கள் எச்சரித்துள்ளனர். (ச)




மருதமுனை அல் மனார் மத்திய கல்லூரியின் தேவைகள் அடங்கிய மகஜரை கல்லூரியின் ஆரம்பப் பிரிவு அபிவிருத்திக் குழுவின் இணைப்பாளர்களான எம்.ஐ.எம்.வலீத், கிழக்கு பல்கலைக்கழக உதவிப் பதிவாளர் எம்.எம்.பாரூக் ஆகியோர் முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத்திடம் கையளித்தனர்.

## தங்கக் கட்டிகளை கடத்த முயன்றவர் கைதானார்

கொழும்பு,மே5
ஒருதொகை தங்கக் கட்டிகளை இந்தியாவுக்குக் கடத்த முற்பட்ட ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார். சுமார் 400 கிராம் நிறையுடைய தங்கக் கட்டிகளின் பெறுமதி 25 லட்சம் ரூபா என்று மதிப்படப்பட்டுள்ளது.
கைது செய்யப்பட்ட சந்தேக நபரை சுங்கப் பிரிவினரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
குறித்த நபர் தங்கக் கட்டிகளை தனது காலணிக்குள் மறைத்து கடத்திச் செல்ல முற்பட்டதாக சுங்கப் பிரிவின் ஊடகப் பேச்சாளர் லெஸ்லி காமினி தெரிவித்தார்.

## இலங்கை வருகின்றன ஜேர்மன் 'சிங்கங்கள்'



கொழும்பு,மே 5
ஜேர்மனி மற்றும் தென் கொரியா ஆகிய நாடுகள் இணைந்து இலங்கைக்கு மூன்று சிங்கங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளன.
இந்த மாத இறுதியில் சிங்கங்கள் இலங்கைக்குக் கொண்டுவரப்பட உள்ளன என்று தேசிய மிருகக்காட்சிசாலையின் பேச்சாளர் ஒருவர் கூறினார்.
ஜேர்மனியிலிருந்து இரண்டு பெண் சிங்கங்களும், தென் கொரியாவிலிருந்து ஆண் சிங்கமொன்றும் இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.
இதேவேளை, தெஹிவளை தேசிய மிருகக்காட்சிசாலையில் 6 சிங்கங்கள் பராமரிக்கப்படுவதுடன், அவை மிகவும் வயதான நிலையில் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.
கடந்த 20 வருட காலப் பகுதியில் தேசிய மிருகக் காட்சிசாலைக்கு வேறு நாடுகளிலிருந்து சிங்கங்கள் கொண்டு வரப்படவில்லை என்று மிருகக்காட்சிசாலையின் பேச்சாளர் குறிப்பிட்டார்.(ச)

# ஊடகவியலாளரின் பாதுகாப்பை அரசு உறுதிப்படுத்த வேண்டும்

## மே தினத்தில் தீர்மானம் நிறைவேறியது

''ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்களின் பாதுகாப்பை அரசு உறுதிப்படுத்துவதுடன் ,கண்ணியத்துவத்தையும் பாதுகாக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.''
இவ்வாறு அரசைக் கோரும் தீர்மானம் ஒன்றை வடக்கு, கிழக்கு மாகாண ஜீவோதய நலன்புரி நிறுவனம் மே தினத் தீர்மானமாக நிறைவேற்றியுள்ளது.
அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத்தின் இணை நிறுவனமான வடக்கு, கிழக்கு மாகாண ஜீவோதய நலன்புரி நிறுவனம் கல்முனையில் [illegible] கூட்டத்தில் இந்த மே தினக் கோரிக்கைத் தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றியது.
மேதினக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு.
★சிறுபான்மை சமூகங்களின் கலை, கலாசார , சமய விழுமியங்களுக்கும், ஏனைய அடிப்படை உரிமைகளுக்கும் குந்தகம் விளைவிக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுவோர் தொடர்பில் அரசு காத்திரமான நடவடிக்கையெடுத்து இனவிரோத செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.
★மரணதண்டனை விதிக்கப்பட்ட கைதிகளுக்கு மனிதாபிமான அடிப்படையில் மன்னிப்பளித்து அவர்களது தண்டனையைக் குறைக்க ஜனாதிபதி ஆவன செய்ய வேண்டும்.
★மின் கட்டண உயர்வு, எரிவாயு, எரிபொருள்கள் விலை உயர்வு போன்றவை மக்களைப் பெரிதும் பாதித்துள்ளது. இவற்றின் விலையேற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்கும், குறைப்பதற்கும் அரசு உடன்முன்வர வேண்டும்.
★கல்முனைப் பிரதேச முஸ்லிம் மற்றும் தமிழ் பிரதிநிதிகள் ஒன்றிணைந்து சுமார் 22 வருடங்களுக்கு மேலாகச் செயற்பட்டுவரும் கல்முனை தமிழ்ப் பிரிவு பிரதேச செயலகத்தை கல்முனை வடக்கு பிரதேச செயலகமெனும் பெயரில் தரம் உயர்த்த வேண்டும்.
★போர் மற்றும் இடர் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டு குடியிருப்பு வசதிகளற்று அல்லலுறும் மக்களுக்கு நிரந்தர குடியிருப்பு, வீட்டு வசதிகளை அரசு தாமதமின்றி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்பவையாகும். (ச-36)

> போரால் பாதிக்கப்பட்டு குடியிருப்பு வசதிகளற்று அல்லலுறும் மக்களுக்கு நிரந்தர வீட்டு வசதியை வழங்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். விக்னேஸ்வரா ஆரம்பப் பாடசாலை இல்ல மெய்வன்மைப்போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக கலந்துகொண்ட வடமராட்சி வலயப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் அ.ஸ்ரீகரன் மங்கல விளக்கு ஏற்றுகிறார். (எ)



மானிப்பாய் பொலிஸாரும் வர்த்தக சங்கமும் இணைந்து நடத்திய புத்தாண்டு விளையாட்டு விழாவில் சிறுவர்கள் பலூன் ஊதி உடைக்கும் நிகழ்வு. (எ 100)



யாழ். நடேஸ்வராக் கல்லூரி இல்லமெய்வன்மைப்போட்டி அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் மாணவர்கள் பாண்ட் வாத்தியம் இசைப்பதைக் காணலாம். (எ)



சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் நடத்தப்பட்ட உள்ளூர் உற்பத்திப் பொருள்கள் சமுர்த்தி கண்காட்சியில் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த பெண் ஒருவரின் கை வண்ணத்தில் உருவான முகமூடிகள் காட்சிக்கு வைக்கப்பட்டன. (எ 100)



பொலிகண்டி சனசமூக நிலைய மக்கள் படிப்பக முன்பள்ளியின் அண்மையில் நடைபெற்ற கால்கோள் விழாவில் ஆசிரியர் மாணவர்கள். (எ)



மாவட்ட மட்ட தமிழ்த்தின போட்டியில் வில்லிசையில் யாழ். கொட்டு இந்துக் கல்லூரி முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது. அதிபர் பொறுப்பாசிரியர்களுடன் வில்லிசைக் குழுவினர் நிற்கின்றனர். (எ)



வேலணை பிரதேச செயலக விளையாட்டுக்கழகங்களுக்கிடையிலான விளையாட்டு விழா நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. வெற்றி பெற்ற துறையூர் சிவனேசவுக்கு யாழ். மாவட்ட உதைபந்தாட்ட பயிற்றுநர் பா.முகுந்தன் வெற்றிக் கிண்ணம் வழங்கிக் கௌரவிக்கிறார். (எ 167)



பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்ட யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவன மாணவர்கள். (எ 50)



கொடிகாமம் அரசினர் வித்தியாலயத்தின் இல்லமெய்வன்மை[illegible] அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதி அதிபர் திருமதி இ.திருஞானசம்பந்தமூர்த்தி மங்கல விளக்கேற்றுவதையும் அருகில் பிரதம விருந்தினர்[illegible] பணிப்பாளர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி மற்றும் அதிபர், ஆசிரியர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாண்டு நினைவலைகள்



மலர்வு
05.06.1949

உதிர்வு
01.05.2008

திருமதி **திலகவதி கனகசபாபதி**
(உசன்)

திதி: ஏகாதசி 05.05.2013
(ஞாயிறு)

அருமையுடன் ஆதரித்து அகமகிழ்ந்த அம்மாவே!
பெருமையுடன் பெரும் செல்வம் எல்லாம் சேர்த்தாயே!
பொறுமையுடன் புன்னகை காட்டும் சிகரமும் நீதானே!
வெறுமையுடன் வேறானோம் வேறென்ன! தங்க திலகமே!
ஐந்தாண்டு அஞ்சலியுடன்
அகவை அறுபத்து நான்கின் நினைவுகளும்.
ஓம் சாந்தி!

"காவேரி"
உசன், மிருசுவில்.

ஆத்ம சாந்திக்காக
குடும்பத்தினர்.

(C/9274)(10.6)

# தேவை

25000/= - 28000/= சம்பளத்துக்கு PVC தயாரிப்பு கம்பனியில் வேலைவாய்புக்கு 18-50 வயது வரையான ஆண்கள் தேவை. உணவு, தங்குமிட வசதிகள் உண்டு.

தொடர்புகளுக்கு:
0776289655

(36164)(10.9)

# கடைத்தொகுதி வாடகைக்கு



அல்லைப்பிட்டி, 2 ஆம் வட்டாரத்தில் சகல வசதிகளுடனும் 5 கடைகளை உள்ளடக்கியதாக கடைத்தொகுதி வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 021 491 9363,
071 585 4388

(36995)(6.11)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
12.02.1956

மறைவு
16.04.2012

அமரர் **கணபதிப்பிள்ளை செல்வேந்திரராசா** (வண்டையா)
(பாரினி ஹொறி உரிமையாளர்)

ஆண்டு ஒன்று சென்றாலும்
ஆறவில்லை உங்கள் நினைவுகள்
என்றும் எம்மை விட்டகலாத தெய்வமே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

சிவன் வீதி,
ஆவரங்கால்.

என்றும் நினைவில்
குடும்பத்தினர்,
சகோதரர்கள்.

(37022)(45.6)

# கிருபா ஜுவெலர்ஸ்

நாலு வருடம் கழித்து நாலு
தலைமுறை கண்ட ஒரே ஸ்தாபனம்
மீண்டும் அதே இடத்தில்
கிருபா ஜுவெலர்ஸ்
(கிருபா நகை மாளிகை)
333, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(37006)(6.11)

# VACANCIES

APPLY TODAY START TOMORROW

நாடு பூராகவும் 60 இற்கும் மேற்பட்ட கிளைகளைக் கொண்டியங்கும் INNOVAGE GROUP OF COMPANY இன் 2013 இற்கான முகாமைத்துவப் பயிற்சி பதவி வெற்றிடங்கள்.

தகைமைகள்: 18 28 வயதெல்லை
O/L அல்லது A/L, அனுபவம்
தேவையில்லை, குறுகிய காலப் பயிற்சி
பயிற்சியின் போது மாதம் 12,000/- Fixed Income Package
பூர்த்தியின் பின் 45,000/- இற்கு மேல் வேதனத்துடன் தங்குமிட
வசதியுண்டு. அழைக்க: 077 821 3839

(37005)(6.11)

# ஆதி சக்தி திருமணசேவை

எம்மிடம் செவ்வாய் உள்ள, செவ்வாய் அற்ற, PR உள்ள, PR அற்ற மணமக்கள் உண்டு.

தொடர்பு: 077 706 8984

(36979)(6.11)

# MATHS TUITION

O/L கணிதம் (Repeat Dec 2013) மற்றும் தரம் 6 முதல் O/L வரை கணிதம் பல வருட அனுபவமிக்க ஆசிரியரால் வீடு வந்து தனி/குழு வகுப்புக்கள் எடுக்கப்படும். வசதி குறைந்த மாணவருக்கு சலுகைக் கட்டணம் அறவிடப்படும்.

தொடர்பு: 077 937 0228

(36981)(6.11)

# சேவை நலன் பாராட்டு



திருமதி
**சுந்தரேஸ்வரி பரமலிங்கம்**

ஆசிரியர் - யா/கோப்பாய் மகா வித்தியாலயம்
விசேட பயிற்சி மனைப் பொருளியல்
இ.ஆ.சே.தரம் 1

19.10.2006 இலிருந்து 05.05.2013 இன்று வரை எமது பாடசாலையில் சேவையாற்றி 07.02.2013 இல் அகவை ஐம்பதைப் பூர்த்தி செய்து தனது 28 வருட ஆசிரியப் பணியினின்றும் ஓய்வு பெறும் திருமதி சுந்தரேஸ்வரி பரமலிங்கம் அவர்கள் தனது ஓய்வுக் காலத்தில் சீரும் சிறப்பும் பெற்றுத் தனது சுற்றத்தாருடன் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

(37031)(2.6)

**ஆசிரியர் கழகம், யா/கோப்பாய் மகா வித்தியாலயம்.**

# BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS

எமது கற்கைநெறிகள் Writing, Speaking, Reading, Listening என்பவற்றை மையப்படுத்தியதாக ஒவ்வொரு பிரிவும் மிகச் சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.

Excellent Teachers' Panel & Individual Attention

**Spoken English With Grammar - Quick Learning Course**

குறுகிய காலத்தில் ஆங்கிலத்தில் புலமை பெற விரும்புவர்களுக்கு இது பொருத்தமாகும். பாடசாலை மாணவர்கள், தொழில்புரிவோர், ஆங்கிலம் கற்க விரும்புவோருக்கு உகந்தது.

**Diploma / Advanced Diploma in English**

ஓரளவு ஆங்கில அறிவு உள்ளவர்கள் மேலும் அறிவை விருத்தி செய்ய சிறப்பாக அமைக்கப்பட்ட கற்கைநெறி. ஆங்கில அறிவு, இலக்கணம், இலக்கியம் என்பன விரிவாகக் கற்பிக்கப்படும்.

**IELTS - British Council**
**B1 - Exam City & Guilds**

Student Visa / Migration Visa மூலம் Canada, Newzeland, USA, Australia மற்றும் UK செல்ல உள்ளவர்களுக்கு ஏற்றது.

**A1 Exam - Sponsor/Settlement Visa**

மூலம் UK செல்பவர்களுக்கு British High Commissionனால் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை

**Young Learners for English (YLE)**

வயதெல்லை 7 - 12 உட்பட்ட மாணவர்களுக்கான சர்வதேச பரீட்சை என்பதுடன் University of Cambridge வழங்கும் சான்றிதழ்

Batch I - 06/05/2013 Batch II - 11/05/2013 Batch III - 13/05/2013 Batch IV - 18/05/2013

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Jaffna Branch:
No. 15, Sirambiyady Lane,
off Stanley Road,
Jaffna.
Tel: 021 222 4550

Vavuniya Branch:
No. 3, 6th Lane,
Vairavarkowil Veethy,
Vairavarpulliyamkulam, Vavuniya.
Tel: 024 324 5287

Hot Lines : 077 722 2422, 077 758 5913, 071 429 9935, 077 773 0074

# சாந்த றீற்றா என்ரப்பிறைசஸ்

"இரண்டு நட்சத்திர கூரை ஓடு"

80 ஆண்டுகளாக முன்னிலையில் உள்ள கூரை ஓடுகள். கூரை ஓடுகளை வாங்கும் பொழுது அங்கீகரிக்கப்பட்ட தரமான நல்ல ஓடாகப் பார்த்து வாங்கவும்

**"Double Star ஓடுகள்"**

எல்லா நகரத்திலும் எமக்கு ஏஜென்டுகள் தேவை.
வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, புதுக்காடு, கிளிநொச்சி, பரந்தன், வேலணை, கோண்டாவில், யாழ்ப்பாணம், சாவகச்சேரி, நெல்லியடி, அச்சுவேலி, அங்கம்பிட்டிய வாய்க்கால்.

K.கனகலிங்கம், இல.36, மகளிர் திட்டம், மிருசுவில். 077 602 3002
031 22 77 325, 077 721 9351

(37020)(2.6)

# SYLO FOOD & BEVERAGES (PVT) LTD

## பதவி வெற்றிடங்கள்

யாழ்மாவட்டத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள SyloFood&Beverages(PVT)Ltdநிறுவனத்தின் ICE Cream மற்றும் Beverage பிரிவுக்கு கீழ்காணும் பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகுதியும் விருப்பமுள்ளோரும் விண்ணப்பிக்கவும்.

01 Project Manager (முகாமையாளர்)
ஐஸ்கிறீம் தயாரிப்பு மற்றும் விற்பனை அனுபவமும் நிர்வாகத்திறமையும் உள்ளவர்கள்
02 Factory Incharge (தொழிற்சாலை பொறுப்பாளர்)
ஐஸ்கிறீம் உற்பத்தியில் போதிய அனுபவமுள்ளவர்கள்
03 Electrical & Mechanical Technician
04 Drivers (Light vehicle, heavy vehicle)
05 Sales Man (Ice cream Van மற்றும் கடை அனுபவம்)
06 Mechanics (வாகனங்கள் பராமரிப்பில் அனுபவம்)
07 Security Guard (அனுபவம் உள்ளவர்கள்)
08 Helpers and cleaners (ஆண்/பெண்)

அனைத்து விண்ணப்பங்களும் 15/05/2013 முன்னர் கிடைக்க கூடியவாறு அனுப்பிவைக்கவும் அனுப்பவேண்டிய Address/ email

**Sylo Food &Beverages (Pvt) Ltd,**
**No:- 76, Amman veethy, Kokuvil East Kokuvil, Jaffna.**
**syloicecream@sltnet.lk**
மேலதிக தொடர்புகளுக்கு :- 077 771 0785 / 077 979 8053

# மரண அறிவித்தல்கள்

## இராசலிங்கம் நடராசா

(முன்னாள் புகையிரதத் திணைக்கள உத்தியோகத்தர்)



கொக்குவில் கிழக்கு, நந்தாவில் அம்மன் கோயிலடியைச் சேர்ந்த முன்னாள் புகையிரதத் திணைக்கள உத்தியோகத்தர் இராசலிங்கம் நடராசா 02.05.2013 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் இலட்சுமி (பரமேஸ்வரி) யின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான இராசலிங்கம் - சுபத்திரை தம்பதியரின் மூத்த புதல்வரும், கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான அ.சி.செல்லையா - செல்லம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற சிவராஜா மற்றும் இரட்ணராஜா, ரோகினி, ஜெயராஜா, குகராஜா ஆகியோரின் தந்தையும் அம்பிகா, ராஜேந்திரா, ரஜனி ஆகியோரின் மாமனும், ரிஷ்ணா, அச்சுதன், தீபிகா, அபிரா, துவாரகன் ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற ரட்ணமலர் மற்றும் ராஜதுரை ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.05.2013) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனத்துக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நந்தாவில் அம்மன் வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

(2.6)(37043)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகன் தேவை

1979 ஆம் ஆண்டு பிறந்த [illegible] இந்து [illegible] மணமகன் தேவை.

தொ.பே: 077 415 9507, 077 935 2554

## கடை வாடகைக்கு

டிப்போ வீதி, கனகபுரம், கிளிநொச்சியில் 900 சதுர அடி விஸ்தீரணம் உள்ள கீழ் தளம் வாடகைக்கு விடப்படும்.

தொ.பே:0729188595 (35103)(10,6,7)

## வாடகைக்கு

கிளிநொச்சி, கரடி போக்கு சந்தியில் அமைந்துள்ள A.K.R HOTEL இல் உள்ள உணவகம் ஒன்று சகல கட்டட வசதிகளுடன் வாடகைக்கு உண்டு.

தொ.பே: 077 446 6802, 077 789 9807

## நிலக்ஷன் கட்டப் பொருள்

சகல விதமான, கொங்கிறீற் கற்கள்(35/=), வீட்டுத் தூண், வேலித் தூண், பூக்கல், தூக்கம், லூவாஸ் கற்கள், அனைத்தும் ஒரே இடத்தில்..... உங்கள் தெரிவுக்கு.



077 925 8935 அல்லைப் வீதி, மிருசுவில் [illegible]

## வீடும் காணியும் விற்பனைக்கு

சாவகச்சேரி, நுணாவில் சந்திக்கு அருகில் 3 பரப்புக் காணியுடன் கூடிய (புதிதாகக் கட்டப்பட்ட) வீடு விற்பனைக்குண்டு.

T.P:077 378 7229

## காணி விற்பனைக்கு

திருநெல்வேலி ஆடியபாதம் வீதி, பலாலி ஆசிரியர் கலாசாலைக்கு அருகில் சுற்று மதிலுடன் கூடிய 2 பரப்பு 16 குளி கொண்ட காணி விற்பனைக்குண்டு.
(தரகர் தேவையில்லை)

தொ.பே: 077 670 1600

# 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## நல்லதம்பி வீரசிங்கம்



தோற்றம்
01.07.1922
மறைவு
24.07.2006

திதி: ஏகாதசி - 05.05.2013

ஏழு ஆண்டுகள் சென்றாலும்
உம் நினைவு எம் நெஞ்சை
விட்டு நீங்காது

உங்கள் நினைவில் வாடும்:
**குடும்பத்தினர்.**

சி.சிவலிங்கம்,
345/03, கொழும்புத்துறை வீதி,
கொழும்புத்துறை.

(36922)(2.6.7)

# உள்ளக்கோயிலில் உறைந்திருக்கும் எங்கள் அன்புத் தெய்வத்தின் ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்
20★05★1939
மறைவு
16★04★2012

## அமரர் இராமநாதன் அரசரட்ணம்



**அப்பா!** ஆண்டு ஒன்று சென்றதப்பா
ஆறவில்லை எம் துயரம்
அப்பா உங்களின் உடல்தான் இல்லை
அப்பா ஆனால் உயிர் எங்களுடன் தான்
அப்பா உடலை எங்கே தேடுவோம்,
தேடிப்பார்க்கின்றோம் கிடைக்கவில்லை
ஆசைக் கனவுகளை நிறைவேற்றிய
எங்கள் அன்புத்தெய்வமே
இப் பாரினில் நாம் வாழும் வரை
எம் இதயத்தில் இருத்தி
எந்நாளும் மலர்களால் பூசிக்கின்றோம்
நீங்கள் எங்களுடன் இருப்பீர்கள் என்று
நிதம் உங்கள் பிரிவால் புலம்புகின்றோம் **அப்பா!**


சிவகுரு லேன்,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்:
**குடும்பத்தினர்.**

(36897)(2.6.7)

சிவமயம்

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



சிவபதப்பேறுபெற்ற காரைநகர் செந்தமிழ்
சிவவேளாண் குடித் தோன்றல் பிரபல
தொழிலதிபர் சமூக சேவையாளர்
சமயசன்மார்க்க சீலர் சமகால அரசியல்
சிந்தனையாளர் அகில இலங்கை
சமாதானநீதிவான்

## ஸ்ரீமான் சதாசிவம் குலதேவராஜா

(திதி: அபரபக்க சதுர்த்தசி 08.05.2013)

அன்னை மடியில்
16★10★1953

அரனார் அடியில்
19★04★2012

வானுயர்ந்த வரத்தால் வாழ்வுயர்ந்த வாய்மையாளன் குலதேவராஜா
வரலாறுபடைத்த தொழிலதிபராகி சந்ததிப் பெருமை நிலைநிறுத்தி
தானுயர்ந்த தவத்தால் தருமநெறியோடு சிவயாகம்செய்த புண்ணியத்தால்
தன்னிலையாமை உணர்ந்து நிலையான தற்பரன் தாள்நினைந்து
கோனுயர்ந்த குபேரவாழ்வில் குதூகலம் கொள்ளாது பந்தந்துறந்து
குவலயவாழ்வினி போதுமென்று கூத்துடையான் அடிசேர்ந்த ஓராண்டில்
தேனுதிர்ந்த மலர்தூவி பிதிர்பூசைசெய்து பிரார்த்தித்து வணங்கிட
தேவுலகில் தெய்வமாயிருந்து என்றென்றும் நம்மைக் காப்பாரே.

168.யாழ்.வீதி,
வவுனியா.

(36987)(2.6)

தாய் - மனைவி - மகன்,
சகோதரர்கள் - சகோதரிகள்.

# 31 ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



திருமதி
## இராசம்மா செல்லையா

மலர்வு
25.02.1937

உதிர்வு
06.04.2013

கடந்த (06.04.2013) சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்ப குல விளக்கு திருமதி இராசம்மா செல்லையா அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு நேரடியாகவும், தொலைபேசி மூலமும் அனுதாபச் செய்தி கூறியவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி அச்சிட்டு வழங்கியவர்களுக்கும், மலர் வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் பல வழிகளிலும் உதவிய அனைத்து உள்ளங்களிற்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்ளவதோடு, அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் நேற்று (04.05.2013) சனிக்கிழமை கீரிமலை தீர்த்தக் கரையில் நடைபெற்றன. வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (06.05.2013) திங்கட் கிழமை எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் உற்றார், உறவினர், நண்பர்கள் நலன் விரும்பிகள் அனைவரையும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்துகொண்டு அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றறோம்.

2ஆம் கட்டை,
மன்னார் வீதி, நெளுக்குளம்,
வவுனியா.

**குடும்பத்தினர்.**

(சி/7503) (45.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்மராட்சிப் பிரதேசத்தில் மேலும் 16 பேருக்கு வலுவிழந்தோர் உதவி

தென்மராட்சி, மே 5
தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த மேலும் 16 பேர் வலுவிழந்தோருக்கான மாதாந்தக் கொடுப்பனவைப் பெறத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.
இந்த 16 பேருக்கும் கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் மாதம் 3 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளதால் மேமாதக் கொடுப்பனவுடன் நிலுவைத் தொகையும் வழங்கப்படவுள்ளது.
இந்த 16 பேருடன் தென்மராட்சி பிரதேசத்தில் அங்கவீனர்களுக்கான கொடுப்பனவைப் பெறுவோரின் எண்ணிக்கை 50 ஆக அதிகரித்துள்ளது.
பின்வரும் பயனாளிகளை உடனடியாக பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.
ஐயாத்துரை இராமமூர்த்தி - வரணி வடக்கு, பரமேஸ்வரன் புவனேஸ்வரி- உசன், தர்மசீலன் செந்தில்குமார்- கல்வயல், கௌரீசன் சுதர்சினி- கற்குளி முதலாம் ஒழுங்கை, இராசரத்தினம் விஜயராசா- மட்டுவில் வடக்கு, சிவக்கொழுந்து ரவீந்திரன் - கைதடி மேற்கு, கணபதிப்பிள்ளை தெய்வேந்திரன்- கெற்பேலி மேற்கு, கந்தையா ஞானகுமார்- கெற்பேலி மேற்கு, சிரம்பரப்பிள்ளை செல்வராசா- வரணி இயற்றாலை, முருகன் அருமைச்சந்திரன்- வரணி வடக்கு, சின்னத்தம்பி- இராசையா- மந்துவில் மேற்கு, ரங்கநாதன் ரவிசங்கர்- உசன், நாகமுத்து நாகேஸ்வரன்- கல்வயல், கே.மகாதேவன்- மந்துவில் மேற்கு, சந்திரேசு சுவாம் அருளானந்தம்- மட்டுவில் வடக்கு, கந்தையா விக்னேஸ்வரன்- இடைக்குறிச்சி. (ம-9)

## வசமாக மாட்டினர் திருடர்கள்

கைதடி, மே 5
அதிகாலை வேளை மரக்கறிகளையும் நீரிறைக்கும் இயந்திரத்தையும் திருடி வந்தவர்கள் ஓட்டோ சாரதியின் புத்திசாதுரியத்தால் மடக்கிப் பிடிக்கப்பட்ட சம்பவம் ஒன்று கைதடியில் இடம்பெற்றுள்ளது.
இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது:-
நேற்று முன்தினம் இரவு மட்டுவில் பிரதேசத்திலுள்ள தோட்டங்களில் உட்புகுந்த திருடர்கள் இருவர் அங்கு மரக்கறிகளைத் திருடியதுடன் கிணற்றடியில் வைக்கப்பட்டிருந்த நீரிறைக்கும் இயந்திரம் நீர்க்குழாய்களில் பொருத்தப்பட்டிருந்த பித்தளையிலான நீர்க்கருவி என்பவற்றையும் திருடிக் கொண்டு கடற்கரை வழியாக கைதடி நவபுர வீதிக்கு நேற்றுமுன்தினம் அதிகாலை வந்து கொண்டிருந்தனர்.
இதன்போது கைதடி நவபுரத்தைச் சேர்ந்த ஓட்டோ சாரதி ஒருவர் தனது ஓட்டோவில் அதிகாலை கைதடி சந்தி நோக்கிச் சென்று கொண்டிருந்தார். திருடர்கள் இருவரும் வழியில் சைக்கிளை சுமையுடன் உருட்டி வருவதைக் கண்ட ஓட்டோ சாரதியும் எங்கே போகின்றீர்கள் எனக் கேட்டார்.
தாம் மட்டுவிலைச் சேர்ந்தவர்கள் எனவும் திருநெல்வேலி சந்தைக்கு மரக்கறி கொண்டு செல்வதாகவும் சைக்கிள் ஒன்று காற்றுப்போய் விட்டது. எங்கே ஒட்டலாம் எனவும்

**திருடர்கள் இருவரும் வழியில் சைக்கிளை சுமையுடன் உருட்டி வருவதைக் கண்ட ஓட்டோ சாரதியும் எங்கே போகின்றீர்கள் எனக் கேட்டார்.**

அவர்கள் கேட்டுள்ளனர்.
இந்த நிலையில் இருவரும் மட்டுவில் வாசிகள் அல்லர் என்பதுடன் திருடர்களே என்று ஊகித்த ஓட்டோ சாரதி தமக்குத் தெரிந்த பலருக்கு கைத்தொலைபேசி மூலம் விடயத்தை தெரியப்படுத்தினார்.
திருடர்களில் ஒருவர் நிலைமையை உணர்ந்து தப்பி ஓடிவிட்டான். திருடனால் கைவிடப்பட்ட சைக்கிளில் பெருந்தொகையான மரக்கறிகள் உரப்பைகளில் கட்டப்பட்ட நிலையில் இருந்தன. இதேவேளை, மற்றைய திருடனும் காற்றுப்போன சைக்கிளை உருட்ட முடியாத நிலையில் கைவிட்டு விட்டு ஓடிய வேளை பொதுமக்களால் பிடிக்கப்பட்டான். உடனடியாக சம்பவ இடத்துக்கு வந்த சாவகச்சேரி பொலிஸார் திருடனை கைது செய்தனர். அவரது உதவியுடன் மற்றைய திருடனும் பிடிக்கப்பட்டான். இவர்கள் ஆனைக்கோட்டை, யாழ்.நகர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் கூறினார். (ம-288)

## உழவு இயந்திரம் தடம்புரண்டதில் நால்வர் காயம்

தென்மராட்சி, மே 5
உழவு இயந்திரம் தடம்புரண்டதில் வீதி புனரமைப்புப் பணிக்குச் சென்ற பணியாளர் நால்வர் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் காலை மட்டுவிலில் இடம்பெற்றது. சம்பவத்தில் காயமடைந்த பணியாளர்களாக ரி.பீ.மைத்திரிபால (வயது-46), பீ.தர்மகீர்த்தி (வயது-- 43), ரஞ்சன் லகுறு (வயது-22), திஸ்ஸ கொட்டகே (வயது- 36) ஆகிய நால்வரும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மூவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (ம-9)

## சுழிபுரம் மேற்கில் கசிப்பு உற்பத்தி தடுத்து நிறுத்தக் கோரும் மக்கள்

சுழிபுரம் மேற்கு குடாக்கரை என்னும் இடத்தில் கசிப்பு உற்பத்தி அதிகமாக நடைபெற்று வருகிறது என்று இந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.
வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவில் உள்ள இந்தப் பகுதியில் கசிப்பு உற்பத்தி விற்பனை மிகவும் துணிச்சலான முறையில் மேற்கொள்ளப்படுகின்ற போதிலும் இதனைத் தடை செய்ய எவரும் நடவடிக்கை எடுக்கவில்லை என்று மக்கள் விசனம் தெரிக்கின்றனர்.
இந்த விடயத்தில் உரிய அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-86)

## பன்றிகளால் தொல்லை

யாழ்ப்பாணம், மே 5
கோப்பாய், நீர்வேலிப் பிரதேசங்களில் பன்றிகளின் தொல்லைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன.
இரவு வேளைகளில் இவ்வாறு நடமாடும் பன்றிகள் விவசாய நிலங்களுக்குள் புகுந்து பயிர்களை அழித்து வருகின்றன என்றும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.
தென்மராட்சி காட்டுப் பகுதிகளில் இருந்து வரும் பெரும் எண்ணிக்கையான பன்றிகள் கோப்பாய், நீர்வேலி தரவைப் பகுதிகளில் நடமாடித் திரிகின்றன எனவும் விவசாயிகள் கூறுகின்றனர். மரவள்ளி மற்றும் வெங்காயப் பயிர்களைப் பன்றிகள் அழித்து வருவதால் விவசாயிகள் இரவு நேரங்களில் காவலில் ஈடுபட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்றும் கூறினர். (ம-17)

## கோட்டைக்காடு ஆஸ்பத்திரிக்கு புதிய வைத்தியர்

வலி. வடக்கு, மே 5
அராலி கோட்டைக்காடு பிரதேச வைத்தியசாலைக்குப் புதிய வைத்தியர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.
நெடுந்தீவு வைத்தியசாலையில் கடமையாற்றிய பெண் வைத்தியர் தற்போது கோட்டைக்காடு வைத்தியசாலைக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளார்.
இந்த நிலையில் குறித்த வைத்தியசாலையின் செயற்பாடுகள் சீராக இடம்பெற்று வருகின்றன மக்கள் தெரிவிக்கின்றனர்.
நியமனம் வழங்கப்பட்டு குறுகிய காலத்திலேயே குறிப்பிட்ட வைத்தியரை இடமாற்றம் செய்ய சுகாதாரத் திணைக்களம் நடவடிக்கை மேற்கொள்வதாகவும் இதனால் மீண்டும் வைத்தியசாலையின் சேவைகள் பாதிப்படையும் எனவும் இந்தப் பகுதியில் உள்ள பொது மக்களும் மற்றும் பொது அமைப்பினரும் தெரிவிக்கின்றனர். (ம-86)

தருவது வித்தியா


## இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?


**மேடர்:** சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயற்படுவீர்கள். உறவினர், நண்பர்களுடன் மனம் விட்டு பேசு வீர்கள். உத்தியோகத்தில் உங்க ளின் நிர்வாகத் திறமை வெளிப்படும். முயற்சிகள் பலிதமாகும்.


**இடபர்:** உங்கள் பிடிவாதப் போக்கை மாற்றிகொள்வீர்கள். பிள்ளை களால் மதிப்புக் கூடும். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். உத்தியோகத்தில் தலைமையின் ஆதரவு கிடைக்கும்.


**மிதுனர்:** உங்களை அறியாமலேயே ஒருவித படபடப்பு, தாழ்வு மனப்பான்மை வந்து செல்லும். தன்னம்பிக்கை குறையும். உத்தியோகத்தில் சில சூட்சுமங்களைக் கற்றுக் கொள்வீர்கள்.


**கடகர்:** பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். புதிய நட்பால் உற்சாகமடைவீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி ஒத்துழைப்பார்.


**சிங்கர்:** எதிர்பாராத பணவரவு உண்டு. நாடி வந்தவர்களுக்கு உதவுவீர்கள். பழைய சிக்கல்களில் ஒன்று தீரும். உத்யோகத்தில் உங்களின் உழைப்புக்கு பாராட்டு கிடைக்கும்.


**கன்னி:** குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். உங்களைச் சுற்றியிருப்பவர்களில் நல்லவர்கள் யார் என்பதை கண்டறிவீர்கள். உறவினர்களின் அன்புத்தொல்லை குறையும். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் உங்களை மதித்துப் பேசுவர்.

நாளை

*சித்திரை-23 திங்கட்கிழமை 06.05.2013*
*திதி: துவாதசி பி.இ. 04.18 வரை*
*நட்சத்திரம்: உத்தரட்டாதி பி.இ. 04.35 வரை*
*சுபநேரம்: 11.56- 01.26 வரை*
*இராகுகாலம்: 07.26- 08.56 வரை*


**துலார்:** தடைகளைக் கண்டு தளரமாட்டீர்கள். தாய்வழி உறவினர்களுடன் மனஸ் தாபம் வந்து நீங்கும். புது வேலை கிடைக்கும். பயணங்களால் ஆதாயம் உண்டு. உழைப்பால் உயரும் நாள்.


**விருச்சிகர்:** பூர்வீகச் சொத்து பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள்.


**தனுசு:** வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும். நண்பர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். ஆடை, ஆபரணம் சேரும். வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்புகளை சரி செய்வீர்கள்.


**மகரர்:** கடந்த காலத்தில் கிடைத்த நல்ல வாய்ப்புகளையெல்லாம் சரியாகப் பயன்படுத்தாமல் விட்டுவிட்டோமே என்றெல்லாம் வருந்துவீர்கள். உத்தியோகத்தில் விமர்சனங்களையும் தாண்டி முன்னேறுவீர்கள்.


**கும்பர்:** யாரையும் பரிந்துரை செய்ய வேண்டாம். வியாபாரத்தில் இழப்புகள் ஏற்படும். உத்தியோகத்தில் மேலதிகாரியுடன் விவாதத்தைத் தவிருங்கள். பொறுமையைக் கடைப்பிடியுங்கள்.


**மீனர்:** எதிலும் வெற்றி பெறுவீர்கள். [illegible] உதவுவார். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | | 6 | 2 | | | | | |
| 3 | | | 4 | 7 | | | 2 | 9 |
| | 1 | | | 9 | 8 | 4 | | |
| | 7 | | 3 | | | | 9 | 6 |
| | | | | | | | | |
| 9 | 5 | | | | 4 | | 7 | |
| | | 1 | 8 | 2 | | | 4 | |
| 7 | 4 | | | 1 | 3 | | | 8 |
| | | | | | 9 | 6 | | 1 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 5 | 3 | 7 | 1 | 9 | 6 | 4 | 2 |
| 6 | 4 | 7 | 3 | 5 | 2 | 8 | 1 | 9 |
| 1 | 9 | 2 | 8 | 4 | 6 | 7 | 3 | 5 |
| 5 | 7 | 8 | 1 | 9 | 3 | 4 | 2 | 6 |
| 2 | 3 | 4 | 6 | 8 | 7 | 9 | 5 | 1 |
| 9 | 1 | 6 | 5 | 2 | 4 | 3 | 7 | 8 |
| 3 | 6 | 5 | 9 | 7 | 1 | 2 | 8 | 4 |
| 7 | 2 | 1 | 4 | 6 | 8 | 5 | 9 | 3 |
| 4 | 8 | 9 | 2 | 3 | 5 | 1 | 6 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படும் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் [illegible] வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பிரபலமாக்கியது. 2005 இல் இது உலக அளவில்

## Jaffna College Institute of Technology — JCIT

Established in 1974 under the Management Council of the Board of Directors of Jaffna College.

**Apply Immediately**

**Diploma Cours (One Year Full time)**

Computer Programming & Data Processing
System Analyzing & Design
Data base Management System
Fundamentals of Computer Technology
Data Processing, Java,C++,English, Oracle
Application Packages,Visual Basic VB .net

**Certificate Craft Courses (6 Months Full time)**

1. Motor cycle Mechanic
மோட்டார் வாகனம் திருத்துதல்
2. Carpentry-( Wood Craftsman)
மரவேலை பயிற்சிநெறி

**Computer Certificate Courses (3 Months Part Time)**

1. Microsoft Office
2. Printing Technology
3. Web Development
4. Computer Hardware
5. Computerized Accounting
6. Internet & e-Mail
7. Auto CAD

**Fundamental in Information Technology (6 Months)**

Introduction,Maths for ICT,English for ICT
Information and CommunicationTechnology (ICT) Application

**FIT**
**University of Colombo**

More Information
Director,
Jaffna College Institute of Technology
Vaddukoddai, Sri Lanka.
T.P No.021 3213139 021 225 0975
E-Mail ejcit@sltnet.lk www.jcit.lk

Why we are Special
Registered under Tertiary and Vocational Education Commission.
Unlimited computer practical hours are offered.
Payments could be made in 2 installments.
Individual attention by qualified Lecturers
The computer laboratory is opened for flexible practical hours.
Facilities: Hostel , library & Sports etc.
(C/8830)



## விற்பனைக்கு

பூச்சி நீக்கிய 40 நாள்கள் நிரம்பிய ஜேர்மன் செப்பேட் நாய்க்குட்டிகள், கம்பிக் கூடுகள் விற்பனைக்குண்டு.
தொ.இ: T.நிவேஸ், 119, வோர்டி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.077 947 5996
(37037)(5.6)



## மணமகன் தேவை

1990 ஆம் ஆண்டு பிறந்த பிரித்தானியா பிரஜாவுரிமையுள்ள டாக்டர் மணமகளுக்கு பெற்றோர் உள்நாட்டிலோ, வெளிநாட்டிலோ உள்ள தகுந்த மணமகனைத் தேடுகின்றனர்.
தொ.பே. 077 312 6637
(35354) (45.0)



## முகவர் தேவை

இலங்கையில் டிடெஜன் தயாரிப்புகளில் முன்னணி நிறுவனங்களில் ஒன்றான Soft Vision Group தயாரிப்புகளை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் பிரதேசங்களுக்கு விநியோகம் செய்வதற்கான விநியோகஸ்தர்கள் தேவை.
தொ.இ: 071 870 8532
E mail : sales@svisioni.com
Web: www.puremax.lk
(35356)(6.11)



உதயன் விளம்பர தொடர்புகளுக்கு
021 5671111
advt@uthayan.com


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

அமரர்
**கானகம்மாள் சாமி**

தோற்றம்:- 30*08*1930
மறைவு:- 08*04*2013



கடந்த 08.04.2013 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி **கானகம்மாள் சாமி** அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை திங்கட்கிழமை காலை 8 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறும். வீட்டுக்கிருத்தியம் புதன்கிழமை 08.05.2013 முற்பகல் 11 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வேண்டுவதோடு, அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மறைவு குறித்து அனைத்து வழிகளிலும் ஆறுதல் தெரிவித்த நண்பர்கள் மற்றும் உதவிகள் பல புரிந்த உற்றார், உறவினர்களுக்கும் எமது மனம் கனிந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு. **இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.**

*என்றும் உங்கள் நினைவுகளுடன்,*
இல.37/2, 2 ஆம் ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் இராமன்

வழுப்போடை, களபூமி, காரைநகரை பிறப்பிடமாகவும் 86/A, எல்கடுவ வீதி, சின்னமலை, வத்துகாமம், கண்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் இராமன் 02.05.2013 (வியாழக்கிழமை) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், நிர்மலாதேவியின் அன்புக்கணவரும், சதீஸ்குமார் (வர்த்தகம்), பிரதீப்குமார் (பொது சுகாதார பரிசோதகர், இரத்தினபுரி), சஞ்சீவ்குமார் (கெசல்வத்த டிஸ்ரிபியூட்ரஸ், பிராந்திய முகாமையாளர்), நிரஞ்சனா (ஆசிரியை, அம்பகொட்டுவ தமிழ் மகா வித்தியாலயம்), அனுஷயா (சட்டத்தரணி) ஆகியோரின் அன்பு தந்தையும், கோபிகிருஸ்ணா (முகாமையாளர், Network Marlbo Trading Company) அவர்களின் மாமனாரும், சிறிசாந்தின் பேரனும், சுபாரத்தினம், காலஞ்சென்ற விமலசந்திரன் மற்றும் இலட்சுமணன் (Teacher of Jaffna Hindu College) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.05.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வத்தேகம பொது மயானத்தில் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

86/A, எல்கடுவ வீதி,
சின்னமலை,
வத்துகாமம், கண்டி. (37068)(6.11)

தகவல்:
குடும்பத்தினர்.


## பஸ் விற்பனைக்கு

ASHOEK LEYLAND பஸ் விற்பனைக்கு HJ x x x x தொடரிலக்கம் உடைய பஸ் விற்பனைக்குண்டு.
(837050)(45.6) தொ.பே. 077 929 1875



## கடை வாடகைக்கு

பிறவுண் வீதிக்கும் மணிக்கூட்டு வீதிக்கும் இடையில் (நாவலர் வீதியில்) இரண்டு கடைகள் வாடகைக்கு உண்டு.
தொ.இ:077 674 7632
(37060)(5.6)



## கார் விற்பனைக்கு

14-xxxx தொடரிலக்கமுடைய மிகவும் நல்ல நிலையில் உள்ள Mitsubishi lancer கார் (வெள்ளை நிறம்) உடன் விற்பனைக்குண்டு.
தொ.இ:077 797 0808
(37053)(5.6)



## வீடு விற்பனைக்கு

நல்லூர், நாயன்மார்கட்டு வீதியில்அமைந்துள்ள வீட்டுடன் காணி விற்பனைக்குண்டு.
தொ.இ: 072 233 3522
(37059)(6.11)



## வீடு விற்பனைக்கு

யாழ். நகரின் மத்தியில் 2½ பரப்புக் காணியில் நான்கு அறைகள் மற்றும் இணைந்த குளியலறை வசதிகளுடன் கூடிய நவீன விசாலமான வீடு விற்பனைக்குண்டு.
தொ.இ: 077 900 5248
(C/8880)(6.11)



## வாடகைக்கு

வீடு மற்றும் Room வாடகைக்கு கொடுக்கப்படும் ஆலடிச்சந்தி கந்தர்மடம்.
தொ.பே. 077 928 0278
(37057) (45.6)



## வீடு வாடகைக்கு

பிரதான வீதி, திருநெல்வேலி சந்தியில்,சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்குண்டு.
தொ.இ: 077 608 6209
(37065)(5.6)



## விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கொக்குவில் நந்தாவிலில் WP KU x x x x இலக்கத்தையுடைய Micro Panda Cross சிவப்பு நிற 2012 Model காரும் Honda Japan CD 200 பென்லி மோட்டார் சைக்கிளும் (நீலம்) விற்பனைக்குண்டு Owner வெளிநாடு செல்ல இருப்பதால்
தொ.பே. 077 773 8621
(37030) (45.6)



## வீடு வாடகைக்குண்டு

முல்லைத்தீவு, தண்ணீரூற்றில் HNB வங்கிக்கு அருகில் நான்கு அறைகள் கொண்ட வீடு சகல வசதிகளுடன் வாடகைக்குண்டு.
077 051 9041/ 077 723 8378
(37034)(5.6)


## கண்ணீர் அஞ்சலி

யா/ கொக்குவில் ஸ்தான சி.சி.த.க.பாடசாலையின் ஆசிரியை திருமதி சாந்தினி சுரேஸ் குணபாலனின் அன்புத் தந்தை

### தில்லையம்பலம் அம்பலவாணர்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கேற்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(37048)(2.6)
பாடசாலைச் சமூகம்,
யா/கொக்குவில் ஸ்தான சி.சி.த.க.


## AHAVOLI
**Institute for Higher Studies offers a Diploma Course in Peace Building & Community Development Pratice**

The Applications are called for this course. This is a one Year, week-end (Saturday&Sunday) Couse that consists of 240 hours. The applicants should have the following prerequisites to apply for this course.

1. Knowledge of English as to read, write and speak
2. A Pass in Advanced Level
3. Interested in social activities

The candidates will have to buy special form from our office and submit it before the *19th of May 2013.*

N.B The Diploma Certificate would be given by the National University of Ireland,Galway.

**For further details please contact:**
AHAVOLI
Institute for Higher Studies
Affiliated to National University, Galway
St.Patrick's Road, Jaffna.
Contact No- 021 222 2856
(37040)(6.11)


## மரண அறிவித்தல்

### திருமதி குமாரவேலு சுந்தராம்பிகை
(இரத்தினம்)



மண்டைதீவு, 8ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வவுனியா தோணிக்கல்லை வசிப்பிடமாகவும், இல.11/7, சம்பியன்லேன், கொக்குவிலில் வசித்தவருமாகிய திருமதி குமாரவேலு சுந்தராம்பிகை (இரத்தினம்) நேற்று முன்தினம் (03.05.2013) வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - திருமேனி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் -கண்ணாத்தை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற குமாரவேலு (ஐயாத்துரை) வின் அன்பு மனைவியும், கமலாம்பிகையின் (லண்டன்), சகோதரியும், லீலாவதி (கனடா), தேவராணி (கனடா) ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரியும், செல்லாச்சி, பவளம்மா, காலஞ்சென்றவர்களான வெற்றிவேலு, திருஞானசம்பந்தபிள்ளை மற்றும் நடராசா (கனடா) ஆகியோரின் மைத்துனியும், யதீசா (யதி), சிறிஜெயதா (செயா), சிறிசுயதா (வவா), செல்வக்குமார் (கனடா), சுதாகினி (கனடா), நந்தகுமார், வசந்தகுமார் (ஜேர்மனி), சுந்தரேசன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், தமிழினியின் (சுதா) பாசமிகு பெரியதாயும், அரிச்சந்திரன் (பிரதேச சபை வலி. மேற்கு), விஜயலதா (கனடா), வேல் காந்தன் (கனடா), தர்சினி, பவானி (ஜேர்மனி), உருத்திரா (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியும் தனலக்சன் (மாணவன் - கொக்குவில் இந்துக் கல்லூரி), கேதாரன், சாமந்தி, ஆரூரன், விஷ்னுசன், சிவிதா, டிலக் சனா, சனாதனன், மதுசன், ஹரிசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.05.2013) ஞாயிற்றுக்கிழமை கொக்குவிலில் நடைபெற்று பூதவுடல் அஞ்சலிக்காக முற்பகல் 10 மணிக்கு மண்டைதீவில் அமைந்துள்ள அவரது இல்லத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் தகனக்கிரியைக்காக மண்டைதீவு தலைக்கீரி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

11/07, சம்பியன் லேன்,
கொக்குவில்.
(37064) (45.6)

தகவல்: **நந்தகுமார்**
(நந்தன் - மகன்)
தொ.பே.077 160 4570

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

www.aac.lk

AAC - The pathway to a reputed British Qualification



# யாழ்
# நகரிலிருந்து
# உலக வானில் பறந்திடுங்கள்

## நீங்கள் உயர் தரமிக்க வாழ்க்கை முறையினை பெற்றுக்கொள்ள விருப்பமுடையவரா?

இலங்கையின் முதல்தர நிறுவனமான ஏசியன் எவியேசன் நிறுவனம்
இப்போது யாழ்ப்பாண மாணவ மணிகளாகிய உங்களை விமானிகளாக மற்றும்
விமான தொழில்நுட்ப வல்லுனர்களாக உருவாக்கி
வாழ்வினை ஒளிமயமாக்க ஒரு அரிய வாய்ப்பினை வழங்குகிறது.

**விண்ணை உங்கள் வசமாக்கிக் கொள்ள எமது கருத்தரங்கு வழிகாட்டலுக்கு பங்கேற்க உங்களை வருக வருகவென வரவேற்கிறோம்.**

7th May, 3.00 pm - 5.00 pm
**GATEWAY CFICT & LANGUAGE CENTRE**
(347, Kasthuriyar Road, Jaffna.)

8th May, 4.00 pm - 5.30 pm
**GATEWAY CFICT & LANGUAGE CENTRE**
(28, 2/1, Point Pedro Road, Nelliady.)

9th May, 4.00 pm - 5.30 pm
**GATEWAY CFICT & LANGUAGE CENTRE**
(3/1, New Market, Chavakachcheri.)

7th, 8th & 9th May, 8.30 am - 10.30 am
**GNANAMS HOTEL PVT (LTD)**
No. 299, 301, Clock Tower Road,
Jaffna, Sri Lanka.

### ENGINEERING COURSES

- BSc. (Hons) in Aerospace Engineering Degree at Kingston University London
- Engineering Foundation Pathway in BSc. (Hons) Aerospace Engineering Degree at Kingston University London
- Aircraft Maintenance Engineering Courses

### FLYING TRAINING

- Private Pilot Licence Course (PPL)
- Commercial Pilot Licence/Instrument Rating Integrated Course (CPL/IR)
- Airline Transport Pilot Licence (ATPL) Ground Training.

### AAC INTRODUCTORY COURSES

- Aerospace For All Course
- Basics in Aviation Holiday Course

**மேலதிக விபரங்களுக்கு 071 5 213 154**

Asian Aviation Centre (Pvt) Ltd.
14, Trelawney Place, Colombo 4.
Tel : 0114 510303/4, 0114 979779 Fax : 0114 510303
E-mail : info@aac.lk Website : www.aac.lk
**Hotlines : 0773 102010 / 0773 056269**

Bring this coupon and win a free seat at the "AAC Holiday Course" or "Aerospace For All Course" by participating in our raffle draw.

Name : ..............................
Contact No / E-mail : ..............................
Address: ..............................

(C9296)(6)

www.skillsads.com

**Join AAC for reputed qualifications through**
**Civil Aviation Authority of Sri Lanka and Kingston University London, UK.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகன் தேவை

பிராமண குலத்தில் ௧௯ஆம் ஆண்டு பிறந்த A/L சித்தியடைந்த விவாகரத்துப்பெற்ற ஒரே மகளுக்கு பெற்றோர் வரன் தேடுகின்றனர். படித்த உத்தியோகம் பார்ப்பவர் விரும்பத்தக்கது. ஜாதகக்குறிப்பு மற்றும் முழு விவரங்களுடன் தொடர்புகொள்ளவும்.

பிஸ்ரா இல. 4451,
மே/ப ச நாதன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (சி/9299) (5.6)

## வீடு வாடகைக்கு

இல.46, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம் கே.கே.எஸ்.வீதிக்கு மிக அருகில் கீழ் + மேல் அமைந்த வீடு வாடகைக்குக் கொடுக்கப் படும். தொ.பே: 0775361370, 011 2363113 (C/9015)(6.2)

## வீடு, காணி விற்பனைக்கு

சண்டிலிப்பாய், கல்வளையில் 3 பரப்பு 2 குளி காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு.
தரகர் தேவையில்லை.
T.P.077 659 0558 (C/9300)(6.2)

## கடை வாடகைக்கு

பலாலி வீதியில் இலுப்பையடிச் சந்திக்கும் தம்ரோ காட்சியறைக்கும் இடையில் அமைந்துள்ள கடைத்தொகுதியில் ஒரு கடை வாடகைக்கு உண்டு.
தொடர்புக்கு: 077 5819704

## JAFFNA (THINNAVELI) DUTY FREE HOUSES,

காணியுடன் அழகிய புத்தம்புதிய சொகுசு வீடொன்றை கட்டிக்கொள்ளுங்கள். விலை காணியுடன் வீடு மொத்தமாக 65 லட்சம். 10.000 ரூபா செலுத்தி பதிவு செய்துக்கொள்ளுங்கள். மிகுதியை தவணை முறையில் செலுத்தலாம். மேலதிக விவரங்களுக்கு உடனே அழையுங்கள்.
(DUTY FREE HOUSES)
**VAJIRA HOUSE**
97 years 4 generations
NO - 04, VAJIRA ROAD, COLOMBO - 04
CALL - 0777770141 (C/9009)

## மணமகள் தேவை

கனடாவில் வசிக்கும் யாழ்.இந்து கௌரவ குடும் பத்தைச் சேர்ந்த 32 வயதுடைய Computer Engineer ஆகப் பணிபுரியும் மணமகனுக்குச் சிவந்த அழகிய மணமகளைத் தேடுகின்றனர். உத்திராடம் முதலாம் பாதம், லக்கினத்தில் செவ்வாயும் குருவும். உயரம் 5'4". சீதனம் கவனிக்கப்படமாட்டாது.
தொ.பே: 077 531 3270
e-mail:maniamh@gmail.com (சி/9004)(5.2)

## நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



கடந்த 15.04.2013 திங்கட்கிழமை அமரத்துவம் அடைந்தவரும் 102, பலாலி வீதி, கந்தர்மடத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமான

**அமரர் முத்தர் ஆறுமுகம்**

அவர்களின் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கும் தொடர்பு கொண்டவர்களுக்கும் இரங்கல் செய்தி வெளியிட்டவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.
அன்னாரின் அந்தியேட்டிக் கிரியை 30.04.2013 அன்று நடைபெற்றதுடன் அவர்களின் ஆத்மசாந்திக்கான பிரார்த்தனை நிகழ்வு இன்று (05.05.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11 மணியளவில் பம்பலப்பிட்டி AVS மண்டபத்தில் நடைபெறும்.

(C/9298)(5.6) **மைத்துனர்கள், மைத்துனிகள்.**

## உரும்பிராயில் VAJIRA HOUSE

உரும்பிராயில் காணியுடன் அழகிய புத்தம்புதிய சொகுசு வீடொன்றை கட்டிக்கொள்ளுங்கள். விலை காணியுடன் வீடு மொத்தமாக 31 லட்சம். 10.000 ரூபா செலுத்தி பதிவு செய்துக்கொள்ளுங்கள். மிகுதியை தவணை முறையில் செலுத்தலாம். மேலதிக விவரங்களுக்கு உடனே அழையுங்கள்.
(DUTY FREE HOUSES)
**VAJIRA HOUSE**
97 years 4 generations
NO - 04, VAJIRA ROAD, COLOMBO - 04
CALL - 0777770141 (C/9010)

## JAFFNA (MAANIPPAI) DUTY FREE HOUSES

மானிப்பாயில் காணியுடன் அழகிய புத்தம்புதிய சொகுசு வீடொன்றை கட்டிக்கொள்ளுங்கள். விலை காணியுடன் வீடு மொத்தமாக 80 லட்சம். 10.000 ரூபா செலுத்தி பதிவு செய்துக்கொள்ளுங்கள். மிகுதியை தவணை முறையில் செலுத்தலாம். மேலதிக விவரங்களுக்கு உடனே அழையுங்கள்.
(DUTY FREE HOUSES)
**VAJIRA HOUSE**
97 years 4 generations
NO - 04, VAJIRA ROAD, COLOMBO - 04
CALL - 0777770141 (C/9008)

## ஆஸ்திரேலியா சிட்னி முருகன் கோயில் சிவாச்சாரியார் பதவி வெற்றிடம்

சிவாச்சாரியார் குலத்தில் பிறந்து, வேத ஆகமங்கள் கற்றுத் தேர்ந்த, ஆலய நித்திய பூசை, அபிசேகங்கள், மஹோற்சவ கொடியேற்றம், விஷேட பூசைகள், திருமணச் சடங்குகள், சமய விளக்கங்கள், சுவாமிக்கான சாத்துப்படி அலங்காரம், பிராயச்சித்த சாந்தி, ஹோமம் நடத்தத் தெரிந்தவரும் மற்றும் திருமுறை பாடுவதில் தேர்ச்சியும் அனுபவமும் உள்ள திருமணமான சிவாச்சாரியார்கள் தேவை.

[illegible]

வருடாந்தம் முப்பத்தி நாலாயிரத்து முந்நூற்று இருபத்தி இரண்டு (Aus $34.322) ஆஸ்திரேலிய டொலர்கள் வேதனமாக வழங்கப்படும். அரச விதிகளுக்கு அமைவாக அடிப்படைச் சம்பளத்தின் 9% சேமலாப நிதிக்கணக்கில் வைப்புச் செய்யப்படும். தற்போதைய வதிவிடத்தில் இருந்து ஆஸ்திரேலிய வரவும் ஒப்பந்த முடிவில் திரும்பிச் செல்லவும் விமானச் சீட்டுக் கட்டணம் வழங்கப்படும். முதன்முறையாக வருபவருக்கு ஆரம்ப செலவுகளுக்கு ஆயிரம் டொலர்கள் வழங்கப்படும். ஆண்டுக்கு 20 நாள்கள் விடுமுறையும் 8 நாள்கள் மருத்துவ விடுப்பும் பெற உரிமை உண்டு.

[illegible]

**தகுதிகாண் காலம்**
**Probationary Period - 3 Months )**மூன்று மாதங்கள்

[illegible] (Employment Contract - 2 years) [illegible]

மேலதிக விவரங்களுக்கு:

**V.Elalingam**
Tel: 61 - 424698145, Fax : 61 - 2 - 9687 8907
email: ela_lingam@hotmail.com என்ற இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும்.

**விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:**

**The Secretary,**
**The Saiva Manram,**
**217, Great Western Highway,**
**Mays Hill, NSW 2145, Australia.**
(C/9001)(5.6)

## கரும்பு தின்னக் கைக்கூலி திசைகாட்டியில் கிடைக்கும்

- O/L இருந்தால் மட்டும் போதும் கையில் ஒரு லட்சம் வெளிநாட்டில் படிக்க உழைக்க
- பாதிக்கட்டணத்துடன் கனடாவில் படிக்க உழைக்க

விசா ஆலோசனை பெற்றால் மடிக்கணினி (Lap top இலவசம்-நிபந்தனைகளுடன்)

**திசை காட்டி(பிறைவேற்)லிமிட்**
**175, பருத்தித்துறை வீதி,**
**ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.**
**021 221 9016**



## விற்பனைக்கு

டொல்பின் வான் சீற் விற்பனைக்குண்டு.
தொ.பே: 077 356 4245 (37101)(6.11)

## கார் விற்பனைக்கு

MARUTHI 800 கார் விற்பனைக்கு.
KE-XXXX
தொ.பே: 077 373 4109 (37072)(6.11)

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், பாண்டியன்தாழ்வு, புங்கன் குளம் வீதியில் அமைதியான சூழலில் 2¼ பரப்புக்காணியில் அமைந்த நன்னீர் கிணற்றுடன் கூடிய ஓட்டு வீடு உடன் விற்பனைக்குண்டு. தொ.பே: 077 720 9686 (37102)(5.6)

## வாகன சாரதி தேவை

இலகு ரக வாகன சாரதி தேவை.
அனுபவமுள்ளவர் விரும்பத்தக்கது.
சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.
தொ.பே: 077 300 1763 (37070)(6.11)

## காணி தேவை

தொழில் மையம் அமைப்பதற்கு நிலாவரை, அச்சுவேலி கைத்தொழில் பேட்டைக்கு அண்மித்த பகுதியில் 40-60 பரப்புக் காணி குறைந்த விலையில் தேவை.
தொ.பே: 077 316 8650 (37071)(6.11)

## கார் விற்பனைக்கு

Toyota Yaris 2011 புதியரக 1300 CC F/O Auto Silver Colour, Doctor Owned, 500 km விற்பனைக்கு.
0777 589690 (C/9015)(6.5)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், இந்துக் கல்லூரிக்கு அருகில் சுற்றிவர மதில் கட்டியபடி கிணற்றுடன் ஒரு பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
T.P.077 131 9939 (C/9002)(6.2)

## JAFFNA வில் (DUTY FREE HOUSES),

உங்கள் காணியில் அழகிய புத்தம்புதிய 3 மாடி APPARTMENT ஐ கட்டிக்கொள்ளுங்கள். 10.000 ரூபா செலுத்தி பதிவு செய்துக்கொள்ளுங்கள். மிகுதியை தவணை முறையில் செலுத்தலாம். ஒருமாடி 49 lakhs.
அழையுங்கள் - 0777770141
**VAJIRA HOUSE**
97 years 4 generations
NO - 04, VAJIRA ROAD, COLOMBO - 04 (C/9011)

## வேலை வாய்ப்பு

FMCG company (ஈஸ்வரன் குழுமத்தின் அங்கம்) இந்தியாவில் அதிகமாக விற்பனையாகும் நுகர்பொருள் (FMCG) நிறுவனத்தின் வியாபார விஸ்தரிப்புக்கு, இலங்கையில் கீழ்க்கண்ட பணி இடங்கள் மாவட்ட ரீதியாக நிரப்பப்பட உள்ளன.

**விற்பனைப் பிரதிநிதிகள்:**
a. வயது எல்லை: 30 வயதிற்குட்பட்டவர்கள்
b. விற்பனைத்துறையில் (FMCG) குறைந்த பட்சம் இரண்டு வருடம் அனுபவம் உள்ளவர்கள் அல்லது அனுபவம் அற்றவர்கள். (Freshers can apply)

**விற்பனை மேற்பார்வையாளர்கள்** (Sales supervisors)
a. வயது எல்லை: 35 வயதிற்குட்பட்டவர்கள்
b. அனுபவம்: குறைந்த பட்சம் 5 வருடம் அனுபவம் விற்பனைத் துறையில் மட்டும் (FMCG)

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி மற்றும் தொலைபேசி எண்கள்:

**Suwanda Industries Pvt Ltd**
104/11, Grandpass Road, Colombo-14
Tel: 11 2330 859/ 755 096 198/ 777 543 116
Skyline (C/9013)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Vacancies for Marketing Executives

**JOIN US TODAY!**

பல்தேசிய நிறுவனத்துக்கு EducationTechnologies கீழ்க்காணும் பதவி வெற்றி டங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**Benefits:**

★ Unlimited income potential
★ Comprehensive Training
★ Basic Salary/Travel Allowances/ Commission incentives
★ Overseas Travel/Conferences for Achievers
★ Management positions within 6 months-1year
★ Motor Bike/Car Allownces

**Requirements:**

★ Age above 35years
★ G.C.E. (A/L) Qualification
★ A Positive attitude with a pleasing personality

நேர்முகப் பரீட்சை - 06.05.2013 - 11.05.2013 வரை நடைபெறும்.

**Education Technologies**
No.100,2nd Floor Manipay Road, Jaffna.
Contact: Manager -Mr.G.ANTHANY
077 343 4823
(C8840)(5.6)
www.Pioneerhouselearning.com


## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 16.08.1990

ஆண்டவன் அடியில் 05.05.2011

அமரர்
**செல்வி நடராசா கிருத்திகா**

எங்கள் குடும்பத்துக் குலவிளக்கே கிருத்தி
எங்களைத் தவிக்கவிட்டு எங்கே சென்றாய்
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
என்றும் உனது நினைவலைகள்
எங்கள் நெஞ்சங்களில் நீங்காமல் நிலைத்திருக்கும்

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

கச்சாய் தெற்கு,
கொடிகாமம்.
(C8842)(10,6)
குடும்பத்தினர்.


## வீடு வாடகைக்குத் தேவை

சிறிய குடும்பத்துக்கு அளவான சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உடன் தேவை.

(37078)(45.6) தொடர்பு: 077 927 7080

## நிரந்தர வேலை

நீங்கள் தேடுவது தொழிலா? அப்படியாயின் இதோ அரியதொரு சந்தர்ப்பம். கொழும்பு பகுதியில் கட்டட நிர்மாணத்துறையில் மேசன்/ சட்டவின் பாஸ்/ பிளம்பர்/ இலக்றீசன்/கையுதவியாளர் உடனடியாக தேவை. சம்பளம் 20,000/=, 40,000/=, உணவு, தங்குமிடம் வழங்கப்படும்.

தொடர்பு: 077 5561883 (35158)(10.6)

## நிரந்தர வேலை வாய்ப்பு

கொழும்பை அண்மித்த எல்லா பகுதிகளிலும் நிரந்தரமான வேலை வாய்ப்புக்கள் ஜேம், பிஸ்கட், பெப்சி, மைகோலா, கிளவுஸ், கார்மன்ட், PVC குழாய், தேயிலை Pack போன்ற தொழிற்சாலைகளில் உற்பத்தி, லேபல், தரம் பிரித்தல், பொதியிடல் பிரிவுகளுக்கும் ஆண்/பெண் வயது 18-50 வயது வரையானோர் உடனடியாக தேவை. சம்பளம் 18,000/=, 20,000/=, 25,000/=, 30,000/=. வருகை தரும் நாளில் உடன் வேலை வாய்ப்பு, உணவு, தங்குமிடம் குறைந்த விலைகளில் தரப்படும். குழுக்களாகவும் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 077 6838240 (35156)(10,6)

## தேவை

எதிர்கால வாழ்க்கை சிறப்பாக அமைய கல்வி அறிவுள்ள/ அற்ற இருபாலருக்குமான அரிய வாய்ப்பு. நவீன கப்பல் புனர்நிர்மாண வேலைகளான சாதாரண ஊழியர்கள்/ பெயின்டர்/ வெல்டிங்/ தச்சு மற்றும் சுத்திகரிப்பாளர்கள்/ கேட்டரிங் போன்ற பிரிவுகளுக்கு சாதாரண ஆண்,பெண் ஊழியர்கள் 18 -50 வயதினர் தேவை. சம்பளம் 18,000/= , 38,000/= உணவு, தங்குமிடம் குறைந்த விலைகளில் விரைவாக தொடர்கொள்ளவும்

தொடர்புகளுக்கு : 077 556 1883 (35157)(45.6)

## விற்பனைக்கு

CG-125 மோட்டார் சைக்கிள் நல்ல நிலையிலுள்ளது விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0772323000 (C8845)(10,6)

## வாடகைக்கு

யாழ்ப்பாணம், அரியாலையில் வீடு வாடகைக்கு. [illegible]
A-9 [illegible]

தொடர்பு: 075 544 0503 (C9021)(6.11)

## வீடு விற்பனைக்கு

கொய்யாத்தோட்டம், பிரதான வீதியில் பிள்ளையார் கோயிலுக்கு முன்பாக நல்ல சுழலில் அமைந்துள்ள வீடு காணி நி.ப. 2 குளி 11, கிணற்றுடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 724 5021 (37104)(6.11)

## காணி விற்பனைக்கு

தும்பளை வீதியில் உள்ள 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 749 5688 (C9022)(6.11)

## குருக்கள் தேவை

வவுனியா பூந்தோட்டம் லக்ஸ்மி சமேத நரசிங்கர் ஆலயத்துக்கு நிரந்தரமான அந்தண சிவாச்சாரியார் தேவை. விருப்பமுடையவர்கள் கடிதம் மூலம் தொடர்புகொள்ளலாம். வீட்டு வசதிகள் செய்து தரப்படும்.

தொடர்பு: தலைவர்,
நரசிங்கர் ஆலயம், பூந்தோட்டம், வவுனியா.
தொ.பே. 024 222 0447. (35155)(40.6)

NORTH LEAD EDUCATIONAL CENTER

ஆங்கில, சிங்கள, கணனி வகுப்புகள்
புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன

பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், தொழில் புரிபவர்கள், அரசமொழி பரீட்சைக்கு தோற்றவுள்ளவர்களுக்கும், மற்றும் மொழியை கற்க ஆர்வமுள்ள அனைவருக்குமான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. மொழியை இலகுவாக பேச, எழுத, வாசிக்க, அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களினால் கற்பித்துக் கொடுக்கப்படும். (Duration 4 Month)

328, Stanly Road, Jaffna.(ஆரியகுளம் சந்திக்கு அருகில்)
Tel: 021-222 4459, 0772533390, Fax: 222 4460

## அனலைதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் (வது)
## பதவி வெற்றிடம்

பதவி : காரியாலய உதவியாளர்
பதவி இலக்கம் 317/16

சம்பளத்திட்டம் 9200-10650
70X10-75X10

தகைமை: 08ஆம் வகுப்பு கல்விச் சான்றிதழ்
பிணை:- நிர்வாக சபையினால் தீர்மானிக்கப்படும் தொகையினை செலுத்துதல் வேண்டும்.
விண்ணப்பப் படிவம் தாங்கள் சுயமாக தயாரித்தல் வேண்டும்.
விண்ணப்ப முடிவு திகதி : 20.05.2013

தாங்கள் சுயமாக தயாரித்த விண்ணப்பப் படிவங்களினை தலைவர், அனலைதீவு ப.நோ.கூ.சங்கம், அனலைதீவு எனும் முகவரிக்கு கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும்.

தலைவர்
அனலைதீவு, ப.நோ.கூ.சங்கம்,
அனலைதீவு. (37082)(10.6)

## கலட்டிப் பிள்ளையார் களஞ்சியம்

1. எம்மிடம் சமயக் கிரியைகளுக்கான அனைத்துப் பொருள்களும் அத்துடன் நானாவிதமான பொருள்களும் குளிர்பானங்களும் பெற்றுக்கொள்ளலாம்.
2. பிராமணர் சாப்பாடு மதியமும், இரவும் ஓடருக்கு தினமும் பெற்றுக்கொள்ளலாம்.

குஞ்சர்கடையடி, வைரவர் கோயில் அருகில்
கரணவாய். (35387)(45.6)

தொடர்பு: 021 320 2949, 077 321 8586.


## மரண அறிவித்தல்

## சின்னத்துரை புஸ்பநாதன்



அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வியாபாரிமூலை, பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை புஸ்பநாதன் நேற்று (04.05.2013) சனிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ் சென்றவர்களான சின்னத்தம்பி தம்பதியரின் மருமகனும், பேபி ஜெயா அவர்களின் பாச மிகு கணவரும், ஜெயசுதா, மஞ்சுதா, செந்தில்நாதன், செந்தீபன், ராஜினி ஆகியோரின் அன்புத் தந்தையும், சி.சுரேஸ், ஆ.லோகநாதன், செ.மஞ்சுதா ஆகியோரின் மாம னாரும், லோ.தர்சிகா, லோ.கனிஸ்கா, செ.ஜெனிபன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.05.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணி அளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் சுப்பர் மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வியாபாரி மூலை,
பருத்தித்துறை.
021 226 2579,
077 901 0090 (35389)(0.11)

தகவல்:
குடும்பத்தினர்.

## 38ஆம் நாள் நினைவு நிகழ்வு



மண்மகிழ 22.07.1970

கண்நெகிழ 29.03.2013



**அமரர் கனகராசா ஜெயக்குமார்(ரவி)**

(ரவி சூப் உரிமையாளர், றொறண்டோ, கனடா)

வதிவிட முகவரி: றொறண்டோ,கனடா.

தற்போதைய முகவரி: இல. 77, கனகராசா வீதி,திருநகர்,கிளிநொச்சி.

கனகராசா ஜெயக்குமார் (ரவி) ஆகிய எனது அன்புச் சகோதரனின் துயரச் செய்தி கேட்டு ஓடோடி வந்து ஆறுதல் கூறி அரவணைத்து துயரத்தைப் பகிர்ந்து கொண்ட அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வதுடன், எமது இல்லத்தில் இன்று (05.05.2013) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் 38ஆம் நாள் நினைவு நிகழ்வில் கலந்து கொள்வதுடன், அன்றைய மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார்,உறவினர்,நண்பர்களை வேண்டிக் கொள்கின்றோம்.

இந்த அறிவித்தலை தனிப்பட்ட அறிவித்தலாக ஏற்று இந்த நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

ஜெகன்(சகோதரன்),எழிலகம், கிளிநொச்சி. (35107)(9.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்.டி.பி.வங்கிக்கு நெல்லியடியில் கிளை

வடமராட்சி, மே 5

தேசிய அபிவிருத்தி வங்கியின் நெல்லியடிக் கிளை நெல்லியடி-யாழ்ப்பாணம் பிரதான வீதியில் எதிர்வரும் 6 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளும் என்.டி.பி.வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி ரஸல்டிமெல் இந்தப் புதிய வங்கிக் கிளையைத் திறந்து வைப்பார்.

நெல்லியடியில் திறக்கப்படும் என்.டி.பி.வங்கிக்கிளை யாழ். மாவட்டத்தில் மூன்றாவது கிளையாகும். தேசிய மட்டத்தில் 71 ஆவது கிளையாகும். இந்த மாவட்டத்தில் யாழ்ப்பாணம் மற்றும் சுன்னாகம் நகரங்களில் என்.டி.பி.வங்கியின் கிளைகள் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-8)

# நம்பிக்கை மோசடி இரு வழக்கு பதிவு

யாழ்ப்பாணம், மே 5

வாகனம் தொடர்பில் இரண்டு நம்பிக்கை மோசடி வழக்குகள் யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட் டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நவாலி வடக்கைச் சேர்ந்த ஒருவரிடமிருந்து கடந்த 26 ஆம் திகதி ஓட்டோ ஒன்றை வாங்கிச் சென்றவர் அதனை மீள ஒப்படைக்காது நம்பிக்கை மோசடி செய்துள்ளார். அதன் பெறுமதி 3 லட்சத்து 75 ஆயிரம் ரூபா. அதனை வாங்கிச் சென்றவர் வவுனியா பூமன்குளத்தைச் சேர்ந்தவராவார். இவர் பொலிஸாரல் கைது செய்யப்பட்டு நீதிமன்றினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

வடமராட்சி குடத்தனையைச் சேர்ந்த ஒருவரின் 2 லட்சம் ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிளை வாங்கிச் சென்று திரும்பி ஒப்படைக்காது நம்பிக்கை மோசடி செய்தமை தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட் டுள்ளது. 26 வயதுடைய சந்தேகநபர் நீதிமன்றில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ந-4)

> 2 லட்சம் ரூபா பெறுமதியான மோட்டார் சைக் கிளை வாங்கிச் சென்று திரும்பி ஒப்படைக்காது நம்பிக்கை மோசடி செய்தமை தொடர்பில் முறைப் பாடு செய்யப்பட் டுள்ளது


## காணி விற்பனைக்கு

உடுவில் தேவாலய வீதியில் (மகளிர் பாடசாலைக்கு அருகில்) அமைந்துள்ள 7 பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 324 9094 (37080) (45.8)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், செவ்வாய்க் குற்ற மற்ற , மூலம் 4 ஆம் பாதம், 1971 இல் பிறந்த மண மகனுக்கு நல்ல குணமுடைய மணமகள் தேவை.

தொடர்பு: 021 225 5359 (37086)(6.11)

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

மீசாலை வடக்கு கொடிகாமத்தில் 20 பரப்பு தென்னங்காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 722 2262 (37079) (45.8)

## கணித வகுப்புகள்

தரம் 6 முதல் O/L வரை கணிதம் தனியாகவும், குழுக்களாகவும் கற்பிக்கப்படும்.

தொடர்பு: 075 039 2154, 077 262 7890 (37083) (6.11)

## கார் விற்பனைக்கு

NISSAN SUNNY EX SALOON N 16 CAR விற்பனைக்குண்டு.

தொடர்பு:077 508 5023 (35358) (8-6)

## வேலைக்கு ஆள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் 'பிரபல மல்ரி சொப்' இற்கும், நல்லூரில் இயங்கும் புத்தகக் கடைக்கும் வேலைக்கு ஆள் தேவை.(கணினி அறிவுடைய பெண்கள் விரும்பத்தக்கது)

T.P.:021 221 9286, 077 717 9494, 077 620 0727 (35014) (1-8)

## காணி விற்பனைக்கு

தெல்லிப்பழை, துர்க்காபுரம் பொக்கணாவடை (சிறி கடைக்கு அருகில்) 2,3,4 பரப்பு துண்டுகளாக பிரிக்கப்பட்டு காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0750430998 (37081) (10.6)

## வேலையாள்கள் தேவை

"அனுபவமுள்ள (Sanitary) சுத்திகரிப்புத் தொழிலாளிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகைமையுடையவர்கள் 06.05.2013 மு.ப 10.00 மணிக்கு நேரில் சமுகமளிக்கவும்"

மனிதவள முகாமையாளர்
நொதேர்ன் சென்றல் வைத்தியசாலை,
542, பலாலி வீதி, யாழ்ப்பாணம். (C/8846)(6.11)



# டபிள் நந்தி கூரை ஓடுகள்

- உயர் தரத்தில் உருவாக்கப்பட்டது
- ஒரு கூரை ஓட்டின் நிறை2.7 கிலோ கிராம்
- நவீன தொழிநுட் பத்தில் தயாரிக்கப்பட்டது
- கூரை ஓட்டை உடைத்து சோதனை செய்தால், 100% சுடப்பட்டிருப்பதை உணரலாம்
- 10 வருடத்திற்கும் மேற்பட்ட உத்தரவாதம்
- வீடுகளுக்கு நேரில் வந்து தரம் குறைந்த கூரை ஓடுகளை விற்பவர்களிடம் ஏமாறாதீர்கள்
- இலங்கை முழுவதும் முகவர்கள் உள்ளனர்

கஸ்தூரி கூரை ஓடு தொழிற்சாலை

மேலதிக தகவல்களுக்கு தொடர்பு கொள்ளவும். தொலைபேசி:
0770257800 / 031 2258174 / 031 2259669


## மரண அறிவித்தல்கள்

### கந்தையா தேவராசா



யாழ். வட்டுக்கோட்டையைப் பிறப் பிடமாகவும், இலக்கம் 67/1, சிவநகர், உருத்திரபுரத்தை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா தேவராசா நேற்று (04.05.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பையா - அன்னப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகனும், புஸ்பவதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற ஞானலட்சுமி மற்றும் குகேந்திரராசா (பிரான்ஸ்), யோகேஸ்வரி (உருத்திரபுரம்) ஆகி யோரின் பாசமிகு சகோதரரும், சத்தியதேவன் (சிவநகர்), ஸ்ரீதேவன் (ஆய்வு கூட உதவியாளர் - கிளி/ வட்டக்கச்சி ம.வி.), நிதிதேவன் (பொதுமுகா மையாளர் - கிளி/கால்நடை வளர்ப்போர் கூ/ச), ரேணுகா (சிவநகர்), சியாமள தேவன், றெஜி தேவன் (உருத்திரபுரம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற மேகலா மற்றும் மதிவதனி (செம்மொழி முன்பள்ளி, ஆசிரியர்), மஞ்சுளா, குணசீலன் (சுவிஸ்), ரேணுகா ஆகி யோரின் பாச மிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.05.2013) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக உருத்திரபுரம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

சிவநகர்,
உருத்திரபுரம். (35108) (45.6)

தகவல்:
குடும்பத்தினர்.

### திருச்செல்வம் அலோசியஸ் மரியநாயகம்

(ஓய்வுநிலை உத்தியோகத்தர், இலங்கை புகையிரதத் திணைக்களம்)



இளவாலையைப் பிறப்பிடமாகவும், நெல்லியடி, கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருச்செல்வம் அலோசியஸ் மரியநாயகம் நேற்று (04.05.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் இளவாலையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான பிலிப்புப்பிள்ளை திருச்செல்வம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்)- திரேசம்மா (ஓய்வுபெற்ற ஆசிரியர்) தம்பதியரின் அன்பு மகனும், நெல்லியடி, கரவெட்டியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சவரிமுத்து மனுவேற்பிள்ளை-இசபெல்லா தம்பதியரின் அன்பு மருமகனும், சுகிர்தம் மரியநாயகியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற யேசுரட்ணம் (Supt.Small industries Atchchuvely) மற்றும் மங்களநாதன் (ஓய்வுபெற்ற ஆசிரியர் St.Henry's college), மதுரநாயகி தவப்பிரகாசம் (ஓய்வுபெற்ற ஆசிரியை, ஆஸ்திரேலியா), Rev.Fr தேவராஜன் (ராஜன்-லண்டன்), தர்மபாலன் (லண்டன்), அமிர்தராணி அலோசியஸ் (இளைப்பாறிய ஆசிரியை-புத்தளம்), T.X. தேவமனோகரன் (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற Dr.மங்களநாயகம் (சுவீடன்) மற்றும் மதுரநாயகம் (பிரான்ஸ்), தேவநாயகம் (U.S.A-முன்னாள் கெயின்ஸ் கல்வி நிலைய இயக்குநர்), மன்மதநாயகம் (மன்னண்ணா-சமாதான நீதிவான், நெல்லியடி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முதலாம் குறுக்குத்தெரு,
நெல்லியடி,
கரவெட்டி. (37105)(10.6)

தகவல்:
ம.ம.மன்மதநாயகம்
(மைத்துனர்)
0770267711

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நாகரெட்ணாம்பாள் தியாகராசா (கிளி அக்கா)



மலேசியாவைப் பிறப்பிடமாகவும், கொய்யாத்தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகரெட்ணாம்பாள் தியாக ராசா நேற்று (04.05.2013) சனிக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் தியாகராசாவின் (பொருளாளர் AROD) அன்பு மனைவியும், ஜெகநாதன் (U.K), குகதாசன் (S.Korea), ஜெயக் குமாரன் (France) ஆகியோரின் அன்புத் தாயும், சின்னையா (ஓய்வுபெற்ற ஊழியர்- சிமெந்து கூட்டுத்தாபனம்), ஜெயக்குமார் (ஆசிரியர்-புனித பத்திரிசியார் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

25, புதுவீதி,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம். 0212226896 (37105)(10.6)

தகவல்:
கணவர்.

### திருமதி வீரசிங்கம் றோசம்மா

கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வீரசிங்கம் றோசம்மா நேற்று (04.05.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வீரசிங்கத்தின் அன்பு மனைவியும்,தயாநிதி, காலஞ்சென்ற தயாவதி, தயாபரன்(ஜேர்மனி),தயாநந்தன்(சுவிஸ்), தயாளன், (கொலண்ட்), தயாமணி (கொலண்ட்), தயாசீலன், தயாசோதி ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.05.2013) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப. 11.30 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாச்சிமார் கோவிலடி வீதி,
கோண்டாவில் மேற்கு.
077 841 7511 (37106)(5.6)

தகவல்:
பிள்ளைகள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

## மரண அறிவித்தல்

### சோதிநாயகி சன்முகநாதன்



யாழ்ப்பாணம், மானிப்பாயை பிறப்பிடமாகவும் கொழும்பு, வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த சண்முகநாதன் சோதிநாயகி 03.05.2013 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஞானமுத்து சண்முகநாதனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கமரன் வன்னியசிங்கம்-தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும்,வசந்தமனோகரி, பகீரதன் (சட்டத்தரணி),நளாயினி,வைத்தியர் மாணிக்கவாசகர் (நியூசிலாந்து), பாஸ்கரன், பிரபாகரன் (சட்டத்தரணி), தமயந்தி, அனுசூயா (சட்டத்தரணி -சட்டமா அதிபர் திணைக்களம்) சிவயோகன் (பெரிய பிரித்தானியா) ஆகியோரின் அன்புத் தாயும், திருஞானமூர்த்தி, காலஞ்சென்ற தாசிம், நளினி (நியூசிலாந்து), சந்திரவதனி (பெரிய பிரித்தானியா) ஆகியோரின் மாமியும், காலஞ்சென்றவர்களான பஞ்சரத்தினம், தில்லைநாதன், அன்னரத்தினம் தம்பிராசா, சொர்ணகாந்தி, சண்முகம் ஆகியோரின் சகோதரியும், கோபிநந்தன் (சிங்கப்பூர்), ராதாரமணன், கிருஷ்ஆனந்த் (சட்டத்தரணி- பெரிய பிரித்தானியா) உமாசங்கர், பிரதீப்பன், பிரசாந்தன், நஜி,பாரா, பகீரதி, அருந்ததி, அரவிந்தன், அபிராமி (ஆஸ்திரேலியா), ஆர்த்திகா, அர்ஜுனா, விபுஷனி (பெரிய பிரித்தானியா)ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.05.2013) ஞாயிற்றுக்கிழமை கொழும்பு, வெள்ளவத்தை, இல. 11, பொஸ்வெல் பிளேசில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மு.ப 10 மணியளவில் தகனக்கிரியை களுக்காக பொரளை கனத்தை இந்து மயானத் துக்கு எடுதுச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிளேஸ், வெள்ளவத்தை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணமக்கள் தேவை UK (UK citizan)**

04/04/1976 கார்த்திகை நட்சத்திரம் 04ஆம் பாதம் கி.பா 32, (software Engi.(uk citizan) படித்த மணமகளையும், 29.10.1979 பூரம் கி.பா.25 தனியார் /அரசாங்கத்துறை மணமகனையும் எதிர்பார்க்கின்றார்கள். T.P- 0044 7833819736 (miss callபோடவும்)

## விற்பனைப்பிரதிநிதி தேவை

உணவுப் பொருள் உற்பத்தி நிறுவனம் ஒன்றுக்கு [illegible] சந்தைப்படுத்தல் நடவடிக்கையில் அனுபவம் வாய்ந்த (வட மாகாணத்தில் 5 வருடத்துக்கு குறையாத முன் அனுபவம்) விற்பனைப்பிரதிநிதி தேவை.

வயது: 28-40

குறிப்பு: சம்பளம், [illegible] மற்றும் மேலதிக கொடுப்பனவு [illegible] வழங்கப்படும்.

தொடர்பு: 077 7784314

## கண்ணீர் அஞ்சலி

யாழ். மத்திய கல்லூரி பிரதி அதிபர் பாலபவன் அவர்களின் அன்புச் சகோதரன்

### திரு. பரம்சோதி பாலகணேஸ்

அவர்களின் பிரிவுச் செய்தி அறிந்து துயரடைவதோடு அன்னாரின் பிரிவால் துயரடைந்துள்ள குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

யாழ். மத்திய கல்லூரிச் சமூகம்

# மரண அறிவித்தல்கள்

## திருமதி தர்மபூபதி பாலசிங்கம் (தவம்)



தாவடி தெற்கு, கொக்குவிலை பிறப்பிடமாகவும், புதுமடம் உடுவில் தெற்கு, மானிப்பாயை வசிப்பிடமாகவும், குளப்பிட்டிச் சந்தி கொக்குவில் மேற்கை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட தர்மபூபதி பாலசிங்கம் நேற்றுமுன்தினம் (03.05.2013) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை -சின்னத்தங்கச்சி தம்பதியரின் அன்பு மகளும், பாலசிங்கத்தின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான பொன்னையா பொன்னம்மா தம்பதியரின் மருமகளும், பரமசிவத்தின் மைத்துனியும், தங்கரத்தினத்தின் அன்புச் சகோதரியும், சத்தியதேவி (சுவிஸ்), சசிகலாதேவி, காலஞ்சென்ற புவனேந்திரன், மோகனராஜா (லண்டன்), கிருபாலராஜா (லண்டன்), நித்தியாதேவி (சுவிஸ்), தர்மபாலினி, சுஜேந்தன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும், செல்வராஜா (சுவிஸ்), காலஞ்சென்ற மங்களேஸ்வரன், ஸ்ரீலக்சுமி (லண்டன்), விவேகினி (லண்டன்), ஜெயானந்தன் (சுவிஸ்), பவ்யாதேவி (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு மாமியும், வாகீசன், சிவசுதன், விஜிதா, சாதுரியா, சிந்துஜா ஆகியோரின் பெரியதாயும், தஜீன், கபித், டனித்தா, திவ்யன், சுஜீவன், கஜன், பவித்ரா, பௌசிகன், சஜிர்தன், ஹர்சன், தஷானி, தனுஜா, விதுஜா, அனுகா, ஜனுஷன், நிவசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.05.2013) திங்கட்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

குளப்பிட்டிச்சந்தி,
ஆனைக்கோட்டை வீதி,
கொக்குவில் மேற்கு. (சி/8847) (16.9)

தகவல்:
சசிகலாதேவி (மகள்)

## பரம்சோதி பாலகணேஷ் (கணேஷ்)



சந்திரவாசா துன்னாலை தெற்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பரம்சோதி பாலகணேஷ் நேற்று (04.05.2013) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் பரம்சோதி காலஞ்சென்ற கமலாதேவி தம்பதியரின் அன்பு மகனும், பாலநந்தினி (ஆசிரியை யா/ஞானாசாரியார் கல்லூரி), பாலகௌரி (நோர்வே), பாலபவான் (பிரதி அதிபர் யா/யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி) பாலகரன் (சமுர்த்தி முகாமையாளர் மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், மகேந்திரன் (மகாலட்சுமி தங்கமாடம், நெல்லியடி), ஜீவராசா (நோர்வே), புஸ்பதேவி (பிரதமலிகிதர், பிராந்தியக் கணக்கீட்டு அலுவலகம் தபால் திணைக்களம் யாழ்ப்பாணம்), இரஞ்சினி (ஆசிரியை யா/யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் மைத்துனரும், நீலவாணன், ராகவன், ரஜீபன், கௌசிகன், அக்சயா, அசித்தா ஆகியோரின் மாமனும், கஜானி, பிரார்த்தனா, பிரஷாந், சாஜிறூபன், சஜானன், சஜாத்தன், வத்சஜா ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.05.2013) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக பிட்டிதூ இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சந்திரவாசா, துன்னாலை தெற்கு,
கரவெட்டி.
0777703776, 0777630290

தகவல்:
குடும்பத்தினர்.

## நூல் வெளியீட்டு விழா அழைப்பு

### ஆகம சித்திரங்கள் பாகம் - 05

இடம்:- சண்டிலிப்பாய் கல்வளை பிள்ளையார் தேவஸ்தானம்
காலம்:- இன்று (05.05.2013) ஞாயிற்றுக்கிழமை
பிற்பகல் 2 மணிமுதல்.

விநாயகருடைய வடிவங்கள், ஆகம விளக்கப் படங்கள், சுலோகங்கள், வியானங்கள் உள்ளடங்கியது:

அந்தண குருமார்கள், ஆலய அறங்காவலர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், சிற்ப ஆசாரிகள் போன்றோர்க்கு பயன்படக் கூடிய அரிய பொக்கிசம்

பிரதி ஒன்றின் விலை ரூபா- 500/-

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கல்வளை,
சண்டிலிப்பாய்.

அழைப்போர்
சிவஸ்ரீ எ.ப.ரஞ்சிதானந்தக் குருக்கள் குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## சண்முகநாதன் மனோகரன்



புங்குடுதீவு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் பரிஸை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகநாதன் மனோகரன் கடந்த (01.05.2013) புதன்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் தாரணியின் அன்புக் கணவரும், மதீசன், தனு சன், மதுசா ஆகியோரின் ஆசை அப்பாவும், காலஞ்சென்ற சண்முகநாதன் மற்றும் அன்னம்மா தம்பதியரின் மூத்த புதல்வரும், பரஞ்சோதி காலஞ்சென்ற சறோஜினிதேவி தம்பதிரின் மருமகனும், காலஞ்சென்றவர்களான நாகநாதி, வள்ளியம்மை, ஆறுமுகம், தில்லைவனம் ஆகியோரின் பேரனும், இந்திரகலா, தர்சினி, தர்மினி, சதீஸ்கரன், வசிகரன், பாஸ்கரன் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், வேலும்மயிலும், சுந்தரவேல் ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும், றோகினி, காலஞ்சென்ற குமுதினி, வாமினி, சுபாஜினி ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற செல்வரட் ணம் மற்றும் நாகம்மா, சயந்தகுமார், சரஸ்வதி ஆகியோரின் பெறாமகனும், காலஞ்சென்ற கனகசபை, தங்கம்மா, காலஞ் சென்ற வர்களான கனகரட்ணம்- நாகம்மா தம்பதியரின் மருமகனும், குலேந் திரன், ஜெயராசன், காந்தரூபன்(குகன்), மஞ்சுளா, பைந்தமிழ் செல்வி, நிசாந்தகுமாரி ஆகியோரின் மச்சானும், காலஞ்சென்ற மகேந்திரராஜா, செல்வராஜா, செல்வ ராணி, பத்மாவதி, சிறிகாந்தன் ஆகியோரின் ஆசை மச்சானும், அருள், ரூபன், பாஸ்கரன், சிவமாறன் ஆகி யோரின் அன்புச் சகலனும், கம்சிகா, ஆர்த்திகா, ஆத்மிகன், நிசாந்தி, நிருசன், நிசாந், திலக்சி, தர்சன், திலக்சன் ஆகியோரின் மாமனும், சதுர்சன், சானுகா, சோபிகா, பூவிதன், விஷ்னுகா, நக்சிகா, தவிசன், கிசான், கிர்சிகா, கிபீசன், தீச்சனா, சகானா, சபரிசன் ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.05.2013) திங்கட்கிழமை பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோணாவளை லேன், கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.
077 3768892 021221 2338

தகவல்:
சண்முகநாதன் அன்னம்மா (தாய்),
காந்தரூபன் (குகன்) மைத்துனன்

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
02 * 11 * 1941



மறைவு
06 * 04 * 2013

## அமரர் மயில்வாகனம் பொன்னுத்துரை

எத்தனை நாள்கள் சென்றாலும் உங்கள்
நினைவலைகள் எம்மனதை விட்டு அகலவில்லை
உங்களை அன்புடன் நினைவு கூருகின்றோம்.

கடந்த (06.04.2013) இறைமகிமைக்குள் ஆறுதல் பிரவேசம் அடைந்த எமது தந்தையின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வந்து அனுதாபம் தெரிவித்தோருக்கும், தந்தி, தொலைபேசி மூலம், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள், மலர்வளையங்கள் செலுத்தி துயர் பகிர்ந்தோருக்கும் மற்றும் பலவழிகளில் உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (05.05.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.30 மணிக்கு அன்னாரது 31ஆம் நாள் நினைவஞ்சலி அவரது இல்லத்தில் நடைபெறும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஐக்கிய மதிய போசனத்தில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மிசால் வடக்கு, கொடிகாமம். (சி/8850)(16.14.9)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய ஆட்டம்



கைதடி, மே 5
இலங்கை வங்கி, வர்த்தக வங்கி மற்றும் மக்கள் வங்கி ஆகியவற்றின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் மாவட்ட ரீதியாக நடத்தும் தாச்சிச் சுற்றுத் தொடரில் இன்று ஞாயிற்றுக் கிழமை உதயசூரியன் விளையாட்டுக் கழக மைதானத்தில் பி.ப. 4.30 மணிக்கு இணுவில் அறிஞர் வி.கழக அணியை எதிர்த்து ஆலடி சிந்து வி.க. 'ஏ' அணி விளையாடவுள்ளது.

(ற-288)

### வவுனியா பாடசாலைகளுக்கான கிரிக்கெட்

## விபுலானந்தா சம்பியன்



வவுனியா, மே 5
வவுனியா மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட் சுற்றுத் தொடரில் வவுனியா விபுலானந்தாக் கல்லூரி மாவட்டச் சம்பியனாகத் தெரிவாகியது.
புதுக்குளம் மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற இறுதி ஆட்டத்தில் புதுக்குளம் மகாவித்தியாலயத்தை 9 இலக்குகளால் வீழ்த்தி வெற்றிபெற்றது விபுலானந்தாக் கல்லூரி.
நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற புதுக்குளம் மகா வித்தியாலய அணி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது. விபுலானந்தாக் கல்லூரி வீரர்களின் துல்லியமான பந்து வீச்சுக்கு முகம் கொடுக்க முடியாது திணறியது புதுக்குளம் மகா வித்தியாலய அணி. 9.2 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 50 ஓட்டங்களை மட்டும் பெற்றுக் கொண்டது அந்த அணி.
அணி சார்பாக கவி அதிகபட்சமாக 10 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார். விபுலானந்தாக் கல்லூரியின் பந்து வீச்சு சார்பாக றொசாந்தன் திவா மற்றும் பருவூத் ஆகியோர் தலா இரண்டு இலக்குகளைக் கைப்பற்றினர்.
அதனை அடுத்து 51 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கியது பண்டாரிக்குளம் விபுலானந்தாக் கல்லூரி அணி. தவனேந்திரன், ரேணுஜனின் அதிரடியான துடுப்பாட்டத்தின் மூலம் 8.2 பந்துப் பரிமாற்றங்களில் ஒரு இலக்கை மட்டும் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.
அந்த அணி சார்பாக அதிரடியாகத் துடுப்பெடுத்தாடிய ரேணுஜன் நான்கு 6 ஓட்டங்கள் அடங்கலாக 34 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.
தொடரில் மூன்றாமிடத்தினை வவுனியா அல்ஹாமியா வித்தியாலயம் பெற்றுக் கொண்டது. (ற-400)

## வடமராட்சி வலய தடகள முடிவுகள்

கரணவாய், மே 5
வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான வலய மட்ட தடகளப் போட்டிகளின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளது. போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்றுக் கொண்ட வீர வீராங்கனைகளின் விவரங்களின் தொடர்ச்சி:
800 மீற்றர்:- எஸ்.விபுசனன் - செம்பியன்பற்று அ.த.க. பாடசாலை, ஆர்.கிரிஸ்ரியன் - நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், எஸ்.சிவகணேசன் - ஹாட்லிக் கல்லூரி.
110 மீற்றர் சட்டவேலி: பி.மதுஜன் - தேவரையாளி இந்துக் கல்லூரி, ஜி.ஜெசி - உடுப்பிட்டி அ.மி.கல்லூரி, கே.தர்சன் - ஹாட்லிக்கல்லூரி.
தட்டு எறிதல்:- பி.அருள்ராஜ் - ஹாட்லிக்கல்லூரி, ரி.ஸ்வரன்ராஜ் - வேலாயுதம் மகாவித்தியாலயம், கே.ஆரூரன் - ஹாட்லிக்கல்லூரி.
பெண்கள்
400 மீற்றர்:- ஆர்.நளாயினி - பரித்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, எம்.தர்மினி - நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், ஈ.மேரி கனிஸ்ரா - சென்.தோமஸ் மகா வித்தியாலயம்.
200 மீற்றர்:- ஆர்.நளாயினி - பருத்தித்துறை மெதடிஸ் பெண்கள் உயர்தரப் பாடசாலை, கே.சோபிதா - ஞானசாரியார் கல்லூரி, ஏ.கௌதமி - வல்வை மகளிர் வித்தியாலயம்.
ஈட்டி எறிதல்: கே.கிருஸ்ணரூபி - தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயம், ரி.விஜிதா - பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலை, ரி.தர்சிகா - நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்.
100 மீற்றர்:-கே.சோபிதா - ஞானசாரியார் கல்லூரி, எஸ்.சுதா - நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், ஜே.மதுசியா - வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம்.


(தொடரும்)

## கயிறிழுத்தல் நவசக்தி சம்பியன்

கைதடி, மே 5
கைதடி மேற்கு சனசமூக நிலையம் 57 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தென்மராட்சி மேற்கு பிரதேசத்துக்குட்பட்ட கழகங்களுக்கு இடையே நடத்திய கயிறிழுத்தல் போட்டியில் கைதடி நவசக்தி விளையாட்டுக் கழகம் முதல் இடத்தைப் பெற்றுச் சம்பியனாகியது.
இறுதிப் போட்டியில் கைதடி நவசக்தி விளையாட்டுக் கழகமும், கைதடி ஐக்கிய விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன. பலத்த போராட்டத்தின் பின்னர் கைதடி நவசக்தி விளையாட்டுக் கழகம் வெற்றியைத் தனதாக்கிக் கொண்டது.
இந்தச் சுற்றுத்தொடரில் 10க்கும் மேற்பட்ட கழகங்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற-288)

### இளைஞர் சேவைகள் மன்ற கூடைப்பந்தாட்டம்

## நல்லூர், யாழ். பிரதேச அணிகள் சம்பியனாகத் தெரிவாகின



யாழ்ப்பாணம், மே 5
தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் நடத்தப்படும் இளைஞர் கழகங்களுக்கு இடையிலான மாவட்டமட்ட விளையாட்டு விழாவில் ஆண், பெண் இருபாலருக்குமான கூடைப்பந்தாட்டச் சுற்றுத் தொடரில் ஆண்கள் பிரிவில் நல்லூர் பிரதேச இளைஞர் கழக சம்மேளன அணியும் பெண்கள் பிரிவில் யாழ். பிரதேச இளைஞர் சம்மேளன அணியும் வெற்றி பெற்று சம்பியன்கள் ஆகின.
கடந்த புதன்கிழமை யாழ். மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் நல்லூர் பிரதேச இளைஞர் சம்மேளன அணியை எதிர்த்து யாழ்.பிரதேச இளைஞர் சம்மேளன அணி மோதிக் கொண்டது.
அதில் நல்லூர் பிரதேச இளைஞர் சம்மேளன அணி 79:71 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியனானது.
தொடர்ந்து இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் சம்மேளன அணியை எதிர்த்து யாழ்.பிரதேச இளைஞர் சம்மேளன அணி மோதிக் கொண்டது.
அதில் யாழ். பிரதேச இளைஞர் சம்மேளன அணி 26:20 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியனானது.

(ற-23)

## கரப்பந்தில் மகாஜனா சம்பியன்



யாழ்ப்பாணம், மே 5
யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்ட 17 வயதுப்பிரிவு பெண்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுத் தொடரின் இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.
கடந்த வாரம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணியை எதிர்த்து அளவெட்டி அருணாச்சலம் வித்தியாலய அணி மோதிக் கொண்டது. அதில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி 25:13, 25:17 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது. (ற-23)



கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழகம் நடத்திய கே.ஸி.ஸி.ஸி. வெற்றிக்கிண்ண இறுதியாட்டத்தில் பல்கலைக் கழக அணியை வீழ்த்தி கிண்ணத்தை ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகம் தனதாக்கிக் கொண்டது.

## வவு. மாவட்ட பாடசாலை உதைபந்தாட்ட முடிவுகள்



வவுனியா, மே 5
பாடசாலைகளுக்கிடையிலான மாவட்டமட்ட கரப்பந்தாட்டச் சுற்றுத் தொடரில் 15 வயது ஆண்கள் பிரிவில் கிடாச்சூரி கருவேப்பங்குளம் அ.த.க. பாடசாலையும், 17 வயது ஆண்கள் பிரிவில் முதலியார்குளம் அ.த.க. பாடசாலையும், 19 வயது ஆண்கள் பிரிவில் வவுனியா இந்துக் கல்லூரியும் சம்பியனாகத் தெரிவாகின.
கடந்த செவ்வாய்க்கிழமை கிடாச்சூரி கருவேப்பங்குளம் அ.த.க. பாடசாலை மைதானத்தில் இடம்பெற்ற 15 வயதுப் பிரிவு ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் வவுனியா வடக்கு வலயத்தைச் சேர்ந்த கிடாச்சூரி கருவேப்பங்குளம் அ.த.க. பாடசாலை அணியும், வவுனியா தெற்கு வலயத்தைச் சேர்ந்த ஸ்ரீசுமண வித்தியாலயமும் மோதிக்கொண்டன.
அதில் கிடாச்சூரி 25:20, [illegible] செற் கணக்கில் வென்று சம்பியனாகத் தெரிவாகியது.
மூன்றாமிடத்தினை வவுனியா தெற்கு வலயத்தைச் சேர்ந்த வவுனியா இந்துக் கல்லூரி பெற்றுக் கொண்டது.
அடுத்து இடம்பெற்ற 17 வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் வவுனியா தெற்கு வலயத்தைச் சேர்ந்த முதலியார் குளம் அ.த.க. வித்தியாலயமும், கிடாச்சூரி கருவேப்பங்குளம் அ.த.க. பாடசாலையும் மோதின. மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற அந்த ஆட்டத்தில் பலத்த போராட்டத்தின் பின்னர் முதலியார் குளம் அ.த.க. அணி வெற்றி பெற்றது.
முதல் செற்றை கிடாச்சூரி அணி 25:18 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது. அதனை அடுத்து தன்னைச் சுதாகரித்துக் கொண்ட முதலியார் குளம் அ.த.க. பாடசாலை அணி அடுத்த இரண்டு செற்களையும் 25:20, 25:21 என்ற செற் கணக்கில் வெற்றிவாகை சூடி சம்பியனாகியது.
இப்பிரிவில் மூன்றாமிடத்தை வவுனியா தெற்கு வலயத்தைச் சேர்ந்த ஸ்ரீமண மகா வித்தியாலயம் பெற்றுக் கொண்டது.
அடுத்து இடம்பெற்ற 19 வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் வவுனியா இந்துக் கல்லூரியும் ஸ்ரீதர்மரத்ன பிரிவெனா பாடசாலையும் மோதிக்கொண்டன.
இதில் வவுனியா இந்துக் கல்லூரி அணி 25:18, 25:22 என்ற புள்ளிகள் அடிப்படையில் 2:0 என்ற நேர் செற் கணக்கில் வென்று சம்பியனாகியது.
இப்பிரிவில் மூன்றாமிடத்தை செட்டிக்குளம் மகா வித்தியாலயம் பெற்றுக் கொண்டது. (ற-400-422)

## கைதடி மின்னொளி முதலிடம்

கைதடி, மே 5
கைதடி வடக்கு நவ சனமூக நிலையத்தின் 48 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு கைதடி வடக்கு நவசக்தி விளையாட்டுக் கழகம் கைதடிப் பிரதேச ரீதியாக நடத்திய கயிறிழுத்தல் போட்டியில் கைதடி மின்னொளி விளையாட்டுக்கழகம் முதலிடத்தையும் கைதடி சரஸ்வதி விளையாட்டுக் கழகம் இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டது.
மேற்படி போட்டியில் கைதடியைச் சேர்ந்த எட்டு கழகங்கள் பங்குகொண்டமை குறிப்பிடத்தக்கது. (ற-288)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அசத்தல் வெற்றி




ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியுடனான லீக் ஆட்டத்தில். நடப்பு சம்பியன் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 8 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. கொல்கத்தா. ஈடன் கார்டன் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இரவு நடந்த இந்த ஆட்டத்தில், நாணயச்சுழற்சியில் வென்ற ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. ரோயல்ஸின் தொடக்க வீரர்களாக வோட்சன், ரகானே களமிறங்கினர். ரகானே 6 ஓட்டங்கள் எடுத்து சேனநாயக்க பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

பாக்னர் ஓர் ஓட்டம் எடுத்த நிலையில் அப்துல்லா பந்துவீச்சில் கம்பீர் வசம் பிடிபட்டார். அதைத் தொடர்ந்து. வோட்சனுடன் இளம் வீரர் சஞ்சு சாம்சன் இணைந்தார். நம்பிக்கை அளித்துக் கொண்டிருந்த வோட்சன் 35 ஓட்டங்கள் எடுத்து சுனில் நரைன் சுழலில் எல்.பி.டபுள்யூ முறையில் ஆட்டமிழந்து பெவிலியன் திரும்பினார். அடுத்து வந்த யாக்னிக் 10 ஓட்டங்கள் எடுத்து சேனநாயக்க பந்துவீச்சில் 'போல்ட்' முறையில் ஆட்டமிழக்க, ரோயல்ஸ் 83 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளை இழந்து தடுமாறியது. இந்த நிலையில், சாம்சன், ஓவைஸ் ஷா இருவரும் அணியை மீட்கப் போராடினர். சாம்சன் 40 ஓட்டங்கள் எடுத்து (36 பந்து, 1 பவுண்டரி, 2 சிக்ஸர்) பாட்டியா பந்துவீச்சில் கலிஸ் வசம் பிடிபட்டார். ஷா 24 ஓட்டங்கள் எடுத்தார். ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி 20 பந்துப்பரிமாற்றங்கள் முடிவில் 6 இலக்குகள் இழப்புக்கு 132 ஓட்டங்களை எடுத்தது.

### இலக்கு 133

133 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய கொல்கத்தா அணி 17.2 பந்துப்பரிமாற்றங்களிலேயே வெற்றி இலக்கை அடைந்தது. அதிகபட்சமாக பதான் 49 ஓட்டங்களும் கலிஸ் 39 ஓட்டங்களும் எடுத்தனர். (ற)

# புனே வாரியர்ஸை வீழ்த்தியது ரோயல் சலஞ்சர்ஸ்



புனே வாரியர்ஸ் அணியை 17 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பெங்களூர் அணி வீழ்த்தியது. புனே, சுப்ரதா ராய் சகாரா ஸ்டேடியத்தில் கடந்த வியாழக்கிழமை இரவு நடந்த இந்த ஆட்டத்தில், நாணயச் சுழற்சியில் வென்ற ரோயல் சலஞ்சர்ஸ் முதலில் துடுப்பெடுத்தாடியது. திவாரி, கிறிஸ் கெய்ல் இருவரும் ஆரம்ப வீரர்களாகக் களமிறங்கினர். கெய்ல் 21 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். திவாரி அரை சதம் அடித்து அசத்தினார். கோஹ்லி 25 ஓட்டங்கள், திவாரி 52 ஓட்டங்கள் (45 பந்து, 2 பவுண்டரி, 2 சிக்சர்) எடுத்து டிண்டாவின் வேகத்தில் ஆட்டமிழந்தனர். டிண்டா வீசிய கடைசி பந்துப் பரிமாற்றத்தில் டிவில்லியர்ஸ் 26 ஓட்டங்கள் விளாசினார் (6, 4, 6, 4, 4, 2). சலஞ்சர்ஸ் 20 பந்துப்பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து 187 ஓட்டங்கள் குவித்தது. டிவில்லியர்ஸ் 50 ஓட்டங்களுடனும் (23 பந்து, 6 பவுண்டரி, 2 சிக்சர்), ஹென்ரிக்ஸ் 27 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

20 பந்துப்பரிமாற்றங்களில் 188 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடின இலக்குடன் களமிறங்கிய புனே வாரியர்ஸ் அணி 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 170 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது. 17 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பெங்களூர் அணி வென்றது. புனே தரப்பில் உத்தப்பா 75 ஓட்டங்களைப் பெற்றார். (ற)

# 'பிளே ஓப்' சுற்றில் சுப்பர் கிங்ஸ்

ஐ.பி.எல். 6ஆவது தொடரின் 45ஆவது லீக் ஆட்டத்தில் பஞ்சாப் அணியை வீழ்த்திய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 'பிளே ஓப்' சுற்றுக்குத் தகுதி பெற்றது.

கிங்ஸ்லெவன் பஞ்சாப் அணியை வீழ்த்தியதன் மூலம் நடப்பு ஐ.பி.எல். தொடரில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி தொடர்ச்சியாக 7ஆவது வெற்றியைப் பெற்றது.

சென்னையில் நடைபெற்ற ஆட்டத்தில் சென்னை அணியின் மைக் ஹசி ஐ.பி.எல். தொடரில் 482 ஓட்டங்களைக் குவித்த முதல் வீரர் என்ற சாதனையைப் படைத்து ஒரேஞ்சு நிறத் தொப்பியைக் கைப்பற்றினார்.

பின்னர் இரவு நடைபெற்ற ஆட்டத்தில் ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் அணியின் கெய்ல் அந்தச் சாதனையை முறியடித்து அவர் 505 ஓட்டங்களை எட்டி ஒரேஞ்சு தொப்பியை பறித்தார்.

இதேபோல் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் பிராவோ நடப்பு ஐ.பி.எல். ஆட்டத்தில் 19 இலக்குகளை வீழ்த்தி சாதனை படைத்திருக்கிறார். அவர் ஊதா நிறத் தொப்பியைக் கைப்பற்றியுள்ளார்.

நடப்பு ஐபிஎல் தொடரில் 11 ஆட்டங்களில் விளையாடி 9 ஆட்டத்தில் வெற்றி பெற்று சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 18 புள்ளிகளுடன் புள்ளிப் பட்டியலில் முதல் இடத்தில் இருந்து வருகிறது. 2ஆவது இடத்தில் ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி 14 புள்ளிகளுடன் இருக்கிறது.

(ற)




# சம்பியன்ஸ் கிண்ணத் தொடர் இந்திய அணி அறிவிப்பு

சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் தொடருக்கான இந்திய அணி நேற்று அறிவிக்கப்பட்டது. இங்கிலாந்தில் ஜூன் 6ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் தொடர் நடைபெறவுள்ளது. இதற்கான அணியே தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. அதில் தினேஷ் கார்த்திக், இர்பான் பதான், உமேஷ் யாதவ், வினய் குமார், முரளி விஜய், ஷிகர் தவான் உள்ளிட்ட 15 வீரர்கள் இடம் பெற்றுள்ளனர். கௌதம் கம்பீர் மற்றும் யுவராஜ் சிங் ஆகியோர் நீக்கப்பட்டுள்ளனர்.

அணி விபரம்: டோனி, கோஹ்லி, ரெய்னா, ரோஹித் சர்மா, தினேஷ் கார்த்திக், ரவீந்திர ஜடேஜா, அஷ்வின், புவனேஷ்வர் குமார், இர்பான் பதான், உமேஷ் யாதவ், வினய் குமார், முரளி விஜய், ஷிகர் தவான், இஷாந்த் சர்மா, அமித் மிஸ்ரா.

## நண்பர்களின் சமர்

# வென்றது ஸ்ரான்லி



யாழ்ப்பாணம், மே 5

'நண்பர்களின் சமர்' என வர்ணிக்கப்படும்கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அணிக்கும் முள்ளியவளை வித்தியானந்தாக் கல் லூரி அணிக்கும் இடையிலான கிரிக்கெட் ஆட்டத்தில் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அணி 95ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் ஆரம்பமான ஆட்டத்தில் தனது முதலாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அணி சகல இலக்குகளையும் இழத்து 182 ஓட்டங்களைப் பெற்றது. அடுத்து தனது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி முதல் நாள் ஆட்ட நேர முடிவில் 4 இலக்குகளை இழந்து 48 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இப்விறாஸ் 15 ஓட்டங்களுடனும் அருண் 6 ஓட்டங்களுடனும் ஆட்டம் இழக்காது களத்தில் இருந்தனர்.

நேற்றைய தினம் தனது முதலாவதுஇன்னிங்சைதொடர்ந்த முள்ளியவளை வித்தியானக் தாக்கல்லூரி அணி 93 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. இப்விறாஸ் 26 ஓட்டங்களையும், விளேசன் 10 ஓட்டங்களையும் தமது அணி சார்பாக பெற்றனர்.

பந்துவீச்சில் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அணி சார்பில் காம்சிகாந் 3 இலக்குகளையும் உதயா, மதன் ஆகியோர் தலா 2 இலக்குகளையும், விதுசன் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அணி 7 இலக்குகளை இழந்து 143 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தினை இடைநிறுத்திக் கொண்டது.

உதயா 30 ஓட்டங்களையும், காம்சிக்காந் 26 ஓட்டங்களையும், பிரசாந் 18 ஓட்டங்களையும், கலைச்செல்வன் 11 ஓட்டங்களையும், தர்சன் ஆட்டம் இழக்காமல் 19 ஓட்டங்களையும், விசாகன் ஆட்டம் இழக்காமல் 12 ஓட்டங்களையும் அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி சார்பில் நிசாலி, அஞ்சேயன், வதுசன் ஆகியோர் தலா 2 இலக்குகளை வீழ்த்தினர்.

233 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி அணியினர் சகல இலக்குகளையும் இழந்து 138 ஓட்டங்களை மட்டும் பெற்றனர்.

அதில் விதுசன் 68 ஓட்டங்களையும், விளேசன் 21 ஓட்டங்களையும், அஞ்சேயன் 13 ஓட்டங்களையும், அருண் 12 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் கனகரெட்ணம் மத்திய மகா வித்தியாலய அணி சார்பில் காம்சிகன், பிரசாந் ஆகியோர் தலா 3 இலக்குகளையும் கலைச்செல்வன், சிலேசன், விதுசன் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

சிறந்த துடுப்பாட்ட வீரராக முல்லைத்தீவு முள்ளியவளை வித்தியனந்தாக் கல்லூரி அணி வீரர் விதுர்சனும், சிறந்த பந்து வீச்சாளராக அஞ்சேயனும், சிறந்த களத்தடுப்பாளராக கனகரத்தினம் மத்திய மகா வித்தியா லய அணி வீரர் தர்சனும், ஆட்ட நாயகனாக காம்சிகாந் தும் தெரிவு செய்யப்பட்ட னர். (ற-23)

### ரெய்னாவை பந்துவீச அழைத்தது தவறு

ஐ.பி.எல் தொடரில் பஞ்சாப் அணிக்கு எதிரான ஆட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 15 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இதுகுறித்து டோனிகூறுகையில், ''பஞ்சாப் அணிக்கு எதிரான இந்த ஆட்டத்தில் மிகவும் சிறப்பாக ஆடினோம். ரெய்னா துடுப்பாட்டம் சிறப்பாக இருந்தது. மேலும் பந்துவீச்சு நன்றாக அமைந்தது. ஒட்டு மொத்தமாக வீரர்களின் செயற்பாடு மகிழ்ச்சியை அளித்தது. நான் செய்த ஒரே தவறு ரெய்னாவை பந்து வீச அழைத்தது தான்'' என்று தெரிவித்துள்ளார்.(ற)

### திருத்தம்

22 ஆம் பக்கத்தில் வெளியாகிய ''வவு.மாவட்ட உதை பந்தாட்ட முடிவுகள் என்ற செய்தியை ''வவு.மாவட்ட கரப்பந்தாட்ட முடிவுகள்'' என்று மாற்றி வாசிக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலாத்காரமாக காணி பறிப்பா?

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளைத் தவறாக வழிநடத்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பூச்சாண்டி காட்டுவதாகவும், அப்படியான அடிப்படையற்ற எதிர்ப்புகளுக்கு அரசு ஒருபோதும் அஞ்சப்போவதில்லையென்றும் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது - ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி வட மாகாணசபைத் தேர்தலில் பலமாக களமிறங்கும். அதில் எவருக்கும் எந்தச் சந்தேகமும் வேண்டாம். தேர்தலை அங்கு நடத்த அரசு தீர்மானித்த பின்னர் தான் இப்போது எல்லோரும் புதிய நிபந்தனைகளை விதிக்கின்றனர்.

இன்று வடக்குக் காணி குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நீலிக்கண்ணீர் வடிக்கின்றது. ஒரு அங்குலக் காணியைக் கூட அரசு சட்டவிரோதமாகப் பெறவில்லை. இந்திய அமைதிப்படை அங்கு இருந்த காலத்திலும், ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்திலும் வடக்கில் தமிழர்களது காணிகள் பறிக்கப்பட்டன. எமது அரசு எந்தப் புதுக்காணிகளையும் பலாத்காரமாகவோ சட்டவிரோதமாகவோ பெறவில்லை.

ஆனால், பல வருட காலமாக தமிழரது காணிகளை சட்டவிரோதமாக பலவந்தமாக வைத்திருந்தவர்களைப் பற்றி கூட்டமைப்பு பேசுவதில்லை. அப்போது இந்தத் தமிழர்களின் பிரச்சினை கூட்டமைப்புக்குத் தெரியவில்லையா?

தமிழ்க் கூட்டமைப்பு தேர்தலுக்காக மக்களைத் தவறாக வழிநடத்தி எமக்கு எதிர்ப்பை வெளிப்படுத்துகிறது. தமிழ் மக்களுக்கு இப்போது உண்மை தெரிய ஆரம்பித்துள்ளது. எனவே நாம் அஞ்சப் போவதில்லை - என்றும் குறிப்பிட்டார் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ.

# ரூ. 2 1/2 கோடி கொள்ளை

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சத்து 49 ஆயிரம் ரூபாவுக்கும் மேற்பட்ட பொருள்கள் கொள்ளை போயுள்ளன. கடந்த மார்ச் மாதம் 98 லட்சம் ரூபாவுக்கும் அதிகமான பெறுமதி கொண்ட பொருள்கள் கொள்ளை போயுள்ளன.

கடந்த பெப்ரவரி மாதம் 18 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியுடைய பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

கடந்த ஜனவரி மாதம் நகைகள் உட்பட 95 லட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

வாராந்தம் நடைபெறும் செய்தியாளர் சந்திப்பில் அந்தந்த வாரத்துக்குரிய திருட்டுக்கள், கொள்ளைகள் பற்றித் தெரிவிக்கப்படும். சில வாரங்கள் செய்தியாளர் சந்திப்பு நடைபெறவில்லை. இதனால் அந்தக் காலப்பகுதிக்குரிய கொள்ளைகள் பற்றிய விபரங்கள் கூறப்படவில்லை. (த 1)


**விற்பனைக்கு (இஞ்சின் கியர் பொக்ஸ்)**
TOYOTA-MITSUBISHI-ISUZU வாகனங்களுக்கான இஞ்சின் கியர் பொக்ஸ் விற்னைக்கு உண்டு (4BD1,4BE1, 4BC2,4D32, 4D33, 4D34, 3L,1KZ, 2C) என்பன விற்பனைக்குண்டு.
தொ.பே: 077 723 8615

**PERSONAL CLASS**
ACCOUNTING
By:- A.KALAICHELVAN
A/L 2013, 2014, 2015
TAMIL & ENGLISH MEDIUM
GRADE 11, 10 ENGLISH MEDIUM ONLY
CONT.NO:- 0719405454
(கல்வியங்காடு, ஆரைங்கால் இரு இடங்களிலும்)

**இத்தாலி மொழி**
077 132 7818

**Personal Class (கணினி)**
உங்கள் வீடுகளில்வந்து கற்பிக்கப்படும்
Ms Office, Internet & E-mail, DTP, Web Design, Graphic Design, சிறுவர்களிற்கான பயிற்சி நெறிகள்.
சான்றிதழ்கள் வழங்கப்படும்.
குறிப்பு: கணினி இல்லாதவர்களிற்கு எனது Laptop மூலமாகக் கற்பிக்கப்படும்
ஆசிரியர்: KRC
TP: 0779672038
நல்லூர்

**aat Final Level**
இற்குரிய புதிய பிரிவுகள் ஆரம்பம்
(Tamil&English medium)
11th May 2013
aat SRI LANKA
aat Foundation, Intermediate பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்குரிய Paper Classes ஆரம்பம்.
18th May 2013 அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால பதிவுகளுக்கு முந்துங்கள்.
தொடர்பு: Spectra Skills
19, Stanley Road, (People's Bank, 2nd floor)
Jaffna.
www.facebook.com/SpectraSkills
Tel: 021 222 1422
021 222 1423

**STUDY IN UK**

உங்கள் LODNON செல்லும் கனவை நனவாக்க இன்றே எம்முடன் இணையுங்கள்
நடைமுறைகள் மாறினும் எவ்வித மாற்றமும் இன்றி London செல்லுங்கள்
GCE(O/L) தகமை போதுமானது
June/ July Intake நகான அனுமதிகள் தற்போது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன
Colleges
Yearly Payment £3500
IELTS overall 4.5 OR City & Guilds B1
Universities
Yearly Payment £3950 - £6450
IELTS overall 5.5
நீங்கள் ஏன் Exponet ஐ தெரிவுசெய்ய வேண்டும்

B.Suthagini: Jaffna

P.Priyanthan: Jaffna

K.Kaviry: Jaffna
EXPONET
379 - ½, Galle Road, Colombo 06
197, Arasady Road, Jaffna
E-mail: nimal@expogroup.lk
Web: www.expogroup.lk
011 7 555511 /14/18
021 7538395 / 021 2227230

**காணி மற்றும் வீடு விற்பனைக்கு**
யாழ்ப்பாணம், சுன்னாகம் K.K.S பிரதான வீதிக்கு அமைவாக உடுவில் பிரதேச செயலகம் அமைந்துள்ள பெரிய மதவடி வீதியில் 200m தூரத்தில் 5 பரப்பு காணியில் கிணற்றுடன் கூடிய 4 விசாலமான அறைகளைக் கொண்ட முழுமை யான வீடும் விற்பனைக்கு உண்டு.
தொ.பே: 077 169 5699 (வினோ)

**DUTCH (Netherlands)**
GERMAN FRENCH ENGLISH
மொழிகளை இலகுவாக கற்கவும் Embassy இனால் நடாத்தப்படும் விசாவுக்கான பரீட்சைகளில் சிறப்பாக சித்தியடையவும் அந்தந்த நாடுகளிலிருந்து வருகை தந்த ஆசிரியர்களினால் Audio, Video மற்றும் தமிழ் விளக்கங்களுடன் கற்பிக்கப்படுகிறது
Netherland அரசாங்கத்தினால் April - 2012 லிருந்து அறிமுகப்படுத்தப்பட்டுள்ள M.V.V விசா பரீட்சைக்கான புதிய பாடத்திட்டத்திற்கமைய புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளது ஏற்கனவே Netherland தூதரக பரீட்சையில் சித்தியடையாதவர்களுக்கும், கூடிய கவனம் தேவைப்படுகிறவர்களுக்கும் விசேட வகுப்புக்களும் மாதிரிப் பரீட்சைகளும் தமிழ் விளக்கத்துடன் உண்டு
Dutch Lanka Academy
#69 -2/1, Galle Road, Dehiwala.
Tel: 0777251332, 011 271 8811
Netherland தூதரகத்தினால் நீண்ட கால நன்மதிப்பை எய்திய ஒரே International Language Academy
நெதர்லாந்து தூதரக பரீட்சையில் சித்தியடைவதற்கு 100 % உத்தரவாதம் அளிக்கப்படும். **Condition Apply

**VAN (வான்) விற்பனைக்கு**
மிகவும் நல்ல நிலையிலுள்ள NPKQ-XXXX தொடரிலக்கமுடைய மாருதி சுசுகி [MARUTI SUZUKI VAN] வான் உடன் விற்பனைக்குண்டு.
தொ.பே: 0755546000/0777704457

**இலக்குக்கான வேலைவாய்ப்பு**
GDM Management
நாட்டின் பல பாகங்களிலுமுள்ள இளைஞர், யுவதிகளைக் குறுகிய காலத்தில் சமூகத்துக்கு சிறந்த ஆளுமை உடையவர்களாகவும், பயிற்சியின் பின் அதிக வருமானம் ஈட்டக் கூடியவர்களாகவும் உருவாக்கி பெருமையுடன், முன்னோடியாக திகழும் IDEAL நிறுவனத்தின் அதே வாய்ப்பை ஈழநாட்டு இளைஞர், யுவதிகள் அடைந்து கொள்வதற்கான சந்தர்ப்பம் (முதல்வரும் 25 பேருக்கு முன்னுரிமை)
SUPERVISOR - 06 TEAM LEADER - 14
இன்னும் பல பதவிகள்.........
தகைமைகள்: ★ O/L, A/L பரீட்சைக்குத் தோற்றியிருத்தல்
★ 16-30 வயதுக்கு இடைப்பட்ட வராயிருத்தல்
★ சர்வதேச வலையமைப்புடன் கூடிய இலவச தலைமைத்துவ முகாமைத்துவப் பயிற்சி நெறி.
★ பயிற்சிக் காலத்தில் அடிப்படை ஊக்குவிப்பு 12000-21500/- வரை
★ சலுகை முறையிலான இலவச உணவு, தங்குமிட வசதி.
தொ.பே. 077 007 7265, 075 242 8322.

**A/L பொருளியல் நூல்**
பல் தேர்வு வினாவிடை
MCQ BOOK-2
ரூபா-110
வே. கருணாகரன்
பூபாலசிங்கம் புத்தகசாலை
அன்னை புத்தகசாலை

**German Institute**
German, Swiss மொழிகள் தமிழ்மொழி பெயர்ப்புடன் நடைபெறுகின்றன. அடுத்த புதிய வகுப்புக்கள் 06.05 அன்று ஆரம்பம்.
10, Palaly Road, Jaffna.
T.P: 077160 4823 Mrs.Kajenthini

**இந்திய சாஸ்திரியார் வருகை**
யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்
ஓம் சக்தி அருள் வாக்கு பெற்ற பரம்பரை ஜோதிடர்
S.N. குமாரசாமி
கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித்தடையா, குழந்தை பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழில் முன்னேற்றம் இல்லையா, குடும்பப் பிரச்சினையா? வெளிநாடு செல்லத் தடையா?, மனக்கவலையா?
எந்தப் பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்
(காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை)
பீப்பிள்ஸ் இன் (PEOPLE INN)
இல. 112/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(பிள்ளையார் ஹோட்டல் முன்பாக)
T.P: 072 6816681, 0726816691

**LONDON METROPOLITAN COLLEGE**
சர்வதேச தரத்திலான ஆங்கில கற்கை நெறிகளை நடாத்தும் யாழ்ப்பாணத்தின் முன்னிலை ஆங்கில கல்வி நிறுவனம்.
புதிய பிரிவுகள் ஆரம்பம்
IELTS ACADEMIC & GENERAL
Duration: 48 hrs Week/ Week ends
•ஒவ்வொருமாணவரிற்கும் தனிப்பட்ட கவனம்
•முற்றிலும் நவீனமயப்படுத்தப்பட்ட கற்பித்தல் வசதி
•IELTS 5.5-6.5 Band பெறுவதற்கான உத்தரவாதம்
•இலவச Tutorial Facilities
City & Guilds A1 A2 B1 B2
Duration: 48 hrs Week/ Week ends
•UK அரசாங்கத்தினால் சிபாரிசு செய்யப்பட்டது.
•இதுவரை நடந்த பரீட்சையில் 100% சித்தி.
•காலவரையறையற்ற சான்றிதழ் பெறமுடியும்.
•ESOL, SESOL பரீட்சைகளை தனித்தனியாக தோற்றமுடியும்
Certificate in SPOKEN ENGLISH WITH GRAMMAR
(Quick learning programme)
Duration: 60 hrs Week/ Week ends
DIPLOMA IN ENGLISH
Duration: 3 Months Week/ Week ends
Writing - 60Hrs Reading - 48Hrs
Listening - 48Hrs Speaking - 48Hrs
Be a power speaker INTENSIVE COMMUNICATION PROGRAM
ஒவ்வொரு மாத முதல் வாரத்திலும் புதிய பிரிவுகள் ஆரம்பிக்கப்படும். தகைமை அடிப்படையிலான மிகக்குறைந்த கட்டணம்
#197, Arasady Road, Jaffna, Sri Lanka | Tel: 021 222 7230 | 021 753 8395
E mail: info@lmcjaffna.edu.lk | Web: www.lmcjaffna.edu.lk

**LONDON METROPOLITAN COLLEGE Computer Courses**

| | |
|---|---|
| Certifcate in MS Office 2013 | 2500 |
| Certifcate in JAVA, VB.Net, C#, ASP | 3500 |
| Internet & Email | 1500 |
| Diploma in Graphic Designing cs6 | 4500 |
| Diploma in Computer Studies | 4500 |
| Diploma in Computer Hardware | 2500 |
| Diploma in Computer Network | 4500 |
| Diploma in Web Development | 5500 |
| Diploma in Web Designing | 3500 |
| Diploma in Software Development | 5500 |
| Diploma in Computer Programing | 4500 |

197, Arasady Road, Jaffna
Tel: 021 2227230, 0217538395

**LAND SCAPING**
வீடுகள், ஹோட்டல்கள், பூங்காக்கள் ஆகியவற்றுக்கான பூந்தோட்ட அமைப்பு, சொட்டு நீர்ப்பாசனம் (Dripirrigation) என்பன சிறந்த முறையில் அமைத்துத் தரப்படுவதோடு மாதாந்த, வாராந்த அடிப்படையில் பராமரிப்பும் மேற்கொள்ளப்படும். பயன் பாடில்லாத காணிகளில் துப்புரவு செய்தல், வேலி அமைத்தல் (Fencing), சுற்று மதில் அமைத்தல், பயன் தரு மரங்கள் நடுதல் போன்றவையும் மிகச் சிறந்த முறையில் செய்து தரப்படும்.
V4 Greenz
077 968 4284, 077 443 0364

சுன்னாகம் ஸ்ரீ கதிரமலை சிவன் தேவஸ்தான 9 ஆம் நாள் - திருவேட்டைக் காட்சி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.05.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# 12 மாத நிலையான வைப்பு

உயர் நம்பிக்கை
உயர் சலுகைகள்
உயர் பாதுகாப்பு

| காலம் | மாதாந்தம் | | வருடாந்தம் | | முதிர்வு | |
|---|---|---|---|---|---|---|
| மாதம் | சாதாரண | [illegible] | சாதாரண | [illegible] | சாதாரண | [illegible] |
| 1 | 13.25% | 14.09% | | | 13.25% | 14.09% |
| 3 | 13.35% | 14.20% | | | 13.50% | 14.20% |
| 6 | 13.50% | 14.37% | | | 13.75% | 14.22% |
| 12 | 13.75% | 14.65% | 14.00% | 14.00% | 14.00% | 14.00% |
| 24 | 14.00% | 14.93% | 14.25% | 14.25% | 14.50% | 13.58% |
| 36 | 14.25% | 15.22% | 14.50% | 14.50% | 14.75% | 12.99% |
| 48 | 14.50% | 15.50% | 14.75% | 14.75% | 14.85% | 12.36% |
| 60 | 14.75% | 15.79% | 14.85% | 14.85% | 15.00% | 11.84% |

சிரேஷ்ட பிரஜைகளுக்கு 1% மேலதிக வட்டி

லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ்
(ஒரு LOLC குழுமக் கம்பனி)

லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ் பி.எல்.சி
இல. 100/1 ஸ்ரீ ஜயவர்த்தனபுர மாவத்தை, ராஜகிரிய.
தொலைபேசி: 5880880 தொலைநகல்: 2865606
மின்னஞ்சல்: lofin@lankaorix.com
இணையத்தளம்: www.lankaorix.com

துரித அழைப்பு


(C9293)






“என்னுடைய வியாபாரம் முழுமையடைய உறுதித்தூணாக அமைந்தது NDB”


1992ம் ஆண்டு சிறியதொரு இடத்தில் தனி ஒருவராக வியாபாரத்தை ஆரம்பித்த திரு. ... "என்னுடைய முன்னேற்றத்தின் பின்னால் இருப்பது NDB மட்டுமே" என திரு. ... மிகுந்த சந்தோஷத்தோடு கூறுகிறார்.

NDB உடன் இணைந்து நீங்களும் உங்கள் வியாபாரத்தைக் கட்டியெழுப்ப இன்றே அழையுங்கள்

அழையுங்கள் 011 244 8888

NDB வங்கி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அழகு சத்திர சிகிச்சை செய்த அமெரிக்க நாய்க்குட்டி




கண், காதை மறைக்கும் அளவுக்கு முகத்தில் சதை வளர்ந்த நாய்க்கு 2 முறை சத்திரசிகிச்சை செய்யப்பட்டு சதைகள் அகற்றப்பட்டுள்ளன. நடிகைகள் சத்திர சிகிச்சை மூலம் தங்களை மேலும் மெருகேற்றிக் கொள்ள முயற்சிப்பார்கள் என்பது நாமறிந்தது தான். ஆனால், நாய் ஒன்று அழகு சத்திரசிகிச்சை செய்து கொண்டதைக் கேட்கும் போதே வியப்பாக இருக்கி றதா?

அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலம் சான் ஆன்டானியோ நகரைச் சேர்ந்த 2 வயது நாய்க் குட்டி சீசேம். சைனீஸ் ஷெர்பே வகையைச் சேர்ந்தது. துணியை சுருட்டி வைத்ததுபோல இதன் உடல் முழுவதும் சதை தொங்கியது. சீசேமுக்கு ஓரளவு அதிகம் தான். இந்த வகை நாய்களுக்கு சதை இப்படித்தான் இருக்கும் என்றாலும், சீசேமுக்கு மிக அதிகமாக இருந்தது. ஐயோ! நாள் செல்லச்செல்ல சதைகள் இன்னும் அதிகம் வளர்ந்து கண்ணையும் காதையும் மறைக்கத் தொடங்கின. பார்வை தெரியாமலும், காது கேட்காததாலும் சீசேம் மிகச் சிரமப்பட்டது.

சதையின் திரட்சிகள் அதிகம் இருந்ததால் நோய்த் தொற்றால் சிரங்கும் ஏற்பட்டது. சத்திரசிகிச்சை தான் ஒரே தீர்வு. இதையடுத்து, சான் ஆன்டானியோ நகரைச் சேர்ந்த கருணை மையத்தின் ஏற்பாட்டின் பேரில், உள்ளூரில் உள்ள கால்நடை மருத்துவமனையில் சீசேம் நாய் சேர்க்கப்பட்டது. அதை பரிசோதித்த வைத்தியர்கள் சத்திரசிகிச்சை செய்ய வேண்டும் என்று கூறினர். தற்போது பைன் சீசேம் 2 முறை சத்திர சிகிச்சை செய்யப்பட்டு, அதிகமாக இருந்த சதைகள் அகற்றப்பட்டுள்ளன. அதன் கண், காது தற்போது நன்றாகத் திறந்துள்ளன. சீசேமால் இனிமேல் நன்றாகப் பார்க்க முடியும், கேட்க முடியும் என்று வைத்தியர்கள் கூறியுள்ளனர். வளர்ப்புச் செல்லமாகத் தயார் சீசேமை யாரேனும் தத்தெடுக்கலாம் என ஆன்டானியோ கருணை மையம் அழைப்பு விடுத்துள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலிகள்

## அமரர் வஸ்தியாம்பிள்ளை லூசியன் சுகேந்திரன் (சுகே/BASTI)

உரிமையாளர் - வஸ்தியன் அச்சகம் (பழைய மாணவர் - யா/புனித ஜோன் பொஸ்கோ, யா/பரியோவான் கல்லூரி)



மண்ணில்
01.08.1960

விண்ணில்
05.05.2012

### அப்பா

உங்கள் குரல் கேட்டு ஓராண்டு தாண்டிவிட்டது
எங்கள் நிலை தடுமாறி அழுகின்றோம்
நீங்கள் அணைத்த பாசம் இழந்து தவிக்கின்றோம்
தங்கள் அன்பின்றி ஏங்கி அலைகின்றோம்

தூர தேசம் போனபோதும்
தூங்காது விழித்திருந்து
எம்மை வழிநடத்தினீர்கள் அப்பா
எம்மைவிட்டு உலகைவிட்டுப் போனதேனோ?

எம் நெஞ்சத்து ஒளிவிளக்கே
எமக்கு ஒரு குறை விட்டதில்லை
கேட்டதெல்லாம் தருவீர்கள் அப்பா
நாட்டமுடன் உழைத்தீர்கள் அப்பா
பண்பின் உருவமாய் வாழ்க்கையில் வழிகாட்டி
உண்மையாய் உலகுக்கு அன்புடன் நெறிப்படுத்தி
கவலை மறந்த குடும்பமாய் எம்மை வளர்த்தெடுத்தீர்
நட்டாற்றில் தவிக்கவிட்டுத் தனியாகப் போனதேனோ?
உற்றவர்களுக்கும் சுற்றவர்களுக்கும்
பற்றோடு பாசம் கொடுத்தீர்கள்
சுற்றி நின்று அழுதிடத்தான் - எமக்கு
நித்தமும் பாசம் கொட்டினீர்கள் அப்பா
கத்தி அழுகின்றோம் அம்மாவும் நாமும்

### அப்பா

உம் பாதச் சுவடு வழியே
எம் பாதம் பயணிக்கும்
நாம் வாழும் காலமெல்லாம்
உம் நினைவிலே என்றும் நாம்

**உம் ஆன்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்**
**உங்கள் பிரிவால் துயருறும்**
**- அன்பு மனைவி, பிள்ளைகள்.**



HSBC

0727 990 127

HSBC




புது வருடத்தில்
புத்தம் புதிய பைக் ஒன்று...

சக்தி வாய்ந்த 153CC என்ஜின்
வசதியான இருக்கை
கவர்ச்சியான வடிவமைப்பு
14 லீற்றர் கொள்ளளவு கொண்ட எரிபொருள் தாங்கி
இலக்ட்ரோனிக் மற்றும் கிக் ஸ்டார்ட் வசதி
பாதுகாப்பான டிஸ்க் பிரேக் தொகுதி
100% அதி சிறந்த ஜப்பான் தொழில்நுட்பம்

YAMAHA

ரூ. 33,900/=
வரை விலைக்கழிவு

இச்சலுகை குறுகிய காலத்திற்கு மட்டுமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## வாழைப் பூவின் மகத்துவம்

வாழைமரத்தின் பகுதிகள் முற்று முழுதாக மனிதர்களுக்கு பயன்படக் கூடியது. வாழையின் தண்டு, பூ, காய், பழம், இலை, நார், பட்டை எல்லாவற்றையும் நாம் பயன்படுத்துகிறோம். பெரும்பாலானவற்றில் அதிக சத்து இருக்கிறது. வாழைப் பூவில் நார்ச்சத்து அதிகம். மொந்தன் வாழைப்பூ, நாட்டு வாழைப்பூ, ரஸ்தாளி வாழைப்பூ ஆகியவை மிகவும் துவர்க்காது.

அவை அதிக சுவையாகவும் இருக்கும். ஆரோக்கியத்துக்கும் அவை ஏற்றதாக இருப்பதால்தான் வாழைப்பூ பொரியல், வாழைப்பூ வடை, வாழைப்பூ அடை, வாழைப்பூ தோசை என்று பல விதங்களில் தயாரித்து சுவைக்கிறோம். வாழைப்பூ குருத்தை பச்சையாகவே சாப்பிடலாம்.

வாழைப்பூவில் இருக்கும் மருத்துவ குணங்கள்:

★ வாழைப்பூ சாப்பிட்டால்கணையம் வலிமை பெற்று உடலுக்கு தேவையான இன்சுலினை சுரக்கும். இதனால் நீரிழிவு நோய் கட்டுப்பாட்டில் இருக்கும்.

★ பெண்களுக்கு மாத விடாய் சீராகும்.

★ உடல் சூடு குறையும். குடல் புண் ஆறும்.

★ மூல நோய் கட்டுக்குள் வரும்.

★ வாழைப்பூவில் உப்பு போட்டு அவித்து அதன்சாறை குடித்தால் வயிற்று வலி நீங்கும்.

★ ஆண்களுக்கு தாது விருத்தி அடையும்.

★மலட்டுத்தன்மையை போக்கும் சக்தி வாழைப்பூவில் இருக்கிறது.

வாழைப்பூவை வாழையில் இருந்து முறித்து எடுத்த இரண்டு நாள்களுக்குள் சாப்பிட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் முதன்முறையாக

உங்கள் Dialog மொபைலிலிருந்து


# இலவசமாக GOOGLE

search செய்யுங்கள்

Google என டைப் செய்து 678 இற்கு SMS செய்யுங்கள்

Search Gmail™ Google+™ No data charges


FREE ZONE
powered by Google




Dialog


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீல மேதினம்



04

கூட்டமைப்பை பதியும் பிரச்சினை மாகாணத் தேர்தலை பாதிக்காது



02

இசைஞான வாரிதி இராஜேஸ்வரி



18

கணித மேதை சகுந்தலா



09

ஈழத்தில் புதிய நாடகப் பாய்ச்சல்



22


# சூரியகாந்தி


உதயன்

ஞாயிறு சிறப்பம்சம் 01

உதயன் 05 மே 2013 ஞாயிற்றுக்கிழமை பக்கங்கள்: இருபத்துநான்கு


# புலிகள் புதுத் தலைவர் புனைவுகள்

ஔண்யன்



கல்பனா சாவ்லா. இந்தியாவை தாயகமாகக் கொண்ட விண்வெளி வீராங்கனை. இறுதியாக விண்ணிலேயே கருகிப் போனவர். பெண்ணினத்தின் பெருமைக்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர். அவர் விண்வெளி ஆய்வுக்காகப் பயணம் மேற்கொண்ட கொலம்பியா விண்கலம் 2003 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் தரையிறங்கும் போது ஏற்பட்ட விபத்தில் உடல்சிதறிப்போனார்.

இப்போது இந்தியாவின் உத்தரப்பிரதேசத்தில் உள்ள பாடா எனும் கிராமத்தில் வாழும் ஒன்பது வயதுச் சிறுமியான உபாசனா, முற்பிறவியில் கல்பனா சாவ்லாவாகப் பிறந்தது தானே தான் என்று கூறியிருக்கிறாள். இது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது. கல்பனா சாவ்லா விபத்தில் இறந்த சில மாதங்கள் கழித்து ஒரு சாதாரண ஏழைக் குடும்பத்தில் உபாசனா பிறந்தாள். சாதாரண குழந்தைகளைப் போலவே வளர்ந்த அவள், தனக்கு நான்கு வயதாகும் போது தனது முற்பிறவிகள் பற்றிக் கூற ஆரம்பித்தாள். கொலம்பியா விண்கலம் பற்றியும், அதில் தன்னுடன் பயணம் செய்த சக விஞ்ஞானிகள் குறித்தும் அவள் பல தகவல்களைக் கூற, அதிகம் கல்வியறிவு இல்லாத அவள் பெற்றோர்களுக்கு எதுவுமே புரியவில்லை.

''உபாசனா குழந்தையாக இருக்கும் போதே எப்போதும் பறப்பது பற்றியே பேசிக் கொண்டிருப்பாள்; அவளுக்கு அமெரிக்காவில் ஒரு பெரிய வீடு இருக்கிறது என்றும், அங்கு நிறைய பணம் இருக்கிறது என்றும் சொல்வாள். தான் ஒரு விமானத்தில் பயணம் செய்தபோது அது ஒரு பனிமலைச் சிகரத்தில் மோதி நொறுங்கி விழுந்து விட்டது என்றும் அதில் தான் இறந்து போய் விட்டதாகவும் சொல்வாள். குழந்தை ஏதோ உளறுகிறது என்று நாங்கள் முதலில் அதைக் கண்டு கொள்ளவில்லை. ஆனால் என்னுடைய அம்மா வீட்டுக்கு அவளை அழைத்துக் கொண்டு ஒரு முறை போனோம். அங்கு ஒரு செய்தித்தாளில் இருந்த ஒரு போட்டோவைப் பார்த்து, ''அது தான் நான்'' என்று உபாசனா கூற ஆரம்பித்தாள். அக்கம் பக்கத்தினர் மூலம்தான் அது 'கல்பனா சாவ்லா' என்பதும், அந்தப் பெண் ஒரு விண்கல விபத்தில் இறந்து போய் விட்டாள் என்பதும் தெரிய வந்தது. அதன் பின்னர்தான் குழந்தை சொல்வது பொய்யில்லை, அனைத்தும் உண்மை என்பதை உணர்ந்து கொண்டோம்'' என்கிறார் உபாசனாவின் தாய்.

அதன் பின் உபாசனா தன் வீடு இதுவல்ல என்று அழுது அடம்பிடிக்க ஆரம்பித்து விட்டாள். தான் கர்நாலில் பிறந்ததாகவும் தாய் பெயர் ரேகா என்றும், தந்தை பெயர் பன்சாரி லால் சாவ்லா என்றும் கூறியவள், தான் உடனே அங்கு போக வேண்டும் என்று அழுது அடம்பிடிக்க ஆரம்பித்து விட்டாள். விசாரித்ததில் அவள் கூறுவது அனைத்தும் உண்மைதான் என்று தெரிய வந்தது. (ஆனால் தாய் பெயர் ரேகா அல்ல. சன்ஜோக்டா. அதை மட்டும் அவளால் சரியாகச் சொல்ல முடியவில்லை). உபாசனாவிடம் தனியாகப் பல முறை உரையாடிய அவள் தாய் வழிப்பாட்டி குழந்தை நிச்சயமாகப் பொய் சொல்லவில்லை; அவள் கூறுவது முழுக்க முழுக்க உண்மை என்று தெரிவித்தாள்.

இந்த விவரங்கள் கல்பனா சாவ்லாவின் தந்தையான பன்சி லால் அவர்களுக்கும் தெரியவந்தது. ஆனால் அவர் இதனை நம்பாததுடன், இதெல்லாம் ஏமாற்று வேலை என்று கூறி உபாசனாவைச் சந்திக்க மறுத்து விட்டார். தாங்கள் ஒரு ஏமாற்றுக்காரர்களாகச் சித்திரிக்கப்படுவதை விரும்பாத உபாசனாவின் தந்தை ராஜ்குமார், அதுமுதல் மகளின் முற்பிறவி பற்றிய விஷயங்களை வெளியாருக்குக் கூறுவதை விட்டு விட்டார். உபாசனா உண்மையிலேயே கல்பனா சாவ்லாவின் மறுபிறவி தானா? விடை தெரியாமலே இந்தக் கேள்வி தொடர்ந்து கொண்டேயிருக்கிறது.

* * *

மறுபிறப்புப் பற்றிய நம்பிக்கைகள் நம்மிடம் மட்டுமல்ல உலகத்தவர்கள் அநேகரிடமும் இருக்கவே செய்கின்றன. அதிலும் அதிமானுடர்களின் மீள்பிறப்பு நிச்சயம் நிகழ்ந்தே தீருமென்றே ஒவ்வொருவரும் நம்புகின்றனர்.

சிலுவையில் அறையப்பட்டு மரித்த பின்னும் மூன்று நாட்களின் பின்னர் இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்தார் என்று கிறிஸ்தவர்கள் சொல்கிறார்கள்.

அது போன்றே ''எப்போதெல்லாம் பூமியில் அதர்மம் தலை தூக்குகிறதோ அப்போதெல்லாம் அவதரிப்பேன்'' என சினிமா பட நாயகர்கள் ... ''பஞ்ச்'' வசனம் பேசி மக்களைக் காக்க புறப்படு...

(03 பக்கம் ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்பைப் பதியும் பிரச்சினை மாகாணத் தேர்தலைப் பாதிக்காது



## கூட்டமைப்பு பிளவுபடாது என்பதிலும் நம்பிக்கை

### மாவை எம்.பி. சிறப்புப் பேட்டி

நேர்கண்டவர்: டிலீப் அமுதன்
படங்கள்: தர்சன்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஒரு கட்சியாகப் பதிவு செய்வது தொடர்பான பிரச்சினை, வரவுள்ள வடமாகாண சபைத் தேர்தலில் பாதிப்பை ஏற்படுத்தாது என்று தெரிவிக்கிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா.

பதிவு விடயத்தில் கூட்டமைப்பு பிளவுபட்டுவிடும் என்று எதிர்தரப்புக்கள் பரப்புரை செய்து வரும் நிலையில் அவ்வாறு நடப்பதற்கான சாத்தியங்கள் எவையும் இல்லை என்று கூறும் மாவை, பதிவுக்குப் பதிலான தற்காலிக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் 'உதயன்' பத்திரிகையிடம் தெரிவித்தார்.

''வடமாகாண சபைத் தேர்தல் திட்டமிட்டபடி இந்த ஆண்டே இடம்பெறும் என எண்ணுகின்றீர்களா?''

அரசுக்கு வடமாகாண சபைத் தேர்தலை நடத்தும் எண்ணம் இல்லை. சர்வதேச மட்டத்திலும், ஐ.நா. மனித உரிமைகள் சபையிலும் கொடுக்கப்படும் அழுத்தங்கள் காரணமாகவே செப்ரெம்பரில் வடமாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் என்று ஜனாதிபதி அறிவித்திருக்கின்றார். ஜனாதிபதியின் வாக்குறுதியை நாங்கள் நம்பத் தேவையுமில்லை. நம்பியதும் இல்லை.

''இந்த மாகாணசபைத் தேர்தல் ஊடாகத் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்று எண்ணுகின்றீர்களா?''

வடமாகாண சபைத் தேர்தல் மூலம் இனப்பிரச்சினை தீர்ந்து விடும் என்று யாரும் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை.

13ஆவது திருத்தச் சட்டமோ அல்லது அதன் அடிப்படையில் நடத்தப்படுகின்ற வடமாகாண சபைத் தேர்தலோ தமிழ் மக்களது இனப்பிரச்சினைக்கு தீர்வாக அமையுமென்றோ அல்லது தீர்வுக்கான அடிப்படையாக அமையுமென்றோ நாம் ஒரு போதும் சொல்லவில்லை; சொல்லப் போவதுமில்லை.

### நீதியான தேர்தல் நடக்காது

தேர்தல், பொலிஸ், நீதிச் சேவை, பொதுச்சேவை ஆகியவற்றுக்கான சுதந்திரமான ஆணைக்குழுக்கள் நாட்டில் இப்போது இல்லை. 17ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் கொண்டுவரப்பட்ட இவை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் கொண்டு வரப்பட்ட 18ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் நீக்கப்பட்டுவிட்டன.

இவ்வாறானதொரு நிலையில் நடக்கும் வடமாகாண சபைத் தேர்தல் நீதி - நியாயமானதாக நடக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. ஆனாலும் வடமாகாண சபைத் தேர்தல் அறிவிக்கப்பட்டால் நாம் கட்டாயம் அதில் போட்டியிட வேண்டிய நிலைக்குள் தள்ளப்பட்டிருக்கின்றோம்.

### தீர்ப்புக்காக சர்வதேசம் காத்திருப்பு

சர்வதேசம் இலங்கை அரசுக்கு எதிராக போர் குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருக்கின்றது. இவ்வாறானதொரு நிலைமையில் தமிழ் மக்களின் தீர்ப்பு வடமாகாண சபைத் தேர்தலில் எப்படியிருக்கப் போகின்றது என்பதை எதிர்பார்த்து சர்வதேசம் காத்திருக்கின்றது. எனவே வடமாகாண சபைத் தேர்தலில் தமிழ் மக்கள் வெற்றி பெற வேண்டும். அந்தச் செய்தியை உலகத்திற்குச் சொல்ல வேண்டும். இது எதிர்காலத்தில் கிடைக்கக்கூடிய அரசியல் தீர்வுக்கான சரியான செய்தியை சர்வதேசத்துக்கு நாம் சொல்வதாக இது இருக்கும்.

### ஜனநாயகம் இல்லை

வடமாகாணத்தில் ஜனநாயக சக்திகளால் சுதந்திரமாகச் செயற்பட முடியாத நிலைமை காணப்படுகின்றது. நாடாளுமன்ற உறுப்பினர்களின் கலந்துரையாடல்களுக்குக்கூட இராணுவப் புலனாய்வாளர்கள் வருகின்றனர். சகல விடயங்களிலும் இராணுவத்தினர் தலையீடு செய்கின்றனர். இதைவிட வடக்கில் மிகப் பெரிய பாதிப்புக்களை ஊடகத்துறை எதிர்கொண்டு வருகின்றது. ஊடகத்துறை மீதான அடக்குமுறைகள் அண்மைக்காலமாக அதிகரித்துள்ளன. ஊடகவியலாளர்கள் கொல்லப்படுவதும், தாக்கப்படுவதும், ஊடக நிறுவனங்கள் தாக்கப்படுவதுமான செயற்பாடு அதிகரித்துள்ளது.

அரசு தனது நிகழ்சி நிரலில் செயற்படாத ஊடகங்களை இராணுவ உளவுத்துறையினர் மூலமாக அழித்தொழிக்கும் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் வடக்கில் சுதந்திரமான தேர்தல் நடைபெறுமா? மக்கள் சுதந்திரமாக வாக்களிக்க முடியுமா? என்ற கேள்வியை நாங்கள் எழுப்பியிருக்கின்றோம்.

எது எப்பிடியிருப்பினும், 2009 ஆம் ஆண்டு பேரழிவுக்குப் பின்னர் தமிழ் மக்கள் தங்களுக்கு கிடைக்கின்ற சந்தர்பங்களில் வழங்கிய சரியான தீர்ப்புக்கள் இதுவரை சர்வதேசத்தை கவர்ந்திருக்கின்றன. இனியும் அந்த நிலை தொடர வேண்டும்.

### கூட்டமைப்பின் பதிவில் சிக்கலில்லை

''தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை கட்சியாகப் பதிவு செய்வது தொடர்பில் அதில் அங்கம் வகிக்கும் கட்சிகளிடையே ஏற்பட்டுள்ள முரண்பாடு வடமாகாண சபைத் தேர்தலில் கூட்டமைப்பை பாதிக்காதா?''

கூட்டமைப்பின் பதிவு விடயம் வடமாகாண சபைத் தேர்தலில் சிக்கலை ஏற்படுத்தாது. அதற்குப் பொருத்தமான நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொண்டுள்ளோம். சகல கட்சிகளுடனும் நாங்கள் கலந்துரையாடி நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றோம். தேர்தல்கள் திணைக்களத்தைப் பொறுத்த வரையில் ஒரு தேர்தல் அறிவிக்கப்பட்டுவிட்டால் அந்தக் காலப் பகுதியில் புதிய கட்சியைப் பதிவு செய்வதற்கு இடமில்லை.

முல்லைத்தீவில் கரைத்துறைப்பற்று மற்றும் புதுக்குடியிருப்பு உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் அறிவிக்கப்பட்டு அது இன்னமும் நடைபெறவில்லை. இதனால் பதிவு விடயங்கள் சற்று பின் தள்ளப்பட்டுள்ளன.

### தற்காலிக ஏற்பாடுகள்

இருப்பினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற கட்சிகள் ஓர் உயர் பீடத்தையும், மாவட்ட மட்டத்தில் ஒரு கட்டமைப்பையும் ஏற்படுத்தி செயற்படுவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. கூட்டமைப்பைப் பதிவு செய்யும் வரையில் இந்தத் தற்காலி ஏற்பாடு இருக்கும்.

> 13ஆவது திருத்தச் சட்டமோ அல்லது அதன் அடிப்படையில் நடத்தப்படுகின்ற வடமாகாண சபைத் தேர்தலோ தமிழ் மக்களது இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அமையும் என்றோ அல்லது தீர்வுக்கான அடிப்படையாக அமையும் என்றோ நாம் ஒருபோதும் சொல்லவில்லை; சொல்லப்போவதுமில்லை

பதிவு விடயத்தில் எங்களுக்கு ஓர் அச்சம் உள்ளது. ஏற்கனவே தமிழர் விடுதலைக் கூட்டணி, அதன் நிர்வாகத்திலே ஏற்பட்ட முரண்பாடு காரணமாக ஒருவரின் கைகளில் போய்ச் சேர்ந்து விட்டது. கூட்டணியில் இருந்த ஒருவர் அப்பொழுதிருந்த அரசையும், நீதிமன்றத்தையும் நாடியிருந்தார். இதனால் தமிழர் விடுதலைக் கூட்டணி நீண்ட காலமாக நீதிமன்றிலே முடக்கப்பட்டிருந்தது. அந்த நேரத்தில் தமிழரசுக் கட்சி எனது பெயரில் இருந்த காரணத்தினால்தான், கூட்டணியில் இருந்த பலராலும் தமிழரசுக்கட்சியில் தொடர்ந்து இயங்க முடிந்தது.

### கூட்டமைப்பு முடங்கக் கூடாது

அதேபோன்று நீதிமன்றத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் முடக்கப்படுவதற்கு இடமளிக்காத வகையில் நாங்கள் சில நடவடிக்கைகளை எடுக்க வேண்டியுள்ளது. அந்த அடிப்படையில்தான் நாங்கள் பதிவை மிக நிதானமாகக் கையாண்டு வருகின்றோம். காலத்தின் தேவை கருதி கட்சிகளுடன் கலந்துரையாடல் நடத்தி வருகின்றோம். விரைவில் இதற்கு தீர்வு கிடைக்கும்.

வடமாகாண சபைத் தேர்தலில் நாங்கள் ஒன்றுபட்டு வேலை செய்வோம் என்ற நம்பிக்கை இருக்கின்றது.

''வடக்கில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற இராணுவ மயமாக்கலை கூட்டமைப்பு எவ்வாறு கையாளப் போகின்றது?''

எங்கள் மண்ணை நாங்கள் ஆள வேண்டும் என்ற புனித இலட்சியத்துக்காக போராடிய - பல்லாயிரக் கணக்கான உயிர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. எந்த மண்ணில் எங்கள் ஆட்சியை நிலைநாட்ட வேண்டும் என்று இத்தனை தியாகங்களையும் செய்திருக்கின்றோமோ அந்த நிலங்கள் அரசினால் திட்டமிட்ட ரீதியில் கபளீகரம் செய்யப்படுகின்றன.

தமிழ் மக்களது நிலங்கள் மட்டுமல்ல முஸ்லிம் மக்களது நிலங்களும் ஆக்கிரமிக்கப்பட்டு இராணுவமயமாக்கப்படுகின்றன. எல்லாவற்றையும் பௌத்தமயமாக்கி இன அடையாளத்தை அழித்து இது சிங்கள பௌத்த தேசம் என்பதை நிலைநாட்ட நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இதற்கு எதிராக நாங்கள் போராட வேண்டிய தேவை, நிர்ப்பந்தம் எழுந்துள்ளது. இது எமது அடிப்படைக் கடமையாகவும் - பொறுப்பாகவும் இருக்கின்றது.

இதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாத்திரமல்ல, தமிழ் மக்களின் விடிவுக்காகவும், விடுதலைக்காகவும் உழைக்கின்ற சிவில் சமூகத்தினர், மனித உரிமைகள் ஆர்வலர்கள் என்று சகலரும் இதில் பங்கெடுக்க வேண்டும். முஸ்லிம் தலைவர்களிடமும், மலையகத் தலைவர்களிடமும் இந்தப் போராட்டங்களுக்கு ஆதரவு கேட்டுப் பேசிக் கொண்டிருக்கின்றோம்.

அதைவிட இந்தியத் தலைவர்களிடமும், [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளின் புதுத் தலைவர்கள்...

(சூரியகாந்தி முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பரமாத்மா யுகங்கள் தோறும் அவதரிக்கிறார் என்று இந்துக்கள் கருதுகிறார்கள். இந்து மதத்தில் உள்ள ஏனைய கடவுளர்களும் இவ்வாறு அடிக்கடி வெவ்வேறு அவதாரங்கள் எடுத்து மக்களை ரட்சிக்கத்தவறுவதில்லை.

பௌத்தமும் மறுபிறப்புக் கொள்கையை முழுதுமாக நம்புகிறது. போதிசத்துவர் அன்னமாகவும், கௌதம புத்தராகவும் இன்னபிற உயிரிகளாகவும் பிறந்தார் என்றே அவர்கள் நம்புகின்றனர். வாழ்வு என்பது முடிவிலியற்ற ஒன்றென்ற நம்பிக்கை அவர்களிடத் தேயும் ஊறிப்போன ஒன்று. ஒரு சரீரத்தை விட்டு நீங்கும் ஆன்மா உடனேயே இன்னொரு சரீரத்தினூடாக வெளிப்படுவதாகக் கருதுகின்றனர்.

இந்த மரபின் நீட்சியாகவே அவர்கள் புலிகளின் தலைவரின் மீள்பிறப்பு பற்றிய எண்ணங்களை அதிகம் கொண்டவர்களாக இருக்கிறார்கள். தமிழர்களை விடவும் புலிகளுக்கான தலைவரின் வருகையை அதிகம் அவர்கள் எதிர்பார்க்கிறார்கள் போல தெரிகிறது. ஏனெனில் 30 வருடங்களாக பேரினவாதிகளின் தூக்கத்தைக் கெடுத்தவர் புலிகளின் தலைவர்தானே. அதனால்தான் ''இதோ புலிகளின் தலைவரின் சடலம்'' என்று அரச ஊடகங்கள் ஒரு சடலத்தைக் காண்பித்த பின்னரும் கூட இன்னமும் அவரை மறக்க முடியாமல் தலைவரின் மீள்வருகை பற்றிய கனவுகளைக் கண்டு திடுக்கிட்டு விழித்தபடியுள்ளனர்.

புலிகளுக்கு புதிதாக ஒருவர் தலைவராக வந்துள்ளார். சர்வதேச ரீதியில் புலிகளின் ஆயுதக்கொள்வனவுக்கு கே.பிக்கு அடுத்த நிலையில் இருந்த சீலன் என்பவரே அடுத்த தலைவராக செயற்படத்தொடங்கியுள்ளார் என்று அரச சார்பு சிங்கள நாளிதழான ''தினமின' தெரிவித்துள்ளது. ஆயினும் அந்தச் செய்திக்குரிய ஆதாரங்களெதனையும் அந்தச் செய்தியில் குறித்த ஊடகம் முன்வைக்கவில்லை.

அரசு புலிகளின் கதைக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டதாகக் கூறினாலும், காலம் அந்த முற்றுப்புள்ளியைத் தொடரச்செய்ய முடியாத நிலைக்கே ஆட்சியாளர்களைக் கொண்டு சென்றுள்ளது. அரசுக்கு இப்போது ஏகப்பட்ட தலையிடிகள். சர்வதேச நாடுகளின் ''நல்லிணக்கத்தை ஏற்படுத்து, பரிந்துரையை நடைமுறைப்படுத்து'' என்ற நச்சரிப்புகள், விலைவாசி உயர்வுகள், வரி விதிப்புகள், காணி சுவீகரிப்புக்கு எதிரான போராட்டங்கள், கை நழுவிப் போகும் சர்வதேச நிதியுதவிகள் என்று மஹிந்த அரசு தொடர்ச்சியான இக்கட்டுக்களைச் சந்தித்துவருகின்றது. இந்த நிலையில் தனக்கெதிராக மக்களைத் திரும்பவிடாமல் செய்வதற்கு அரசுக்கு ஒரு ஆயுதம் தேவை. ஏற்கனவே எந்தவித முன்யோசனையுமின்றி, அதிகரித்த மின்கட்டணங்களால் நாடே கொந்தளிக்கும் நிலை தோன்றியிருந்தது. ஊடகங்கள் யாவும் அரசை இது குறித்து கடுமையாக விமர்சிக்கத் தொடங்கியிருந்தன. டுனிஷியா, எகிப்து, லிபியா போன்று இங்கும் ஒரு மக்கள் புரட்சி வெடிப்பதற்கான ஆரம்பப்புள்ளிகள் தோன்றத் தொடங்கின. ஆனால் நல்லவேளையாக ஊடகங்களையும் மக்களையும் கொதிநிலையில் இருந்து தற்காலிகமாகவேனும் திசைதிருப்புவதற்கு, துமிந்தசில்வாவின்இலங்கை வருகை அரசுக்கு ஒரு துருப்புச் சீட்டாக அமைந்தது. அதனால் மின்கட்டணம் உள்ளிட்ட விலையுர்வுகளை விடவும் துமிந்தவைப் பற்றிய வாதப்பிரதிவாதங்களை மக்களிடையேயும், ஊடகங்களிடையேயும் பரவியுள்ளன.

எனினும் அவையெல்லாம் கொஞ்சநாளைக்குத்தான். துமிந்த பற்றிய மாயை விலகியதும் மீண்டும் விலையுயர்வுக்கு எதிராக நாட்டு மக்கள் கிளர்ந்தெழவே செய்வார்கள். அப்போதெல்லாம் இப்போது நடந்தது போன்று ''துமிந்தக்களின்' வருகைகள் நிகழ்ந்து அரசைக் காப்பாற்றுவதென்பது நடக்கக்கூடிய ஒன்றல்ல. எனவே மக்களின் கவனத்தை நிரந்தரமாக திசை திருப்ப ஏதாவது ஒரு தந்திரத்தைக் கண்டுபிடித்தாகவேண்டும். அதற்காகவே இந்தோனேஷியாவில் இன்னமும் புலிகள் இயக்கம், புதிய தலைவரின் கீழ் இயங்குகிறது என்று அரச ஊடகங்கள் கதையை அவிழ்த்துவிட்டுள்ளன. இதன்மூலம் நிறைய இலாபம் அரசுக்கு. புலிகள் மீளவும் செயற்படத்தொடங்கி விட்டார்கள் என்று சொல்லி தமிழர் பகுதிகளில் படைப்பிரசன்னத்தை அதிகரிக்கலாம், நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை குப்பைத்தொட்டியில் வீசலாம், உலகநாடுகளிடம் ''மீண்டும் பயங்கரவாதத்துக்கு எதிரான போருக்கு உதவிக்கரம் தாருங்கள்'' என்று துணிந்து யாசகம் கேட்கலாம், எவ்வளவுக்கு உயர்த்த முடியுமோ அவ்வளவுக்கு விலைகளைக் கூட்டிக் குறைக்கலாம், அரசுக்கு எதிராக கிளர்ந்து அகிம்சை வழியில் போராடுவோரை புலிப் பயங்கரவாதிகள்' என்று எந்தக் கேட்டுக் கேள்வியுமின்றி அள்ளி வந்து உள்ளே போடலாம், போர்க்குற்ற விசாரணைகள் என்ற விடாது துரத்தும் வேதாளத்திடம் இருந்து தப்பிக்கலாம். இப்படி நிறைய இலாபமீட்டல்களை அரசு அனுபவிக்கமுடியும்.

புலிகளின் புத்தம் புதுத்தலைவர் பற்றிய கதை எடுபடாவிட்டால், ''புலிகளின்தலைவர்வேலுப்பிள்ளை பிரபாகரன் மொறிஸியஸ் தீவில் மீள்பிறப்பெடுத்துள்ளார். அவரைக் கைது செய்ய இலங்கைப் பொலிஸாரும் படையினரும் தீவிர நடவடிக்கை எடுத்து வருகின்றனர்'' என் றும் இதே அரசசார்பு ஊடகங்கள் சொல்லக் கூடும். ஏதாவது ஒரு அதிசயம் நிகழ்ந்து, யார் அவதரித்தாவது தம்முடைய தலையிடி தீர்ந்தால் போதுமென்ற நிலையே அரசுக்கு. அதற்காக யாருக்கு வேண்டுமானாலும் புலிகளின் தலைவர் என்றுமகுடம் சூட்ட அது தயாராகவே இருக்கிறது. ஆனால் தலைகளைத்தான் காணோம்.

''தலைவர்கள் பிறப்பதில்லை.. உருவாக்கப்படுகிறார்கள்'' என்ற வாக்கியத்தை யாரோ தவறாக அரசுக்கு அர்த்தப்படுத்தியிருக்க வேண்டும். அதனால்தான் புதிய தலைவர்களை புலிகளுக்காக உருவாக்க அரசு படாதபாடு படுகிறது போலும். ★

---

காக போராடிக் கொண்டிருக்கின்ற இளந் தலைமுறையினருடனும் பேச்சு நடத்துவதற்காக நாங்கள் விரைவில் இந்தியா செல்லவுள்ளோம். மேலும் புலம்பெயர் தமிழர்கள், நாடுகளின் தலைவர்கள், இராஜதந்திரிகளுக்கும் இந்த விடயங்கள் தொடர்பில் தெளிவாகச் சொல்லியிருக்கின்றோம்.

### போராட்டக் கட்டமைப்புத் தேவை

தாயகத்தில் நடத்தவிருக்கின்ற போராட்டங்களுக்காக மக்களை அணி திரட்டுவதற்கு கட்டமைப்புக்களை ஏற்படுத்த வேண்டியவர்களாக இருக்கின்றோம். தேர்தல்களைவிட எங்கள் மக்களின் பாதுகாப்புக்காகவும், நிலத்துக்காகவும், முஸ்லிம் மக்களின் உரிமை



களுக்காகவும் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்காகவும் நாங்கள் போராட வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

''மிக முக்கியமாக வலி. வடக்கில் மக்களின் காணிகளை சட்டரீதியாக சுவீகரிப்புச் செய்வதற்கான அறிவித்தல்கள் ஒட்டப்பட்டுள்ளன. இதுவரையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த மக்களின் நில மீட்புக்காக சில நடவடிக்கைகளை எடுத்திருந்தாலும் அதனையும் மீறி அந்தக் காணிகள் சுவீகரிப்புச் செய்யப்படுகின்றன. இதனை எவ்வாறு தடுத்து நிறுத்தப் போகின்றீர்கள்?''

மிகப் பெரிய ஏமாற்றத்தை நாங்கள் அடைந்திருக்கின்றோம் என்பது உண்மை. சில மாதங்களுக்கு முன்னர் அரச தரப்பினால் எங்களுக்கு வரைபடம் காட்டப்பட்டது. அதில் பலாலி வரையில் விடலாம் என்று சொல்லப்பட்டிருந்தது. ஆனால் திடீரென சில தினங்களுக்கு முன்னர் காணி அமைச்சரின் அறிவித்தலின்படி, வளமான விவசாய நிலங்களும், மீன்பிடிப் பகுதிகளும் இராணுவத்தினரின் தேவைக்காக சுவீகரிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### 22 ஆண்டுகள் காத்திருப்பு

போர் முடிவடைந்தது என்று அறிவிக்கப்பட்ட பின்னர் தமது காணிகளுக்குப் போய் விடலாம் என்று வலி. வடக்கு மக்களிடம் எதிர்பார்ப்பு மேலோங்கியிருந்தது. 22 ஆண்டுகளாக இந்தக் காத்திருப்பு நீடித்தது. 2003ஆம் ஆண்டு உயர் நீதிமன்றிலே எனது பெயரிலும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த வழக்கில் இடைக்காலத் தீர்ப்பொன்று எங்களுக்கு சாதகமாக வழங்கப்பட்டிருந்தது.

மக்களை மீளக்குடியமர்த்துமாறு இராணுவத்தினருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. அதற்குரிய நிர்வாக நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருந்தன. ஆனால் தற்போது தனியார் காணிகளை இராணுவத் தேவைக்காக ஆக்கிரமிப்பதற்கான உத்தியோகபூர்வ அறிவித்தல்கள் கொடுக்கப்பட்டதைப் பார்த்து நாங்கள் பேரதிர்ச்சிக்குள்ளாகியுள்ளோம். எங்கள் நம்பிக்கை தகர்க்கப்பட்டுள்ளது.

> “
> **மிகப் பெரிய ஏமாற்றத்தை நாங்கள் அடைந்திருக்கிறோம். பலாலி வரையில் மக்கள் குடியமர விடலாம் என்று எமக்குச் சொல்லப்பட்டிருந்தது. ஆனால் திடீரென சில தினங்களுக்கு முன்னர் தனியாரின் காணிகளைச் சுவீகரிக்க அறிவிப்பு ஒட்டியிருக்கிறார்கள்.**

### வழக்குத் தாக்கல்

இதனை எதிர்த்து நாங்கள் மேற்கொள்ளும் போராட்டத்தின் ஓர் அங்கமாக, நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்வதற்குரிய நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம்.

எந்தக் குடிமகன் எந்த நிலத்திலிருந்து போர் காரணமாக வெளியேற்றப்பட்டானோ அந்தக் குடிமகன் அந்த நிலத்தில் மீளக்குடியமர்த்தப்படவேண்டும் என்று இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட ஐ.நா. தீர்மானம் கூடச் சொல்லுகின்றது.

இந்த அரசு தமிழ் மக்களுக்கு எதிராக, தமிழ் - முஸ்லிம் மக்களின் இனப்பரம்பலை மாற்றியமைத்து வடக்கு - கிழக்கு தமிழர் தாயகம் என்று நாங்கள் சொல்கின்ற நிலைப்பாட்டை மாற்றிசுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டை முற்றாக அழித்து சிங்கள தேசம் என்று சொல்லநடவடிக்கை எடுத்து வருகின்றது.

நாங்கள் போராட்டங்களை மேற்கொள்வதன் மூலமாக இந்த அரசு மேற்கொள்ளும் ஜனநாயக விரோத நடவடிக்கைகளை சர்வதேசத்துக்கு எடுத்துச் செல்ல வேண்டும்.

''தமிழர் தாயகப் பகுதிகளில் இடைக்கால நிர்வாகம் நிறுவப்பட வேண்டும் என்ற கருத்து வலுத்து வருகிறது. இந்த விடயம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்ன?''

இது ஒரு புதிய விடயம். ஏற்கனவே தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், அரசுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுக்களில் தீர்வை எட்டுவதற்கு இடைக்கால நிர்வாக அமைப்பு இருக்க வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. ஆனால் அது நிறைவேறவில்லை.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தில் ஓர் அரசியல் தீர்வு இங்கு எட்டப்படவேண்டும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்த நிலையில் இடைக்கால நிர்வாகம் தேவையா என்பது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆராய்ந்துதான் முடிவெடுக்கும். இடைக்கால நிர்வாகம் எந்தளவு தூரம் தேவை என்பதையும், எந்தளவு தூரம் சாத்தியமானது என்பதனையும் ஆராய வேண்டும்.

''ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட பின்னரே தமிழர் தாயகப் பகுதிகளில் தமிழர் விரோதப் போக்கு அதிகரித்துள்ளது என்ற ஒரு கருத்துக் கூறப்படுகிறது. இந்த நிலையில் சர்வதேசம் இது தொடர்பில் என்ன செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள்?''

ஐ.நா. மனித உரிமைகள் சபையில நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் எதுவுமில்லை என்று கூறுவதில் அர்த்தமில்லை.

அந்தத் தீர்மானம் உடனடியாக எங்கள் பிரச்சினையின் மீது தாக்கத்தை செலுத்தவில்லை என்று நாங்கள் ஆதங்கப்படுவது நியாயமானது. சர்வதேச அரங்கும், மனித உரிமைகள் பேரவையும்தான் அவற்றினை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்குக் கொஞ்சக் காலம் செல்லும். ஆனால் தீர்மானம் நிச்சயமாகத் தாக்கத்தைச் செலுத்தும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரசேகர ஆஷாத்

# நீல அலையில் நவீன மே தினம்

ஞாயிறு காரம்

கொழும்புபொறளை கம்பல் பூங்காவில் கடந்த மே நாளன்று ஒரு பிரமாண்டமான மே தினம். கண்ணைப் பறிக்கும் மின்சார அலங்காரங்கள். மனதை மயக்க வைக்கும் அலங்கார வளைவுகள், பார்க்குமிடமெங்கும் பரவிப் பறக்கும் நீலக் கொடிகள் எனப் பணம் நீராக ஓடவிடப்பட்டதன் சாட்சியங்கள்; தொலை தூரங்களிலிருந்து பேருந்துகளில் கொண்டு வந்து இறக்கப்பட்ட இருபது லட்சம் மக்கள் கொழும்பு தாமரைத் தடாகத்திலிருந்து புறப்பட்ட பிரமாண்டமானபேரணிபொறளை மைதானத்தை அடைய மேன்மை மிகு ஜனாதிபதியினதும் அமைச்சர்களதும் வசீகரம் செய்யும் வார்த்தை ஜாலங்களில் மேடை முழக்கங்கள்.

அது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மே நாள் கொண்டாட்டம். ''உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்'', ''சகல விதமான ஒடுக்குமுறைகளையும் எதிர்த்துப் போராடுவோம்'', இவை உலகத் தொழிலாளி வர்க்கத்தின் மே தினக் கோஷங்கள். அந்தப் புனித கோஷங்கள் நீல அலையில் கரைந்து போக அங்கு ஒரு புதிய கோஷம்.

''நீல அலையில் நாட்டைக் கட்டியெழுப்புவோம்'' போர் வெற்றியின் முழக்கம், துரித அபிவிருத்திக்கான அறைகூவல், உயர்த்தப்பட்ட மின்சாரக் கட்டணம் உட்பட வாழ்க்கைச் செலவு என்பவற்றை நியாயப்படுத்த மேடை முழக்கங்கள் வானை நிறைத்தன.

இலங்கை மக்களின் மாபெரும் மீட்பராக மேடையில் நிமிர்ந்து நின்ற ஜனாதிபதி மின்சாரக் கட்டண உயர்வை எதிர்ப்பவர்கள் அபிவிருத்தியைப் புரிந்துகொள்ளாதவர்கள் எனத் தீர்க்க தரிசனம் சொல்லிவிட்டு, மின்சாரக் கட்டண உயர்வில் சலுகைகள் வழங்கப்படும் என அறிவிக்கிறார். மீண்டும் கரகோஷம் வானைப் பிளக்கிறது. இது நீல அலையில் நாட்டின் அபிவிருத்தி என்ற பெயரில் இடம்பெற்ற ஆட்சிபீடத்தில் அமர்ந்திருக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மே தினக் கோலாகலக் கொண்டாட்டம். அங்கு உழைக்கும் மக்களின் உரிமைக்குரல் கேட்கவில்லை, ஏகாதிபத்திய, முதலாளித்துவச் சுரண்டல்களுக்கு எதிரான முழக்கங்கள் ஒலிக்கவில்லை. ஒடுக்குமுறைகளுக்கு எதிரான கோஷங்கள் எழுப்பப்படவில்லை. உழைக்கும் மக்களின் அடையாளச் சின்னமான செங்கொடிகள் முன்னின்று உயர்ந்து பறக்கவில்லை.

ஒட்டுமொத்தத்தில் உழைக்கும் மக்களின் புரட்சிகர உணர்வின் வெளிப்பாடான மே தினம், ஓர் அரசியல் கட்சியினது, ஆட்சி பீடத்தினதும் பிரமாண்டமான பிரசாரக் கூட்டமாகக் கேவலப்படுத்தப்பட்டு விட்டது.

உண்மையான மே தின வரலாற்றை அறிந்த எந்தவொரு நியாயமான மனிதனும் கம்பல் பூங்கா விழா மே தினத்துக்கு இழைக்கப்பட்ட பெரும் அவமானம் என்றே கருதுவான்.

1886 மே முதலாம் நாள்

அமெரிக்காவின் சிக்காக்கோ நகரின் ஒரு பிரமாண்டமான ஆலை திடீரெனச் செயலிழக்கின்றது. பிரமாண்டமான இயந்திரங்களின் இரைச்சல் நின்றுவிட்டது. வானளாவிய புகை போக்கிகள் ஓய்ந்துவிட்டன. அந்தத் தொழிற்சாலையிலிருந்து வெளியேறிய தொழிலாளர் படை, எட்டு மணி நேர வேலை உட்பட உரிமைக் கோரிக்கைகளை எழுப்பியவாறு வீதியில் இறங்குகிறது. அந்தப் பேரணி சிக்காக்கோ நகர வீதிகளெங்கும் புரட்சிகர ஆவேசத்துடன் நகர்கிறது. நகரில் ஏனைய தொழிலாளர்களும் போட்டது போட்டபடி விட்டு விட்டு பேரணியில் இணைகின்றனர். பேரணி நகரின் மையத்தை நெருங்கும்போது அதில் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் ஒன்றுகலந்து விட்டனர். பேரணி நகரத்தின் மையத்தை அடைந்தபோது காவற்படையினரும் முதலாளிகளின் குண்டர்களும் இணைந்து தொழிலாளர் மேல் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்க்கின்றனர்; இரும்புச் சட்டங்களால் தாக்குகின்றனர். நான்கு தொழிலாளர்கள் படுகொலை செய்யப்படுகின்றனர். ஏராளமானோர் படுகாயமடைகின்றனர். எனினும் பாட்டாளிகள் பயப்படவில்லை. குருதியில் நனைந்த தங்கள் தோழர்களின் சிவந்து விட்ட சட்டைகளைக் கொடிகளாக ஏந்தி பேரணியைத் தொடர்கின்றனர்.

மே நாலாம் நாள்

மே முதல் நாள் படுகொலைகளையும் கண்டித்து புறநகர் பகுதியிலுள்ள காமர்கெட் சதுக்கத்தில் ஒரு கண்டனப் பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்யப்படுகிறது. பொதுக்கூட்டம் ஆரம்பிப்பதற்கு சிறிது நேரம் முன்பாக ஒரு குண்டு வெடிக்கிறது. அதில் ஒரு பொலிஸ்காரன் கொல்லப்படுகிறான். அதைச் சாட்டாக வைத்து பொலிஸார் மேற்கொண்ட கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகத்தில் பெண்கள், குழந்தைகள் உட்பட பல நூறு பேர் கொல்லப்படுகின்றனர். தொழிலாளர் தலைவர்கள் கைது செய்யப்படுகின்றனர். நால்வருக்குத் தூக்குத்தண்டனை நிறைவேற்றப்படுகிறது. மேலும் பலருக்கு 15 வருடம் தொடக்கம் ஆயுள் காலம் வரை சிறைத் தண்டனை விதிக்கப்படுகிறது.

ஆனால் உழைக்கும் மக்கள் கலங்கவுமில்லை; பின் வாங்கி விடவுமில்லை. போராட்டங்கள் பிரான்ஸ், பிரிட்டன், ஜேர்மனி, ரஷ்யா எனப் பலநாடுகளின் நகரங்களுக்கும் பரவுகின்றன. 1889 ஆம் ஆண்டு இடம்பெற்ற சர்வதேசத் தொழிலாளர் அமையத்தில் மே முதல் நாள் உலகத் தொழிலாளர் தினமாகப் பிரகடனம் செய்யப்பட்டது.

இது மே நாளின் வரலாறு. எட்டுமணி நேர வேலை உட்பட தொழிலாளி வர்க்கம் உரிமை கோரிப் போராடிக் குருதி சிந்திய உன்னத இலட்சியத்தின் வரலாறு. 1886 மே முதல்நாள் சிக்காக்கோ நகரத்தில் முதலாளிகளின் கூலிப்படைகளும் குண்டர்களும் நடத்திய மிருகத்தனமான இரத்த வேட்டைக்கு எவ்விதத்திலும் தரங்குறையாத நரபலி நாடகம் இலங்கையிலும் இடம்பெற்றது.

இலங்கையில் தொழிலாளர் சேமலாப நிதியைக் கையகப்படுத்தி அதை ஓய்வூதியத் திட்டம் என்ற பெயரில் ஏமாற்ற அரசு முனைந்த போது கட்டுநாயக்கா, சுதந்திர வர்த்தக வலயத் தொழிலாளர்கள் அதற்கெதிராகக் கிளர்ந்தெழுந்தனர். தங்கள் சேமலாப நிதியைப் பாதுகாக்க அணி திரண்டு பேரணி நடத்தினர். அரசின் பொலிஸ்படையும் அரச சார்புக் குண்டர்களும் இணைந்து பேரணி மீது மிருகத்தனமான தாக்குதலை நடத்தினர். பொலிஸாரால் துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது. அதில் ஒருவர் உயிரிழந்தார். பலர் காயமடைந்தனர். அமெரிக்க முதலாளித்துவக் கூட்டம் எவ்வாறு தொழிலாளர்கள் உயிரைப் பலிகொண்டு குருதியாறு ஓட வைத்ததோ அவ்வாறே கட்டுநாயக்கா தொழிலாளர்கள் மேல் மஹிந்த ராஜபக்ஷ அரசினால் கொடுமை இழைக்கப்பட்டது. அதே அரசு மே தினத்தை தானும் நீலக் கொடியின் கீழ் கொண்டாடுகின்றது.

எந்த அடக்குமுறையாளர்களுக்கு [illegible]

இலங்கையில் அதே மே தினத்தைத் தாங்கள் கைப்பற்றி அதன் புனிதத்தையும் புரட்சிகரத் தன்மையையும் சிதைத்துவிட்டனர். இன்னும் சொல்லப்போனால் தொழிலாளர்களின் எல்லாவித உரிமைகளையும் பறித்துவிட்டு இறுதியில் மே தினத்தையும் கைப்பற்றி அதன் இலட்சியங்களை மட்டுமன்றி நிறத்தையும் மாற்றிவிட்டனர்.

வழக்கமாக மே தினத்தில் சம்பள உயர்வுக் கோரிக்கை, வாழ்க்கைச் செலவு உயர்வுக்கு எதிரான கண்டனங்கள், வேலையற்றோர் குரல் என்பனவே பிரதானமாக ஒலிக்கும். அரச மே தினம் நீல அலையில் அபிவிருத்தி என்ற கோஷத்தில் எல்லாவற்றையுமே விழுங்கிவிட்டது. சிக்காக்கோ மே நாளின் புரட்சிகர அனல் மெல்ல மெல்லப் பரவி 1917 இல் சோவியத் யூனியனை விடுவித்து ஓர் உழைக்கும் மக்களின் அரசை நிறுவியது. இரண்டாம் உலகப் போரின் இறுதியில் பல கிழக்கு ஐரோப்பிய நாடுகள் விடுதலை பெற்றன. 1940 இல் சீனாவில் உழைக்கும் மக்களின் ஆட்சி உதயமானது. 1952 இல் கியூபா விடுதலை பெற்றது. இறுதியில் வியட்நாம் அமெரிக்காவை விரட்டியடித்துத் தன் சுதந்திரத்தை நிலை நிறுத்தியது.

இலங்கை அரசு உலக ஏகாதிபத்திய முதலாளித்துவ நாடுகளின் உதவியுடன் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை முள்ளிவாய்க்காலில் வைத்துத் தோற்கடித்தது.

அந்த வெற்றியின் பெருமிதமும் இலங்கை அரசின் மேதினக் கருப்பொருளில் ஒன்று. உலகெங்கும் வாழும் ஒடுக்கப்படும் மக்களின் ஒரு முன்னோடிப் புரட்சிகர நடவடிக்கையான மே தினம் ஒடுக்குமுறை வெற்றியைக் கொண்டாடும் கேவலம் இலங்கையில் அரங்கேறுகிறது. உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்பது உலகத்தின் உழைக்கும் மக்களின் கோட்பாடு. ஆனால் இலங்கையில் படையினருக்கும் அபிவிருத்தி என்ற பேரில் அதிகார வர்க்கத்துக்குமே நிலம் சொந்தம் என்பது மாற்ற முடியாத கோட்பாடு. வலி.வடக்கு கேப்பாபுலவு, மணலாறு, ஓமந்தை, மன்னார், கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகள் என எங்கும் பாதுகாப்பு, அபிவிருத்தி என்ற பெயரில் நிலங்கள் அபகரிக்கப்படுகின்றன. விவசாயிகளின் நிலங்கள் பறிக்கப்படுகின்றன. கடலில் மீன்பிடிக்கும் தமிழ் மீனவர்கள் தொழில் செய்ய முடியாதபடி நெருக்கடிகள் கொடுக்கப்படுகின்றன. தென்பகுதி மீனவர்களால் வளங்கள் அள்ளிச் செல்லப்படுவதுடன் தடை செய்யப்பட்ட வலைகள் மூலம் அழிக்கவும்படுகின்றன. இப்படியாக உழைக்கும் தமிழ் விவசாயிகள், தொழிலாளர்கள், மீ[illegible] மீது இன்னொரு போ[illegible] தொடுத்திருக்கும் அரசு கொழும்பில் நீல அலையில் மே தினம் கொண்டாடுகிறது.

இன்று உழைக்கும் மக்களின் உரிமைகளைப் பறித்து ஆளும் வர்க்கம் அவர்களின் மே தினத்தையும் கூடக் கைப்பற்றி தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தி வருகின்றது என்[illegible] தான் அடிப்படை உண்மை.



''நீல அலையில் நாட்டைக் கட்டியெழுப்புவோம்'' போர் வெற்றியின் முழக்கம், துரித அபிவிருத்திக்கான அறைகூவல், உயர்த்தப்பட்ட மின்சாரக் கட்டணம் உட்பட வாழ்க்கைச் செலவு என்பவற்றை நியாயப்படுத்த மேடை முழக்கங்கள் வானை நிறை[illegible]தன

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# எங்கேயும் ஊழல்



அரசியலைப் போலவே விளையாட்டு உலகிலும் ஊழலும் லஞ்சமும் பெருகத் தொடங்கியுள்ளன. உலகில் அதிக ரசிகர்களை ஈர்த்து வைத்திருக்கும் உதைப்பந்தாட்டத் துறையினுள் லஞ்சம் என்ற நஞ்சு கலந்துவிட்டது. இதுநாள் வரையிலும் கிரிக்கெட் போன்ற விளையாட்டுக்களில் மட்டுமே லஞ்சம், ஆட்ட நிர்ணய சதி போன்ற சொற்றொடர்கள் உலாவி வந்தன. இந்திய, பாகிஸ்தான் வீரர்கள் பலர் இத்தகைய லஞ்ச ஊழல் குற்றச்சாட்டில் கையும் மெய்யுமாக சிக்கியிருந்தார்கள். சில சமயங்களில் அப்பாவிகள் கூட இத்தகைய குற்றச்சாட்டுக்களால் ஓரம் கட்டப்பட்டிருந் தார்கள். இந்தியாவின் அஜய் ஜடேஜா, மொஹமட் அஸாருதீன் போன்றோர் அவ்வாறு அநியாயமாக அரசியலின் பேரால் ஊழல் குற்றத்துக்கு இலக்காகி கிரிக்கெட் உலகிலிருந்தே துரத்தப் பட்டனர். ஆயினும் அவர்கள் நிரபராதிகள் என்பது காலம் கடந்த பின்னரே நிரூ பிக்கப்பட்டது. இதேபோன்று ஆட்ட நிர்ணய சதியில் மாட் டிக் கொண்ட பாகிஸ்தான் வீரர் கள் பலர் தமது கிரிக்கெட் உலகை விட்டு விலக வேண்டியதா யிற்று. தென்னா பிரிக்க அணி யின் முன்னாள் தலைவரான ஹன்சிகுரோஞ்சே கூட ஆட்ட நிர் ணய சதி காரண மாக தலைமைப் பதவியை இழக்க வேண்டியிருந்தது. (பின்னர் ஒரு விமான விபத்தில் சிக்கி அவர் உயிரிழந்தார்)



கனவான்களின் விளையாட்டு என்று வர்ணிக்கப்படும் கிரிக்கெட் டிலேயே இவ்வளவு ஊழல்கள் என்றால் உதைபந்தாட்டத்தில் சொல்லவா வேண்டும்? ஆனால் வேலியே பயிரை மேய்ந்த கதைதான் இப்போது எல்லோரையும் அதிர்ச்சிக்குள் தள்ளியுள் ளது.

சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் முன்னாள் தலைவரும் தற்போதைய கௌரவத் தலைவருமான ஜோவா ஹவஞ்ச் (வயது- 92) பெரும் ஊழல்களில் ஈடுபட்டு வந்த விட யம் அம்பலமாகியுள்ளது. பிரேஸிலைச் சேர்ந்த ஜோவா உதை பந்தாட்ட உலகில் கொடி கட்டிப் பறந்தவர். அந்தப் பிரபல்யத் தோடு அப்படியே சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் தலைமைப் பதவியையும் தனதாக்கிக் கொண்டார். அதன் பின்னர் தலைமைப் பதவியிலிருந்து ஜோவா விலகிக் கொண்டாலும் அவரது சேவையை கௌரவிக்கும் முகமாக கௌரவத் தலைவர் பதவி கொடுக்கப்பட்டது. வயது ஏற ஏற ஆசைகள் தொலையும் என்பார்கள். ஆனால் ஜோவா விடயத்தில் அது தலைகீழாக மாறிவிட்டது. ஆரம்பத்தில் தன்னலமற்ற சேவை புரிந்த ஜோவா பின்னர் பணத்துக்கு விலைபோகத் தொடங்கினார். உதைபந்தாட்டப் போட்டிகளுக்கான தொலைக்காட்சி உரிமங்களை வழங்குதல், ஒவ்வொரு நாடுகளுக்குமான உதைபந்தாட்டச் சம்மேளன பிரதிநிதிகளை நியமித்தல் போன்றவற்றுக்காக பெருந்தொகையான பணத்தை அவர் பெற்றுள்ளார். நீண்ட காலத் தலைவர் என்ற மரியாதை காரணமாக சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத் தலைவ ராக வருபவர்கள் ஜோவாவின் சொல்லைத் தட்டுவதில்லை. அவர் யாரை நோக்கி தன் சுட்டு விரலை நீட்டுகிறாரோ அவரையே மறுபேச்சின்றி பிரதிநிதிகளாக ஏற்றுக் கொண் டார்கள். இதனைத் தனது பணம் சம்பாதிக்கும் ஆசைக்கு வசதியாக்கிக் கொண் டார் ஜோவா. ஆனால் பல நாள் திருடன் ஒருநாள் மாட்டுப்படத் தானே வேண்டும். ஜோவாவும் சிக்கிக் கொண்டார்.

இப்போது சிக்கல் என்னவென்றால் தன் மீதான குற்றங்கள் வெளிவரத் தொடங் கியதுமே ஜோவா, தனது பதவியை விட்டு விலகி விட்டார். ஆனால் அவ ரது சிபாரிசின் படி உதைபந்தாட்டச் சம் மேளனத்தின் பதவி களைப் பெற்றுக் கொண் டவர்கள்தான் இப் போது முழிக்கிறார் கள். ஏனெனில் அவர்களது தலையல்லவா அடுத்ததாக உருளப்போகிறது.


இலங்கைக்கான உதைபந்தாட்டச் சம்மேளன பிரதிநிதி யான மணிலால் பெர்ணான்டோவும் இவ்வாறே பின் கதவால் பதவியை எட்டிப் பிடித்துள்ளார் என்று குற்றஞ்சாட் டப்பட்டுள்ளது. இதனால் அவருக்கு உதைபந்தாட்ட துறையில் ஈடுபடுவதற்கு தடை விதிக்கப்பட்டிருந்தது. ஆயினும் இந்தத் தடையை எதிர்த்து அவர் வழக்குத் தாக்கல் செய்ய வுள்ளார். வழக்கின் முடிவு என்னவாக இருப்பினும் சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனத்தினை அவர் ஏற்றுக் கொள்ளத் தான் வேண்டியிருந்தது. ஏனெனில் அந்தளவு தூரத்துக்கு அவர் மீதான குற்றச்சாட்டுக்களும் அதற்கான ஆதாரங்களும் வலுவாகவே உள்ளன. உதைபந்தாட்டத் துறையைக் கட் டுப்படுத்தும் சக்திகொண்ட சர்வதேச சம்மேளனத்திலேயே இவ்வாறு ஊழல்கள் புற்றெடுத்துள்ள நிலையில், சாதாரண நாடுகளில் உள்ள உதைபந்தாட்ட அணிகளின் இத்தகைய ஊழல் எவ்வளவு தூரம் மலிந்திருக்கும். நினைக்கவே விளை யாட்டுத் துறை மீதான விருப்புகள் விலகிப் போகின்றன.

■ ஔிஷ்

”

இந்தியாவின் அஜய் ஜடேஜா, மொஹமட் அஸாருதீன் போன்றோர் அவ்வாறு அநியாயமாக அரசியலின் பேரால் ஊழல் குற்றத்துக்கு இலக்காகி கிரிக்கெட் உலகிலிருந்தே துரத்தப்பட்டனர். ஆயினும் அவர்கள் நிரபராதிகள் என்பது காலம் கடந்த பின்னரே நிருபிக்கப்பட்டது

## வல்லமையின் வலி



நீ பெற்ற –
வெற்றியை விடவும்
தோல்விகளால் நான் கண்ட
அனுபவங்களும் வலிகளும்
வல்லமை மிக்கது
வாரணமாயிரமாய்
பலம் பெறும் ஓர்நாள்
பதறிப் போய்
நீ படுப்பாய்
என் பாதங்களில்...!
நான் கொண்டது
இழப்புக்களல்ல
எழுதலுக்கான அத்திபாரம்
காரணங்களைக் காட்டி
களைத்துப் போவதற்கும்
தண்ணீர் விடுவதற்கும்
என்னுடம்பில் ஓடுவது
உக்கிப் போனவைகளல்ல
பெற்றவளிடம் பெற்ற பாகு
உற்றவனிடம் உவந்தளித்த
உயிரமுது
கற்றுக் கொண்டவைகள்
உன் கயவத்தனத்தை
கட்டாயம் வெட்டி வீழ்த்தும்
நீ...
எத்தனை தடவை உதைத்தாலும்
என் ஒற்றை உதைப்பு
என்றோ ஒரு நாள்
உன்னைக் கிழிக்கும்
நாணிக் குறுக
நாணற் புல்லல்ல
வீராப்போடு
வீற்றிருக்கும் விசை வில்
அசையாதபடி இருப்பதால்
அடங்கிப்போனதாய்
ஆனந்தப்படாதே
திசையெட்டும்
நீ... திகைக்க
கருட வியூகங்கள் கொண்டு
ஓவிய வியூகங்கள்
தாவுமுன் கலியுகம் மேல்
அப்போது
நீ கேட்பாய்
என்னிடமோர் தனியுரிமை

த.பருத்தி. தா...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கட

முல்லை ரமணன்



பஸ்ஸில் இருந்து எழுந்து 'பெல்லை' ஒருமுறை நான் அழுத்தியபோது... ஓர் இராணுவ காவலரணுக்கு அப்பால் பத்து மீற்றர் தள்ளி பஸ் நின்றது. அதில் இருந்து எனது பிரயாணப்பையினை கையில் எடுத்தபடி இறங்கியபோது ஒரு சிப்பாய் அந்த காவலரணில் இருந்து என்னை ஏற இறங்கப் பார்த்தபடி இருந்தான். அவனைக் கடந்து நான் நிமிர்ந்தபோது வேம்பொடுகேணி -இத்தாவில் என்ற பெயர்ப்பலகை என் கண்களுக்குத் தென்பட்டது.

அதைப் பார்த்தபடி அந்த ஊரிக் கற்களால் அமைந்த அந்தத் தெருவில் நான் நடந்தேன். ஐம்பது மீற்றர் தூரம்தான் சென்றிருப்பேன். அதற்குள் ஒரு பெரியவர் என்னை வழிமறித்து ''தம்பி... எங்க போறியள்?'' என்றுகேட்டார். அவரின் கேள்விக்கு,

''அண்ணை... நான் மரியாம்பிள்ளையண்ணை வீட்ட போறன்'' என்று பதில் சொன்னேன். அதனை காதில் வாங்கிக் கொண்டவர்,

''சரி சரி தம்பி போட்டு வாரும்'' என்றார். அவரது பதிலுக்குக் காத்திராமல் நான் நடந்தேன். கிட்டத்தட்ட ஒரு இருபது வருடங்களுக்குப் பின்னர் இன்றுதான் நான் இந்த மண்ணில் காலடி வைக்கிறேன். போர் வடுக்களைத் தாங்கி மிகவும் சிதைந்து போயிருந்தது.

இன்னும் நூறு மீற்றர் தூரம் நடந்திருப்பேன். ஒரு பாடசாலை தென்படுகிறது. அண்மையில் அந்தப் பாடசாலையில் திறப்பு விழா நடந்ததாகச் செய்தி ஒன்று படித்த ஞாபகம்.

வெப்பம் காற்றுடன் சேர்ந்து நடை பயின்றது. சில மாணவர்கள் பந்தடித்து விளையாடிக் கொண்டிருக்கிறார்கள்.

ஓர் ஆசிரியர் மட்டும் மாமர நிழலில் இருந்த வண்ணம் தம்மை மறந்து 'போன்' கதைத்தபடி இருக்கிறார். வீதியில் இரு மருங்கும் என் பார்வை பதியத் தவறவில்லை.

பார்வை தொடும் தூரம் எல்லாம் வெறும் புல் மண்டிய நிலமாய் பசுமையை எப்போதோ தொலைத்து விட்டு கண்ணிவெடியை மடியில் சுமந்துகொண்டிருப்பதற்குச் சாட்சியாக ஆங்காங்கே மண்டை யோட்டு அடையாளமிடப்பட்ட அட்டைகளைத்தாங்கி நின்றன. அதேவேளை தகரத்தில் கறுத்தமையினால் 'முன்னே பொனால் கன்னிவெடிகாள் பொக வெண்டம்'' என செந்தமிழை கொலை செய்துள்ள அறிவித்தலும் தொங்கிக்கொண்டிருந்தது.

தென்னங்கீற்றில் காற்று உடல் தழுவி மகிழ்ந்த அந்த காலங்களை சில மணித்துளிகள் என் மனம் எண்ணிப்பார்த்தபடி மீண்டும் அந்த வீதியில் நடக்கிறேன். இடதுபக்கம் ஒரு கிறிஸ்தவ ஆலயம். 'பார்பரா' மாதா கோயில். நான் முன்பு பார்த்தபோது ஒரு கிடுகுக் கொட்டிலாக இருந்த அந்த தேவாலயம் தற்போது ஒரு பெரும் கட்டடமாக நிமிர்ந்து நிற்பதை எண்ணி ஒரு மகிழ்வு.

கடிகாரத்தில் நேரத்தைப் பார்க்கிறேன். ஒரு விடயம் என் நினைவில் வந்து நிற்கிறது. யாழ்.தேவி கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் ஓடிய காலம் இத்தாவிலில் வாழ்ந்த மக்களும் மற்றும் முகமாலை போன்ற இடங்களில் வாழ்ந்தவர்களும் புகையிரதம் வருவதை வைத்தே நேரத்தைக் கணிப்பார்கள்.

ஒரு தற்காலிக வீடு. அதன் அருகே முற்றத்தில் குளிர்ச்சியான வாழைமரங்கள். காற்றிலே வாழை இலைகள் ஆட நிமிர்ந்து நல்ல நிழலைக் கொடுத்த வண்ணம் இருந்தன. பனை வடலி மட்டையால் கட்டப்பட்ட அந்த படலையால் எட்டிப்பார்க்கிறேன். யாரோ அந்த தற்காலிக வீட்டில் கதைக்கும் சத்தம் கேட்கிறது. எனக்கு எத்தனையோ வருடங்களுக்கு முன்னர் பரிச்சயமான குரல்.

''அக்கா... அக்கா...'' எனக் குரல் கொடுத்தேன். ஒரு பெண் வெளியில் வந்தாள். ''ஆர்... தம்பி?'' என்று குரலில் கேள்விக் குறியைத் தாங்கியிருந்தாள்.

''என்ன அக்கா என்னைத் தெரியுதா?'' என்றேன்.

''ஆர் நீங்கள்? வடிவாத்தெரியேல'' என்றபடி என்னை உற்றுப்பார்த்தபடி நின்றாள்.

''நான்தான் சிவலிங்கம் அண்ணையின்ர மகன் குமார்... அந்த நேரத்தில... நாங்கள் எல்லாம் ஓடிப்பிடிச்சு விளையாடினதை மறந்திட்டியளே'' என்றேன்.

அவள் முகத்தில ஆச்சரியம் தோன்றியது.

''எட தம்பி குமாரே? அடையாளம் தெரியேல்ல... எப்படித் தம்பி சுகமாயிருக்கிறியே... வாவன் தம்பி வா... வா... எவ்வளவு காலம் நாங்கள் கண்டு'' எனக் கூறியபடி அந்த வாழைமரத்தின் அடியில் ஒரு கதிரையைப் போட்டாள். அந்தக் கதிரையில் அமர்ந்தேன்.

''தம்பி... இரு நான் தேத்தண்ணி வைச்சிட்டு வாறன்'' என்றவள் குசினிக்குள் புகுந்து சிறிது நேரத்தின் பின் வந்து எனக்கருகில் அமர்ந்தபடி

''என்ன தம்பி... எல்லாரும் சுகமாயிருக்கினமே'' என்றாள்.

''ஓமக்கா... எல்லாரும் நல்ல சுகம். நீங்கள்... எப்படி?''

''தம்பி நாங்கள் உந்த முள்ளிவாய்க்காலுக்க செல்லடியுக்க தப்பிப் பிழைச்சு வந்துட்டம். ஆனா என்ன? வந்த பிறகும் அவரைத் துலைச்சிட்டன். போன மாதந்தான் மோசம் போனவர்''

''ஏன் அக்கா... என்ன நடந்தது?'' என ஏக்கத்தோடு, கேட்டேன். கண்களில் நீர் தழும்ப,

''என்னத்தை தம்பி சொல்லுறது. எனக்கு ஒரே ஒரு பொம்பிளப் பிள்ளை. செல்லடியுக்க அவளைத் தவற விட்டுட்டம். பிறகு தேடித் திரிஞ்சு எங்கயோ சிங்கள ஏரியாவில, எங்கயடா தம்பி அந்த பேரையும் மறந்து போனன்... சீ... ஞாபகத்துக்கு வரேல்ல... ஆ... வெலிக் கந்தவில..அவள் இருக்கிறாள் எண்டு சொல்லி, நானும் அவரும் போய்... போய்.. அடிக்கடி பார்த்து வந்தனாங்கள்.

ஒரு நாள் இரவு நான் சாப்பிட்டு அவருக்குச் சாப்பாடு குடுத்திட்டு படுத்திட்டன். அவர் மகளின்ர யோசினையில எலும்பும் தோலுமாய்ப் போனார். அதோட அவருக்கு கான்சரும். என்ன செய்யிறது.

ஏதோ... காலத்தைப் போக்கிப் போட்டம். இரவு... இருமி இருமி.. இரத்தமாய் சத்தி எடுத்திட்டார். அதுக்குப்பிறகு நான் பதறி பயந்து குளறினான். உந்த பக்கத்தில இருந்த மரியாம்பிள்ளை அண்ண, ரஞ்சிதம் எல்லாரும் வந்திட்டினம். அந்தக் கோயில் பாதர்கூட வந்திட்டார். கொஞ்ச நேரத்தில என்ரை அவர் ஏலாத மாதிரி பக்கத்தில வரச்சொல்லி சைகை காட்டி கூப்பிட்டவர். நானும் கிட்டப்போனன்.

ஏதோ... சொல்ல வாயெடுத்தவர் அப்படியே சரிஞ்சிட்டார். அப்பவே சீவன் போட்டுது தம்பி.'' என்று சொன்னவள் சிறிதுநேர மௌனத்தின் பின்னர் ''தம்பி.... பொறுவாறன்'' என்று கூறிக்கொண்டே குசினிக்குள் புகுந்தாள். மூண்டு நிமிஷத்தால கையில தேநீருடன் என்னிடம் தந்தாள். ''இந்தாப்பு குடி தம்பி '' என்றபடியே தன் கதையைத் தொடர்ந்தாள்.

''இப்படியேஅவர் செத்துட்டார். அடுத்தநாள் பிரேதம் எடுக்க வேணும். என்ர குஞ்சு அந்தாளின்ர முகத்தில முளியாமல் போகப் போகுதே எண்டு எனக்கு ஏக்கம். எப்படியோ இஞ்ச யாழ்ப்பாணத்துல வந்து நிண்ட வரப்பிரகாசண்ணையை ஒரு மாதிரி பிடிச்சு அனுப்பி மகள வரச் சொல்லி தகவல் குடுத்திட்டம்.

என்ன தம்பி சீனி காணுமே... அவசரத்தில போட்டது... குறை நினைக்காதயப்பு குடி'' எனக் கூறி என்னைப் பார்த்தாள். ''இல்லையக்கா... சீனி காணும். நீங்கள் சொல்லுங்கோ. எத்தனை வருசம் இத்தாவில் தண்ணி குடிச்சு அது சரி அக்கா.... எங்க தண்ணி அள்ளுறனீங்கள்?''என்று கேட்டேன்.

''தம்பி... நாங்கள் இப்பதானே வந்தனாங்கள். எங்கட கிணறுகள் ஒண்டும் வடிவா இறைக்கேல்ல. வஸ்தியாம்பிள்ளை அண்ணற்ற கிணத்திலதான் தண்ணி அள்ளுறனாங்கள். ஏன் தேத்தண்ணி ஏதும் வித்தியாசமாய்க் கிடக்கே''

''சீச்சீ... அப்பிடி ஒண்டும் இல்ல. சும்மா கேட்டனான். நீங்கள் உங்கட கதையைச் சொல்லுங்கோ'' என்று கதை கேட்கத்தயாரானேன்.

''பிரேதம் எடுக்கிறதுக்கு பாடை கட்டி பிரேதத்தைக் குளிப்பாட்டி பெட்டியிக்க வைச்சிருக்கிறம். என்ன கோதாரியோ தெரியாது. தம்பி பெட்டியில கிடக்கேக்கையும் அவர் நித்திரை கொள்ளுற மாதிரித்தான் கிடந்தது. என்ன செய்யிறது? அப்ப என்ர மனம் பட்ட பாட்ட அந்த பார்பரா மாதாதான் அறிவாள்'' என்றவளின் கண்கள் கலங்கியிருந்தன.

''பாவம் அவளின்ர மனதை பேந்தும் கஷ்ரப் படுத்திப் போட்டன்'' என்ற எண்ணம் என் மனதில் எழுந்தது.

''அப்ப தம்பி என்ர பிள்ளையை ஒரு பொலிஸ் வாகனத்தில கொண்டு வந்து இறக்கினாங்கள். என்ன வடிவா இருந்த பிள்ளை காஞ்சு கருவாடா வந்திட்டுது, தலை மயிரையும் வெட்டிக் கிடந்தது. பெத்த மனம் எப்பிடித் தம்பி தாங்கும்.

பொத்திப் பொத்தி வளர்த்தபிள்ளை. பார்த்து நான் பதறிப் போனன். அது வந்து இறங்கின கையில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதி



"ஒரு நாள் இரவு நான் சாப்பிட்டு அவருக்கும் சாப்பாடு குடுத்திட்டு படுத்திட்டன். அவர் மகளின்ர யோசினையில எலும்பும் தோலுமாய்ப் போனார். அதோட அவருக்கு கான்சரும். என்ன செய்யிறது.
ஏதோ... காலத்தைப் போக்கிப் போட்டம். இரவு... இருமி இருமி.. இரத்தமாய் சத்தி எடுத்திட்டார். அதுக்குப்பிறகு நான் பதறி பயந்து குளறினான். உந்த பக்கத்தில இருந்த மரியாம்பிள்ளை அண்ணா, ரஞ்சிதம் எல்லாரும் வந்திட்டினம். அந்தக் கோயில் பாதர்கூட வந்திட்டார். கொஞ்ச நேரத்தில என்ரை அவர் ஏலாத மாதிரி பக்கத்தில வரச்சொல்லி சைகை காட்டி கூப்பிட்டவர். நானும் கிட்டப்போனன்.



விலங்கு போட்டிட்டாங்க ட்டாங்கள்.

என்ரபிள்ளையை வடி வா வடிவா தகப்பனை பார்க்க விட்டாங் களே...ஒரு பத்து நிப த்து நிமிஷத்தால கூட்டிக் கொண்டு போட்டாங்கள். நான் அ ன் அவங்களின்ர காலில விழுந்து கட்டிப் பிடிச்சு என்ற பிள் ற பிள்ளையை கூட்டிக் கொண்டு போகாதேயுங்கோ எண்டு எண்டு அழுதன். ஆனால் அவங்கள் விடேல" என்றவள் அழத் : அழத் தொடங்கினாள். அவள் அழு கையும் ஆதங்கமும் தீருமட் தீருமட்டும் காத்திருந்தேன் நான்.

"அக்கா அழாதையுங் தையுங்கோ. என்ன செய்யிறது? எங்கட வாழ்க்கை இப்ப இப்படித்தான். எதுக்கும் நாங்கள் மனங்கலங்கக் கூடாது. டாது. தைரியமாய் இருங்கோ... அவள் வந்திடுவாள். ாள். அவள் வந்தால் நல்லாப் படிப்பியுங்கோ இப்பதா ப்பதானே கொம்பியூட்டர் படிக்க லாம். படிச்சால் அவள் அவள் முன்னுக்கு வருவாள். சரி அக்கா நான் போட்டு வா டு வாறன்" என எழுந்தேன்.

"தம்பி... வந்தனி சாப் னி சாப்பிடாமல் போறாய் அப்பு... இனி எப்ப வாறது?" என்ற" என்று கேட்டாள்.

"அக்கா... நான் யாழ்ப யாழ்ப்பாணம் போகேக்க, நான் பளர்ந்த வாழ்ந்த இந்த இந்த மண்ணைப் பார்க்க வேணு மெண்டு வந்தனான். பசுஞ். பசுஞ்சோலையாக இருந்த மண் இப்ப கண்ணிவெடிகள டிகளை சுமந்து நெருப்பெரிந்த லமாய்ப் போச்சு அக்கா. அக்கா. இது எப்ப... வாழ் நிலமாய் மாறப் போகுது? இனிஎப் னிஎப்பவாவது நேரங்கிடைச்சால் றன்" என்று விடைபெற் பெற்று நட க்கத்தொ ங்கினேன்.

"தம்பி... மறக்காமல் காமல் வந்து வந்துபோ தம்பி" ன்றபடி நான் செல்லும்ல்லும்வரை அப்படியே பார்த்தபடி ன்றாள். எப்ப எங்கட மகைட மண் பசுஞ்சோலையாக மாறப் பாகுது என்ற எண்ணம் ணம் தொடர காணி நிலம் வேண் ம் பராசக்தி காணி நிலம் நிலம்வேண்டும் என்ற பாரதியின் மல் நினைவில் எழ நி எழ திரும்பவும் கண்டி வீதியை நாக்கி நடக்கிறேன். ம்.

எனக்கு வேலை
எட்டு மணித்தியாலங்கள்
கிழமைக்கு ஒன்றரைநாள்
விடுமுறை கட்டாயம்...!

சாதாரண லீவு
சுகயீன லீவு
வருடாந்த லீவு
விடுமுறை லீவு
எல்லா லீவும்
எனக்கு வேண்டும்...!

ஆகக் குறைந்த
அடிப்படைச் சம்பளம்
வாழ்க்கைச் செலவு
போக்குவரத்து...
எந்தப் படியையும்
தந்தாக வேண்டும்..!

சாப்பிட இடைவேளை
தேத்தண்ணி இடைவேளை
பாதுகாப்பு
காப்பு உறுதி
மருத்துவ வசதியையும்
கருத்தில கொள்ளுவன்
தொழில் சட்டங்கள்
மனித
உரிமைச் சட்டங்கள்
சூழலியல் சட்டங்கள்...

எல்லாச் சட்டங்களையும்
நல்லா பார்த்து
உப பிரிவுகளையும்
உண்மையாய் விளங்கி
கடுமையாய் இருப்பன்!

சுத்தமான குடிதண்ணி
சுகாதாரமான இடம்
காற்றோட்ட வசதி...

டேய்... எழும்பு மச்சான்
காலைத்
தூக்கி காத்துப்படவிட்டு
பட்டப்பகலிலை
கனவோ காண்கிறாய்...!

முகாமுக்கு வெளியில
விதானையார் நிற்கிறார்
வீடு பார்க்கப் போறவை
பதிய வேணுமாம்
நிவாரணப் பட்டியலும்
சரிபார்க்க வேணுமாம்...

போடா பேயா...
நீயும் உன்ர விதானையும்
மெய்மறக்க வைச்ச
என்ர மேதினக்கனவை
பொய்யாக்கிப்
போட்டாய்!

## தாய் நிலம்

15

-சபா கோபன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஷமேறிய சொற்கள்

■ ந.அஜந்தகுமார்

கட்டுடைத்தல் என்பதை இவர்கள் ஏதோ காலில் வந்த கட்டை உடைத்து சீழ் எடுக்கும் செயல் என்று நினைத்துவிட்டார்கள் போல இருக்கின்றது. அதனால்தான் இவர்களின் செயற்பாடுகள் இப்படித் திசைமாறிச் செல்கின்றது. அருவெருப்பு மேலிட இலக்கிய உலகில் இருந்து விலகிவிடலாமோ என்ற ஆற்றாமையும் கேள்வியும் எழ சில மூத்த எழுத்தாளர்களே புதிய தலைமுறையின் வக்கிரமனப் பான்மை முன்னால் நடுங்கிப் போய் நிற்கிறார்கள். இலக்கியம் தரும் அமைதியும் நிம்மதியும் மெதுமெது வாய் விலகிவிடும் சூழலிலேயே இருக்கின்றோம்.

விமர்சனம் ஒரு படைப்பனை கூர்மைப்படுத்துகின்ற சுத்திகரிக்கின்ற மேன்மைப்படுத்துகின்ற வேலையைச் செய்கின்றது. இலக்கியப் பரப்பல் விமர்சனம் என்பது மிகவும் பலவீனமான அநாதரவான நிலையையே அடைந்து கொண்டிருக்கின்றது. ஒருவரின் படைப்பு மீதான விமர்சனத்தை தம்மீதான விமர்சனமாக மட்டுமே நோக்கி சமநிலை இழந்துவிடுகின்றார்கள். ஆற்றாமையும் அநிதானமும் சேர்ந்து கொள்ளத் தனிப்பட்ட தாக்குதல்களில் மோசமாக ஈடுபடுகின்றார்கள்.

தேவையற்ற போதனையும் பெயர்ப்பங்கத்தையும் தமது எழுத்துக்களில் அநாயசமாக அள்ளித் தெளிக்கிறார்கள். ஒருவர் கேட்கும் நியாயமான கேள்விகளுக்குப் பதில் கூறாமல் அது அவரது கருத்துச்சுதந்திரம் என்று பம்மாத்துச் செய்துவிட்டு அவரைத் தேவையற்ற புனைவுகளாலும் விடயங்களாலும் கேள்விக்குட்படுத்துகிறார்கள். அப்படியென்றால் அதைத்தான் கருத்துச் சுதந்திரம் என்று மார்தட்டி நினைத்து வைத்திருக்கிறார்களோ இப்பெரியவர்கள்? இதை வெளியிடும் இதழ்களின் அறிவுநிலை எப்படிப்பட்டது? பன்னவீனத்துவம் பேசுகின்றவர்களின் கருத்து நிலை முரண்களை சுட்டிக் காட்டினால் ''பள்ளியறையில் சோம்பேறியாக இருந்துவிடாதே'' என்று இலவச ஆலோசனை வழங்குவதுதான் இலக்கியக்காரர்களின் நாகரிகமா? அதை மிகப்பெரிய கருத்தாக நினைத்து வெளியிடுவதும் செப்பனிடாது சுவாரசியம் கருதி வெளியிடுவதும்தான் இதழ்களின் அறமா? ஒரு சோம்பேறியின் பக்கம் என்று தலைப்பட்டால் சோம்பேறி என்று ஆகிவிடுமா? கம்பன், இராமாயணம் என்னும் பாற்கடல் முன்னால் தன்னை ஒரு பூனை என்கின்றான். அதற்காக கம்பனைப் பூனை என்பதா? தர்க்கப் பாண்டித்தியம் உடையவர்களின் ஏட்டறிவு நகைப்பையே தருகிறது.

கட்டுடைத்தல் என்பதை இவர்கள் ஏதோ காலில் வந்த கட்டை உடைத்து சீழ் எடுக்கும் செயல் என்று நினைத்துவிட்டார்கள் போல இருக்கின்றது. அதனால்தான் இவர்களின் செயற்பாடுகள் இப்படித் திசைமாறிச் செல்கின்றது. அருவெருப்பு மேலிட இலக்கிய உலகில் இருந்து விலகிவிடலாமோ என்ற ஆற்றாமையும் கேள்வியும் எழ சில மூத்த எழுத்தாளர்களே புதிய தலைமுறையின் வக்கிரமனப்பான்மை முன்னால் நடுங்கிப் போய் நிற்கிறார்கள். இலக்கியம் தரும் அமைதியும் நிம்மதியும் மெதுமெதுவாய் விலகிவிடும் சூழலிலேயே இருக்கின்றோம்.

மற்றவர்களின் அந்தரங்கங்களில் உள்ள புள்ளியான உண்மைகளை வைத்துக்கொண்டு வாசகர்களை நம்பத் தகுந்த வகையில் புனைவு வெளியில் தோய்ந்து எழுந்து படைப்பாக்கி சிலிர்ப்பவர்களை சிலர் பாராட்டுகிறார்கள். இல்லையேல் மௌனமாக இருக்கிறார்கள்.

ஏனெனில் அவன் தன்னைப்பற்றி எழுதிவிடக்கூடாதே என்ற அச்சம் அவர்களைப் புரட்டிப் போட்டுவிடுகின்றது.

வழிதவறிச்செல்லும் இளைய தலைமுறையை மூத்த தலைமுறையினர் உரிமையின் பெயரால் தட்டிக் கேட்கவேண்டும். அல்லது ஆற்றுப்படுத்தவேண்டும். இல்லையேல் அவர்களின் தொடர்பைத் துண்டித்துவிட வேண்டும். இல்லாவிட்டால் அது தட்டிக் கொடுக்கும் செயற்பாடு போன்றதுதான்.

ஊரெல்லாம் ஒரு விசர் நாய் கடித்துத்திரிய அதை வீட்டில் இருத்தி முட்டையும் அவித்து வைத்து பாலும் கொடுப்பது போலத்தான் அவர்களின் செயற்பாடும் கணிக்கப்படும். பழம் கொடுத்துப் பழகிய பாகியாருக்கு அந்த யானையே மதம் பிடித்து மிதித்தது போல ஆகிவிடக் கூடாது அல்லவா? பிறகு கௌரவம் படத்தில் சிவாஜி கணேசன் போல, பால் கொடுத்து வளர்த்த கிளி பழம் கொடுத்துப் பார்த்த கிளி என்று பாடவேண்டி வந்துவிடும்.

எழுத்தாளன் தனது சொல்லிலும் செயலிலும் ஒற்றுமை இருப்பதோடு தேவையான இடங்களில் மௌனங்களை கலைத்தே ஆகவேண்டும். நீடித்த மௌனம் பெரிய பெரிய நிலைகுலைவுகளை ஏற்படுத்துமாக இருந்தால் அதிலிருந்து வெளியே வந்தே ஆகவேண்டும். நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத் திறனுமின்றி வஞ்சனை சொல்பவர்களை கேள்விக்குட்படுத்தவேண்டும். இதழ்கள் நாகரிகங்களைக் கற்றுக்கொள்ளவேண்டி இருக்கின்றது. ஒரு வாசகனின் கருத்துக்கு மதிப்பளிக்கும் பக்குவத்தைக் கூட இதழாசிரியர்கள் இழந்து வருகிறார்கள். எதையும் வெளியிடலாம் என்ற நிலை உருவாகுமேயானால் சிற்றிதழ்களின் தேவை எதற்கு? வாசகன் கருத்துத் தெளிவுடன் இருக்கின்ற போது எழுத்தாளர்களும் விமர்சகர்களும் இதழாசிரியர்களும் தேவையற்ற திசைவழியில் செல்கின்றார்களோ என்ற ஐயம் எழுகின்றது.

தேவையற்றவற்றை நீக்கும் போராட்டத்தில் இலக்கியவாதிகள் குதித்தே ஆகவேண்டும்.

ஒருவன் விழுந்து கிடக்கும் போது எத்தனை புண்ணிருக்கிறது என்று எண்ணிப்பார்த்துக் கொண்டிருக்கக்கூடாது. ஒரு இலக்கியவாதி மீது நடைபெறும். எழுத்து அராஜகத்தை எதிர்க்கவேண்டும். சொல்லுதல் யார்க்கும் எளிய என்பதை உணர்ந்து சொல்லியவண்ணம் செய்யப்பாடுபடுவோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசை போட ஒரு விடயம் 76

# கணித மேதை சகுந்தலாவின் மறைவு

■ ரம்யன்




கணிதத் துறையில் மனித இயந்திரமாகக்கருதப்பட்டு வந்த மேதை சகுந்தலாதேவி அண்மையில் காலமாகிவிட்டார் என்ற செய்தி அந்தத் துறையில் அக்கறையுள்ளவர்களுக்கு பெரிதும் கவலையாக இருந்திருக்கும்.
கணிதத்தில் ஒரு மந்திரவாதி போல் அவர் திகழ்ந்தார் என்று சொல்வார்கள். அதுமட்டுமல்ல அவர் உலகின் வேகம் கூடிய மனித கணினி என்றும் கூட வர்ணிக்கப்பட்டிருந்தார்.
கர்னாடக மாநிலத்தைச் சேர்ந்தவரான சகுந்தலாதேவி பெங்களூர் மருத்துவமனையில் தமது 82 வயதில் சுவாசப்பை கோளாறினால் இயற்கை எய்தினார் என்று அறிவிக்கப்பட்டது.
சகுந்தலாதேவி மனதாலேயே எவ்வளவு பெரிய சிக்கலான கணக்கையும் கண் இமைக்கும் பொழுதில் கணித்து விடையளிக்கும் ஆற்றலைப் பெற்றிருந்தார். மிகச் சிறுவயதான மூன்று வயதிலேயே இந்த ஆற்றல் அவருக்கு இருந்துள்ளது.
பெங்களூர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த அவர் அமைதியாக உயிர்விட்டதாக சகுந்தலாதேவி கல்வி நிறுவன பொது நம்பிக்கை நிதியத்தின் பணிப்பாளர் டி.வி.சிவதேவ் அறிவித்தார். சுவாசக்கோளாறுக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட தேவிக்கு பின்னர் இதய மற்றும் சிறுநீரக கோளாறுகளும் ஏற்பட்டதாக சிவதேவ் குறிப்பிட்டார்.
சகுந்தலாதேவி இளம்வயதில் கொழும்புக்கு வந்திருந்த போது ஒரு நிகழ்ச்சி விவேகானந்த மண்டபத்தில் இடம்பெற்றது. கணிதத்தில் ஆர்வமுள்ள அநேகர் அவரிடம் கணக்குகளுக்கு விடை கேட்டார்கள்.
ஓர் அன்பர் தாம் கடதாசியில் எழுதிக்கொண்டு வந்திருந்த கணக்கொன்றை சகுந்தலா தேவிக்கு அனுப்பினார். கணப்பொழுதில் விடைவந்தது. ஆனால் கேட்டவர் விடை [illegible] போட்டுப் பாருங்கள் என்றார் தேவி. [illegible] கேட்டவர் தாம்

> 1977 இல் அவர் ஒரு 201 இலக்க எண்ணின் 23 ஆவது மூலத்தை கணக்கிட்டார். இதை யூனி வாக் 1108 என்ற கணினியை விட 12 வினாடிகள் விரைவாக செய்து முடித்தார். இவர் ஒரு கின்னஸ் சாதனையாளராக அங்கீகரிக் கப்பட்டவர்.

விட்ட தவறை ஒப்புக்கொண்டார்.
சகுந்தலாதேவி மனதால் கணக்குகளின் சிக்கலைத் தீர்ப்பதில் மேதையாக திகழ்ந்த போதிலும் இராமானுஜன் போல் கணிதத்துறையில் புதிய தத்துவங்களை வெளிப்படுத்தினார் என்று கூற முடியாது. என்றாலும் இருவருமே இரண்டு வகையில் மேதைகளாகவே திகழ்ந்துள்ளனர்.
சகுந்தலாதேவி உலகின் பலநாடுகளுக்கும் சென்று நிகழ்ச்சிகளை நடத்தி புகழ்பெற்றிருந்தார். இராமானுஜன் கணிதத்தில் புதிய கோட்பாடுகளைக் கண்டுபிடித்தார்.
கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சியாளராகவிருந்த இராமானுஜன் இளம்வயதான முப்பத்து மூன்று வயதிலேயே உயிர் துறந்தார். சகுந்தலாதேவி 82 வயதுவரை உயிர் வாழ்ந்து உயிர்நீத்தார்.
சகுந்தலாதேவியைப் பொறுத் தவரை மிக வசதியான குடும்பத்தில் பிறந்தவர். மூன்று வயதில் தந்தையாருடன் சீட்டு விளையாடிக்கொண்டிருந்தபோது அவ்வரது மேதைத் தன்மையை தந்தையார் கண்டுபிடித்தார். பின்னர் கல்லூரி ஆசிரியர்கள் மாணவர்கள் மத்தியில் கணித காட்சி நிகழ்ச்சிதளை நடத்திப் புகழ் பெற்றார்.
இராமானுஜன் மிக வறுமையான குடும்பத்தில் பிறந்தவர். சிறுவயதிலேயே தந்தையை இழந்து விட்ட இராமானுஜன் தாயாரின் அரவணைப்பில் வளர்ந்தார்.
பிராமண குல மரபுகளை அவர் மிகக் கண்டிப்பாக கடைப்பிடித்தார் என்று கூறப்படுகின்றது. தாயார் பிராமண குடும்பங்களுக்குச் சென்று அங்குள்ள பெண்களுக்கு அடுக்களை உதவிகள் புரிந்து கிடைத்த வருமானத்தில் குடும்ப சீவனம் நடந்தேறியது. இராமானுஜனுக்கு சிறுவயதிலேயே கணிதத்துறையில் ஆர்வம் மிகுந்தது. அதனால் வேறுபாடங்களில் அதிக கவனம் செலுத்த முடியவில்லை. கல்லூரியில் படித்த காலத்தில் பேராசிரியர் ஹார்டி என்பவரால் அவரது திறமைகள் கண்டறியப்பட்டு லண்டன் கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்தில் ஆய்வாளராகச் சேர்ந்தார்.

**சகுந்தலாதேவி பற்றிய குறிப்பு:**


சகுந்தலாதேவி [நவம்பர் 4, 1929–ஏப்ரல் 21, 2013] ஒரு இந்தியக் கணித மேதை. பெங்களூரில் பிறந்த அவரது தந்தை ஒரு பிராமணர்.
மூன்று வயது இருந்த போது, அவரது தந்தையுடன் சீட்டு வித்தைகள் செய்த பொழுதே அவரது கணிதத் திறன் புலப்பட்டது. அவருக்கு ஆறு வயது இருந்த போது மைசூர் பல்கலைக்கழகத்தில் கணக்கு மற்றும் நினைவாற்றல் திறமைகளை வெளிப்படுத்தினார். எட்டு வயதில் அவர் அதையே அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் செய்து வெற்றி பெற்றார்.
1977 இல் அவர் ஒரு 201 இலக்க எண்ணின் 23 ஆவது மூலத்தை கணக்கிட்டார். இதை யூனிவாக் 1108 என்ற கணினியை விட 12 வினாடிகள் விரைவாக செய்து முடித்தார். இவர் ஒரு கின்னஸ் சாதனையாளராக அங்கீகரிக்கப்பட்டவர். இவர் மூச்சுத்திணறல் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு 21 ஏப்ரல், 2013 அன்று பெங்களூரில் உயிரிழந்தார்.

**தேநீர் இதயத்துக்கு நல்லது**

தேநீர் அருந்துவதால் உடல் களைப்பு நீங்கி சுறுசுறுப்பு ஏற்படுகிறது என்று மட்டும் தான் நம்மில் பெரும்பாலானவர்கள் நினைத்துக்கொண்டிருக்கின்றோம்.
ஆனால் ஒருநாளைக்கு இரண்டு மூன்று கோப்பை தேநீர் அருந்துவதானது இரத்தக் கொதிப்பை சீராக வைத்துக் கொள்ள உதவுகிறது என்பதை விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளார்கள். தேநீர் பருகுவதானது உயர் இரத்தக் கொதிப்பை மட்டும் சீராக்குவதில்லை. இரத்தக் கொதிப்பு உயர்வுதாழ்வு என்ற மாறுபாடடைவதையும் சீராக்குகின்றதாம்.
தேயிலையின் மணம் மட்டுமல்ல அதிலுள்ள சில பொருள் இதயநோய்களில் சிலவற்றையும் குணமாக்கவல்லது என்கிறார்கள் நிபுணர்கள்.
தேநீரின் பயன்பாடு குறித்து மேற்குஆஸ்திரேலியா பல்கலைக்கழக பேராசிரியர் ஜோனதான் ஹொட்சன் கூறுகையில்:-
தேநீர் உங்களின் இதய சுகத்துக்குச் சிறந்தது என்பதற்கான ஏராளமான சான்றுகள் கிடைத்துள்ளன. இது ஒரு பெரிய கண்டு பிடிப்பு. ஏனென்றால் தேநீருக்கும் இதயநோயின் முக்கிய பிரிவுக்கும் தொடர்பு இருப்பது தெரியவந்துள்ளது என்றார். கடும் நிறத்தினாலான தேநீர் இரவு நேரங்களில் இரத்தக் கொதிப்பின் [illegible] நிலைகளைச் சீராக்குகிறது என்பதைக் கண்டுபிடித்துள்ளோம் என்கிறார் அவர். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 264



அனுப்புபவர் பெயர்:..........................................

விலாசம்:..........................................

..........................................

கையொப்பம்:..........................................

### இடமிருந்து வலம்

1. நிலுவையாகக் கிடைக்க வேண்டியது
4. பனையை ஒத்த மரம்
7. சுக்கு, மிளகு, திப்பிலி மூன்றும் சேர்ந்தும் வருவது
8. பிரிப்பு
10. காயத்தின் அடையாளம்
11. ஈழத்தமிழரின் பிரச்சினை குறித்த பேச்சு வார்த்தை இந்த நாட்டிலும் இடம் பெற்றது.
12. இதுவும் ஒரு கடல் உணவு
14. வயிற்றுப் போக்கு
15. மலை
16. பாடல் இசைப்பவன்
18. கொடை
19. படிப்புத்துறை
20. தானாகத் தோன்றுவது
21. துணிவு

### மேலிருந்து கீழ்

1. சதிபதி
2. புகழாக வரும் பெறுமதி
3. வேறுபடுதல்
4. குரங்கு, நாய், பூனை போன்றவற்றில் ஆண்
5. கூரையின் உச்சியில் வருவது
6. குத்து வீழ்வது இப்படி
9. கரம் குவித்தல்
12. மிச்சம்
13. சீனி தயாரிக்கப் பயன்படுத்தப்படும் மூலப் பொருள்
14. தலையில் குடிகொண்டால் போச்சு
15. வானத்தில் தவழ்ந்து திரிவது
16. யானையை வழிப்படுத்துபவன்
17. கவிஞனின் ஆக்கத்தில் பிறப்பது
18. ஓர் உலோக வகை
20. சொந்த

★வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 262 க்கான சரியான விடைகள் வருமாறு:

#### இடமிருந்து வலம்

(1) பிரவேசம் (4) கதி (6) தரை (7) கற்றை (8) யோசனை (10) அன்றோ (11) கரி (12) பதினான்கு (14) தரகர் (16) சந்தம் (17) பல (18) பாரதம் (19) புதிய (20) திடும் (21) ஓவியம்

#### மேலிருந்து கீழ்

(1) பிரயோகம் (2) வேதனை (3) சரை (4) கற்றோன் (5) திறை (7) கன்னார் (9) சரி (10) அதிகம் (12) பரதம் (13) குவலயம் (14) தந்தம் (16) சரடு (17) பதிய (18) பாதி (19) புவி

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி**
**இல. 264**
**நியூ உதயன் பப்ளிகேஷன் [பிறைவேற்]லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன் கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர், (15.05.2013) ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

7. சொற்சிலம்பம்போட்டி இல.264இல்வெற்றி பெறுவோர்களது விவரம் 19.05.2013 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 262இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
**வி.செல்வநாயகம்,**
சிவன் கோவில் வீதி,
புத்தூர்

**2 ஆம் பரிசு**
**திருமதி.த.ஜெகதீஸ்வரி,**
ஈஸ்வரி இல்லம், நுகவில்
கரணவாய் கிழக்கு,
கரவெட்டி

**3 ஆம் பரிசு**
**B.செல்வராணி,**
இல:89/7 பிறவுன் வீதி,
யாழ்ப்பாணம்.

**4 ஆம் பரிசு**
**தி.செல்வராணி,** இல. 121 B,
பருத்தித்துறை வீதி, நல்லூர்.

**5 ஆம் பரிசு**
**செல்வி.சி.எழிலோவியம்,**
ஆக் வீதி, உடுவில்,
சுன்னாகம்.

**பாராட்டுப் பெறுவோர்**


**தி.ஜயபாரதி,**
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

**செல்வி பா.சுபா,**
இல.45 9, பிரதான வீதி, புலோலி கிழக்கு,
பருத்தித்துறை

**து.அபிராமி,**
இல.515/5 கொழும்புத்துறை கிழக்கு, யாழ்ப்பாணம்

*பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம். யாழ்.மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் ... அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால் ஊடாக அனுப்பிவைக்கப்படும்.*

## கண்கெட்ட பிறகேன்.....



பண்பாட்டின் விளைநிலமே
பார் போற்ற வாழ்ந்த வாழ்வே
எங்கே நீ இன்று
ஏங்கித் தவிக்கிறோம்
ஏணிகளைத் தொலைத்துவிட்டு
படிகளில் நின்றழுகிறோம்
இன்னமும் மனங்களில்
கனவுகள் சுமந்தபடி
கற்றோரே பிழைவிடும்
காட்சிகளால்
நிறைகிறது எம் வெளி
பெற்றோரைப் பிழை சொல்வதா
பிள்ளைகளைப் பிழை சொல்வதா
பெற்றோரைக் காதலிக்கும்
பிள்ளைகளை அறிவோம்
காதலுக்காய்
பெற்றவரையே கொல்லும்
பிள்ளைகளை
நினைக்கையிலே
பெற்றெடுத்து பற்றைக்குள்
எறியத் துணியும் சில
பெற்றோரை எண்ணுகையில்
பற்றி எரிகிறது நெஞ்சு
வழிகாட்டல் தவறி
இன்று வாய்க்கால்கள்
இழந்து போன வாழ்வு
மடையிழந்த வெள்ளமெனப்
பாய்கையிலே
கண் கெட்ட பிறகேன்
எமக்குச் சூரிய வணக்கம்

புலோலியூர்
வேல்நந்தன்

## உழைப்பாளிகள் உள்ளக் குமுறல்....



பாடுபடுபவனுக்கு
சொந்தமில்லாப்
பார் நிலமாய் வாழ்வது
தொடர்கையிலே
உழைப்பதன் உயர்வின்று
உருக்குலைக்கப்படுகையிலே
உழைக்கும் நிலமதில்
உரிமையிழந்து நிற்கையிலே
உலகமயமாக்கலின்
சுயமிழக்கும் வாழ்வுக்குள்
சுரண்டல்கள் தொடர்கையிலே
உழைப்பாளர் வேர்வையே
அரசியலாக்கப் படுகையிலே
உழைப்பாளர் தினம் மட்டும்
கொண்டாடிப் பயன் என்ன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்தவரிடம் சொல்லாதே...

பு.தட்சிகா



உங்கள் துணையைப் பற்றி யாராவது ஏதாவது விஷ விதையை உங்கள் மனதில் தூவிவிட்டுப் போனாலும் நீங்கள் உஷாராக, தெளிவாக இருக்க வேண்டும். யாரோ சொல்வதைக் கேட்டுக்கொண்டு உங்கள் துணையிடம் பேச்சை வளர்ப்பதற்கு முன்... இதை இப்போது பேசத்தான் வேண்டுமா? இதை பேசுவதால் இந்த உறவு இன்னும் பலப்படுமா? இதற்கு வேறு ஏதாவது விளக்கம் இருக்குமா? என்று முதலில் நீங்களே நன்றாக யோசியுங்கள்.

காதல் அல்லது குடும்ப வாழ்வில் தங்களின் சொந்த விஷயங்களை மூன்றாம் நபர்களிடம் சொல்லிப் புலம்புவது/அலட்டிக்கொள்வது /ஆலோசனை கேட்பது என்ற மாபெரும் தவறை அடிக்கடி பெண்கள் இழைக்கிறார்கள்.

இதில் நிறைய உளவியல் நுணுக்கங்கள் உள்ளன. பெண்களுக்கு மூளையில் மொழிக்கு உண்டான மையம் கொஞ்சம் கூடுதல் அளவு என்பதால், பொதுவாகவே எல்லாப் பெண் களும் கதை கேட்டுக் கொள்வதிலும், கதை சொல்வதிலும் கெட்டிக்காரர்கள். அதனை தமக்குப் பிடித்தமான ஒரு பொழுதுபோக்காக வைத்திருப்பார்கள். கதை சொல்கிறவள் தான் எந்த மனநிலையில் இருக்கிறாளோ என்பதைப் பொறுத்து, தனது கணவனை/காதலனை கரித்துக் கொட்டுவாள்; தூக்கி வைத்து புகழும் பாடுவாள். சங்க இலக்கிய பாடலில் வருவது போல, அவன் இணக்கமாக கூடவே இருக்கும் போது, குளத்துப் பாசி கால் பட்டதும் விலகு வதை போல அவள் மனம் தெளிவாக இருக்கும். 'ஆஹா... எனக்கு வாய்த்த கணவன்/காதலன் எவ்வளவு நல்லவன்!' என்று எண்ணி புளகாங்கிதம் அடைவாள். அவனே சற்று விலகினால் போதும். மீண்டும் அவள் மனமெனும் குளத்தில் பாசி படர்ந்து மூடிவிடும். குழப்பங்கள் தலை தூக்கும். 'சீ... இவனெல்லாம் ஒரு மனுஷனா?' என்று அவனை குறை கூறி வம்பிழுக்க தயார் ஆகிவிடுவாள். இது சொந்தக் கதை சொல்பவளின் மனநிலை. கேட்பவளின் மனநிலை எப்படி இருக்கும்? அவள் ஒரு சந்தோஷமான இல்வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருப்பவளாக இருந்தால், 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்று தாராள மனதுடன் இருப்பாள். இதுவே இல்லற வாழ்வில் பிரச்சினைகளைச் சந்தித்துக் கொண்டிருக்கும் பெண்ணாக இருந்தால், '' இந்த ஆம்பிளையள் ஒருத்தருமே நல்லவன் இல்லை. எல்லாருமே கடைந்தெடுத்த கயவர்கள்.'' என்று பொத்தாம் பொதுவாக போட்டுத் தாக்கிவிடுவாள்.

இன்றைய நிலைவரப்படி நமது பெண்களில் பலருக்கும் இல்லற வாழ்க்கை அவ்வளவு ஒன்றும் இனித்துக் கொண்டிருக்கவில்லை. ஏதாவது மனக்குறை, போராட்டம், கசப்பு உணர்ச்சி இருக்கத்தான் செய்கிறது. அதனால், இந்த கசப்பு உணர்ச்சியை உங்கள் மீதும் அள்ளி தெளித்துவிடும் அபாயம் எப்போதுமே இருக்கிறது.

இதைவிடக் கொடுமை, பொறாமைக் குணம்.

''அட, இவளுக்கு எல்லாம் இப்படி ஒரு நல்ல வாழ்க்கை அமைந்து விட்டதே. நான் மட்டும் இப்படி கடந்து கஷ்டப்படுகிறேனே'' என்கிற ஒப்பீடு, சுயபரிதாபம், வயிற்றெரிச்சல் அதிகம் என்பதால், நீங்கள் உங்கள் துணையைப் பற்றி ஏதாவது விளையாட்டாக அல்லது அந்த நேர ஆத்திரத்தில் சொல்லும் விஷயத்தைக்கூட அவர்கள் பெரிதுபடுத்தி, எரிகிற சின்ன நெருப்பில் கொஞ்சம் கூடுதலாக எண்ணெயை ஊற்றி வைத்தார்கள் என்று வையுங்கள்... பஸ்பமாகப்போவது உங்க ளுடைய வாழ்க்கைதான்.

பெண்களுக்கு கோபம் வந்துவிட்டால், யோசிக்கவே மாட்டார்கள். எசகுபிசகாக எதையாவது செய்துவிட்டு, பிறகு 'ஐயோ போச்சே' என்று வருந்திக் கொண்டிருப் பார்கள். இவள் சொன்னாள், அவள் சொன்னாள் என்று வேறு யாரோ ஒருவருடைய தாக்கத்தால் அப்படியே போய் தமது துணைவர்களுடன் சண்டை போடுவது, வம்பிழுப்பது, பிரச்சினைகளை உருவாக்குவது... இதெல்லாம் தங்களுக்குத் தாங்களே குழிபறித்துக் கொள்வது போலத்தான்! யாருடைய தாக்கத்தால் இவள் வந்து பேசுகிறாள் என்று புரியாமல் பாவம் அந்தக் காதலன்/கணவனும் காயப்பட்டு போகி றான். சில சமயங்களில் இதனாலேயே உறவில் பெரிய விரிசலே வந்து விடுகிறது.

எனவே, உங்கள் துணையைப் பற்றி யாராவது ஏதாவது விஷ விதையை உங்கள் மனதில் தூவிவிட்டுப் போனாலும் நீங்கள் உஷாராக, தெளிவாக இருக்க வேண்டும். யாரோ சொல்வதைக் கேட்டுக்கொண்டு உங்கள் துணையிடம் பேச்சை வளர்ப்பதற்கு முன்... இதை இப்போது பேசத்தான் வேண்டுமா? இதை பேசுவதால் இந்த உறவு இன்னும் பலப்படுமா? இதற்கு வேறு ஏதாவது விளக்கம் இருக்குமா? என்று முதலில் நீங்களே நன்றாக யோசியுங்கள். யோசிக்கும்போது உங்கள் காதலன்/கணவ னின் நல்ல குணங்களை நினைவுக்குக் கொண்டு வந்து, அந்த பின்புலத்தில் நடந்து அண்மை சம்பவத்தை அசைபோடுங்கள். உண்மையில் அவர் மேல்தான் தவறு என்றாலும் அன்றைய ஒருநாள் வாக்கு வாதத்தை விட, ஒட்டுமொத்த வாழ்க்கைதான் முக்கியம் என்பதை புரிந்துகொண்டு நிதான மாகப் பேசுங்கள். அநாவசியமான வார்த் தைகளை விடாதீர்கள்.

தொடர்ந்து ஒருவர் உங்களுக்கு தவறான கருத்துக்களையோ, யோசனைகளையோ கொடுப்பதாக தோன்றினால், அந்த நபரிடம் கவனமாக இருங்கள். வெளித்தோற்றத்தில் உங்களுக்கு உதவி செய்யும் பாவனையில் உண்மையில் அந்த நபர் உங்களுக்கு உலை வைத்துக் கொண்டிருக்கலாம். அதனால் எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும், அப்பொருள் மெய்ப்பொருளா என்று அலசி ஆராய்வதுதான் அறிவு.

எல்லாப் பெண்களுக்குமே உலகிலேயே தாம்தான் அழகாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் இருப்பது இயல்பு. எனினும் தங்களுடைய இயற்கை அழகை இன்னமும் மேம்படுத்துவதற்காக செயற்கையாக அழகு நிலையங்களுக்கு அடிக்கடி சென்று வருவார்கள். இதனால் அழகு கிடைக் கிறதோ என்னவோ பணம் மட்டும் கரைவது உறுதி. ஆனால், உண்மையில் இயற்கையாகவே உடலாலும் உள்ளத்தாலும் தம்மை பேணும் பெண்கள் எப்போதுமே அழகிகள்தான். அவ்வாறு இயற்கையாகவே நீங்களும் அழகிகளாக மாற இதோ சில குறிப்புகள்.

★ பசுமையான மரம் செடி கொடி களை அடிக்கடி பார்ப்பது, கண் ணுக்கு குளிர்ச்சி. மனதுக்கும் மகிழ்ச்சி.

★ கன்னம் ஒட்டிப் போய் இருக்கிறதா? தினமும் வாயில் தண் ணீர் ஊற்றி கன்னத்தின் உட்பகுதி விரியுமளவுக்கு நன்றாக கொப்பளியுங்கள்.

★ ஆடை அணிவது முதலில் வசதிக்காக என்பது நினைவிருக்கட்டும். உடை உடலை கவ்விப் பிடிக்கும் அளவுக்கு இறுக்கமாக இருக்க வேண்டாம். இலகுவாக இருக்கிறது என்று ஓவராக தொளதொளவும் வேண்டாம். கச்சிதமாக இருப்பதே அழகு.

★ வேலைக்கு போகும் பெண்கள் புடைவை கட்டுவதே அழகு. இல்லா விட்டால் சுடிதார், சல்வார் கமீஸ் போன்றவற்றை அணியுங்கள்.

★ வெளியூர் அல்லது உல்லாசப் பயணத்துக்கு ஜீன்ஸ் எப்போதும் வசதிதான். உடல் உழைப்பு அதிகம் தேவைப்படுகிற வேலை என்றாலும் ஜீன்ஸ் வசதியானது. பணியிடத்தில் இடுப்பு அல்லது பின் புறம் முழுமையாக தெரியும் வகையிலான ஆடைகளை தவிர்ப்பது நல்லது.

★ கூந்தலில் சிக்கு விழுகிறது என்ற பயத்தில் பலர் வாரம் ஒருமுறை தலை குளிப்பதைக்கூட தவிர்க்கின்றனர். தலையை குனிந்தபடி கூந்தலை முன்னால் போட்டு கைவிரல் களால் கோதி அழுத்தி நன்றாக அலசி சுத்தம் செய்ய வேண்டும். அழுக்கு எளிதில் நீங்குவதுடன், சிக்கு விழாது. வெயில் காலங்களில் வாரத்திற்கு மூன்று தடவையாவது தலைக்கு குளித்தால் நல்லது.

★ தலையை துடைக்க தனியாக துவாய் வைத்துக்கொள்ளுங்கள். முகத்துக்கு அதே துவாயை பயன்படுத்தும்போது, தலையில் இருக்கக் கூடிய பொடுகு முகத்தில் பருக்கள் வரக் காரணமாகலாம்.

## நீங்களும் உலக அழகிதான்..




## பெண்களுக்கு பிடித்த 10 பொழுது போக்குகள்.....



இயந்திரமயமான இவ்வுலகத்தில் படிப்பதும், வேலை செய்வது மட்டும் வாழ்க்கை என்ற நிலையில் ஒய்வுக்கென சிறிது நேரத்தை ஒதுக்கி பிடித்த பொழுது போக்கில் ஈடுபட்டால் உடலுக்கும் மனதுக்கும் நன்மை பயக்கும்.

**1.சமையல்**

இது ஒரு பொழுதுபோக்கு மட்டும் அல்ல. உயிர் பிழைப்பதற்கான முக்கியமான தேவையும் கூட. உணவுக்காக பிறரை எதிர்பார்த்து எல்லா தருணங்களிலும் நம்மால் இருக்க முடியாது. ருசிக்காக இல்லாவிடிலும் பசிக்காக சமைக்க கற்றுக் கொள்ளலாம்.

**2.நடனம்**

விருப்பமான நடனத்தை கற்றுக் கொள்ளலாம். பல தரப்பட்ட நடன வகைகள் உள்ளன. நடனமாடுவது பார்க்க அழகாக இருக்கும். அத்து டன் அது ஒரு நல்ல உடற்பயிற்சியும் கூட.

**3.படித்தல்**

சிறுகதைகள், காதல் நாவல் அல்லது ஆர்வத்தை தூண்டும் புத்தகங்களை வாங்கிப் படிக்க வேண்டும். இதனால் நிச்சயம் நேரம் போவதே தெரியாமல் இருக்கும்.

**4.ஆடை அலங்காரம்**

சில பெண்களுக்கு தையல் மற்றும் ஆடை அலங்காரம் செய்ய நேரம் கிடைக்கின்றது. அவர்கள் ஏதாவது புதிய முயற்சி எடுக்கலாம். இக்கலையை கற்பதன் மூலம், நாமே ஆடை வடிவமைப்பாளர் ஆகலாம்.


**5.எழுதுதல்**

தூங்கும் முன்பு அன்றாட நடவடிக்கைகளை எழுதலாம். நாள்குறிப்பு எழுதுவதில் நாட்டம் இல்லையெனில் ஏதேனும் விருப்பமுள்ள தலைப்பில் எழுத ஆரம்பிக்கலாம். இந்த வழியில் நல்ல எழுத்து திறமைகளை வளர்த்துக் [illegible]

(அடுத்த வாரமும் சொல்வோம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிமைகளிர்
## ஆபிரஹாம் லிங்
# மீட்ப




■ பா.உண்மை

இறுதியாக 1865, ஏப்ரல் 9-ஆம் திகதி காலை, லீயின் படைகள் சுற்றி வளைக்கப்பட்டன. வேறு வழியே இல்லாமல் லீ சரணடைந்தார். வர்ஜீனியாவில் உள்ள ஒரு சிறிய கிராமத்தில் அப்பொமெட்டாக்ஸ் என்ற இடத்தில் லீ கிராண்டிடம் சரணடைந்தார். அதோடு நான் காண்டு காலமாக நடந்து வந்த அமெரிக்க போர் ஒரு முடிவுக்கு வந்தது.

போரில் இழப்பு பயங்கரமாக இருந்தது. நாண்காண்டு காலப் போரில் அமெரிக்க யூனியன் படையில் 275,200 பேர் படுகாயமடைந்திருந்தார்கள். தென்பகுதி கூட்டுப்படையில் 2,58,000 பேர் இறந்து போயிருந்தார்கள். 1,37,000 பேர் படுகாயமடைந்திருந்தார்கள்.

போரில் வெற்றி பெற்றாகிவிட்டது. இனி என்ன? தென் பகுதி அடிமை முதல்ாளிகளின் பண்ணைகளை பறிமுதல் செய்ய வேண்டும். அவர்களது வாக்குரிமையைப் பறிக்க வேண்டும். இப்படிக் கோரிக்கைகள் வலுத்தன. ஆனால், அவற்றுக்கெல்லாம் செவி சாய்க்கவில்லை லிங்கன்.

'தென் மாநிலங்கள் நம்மை விட்டு பிரிந்து இருந்ததாகவே நாம் நினைக்க வேண்டாம். அவர்களுடன் கை குலுக்குவோம். அந்த மாநிலங்கள், அமெரிக்க யூனியனுடன் எதிர் காலத்தில் நல்ல உறவை ஏற்படுத்திக் கொள்ள நாம் ஒன்று படுவோம்' என்று அறை கூவல் விடுத்தார் லிங்கன்.

> லிங்கன் ஆரம்ப நாள்களிலிருந்து தவறாமல் கடைப் பிடித்த பழக்கம் புத்தகம் படிப்பது. இரவில் படுப்பதற்கு முன்பு கொஞ்ச நேரமாவது படிப் பார். ஜனாதிபதியாக இருந்தபோது ஷேக்ஸ்பியரின் நூல்களை விரும்பிப் படித்தார்.

### ஓரங்க நாடகத்தின் விடுபட்ட காட்சிகள்

உள்நாட்டுப் போர் நடந்து கொண்டிருந்த சமயம், அன்னா என்ற பெண் லிங்கனைப் பார்க்க வந்திருந்தார். அன்னாவின் கணவர் கிங். அமெரிக்க யூனியன் ராணுவத்தில் வேலை பார்த்தவர். ஒரு நாள் சொல்லாமல் கொள்ளாமல் ராணுவத்தை விட்டு ஒடி வந்ததற்காக, ராணுவ நீதிமன்றம் அவருக்கு மரண தண்டனை விதித்திருந்தது. செய்தியைக் கேட்டு துடித்துப் போன அன்னா, எங்கெங்கோ ஒடினார். யார் யாரையோ பார்த்தார். ஒன்றும் நடக்கவில்லை. எல்லோருமே அவரது கணவனைக் காப்பாற்ற முடியாது என கையை விரித்தார்கள். அந்தச் சமயத்தில் அன்னாவுக்கு உதவுவதாகச் சொன்ன ஒருவனும் எரிகிற கொள்ளியில் எண்ணெய் ஊற்றினான்.

'முந்நூறு டொலர் கொடுங்கள். உங்கள் கணவருக்கு மரண தண்டனை இல்லாம செய்திடலாம். மன்னிப்பு வாங்கிக் கொடுத்துவிடலாம்.' இப்படி படு பகிரங்கமாக இலஞ்சம் கேட்கப் பட்டதும் திகைத்துப் போனார் அன்னா. நீதிகேட்டு அவர் நடந்த அந்த நெடிய பயணத்தில் அவர் கடைசியாகத் தட்டிய கதவு, ஜனாதிபதி ஆபிரஹாம் லிங்கனின் மாளிகைக் கதவு.

லிங்கன் அன்னா சொன்னதையெல்லாம் பொறுமையாகக் கேட்டார். அந்த பெண்ணுக்கு ஆறுதல் சொன்னார். பொட்டொமெக் ராணுவத்தின் தளபதி மீடுக்கு அன்றைக்கே ஒரு கடிதம் எழுதினார். 'கிங் என்பவருக்கு கொடுக்கப் பட்ட மரண தண்டனையை நிறுத்தி வையுங்கள். அத்தோடு கிங்கின் மரண தண்டனையை ரத்துச் செய்தார். கிங்கை போர் முனைக்கு சண்டை போட அனுப்பிவைத்தார். அந்தக் காலத்தில், அமெரிக்காவில் ராணுவத்திலிருந்து ஓடி வருபவர்களுக்கு ராணுவ நீதி மன்றத்தில் மரண தண்டனை வழங்கும் வழக்கம் இருந்தது. அன்னாவின் கணவர் கிங்குக்கான மரண தண்டனையைப் போல ஒன்றல்ல, இரண்டல்ல ஆயிரக் கணக்கான பேரை மரண தண்டனையிலிருந்து காப்பாற்றி படையில் சேர்த்திருக்கிறார் லிங்கன்.

லிங்கன் ஸ்பிரிங்ஃபீல்டில் இருந்த போது, காச நோய்க்கு ஆளாகியிருந்தார். அது அவரை ஜனாதிபதியான பிறகும் கூட விடாமல் பிடித்துக் கொண்டிருந்தது. எனவே சுத்தமான காற்றை சுவாசிப்பதற்காக மாலை நேரத்தில், தம் குதிரை வண்டியில் ஏறி உலாப் போவார் லிங்கன். அப்படிப் போகும் போது அவர் தவறாமல் போகிற இடம் மருத்துவமனை. வண்டியை மருத்துவமனை வாசலில் நிறுத்திவிட்டு உள்ளே போவார். போரில் காயமடைந்த வீரர்களுக்கு ஆறுதல் சொல்வார். அந்த மருத்துவமனையில் தென்பகுதிப்படைகளைச் சேர்ந்த வீரர்களும் சிகிச்சை பெற்று வந்தார்கள். அவர்களுக்கும் ஆறுதல் சொல்வார் லிங்கன்.

லிங்கன் ஆரம்ப நாள்களிலிருந்து தவறாமல் கடைப்பிடித்த பழக்கம் புத்தகம் படிப்பது. இரவில் படுப்பதற்கு முன்பு கொஞ்ச நேரமாவது படிப்பார். ஜனாதிபதியாக இருந்தபோது ஷேக்ஸ்பியரின் நூல்களை விரும்பிப் படித்தார்.

அதிலும் [illegible]

திரும்பத் திரும்பப் படித்தார். அதே போல ஓய்வான நேரங் களில் வரவேற்பறையில் அமர்ந்து இசை கேட்பது அவருக்கு மிகவும் பிடிக்கும்.

புத்தகம், இசை, நாடகம் இவற்றின் மீது இருந்த ஈடுபாடு கூட அவருடைய மரணத்துக்குக் காரணமாக அமைந்துவிட்டது. ஒரு நாடகத்தைப் பார்க்கப் போகும் போதுதான் அவர் சுடப்பட்டார். உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்த ஐந்த... நாள். இந்த தொடரின் ஆரம்பத்தில் பார்த்த அதே தினம். 18... ...ரல் 14. ஆபிரகாம் லிங்கனின் ஒரு நாள் வாழ்க்கைக் ...க் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**காலை 7 மணி**

ஏழு மணிக்கு எழுந்தார் லிங்கன். அன்றைய வெ... கிழமைப் பொழுது அழகான வசந்த காலமாக இ... காற்றில் புத்தம் புது மலர்களின் வாசனை மிதந்து ... பொடொமெக் ஆற்றின் கரையிலிருந்த செடிகளின் ... கண்ணுக்குக் குளிர்ச்சியாக இருந்தது. காலை உ... சாப்பிடுவதற்கு முன்பாக லிங்கன் ...மது அலுவலகத்துக்குப் போனார். தமது மேசையின் முன் அமர்ந்து கொஞ்ச நேரம் வேலை பார்த்தார். பிரத்...யேக செயலாளரை அழைக்கும் அழைப்பு மணியை அடி...ார். உதவி செயலாளர் பிரெடரிக் சீவர்ட் லிங்கன் முன்னால் ...ந்து நின்றார். (ஒரு விபத்தில் சிக்கி செயலாளர் வில்லியம் சீவர்ட் படுக்கையில் கிடந்தார்.) 11 மணிக்கு கபினட் மீட்டிங்குக்கு ஏற்பாடு செய்யச் சொன்னார் லிங்கன். தளபதி யூலிசிஸ் கிராண்டையும் கபினட் கூட்டத்துக்கு வரச் சொல்லி குறிப்பை எழுதிக் கொடுத்தார் லிங்கன்.

**காலை 8 மணி**

ஆபிரகாம் லிங்கன் தமது காலை உணவைச் சாப்பிட்டார். பொதுவாக அவர் காலை நேரத்தில் ஒரு முட்டையும் ஒரு கப் கோப்பியும் சாப்பிடுவார். அன்றைக்கு டைனிங் டேபிளில் மேரி டாடும், ராபர்ட்டும், டேடும் உட்கார்ந்திருந்தார்கள். அவர்களோடு அமெரிக்க யூனியன் படையில் இருந்தபோது நடந்த சம்பவங்களை விவரித்துக் கொண்டிருந்தார். மேரி டாட், குரோவர் தியேட்டருக்குப் போக டிக்கெட்டுக்களை வைத்திருப்பதாகவும் ஆனால் போர்ட் தியேட்டரில் நாடகம் பார்க்கத்தான் தமக்கு விருப்பம் என்றும் சொன்னார். தளபதி கிராண்டும் அவரது மனைவியும் கூட நாடகம் பார்க்க வரவிருப்பதாகச் சொன்னார். நீங்களும் வருகிறீர்களா? என்று கேட்டதற்கு லிங்கன் பார்க்கலாம், இப்போதுநான் அவசரமாக அலுவலகத்துக்கு போக வேண்டியிருக்கிறது என்று சொன்னார்.

**காலை 9 மணி**

அன்றைய செய்தித் தாள்களைப் படித்தார். அன்றைய முதல் பார்வையாளரான நாடாளுமன்ற சபாநாயகர் ஸ்ச்சுய்லெர் கால்பாக்ஸிடன் கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்தார்.

**காலை 10 மணி**

லிங்கனைப் பார்க்க நிறையப் பார்வையாளர்கள் வந்திருந்தார்கள். அவர்களில் ஒருவர் நியூ ஹேம்ப்ஷைரின். முன்னாள் செனட்டரான ஜான்.பி.ஹேல் சமீபத்தில்தான் மந்திரியாக நியமனம் செய்யப்பட்டிருந்தார். (இவருடைய மகள் லூஸிதான் ஜான் வில்கிஸ் பூத்தின் மனைவி) பிறகு லிங்கன் ஒரு வேலையாளை அழைத்து அன்று மாலை போர்ட் தியேட்டருக்குப் போக வேண்டும் என்றும் பொக்ஸ் கேபின் அறையை ரிசவ் செய்யும்படி சொன்னார். போர்ட் தியேட்டரின் நிர்வாகம் அன்று மாலை அமெரிக்கன் கஸின் நாடகத்தைப் பார்க்கச் சிறப்பு விருந்தினர்கள்வர இருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டு பெருமைப்பட்டுக் கொண்டது.

(மீட்பர் வருவார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றி பெறலாம் வாங்க!

49



உங்கள் வாழ்க்கையை மாற்றப்போகும் தொடர்....

ராகவன் அல்பி

உங்கள் குழந்தைகளின் மனதில் லட்சியங்களை விதைப்பதற்காக 10 வழிகள்

**உற்சாகப்படுத்துங்கள் :-** யாராவது ஒருவர் பிரதமர் ஆகித்தான் ஆக வேண்டும். உங்கள் குழந்தை ஒரு குறிப்பிடத்தகுந்த சாதனையைச் செய்ய ஆசைப்பட்டால், அந்த ஆசையை அழித்துவிடாதீர்கள். அவர்களை அந்த வேலையைச் செய்யும் வகையில் ஊக்குவித்து, அதை எவ்வாறு செய்கிறார்கள் என்பதைப் பாருங்கள்.

**சவால் விடுங்கள் :-** உங்கள் குழந்தைகளைப் பூவைப் போலப் பொத்திப் பொத்தி வளர்த்தால், உலகமானது அவர்களை ரொம்பப் பயமுறுத்துவதாய் மாறிவிடும். அதனால் அவர்களுக்குச் சவால் விடுங்கள். அது அவர்களது திறமையை வளர்க்கும். அவர்கள் வெற்றி பெற்றால் அதை அவர்களுடன் சேர்ந்து கொண்டாடுங்கள்.

**உலகத்தைப் பார்த்தால் :-** உங்கள் குழந்தைகளுக்கு வெளி உலகத்தை, புதிய விடயங்களை, புதிய நபர்களைத் தெரிந்துகொள்ள அனுமதியுங்கள். வீட்டுக்குள்ளே இருந்தால் உல[illegible]தை மாற்றிவிட முடியாது. நிறைய ப[illegible]ம் செய்ய வேண்டும்.'

**புத்தகங்க[illegible] வாங்குதல் :-** சரி .. ஒரு எழுத்தாளர் புத்தகங்களை வாங்கச் சொல்லிப் பரிந்துரை செய்வதென்பது இயல்பான விடயம் தா[illegible]சிப்பது மனதை விசாலமாக்கும். [illegible]தை மனதில் விதைக்கும், அதனால் [illegible]றையப் புத்தகம் வாங்குங்கள்.

**நாயகர்க[illegible] கொண்டாடுதல் :-** நமக்குப் பிடித்த நா[illegible]ர்களைக் கொண்டாடுவது என்பது தவறான விடயமில்லை. உண்மையில் இது லட்சியத்தில் முழுக் கவனத்தையும் செலுத்துவதற்கு அருமையான வழியாகும். குழந்தைகளை அவர்கள் கனவு நாயகர்கள் என்ன செய்தார்கள் என்பதைத் தெரிந்து கொள்ளச் செய்யுங்கள்.

**பங்கு வகித்தல் :-** கற்பனைத் திறன் மிகுந்த நாடகங்கள், கற்பனை மிகுந்த சிந்தனையைத் தூண்டும். குழந்தைகள் இதை இயல்பாகச் செய்வார்கள். அதை மேலும் அவர்கள் செய்யும் வகையில் தூண்டுங்கள்.


**விளையாட்டு :-** குழந்தைகள் மற்றச் சிறுவர்களுடன் தொடர்ந்து விளையாடினால் அவர்கள் தன்னம்பிக்கை நிறைந்தவர்களாக ஆவார்கள். மற்றவர்களிடம் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்துவது என்பதையும் உணர்ந்து கொள்வார்கள்.

**மாற்றத்தை ஏற்றுக் கொள்ளுங்கள் :-** வானவியலில் ஆர்வம் கொண்ட சிறுவன் தான் பின்னாளில் பெரும் விமான ஓட்டியாக ஆவான். அப்படி ஆவதென்பது சாத்தியம் என்று சொன்னால் ... குழந்தைகளும் நேர்மறையாகச் சிந்திப்பார்கள். விமான ஓட்டியாக ஆவதென்பது சாத்தியம் என்றும் எண்ணுவார்கள்.

**பணமே எல்லாமும் அல்ல :-** உங்கள் பிள்ளைகளை அதிகம் சம்பாதிக்கும் வேலைகளுக்குத்தான் செல்ல வேண்டுமென கட்டாயப் படுத்தாதீர்கள். வாழ்க்கையில் பணத்தைவிட முக்கியமான விடயங்கள் உள்ளன.

**எதுவும் நம்மால் முடியும் :-** ஒவ்வொரு நபரும் முக்கியமானவர்தான், தனித்துவமானவர்தான். மேலும் இன்றைய உலகத்தில் எதுவும் சாத்தியம் தான்; எதையும் நம்மால் சாதிக்க முடியும். அதனால் அவர்களது லட்சியங்களை அலட்சியப்படுத்தாதீர்கள். அவர்களுக்குத் துணிவை ஊட்டுங்கள். நம் பெற்றோராக இருந்தாலும், இல்லாவிட்டாலும் குழந்தைகள் நம் அனைவருக்கும் முக்கியமானவர்கள் தான். அவர்கள் தான் வருங்காலச் சந்ததியினர் என்பதுடன், அவர்கள் நம் வாழ்க்கையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துபவர்களாகவும் இருக்கிறார்கள்.
நம் அனைவருக்குமே நம் குழந்தைகளின் வாழ்வில் நேர்மறையான பங்களிப்பைச் செலுத்துவதற்கான வாய்ப்புகள் உள்ளன. அதை எவ்வாறு செய்யப் போகிறோம் என்பதை நம் வாழ்க்கைத் திட்டத்தில் ஒன்றாக வைத்துக்கொள்ள வேண்டும்.

**உங்கள் குழந்தைகளைப் பூவைப் போலப் பொத்திப்பொத்திவளர்த்தால், உலகமானது அவர்களை ரொம்பப் பயமுறுத்துவதாய் மாறிவிடும். அதனால் அவர்களுக்குச் சவால் விடுங்கள். அது அவர்களது திறமையை வளர்க்கும். அவர்கள் வெற்றி பெற்றால் அதை அவர்களுடன் சேர்ந்துகொண்டாடுங்கள்.**




## நீளங்கள் அகலமாகின்றன

கலைக்கப்படும் தேன்
கூடுகளல்ல
கலைக்கான கல்வெட்டுக்கள்
உன் நினைவுகள்
புரட்டிப் படிக்கப்படும்
என் சரித்திரத்தின்
பக்கங்களில்
உன் புகழையும் சேர்த்து
உலகம் சுவாசிக்கட்டும்
நான் முயற்சித்த முதல்
தருணத்திலிருந்து
பல தோல்விகளை சந்தித்தபோது
தோல்விகளை தாங்கும்
தோளாக என்னுடன் சேர்ந்தாய்
இந்த உலகெனும் கிறுக்கல்களில்
என்னை அழகான ஓவியமாக
வரைந்து பெருமைப்படுத்தினாய்
என் விதியை என்ன சொல்ல...
இன்று
பணம் பேசுகின்ற போது
உண்மைகள் ஊமையாகி விடுகின்றன
காலம் தோல்விகளை
விழுங்கித்தான்
வெற்றியைத் துப்பும்

காவேரி,
மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரம்வெட்டி மாடசாமி!



ஓர் ஊரில் 'மரம்வெட்டி மாடசாமி' என்று ஒருவர் இருந்தார். அவர் எப்பொழுதும் மரங்களை வெட்டிக்கொண்டே இருப்பார். கேட்டால் 'வயிற்றுப் பிழைப்புக்காகத்தானே!'' என்பார்.

மாடசாமிக்கு ஒரு மகன் இருந்தான். அவன் பெயர் மாணிக்கம். அவன் பக்கத்து ஊரில் இருக்கும் தொடக்கப் பள்ளியில் மூன்றாம் வகுப்பு படிக்கிறான். தினமும் தன் நண்பர்களோடு நடந்தே பள்ளிக்குச் செல்வான். மதிய நேரம்,



தன் அம்மா கொடுத்த உணவை நண்பர்களோடு பகிர்ந்து சாப்பிடுவான். மாலையில் பள்ளி முடிந்ததும் நண்பர்களோடு வீடு திரும்புவான்.

மாடசாமி மரங்களை வெட்டுவது மாணிக்கத்துக்கு வருத்தமாக இருக்கும். அவர் தனது தேவைக்கும் அதிகமாகவே மரங்களை வெட்டித் தள்ளுவது அவனுக்குச் சுத்தமாகப் பிடிக்கவில்லை.

'அப்பா, இப்படி மரங்களை வெட்டாதீர்கள். மரங்கள் இருந்தால்தான் மழை பெய்யும்' என்பான் மாணிக்கம். அதற்கு, 'நீ நல்லாப் படிச்சு நல்ல வேலைக்குப் போ'' என்று சிரித்தபடியே சொல்வார் மாடசாமி.

ஒரு நாள் காலையில் வழக்கம்போல் நண்பர்களுடன் பள்ளிக்குச் சென்றான் மாணிக்கம். வழியில் ஒரு சிறு நீரோடையைத் தாண்டினால், இருபுறமும் மரங்கள் அடர்ந்த மண்பாதை வரும். வழியெல்லாம் நிழல் படர்ந்து இருக்கும். ஆனால், இப்போது அந்தப் பாதையோர மரங்கள் எல்லாம் வெட்டப்பட்டு வெயில் 'சுள்' என்று எரித்தது.

அன்று பள்ளியில் மரம் நடும் விழா நடந்தது. ஆசிரியர்களின் உதவியால் தன் நண்பர்களைச் சேர்த்துக்கொண்டு நிறைய மரக் கன்றுகளை நட்டான் மாணிக்கம். அவன் மனம் மிகவும் மகிழ்ச்சி அடைந்தது. அன்று மதிய இடைவேளைக்குப் பிறகு, வானம் இருட்டிக்கொண்டு மழை பெய்ய ஆரம்பித்தது. இடியுடன் கூடிய பலத்த மழை. சீக்கிரமே பள்ளி முடிந்துவிட்டது. மாணவர்கள் நனைந்துகொண்டே ஓட்டமும் நடையுமாக வந்தார்கள். வழியில் இருந்த சிறு நீரோடையில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. இருட்டிவிட்டது. சற்று பெரிய சிறுவர்கள் நீந்தி வீடுவந்து சேர்ந்தார்கள். மாணிக்கம் மட்டும் வரவில்லை. அவன் வெள்ளத்தில் சிக்கிக்கொண்டதை வீட்டில் போய்ச் சொன்னார்கள் மாணவர்கள்.

மாடசாமியும் அவர் மனைவியும் விளக்குடன் மாணிக்கத்தைத் தேடிக் கிளம்பினார்கள். சரியான இருட்டு. எங்கு திரும்பினாலும் தண்ணீர். தூரத்தில் கருமையாக நின்றிருந்த ஒரே ஒரு மரத்தைக் கண்டார் மாடசாமி. அது சிறிய மரம் என்று அவர் வெட்டவில்லை. பக்கத்தில் சென்றதும் பதறிப்போனார். அந்த மரத்தைத் தன் பிஞ்சுக் கைகளால் அணைத்தபடி அரை மயக்கத்தில் இருந்தான் மாணிக்கம். பயத்தில் நடுங்கிக்கொண்டு இருந்தான்.

வீட்டுக்கு வந்தபின், ''அந்த மரம்தான் என்னைக் காப்பாற்றியது. இனிமேலாவது மரங்களை வெட்டாதீர்கள்'' என்றான் மாணிக்கம்.

இப்போது மாடசாமி மரம் வெட்டுவது இல்லை. வயலில் கூலி வேலை செய்கிறார்.

## அம்மா



துள்ளிவரும் மான்குட்டி போல்
என்னைத் தாயார்
தன் தோளில் வைப்பார்
தென்னை மரம் இளநீர்
தரும் போல
எமக்கு பால் தந்து வளர்த்து
நாம் பள்ளிப்பருவத்தை அடைந்ததும்
பள்ளி சென்று கொண்டேவிட்டு
வரும்போது கால் வலிக்காமல் தோளில்
கொண்டுவரும் அம்மா! அம்மா! அம்மா!
பாசம் காட்டும் அம்மா அம்மாவை
என்றும் மறவோம்.

ராகப்பிரியா
யாழ்/இந்துக் கல்லூரி
தரம் 6'பி'

## எனது இல்லம்

நேர்மையுடனும், அறிவுத் திறனையும், மனப் பாங்குகளை வளர்க்கும் இடமாக எனது இல்லம் அமைந்துள்ளது.

வறுமையுடன் எனது கல்வியை இழந்தவுடன் என்னை அரவணைத்து எனக்கு பாசத்தை ஊட்டி என்னை நற்பிரசையாக ஆக்கிக் கொண்டிருக்கும் எமது இல்லத்திலிருந்து நான் சுதந்திரம், தலைமைத்துவப் பண்பு, விட்டுக்கொடுத்தல், ஒற்றுமை உணர்வு, பிறருக்கு உதவி செய்தல் ஆகிய நற்பண்புகளைசெஞ்சோலைச் சிறுவர் இல்லத்தில் கற்றுக் கொண்டுள்ளேன் என்பதனை மகிழ்வுடன் கூறுகின்றேன்.

வி.நிசா, தரம் -8,
செஞ்சோலைச் சிறுவர் இல்லம், கிளிநொச்சி.

## விடை தெரியுமா? 209

### உங்களுக்கும் பரிசுகள்

1. உலகின் மிகப் பெரிய புத்தகம் எந்த நாட்டில் உள்ளது?
2. கிழக்குத் தீமோர் எந்த நாட்டிலிருந்து பிரிந்து சுதந்திரம் பெற்றது?
3. 'காகித விழா' எப்போது கொண்டாடப் படுகின்றது.
4. சர்வதேச தொழிலாளர் தினம் எப்போது அனுஷ்டிக்கப்படுகின்றது?
5. பல மில்லியன் மக்கள் பட்டினியால் வாடும் ஆபிரிக்க நாடு எது?

சிறுவர் கதிருக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்பும்
சிறார்கள் ''சிறுவர்கதிர்'',
உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும்
முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

**விடை தெரியுமா?**

தெரிந்தால் 11.05.2013 இற்கு முன்வர் சரியான விடைகளை அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75வீதமும் பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

**விடைகள் 207**

1. அலுமினியம்
2. அமெரிக்கா
3. இலத்தீன் மொழி
4. உமறுப் புலவர்
5. ஹொங்கொங்

**வெற்றி பெற்றோர் விவரம் (207)**


* ச.அலக்ஷன், தரம்-6பி, கிளி/ அக்கராயன் மகா வித்தி.

## விடுகதைகள்

1. வெள்ளைப் பாம்பு கல்லைத் தூக்கும் அது என்ன?
2. வெள்ளைப் பிள்ளையார் கோயிலுக்குள் விழுந்து கும்பிட இடம் இல்லை அது என்ன?
3. மாடு ஏறி மிதிக்காத மகிழம் பூத் தொட்டி யிலே மண் ஏறி மடி குடிக்குது அது என்ன?
4. ஆயிரம் பேர் கூடி கட்டிய மண்டபம் ஒருவன் கண் பட்டு குலைந்தது அது என்ன?
5. பால் கறப்பது எப்படி?

சு.ஆர்த்திகா, தரம் -9டி,
யா/ வேம்படி மகளிர் உ[illegible] பாடசாலை.

விடைகள்
1. புடோலங்காய்
2. முட்டை
3. கள்ளு[illegible]
4. தேன் கூடு
5. குந்தி இருப்பதன் மூலம்



## போசணைக் கூறுகளின் குறைபாட்டினால் ஏற்படும் நோய்கள்

| போசணைக்கூறு - | | குறைபாட்டு நோய் |
|---|---|---|
| புரதம் - | | குவாசியக்கோர் |
| விற்றமின் | A - | மாலைக்கண் |
| விற்றமின் | B - | குருதிச் சோகை |
| விற்றமின் | C - | ஸ்கேவி நோய் |
| விற்றமின் | D - | எலும்புருக்கி நோய் |
| விற்றமின் | E - | மலட்டுத் தன்மை |
| கல்சியம் - | | முரசு கரைதல் |
| அயடீன் - | | தொண்டைக்கழலை |
| இரும்பு - | | குருதிச் சோகை |

நா.ரினுஷா, தரம் -5,
யா/ சங்குவேலி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி...

06.05.2013 முதல் 11.05.2013 வரை

தருபவர் - வித்தியா

**மேடம்**- உங்களின் சிறிய முயற்சியும், அதிக அளவிலான நன்மையை பெற்றுத் தரும். எண்ணத்தில் இருந்த எதிர்மறை சிந்தனை விலகும். உறவினர்களிடம், சுமுக அன்பு பாராட்டுவீர்கள். எதிரியிடம், சமயோசிதமாக விலகுவது நல்லது. இல்லறத்துணை உங்களின் கருத்துக்களை மதித்து, குடும்ப ஒற்றுமை பாதுகாத்திடுவார். தொழில் முன்னேற்றம் பெற கூடுதல் உழைப்பும், கண்காணிப்பும் அவசியம். மாணவர்கள் ஆடம்பரச் செயல்களைத் தவிர்ப்பது நல்லது.

**இடபம்**- உங்களின் பேச்சு, அணுகுமுறையில் பலரும் பாராட்டுகிற் நன்னிலை ஏற்படும். உழைப்பின் மூலம், கூடுதல் பணவருமானம் பெறுவதற்கான வாய்ப்பு உருவாகும். மன உறுதியுடன் பயன்படுத்தி, திருப்திகர பணவரவு பெறுவீர்கள். பிரச்சினைகளுக்கு நல்ல தீர்வு கிடைக்கும். இல்லறத்துணை விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை செழிக்கும். உத்தியோகத்தர்களுக்கு, புதிய சலுகைப் பயன் கிடைக்கும். மாணவர்கள், வெளியிடம் சுற்றுவதைக் குறைத்துக் கொள்வது நல்லது

**மிதுனம்**- உங்கள் வாழ்வியல் நடைமுறையில் புதிய மாற்றமும், வியத்தகு நன்மையும் உருவாகும். நீண்டநாள் நினைத்த லட்சியங்களை செயற்படுத்துவீர்கள். நண்பர், உறவினர் மனமுவந்து உதவுவர். எதிரி செய்த தீய செயல், பலமிழந்து நன்மை தருவதாக மாறும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணி நிறைவேறும். பணியாளர்களுக்கு கூடுதல் வேலைவாய்ப்பு, சம்பள உயர்வு கிடைக்கும். மாணவர்கள், புதிய பயிற்சி மேற்கொள்ள அனுகூலம் உண்டு

**கடகம்**- உங்களின் அறிவுத்திறன், செயல்திறன் வளரும். பிறர் மனம் அறிந்து பேசி, நற்பெயரைப் பாதுகாத்திடுவீர்கள். உடன் பிறந்தவர், உதவிகரமாக நடந்து கொள்வர். இல்லறத்துணையிடம், குடும்பத்தின் பழைய விவகாரம் குறித்து பேச வேண்டாம். தொழில், வியாபாரம் செழிக்க, புதிய நுட்பங்களைப் பயன்படுத்துவீர்கள். பணியாளர்கள் பணி சிறக்க, கூடுதல் பயிற்சி மேற்கொள்வர்.

**சிங்கம்**-உங்கள் மனதில் தைரியம் அதிகரிக்கும். துணிச்சலுடன் செயற்பட்டு புகழ்பெறுவீர்கள். இல்லறத்துணை, கருத்து ஒற்றுமையுடன், உங்களின் நலம் பேணிக்காத்திடுவார். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற, அனுகூல காரணி பலம் பெறும். உத்தியோகத்தர் பாராட்டு, வெகுமதி பெறுவர். குடும்ப பெண்கள், கணவரின் நல்ல குணங்களை மனமுவந்து பாராட்டுவர். மாணவர்கள், அதிக விலை உள்ள பொருள்களை, கவனமுடன் பயன்படுத்த வேண்டும்.

**கன்னி**-பேசுவதில் நிதானம் பின்பற்றுவதால், பல வித நன்மைகளும் எளிதாக கிடைக்கும். உறவினர் கூடுதல் அன்பு பாராட்டுவர். எதிரியால் இருந்த தொல்லை விலகும். இல்லறத்துணை கூடுதல் அன்பு, பாசத்துடன் நடந்து வாழ்வை சந்தோஷமாக்குவர். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரித்து உபரி பணவரவு கிடைக்கும். பணியாளர்கள், குடும்பத்தேவை நிறைவேற்ற அதிக கவனத்துடன் பணிபுரிவர்.

**துலாம்**- உங்கள் செயல்களில் உண்மை, நேர்மை குணங்களை அதிகம் பின்பற்ற வேண்டும். பொது விவகாரங்களைக் கவனிப்பதில் இருந்து, விலகுவது நல்லது. உழைப்பது ஒன்றே செயல் என, கொள்வதால் நடப்பவை எல்லாம் நல்லதாகவே அமைந்து விடும். இல்லறத்துணை, சுயகௌரவ எண்ணங்களுடன் செயற்படுவார். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலத்தைப் பாதுகாக்க பொறுப்புணர்வுடன் பணிபுரிவீர்கள். உத்தியோகத்தர், நிர்வாகத்தின் எதிர்பார்ப்பை நிறைவேற்ற முயற்சிப்பீர்கள். மாணவர்கள், புதியவரை நண்பராக ஏற்பதில் தகுந்த கவனம் வேண்டும்.

**விருச்சிகம்**-உங்கள் வாழ்வில் பெற விரும்பிய நன்மைகளை எளிதில் பெறுவீர்கள். தடைக்கற்கள் விலகி, மனதுக்கு புத்துணர்வு உருவாக்கும். புத்திரர் சொல்கிற வார்த்தை, உங்கள் சிந்தனையில் மாற்றம் தரும். இல்லறத்துணையின் கருத்துக்கு உரிய முக்கியத்துவம் தருவீர்கள். தொழில், வியாபாரத்தில் கூடுதல் வளர்ச்சி பெற, புதிய திட்டம் செயற்படுத்துவீர்கள். உற்பத்தி, பணவரவு திருப்திகரமாகும். உத்தியோகத்தர், எதிர்பார்த்த சலுகைப் பயன் எளிதில் கிடைக்கப் பெறுவர். மாணவர்கள், மனதில் சிந்தனை தெளிவு பெற்று, தன் லட்சியம் உணர்ந்திடுவர்.

**தனுசு** - உங்கள் பேச்சில் நீதி, நியாய குணம் நிறைந்திருக்கும். சிலரது எதிர்ப்பை, இலகுவாகச் சரி செய்வீர்கள். நிர்ப்பந்த பணக்கடனில், ஒருபகுதியைச் செலுத்து வீர்கள். இல்லறத்துணையுடன், கருத்து ஒற்றுமையுடன் நடந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் உருவாகிற இடையூறை சரிசெய்வீர்கள். பணியாளர்கள், நிர்வாகத்தின் சட்ட திட்டம் மதித்து நடப்பதால் மட்டுமே, சலுகைப்பயன் சீராகப் பெறலாம். மாணவர்கள், புதிய பயிற்சிகளை தெரிவு செய்வதற்கு முன், அதனால் வரும் பயன்களை அறிந்து கொள்வது நல்லது.

**மகரம்**-அயல் வீட்டாரின் மனக்கிலேசம் விலகி, அவர்களின் அன்பு, பாராட்டு கிடைக்க புதிய சூழ்நிலை உருவாகும். இல்லறத்துணை, உறவினர்களிடம் உங்கள் மீதான நன் மதிப்பு அதிகரிக்க உதவுவர். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை சராசரி அளவில் இருக்கும். பணியாளர்கள், கூடுதல் தொழில் நுட்பம் அறிந்து கொள்வர். குடும்ப பெண்கள், தியாக மனதுடன் நடந்து கணவரின் நல்அன்பை பெறுவர்.

**கும்பம்**- நண்பர், உறவினர்களிடம் உங்கள் மீதான நன்மதிப்பு அதிகரிக்கும். புத்திரர், சில விடயங்களில் உங்களிடம் கருத்து வேறுபாடு கொள்வர். இல்லறத்துணை, இஷ்ட தெய்வ வழிபாடு நிறைவேற்ற, உங்களின் உதவியைப் பெறுவர். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற புதிய அனுகூலம் உருவாகும். பணவரவு திருப்திகரமாகும். பணியாளர்களுக்கு கூடுதல் வேலைவாய்ப்பு, சம்பள உயர்வு கிடைக்கும். மாணவர்கள், ஆடம்பரப் பொருள்களை வாங்குவதில் ஆர்வம் கொள்வதைத் தவிர்ப்பது நல்லது.

**மீனம்**- சிலரது பொறாமை பேச்சால், மனதில் அதிருப்தி கொள்வீர்கள். குடும்பத்தின் அத்தியாவசிய தேவைகளை உணர்ந்து, பணிகளில் ஆர்வம் கொள்வது அவசியமாகும். ஆடம்பர செலவுகளை குறைப்பதால், தேவையற்ற பணக்கடன் பெறாமல் தவிர்க்கலாம். இல்லறத்துணையிடம், தேவையற்ற விவாதத்தைத் தவிர்க்கவும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கை அடைய கூடுதல் அவகாசம் தேவைப்படும். பணியாளர்கள், கவனக்குறைவால் பணியில் [illegible]. மாணவர்கள், நண்பர்களிடம் படிப்பு தவிர ஏனைய விடயங்களில் நிதானமாகப் பேசுவது நல்லது.



# நினைத்தால் முடியும்....

ஒரு நிறுவனத்தின் தலைவருக்கு தன் நிறுவனத்தில் சில தவறுகளால் 50 கோடிகள் நஷ்டம் ஏற்பட்டுவிட்டது. மிகவும் சோர்ந்து போய் அருகில் இருந்த பூங்காவிற்கு சென்று அங்கிருந்த சாய்கதிரையில் அமர்ந்தார்.

அப்போது சற்று பெரிய மனிதர் போல தோற்றம் உடைய ஒருவர் இவருக்கு அருகில் வந்து அமர்ந்தார். இவர் சோகமாக அமர்ந்திருப்பதை கண்டு

''ஏன் சோகமாக இருக்கிறீர்கள்'' என்று கேட்டார்.

அதற்கு இவர் "எனது தொழில் நஷ்டம் அடைந்து விட்டேன். மிகவும் மனது உடைந்து போய்விட்டேன்'' என்றார்.

''எவ்வளவு ரூபாய் நஷ்டம்?'' என்றால் அவர்.

''50 கோடி ரூபாய்'' என்றார் இவர்.

''அப்படியா, நான் யார் தெரியுமா?'' என்று கேட்டு அந்த ஊரின் பிரபல செல்வந்தரின் பெயரை சொன்னார்.

அசந்து போனார் இவர்...

''சரி 50 கோடி பணம் இருந்தால் நீ சரியாகி விடுவாயா?'' என்று கேட்டார் அவர்.

உடனே முகமலர்ச்சியுடன் இவர் ''ஆமாம் எல்லாம் சரியாகி விடும்'' என்றார்.

பின் அந்த செல்வந்தர் ஒரு செக் புத்தகத்தை எடுத்து கையெழுத்திட்டு இவரிடம் நீட்டி ''இந்தா இதில் 500 கோடிக்கு செக், நீ கேட்டதைவிட 10 மடங்கு அதிகமாக கொடுத்திருக்கிறேன். எல்லாவற்றையும் சமாளி. ஆனால் ஒருவருடம் கழித்து இந்த பணத்தை எனக்கு திருப்பிக் கொடுத்து விட வேண்டும். அடுத்த வருடம் இதே நாளில் இங்கே நான் காத்திருப்பேன்'' என்று சொல்லி விட்டு செக்கை இவர் கைகளில் திணித்து விட்டு சென்றார் அவர்.

பின் அந்த நிறுவனத்தின் தலைவர் வேகமாக அலுவலகத்திற்கு சென்றார். தன் அறைக்குள் சென்று அந்த செக்கை தனது பீரோவில் வைத்து பத்திரமாக பூட்டினார். பின் தனது உதவியாளரை அழைத்து அனைத்து ஊழியர்களை நிர்வாக கூட்டத்திற்கு அழைத்து வர ஏற்பாடு செய்ய சொன்னார். ஊழியர்கள் அனை' வரும் கூட்டத்தில் அமர்ந்திருந்தனர்.

இந்த நிறுவனத்தின் தலைவர் பேச ஆரம்பித்தார். ''நண்பர்களே, நமது நிறுவனத்தில் 50 கோடி நஷ்டம் ஏற்பட்டுள்ளது. ஆனால் இப்போது என்னிடம் 500 கோடி ரூபாய் உள்ளது ஆனால் அந்த பணத்தை தொடமாட்டேன். இந்த நஷ்டம் எப்படி ஏற்பட்டது? எதனால் ஏதற்காக ஏற்பட்டது? என்று ஆராய்ந்து அதை களைந்து நமது நிறுவனத்தை வெற்றிகரமாக செயல்படுத்த நீங்கள் அனைவரும் ஒத்துழைப்பு கொடுங்கள்'' என்று கேட்டுக் கொண்டார்.

பின்னர் வேலைகள் வேகமாக நடந்தன. தவறுகள் கண்டுப்பிடிக்கபட்டு களையப்பட்டன. மிகச் சரியாக அனைத்து ஊழியர்களையும் ஒத்துழைக்க வைத்தார். அவருடைய பேச்சு, மூச்சு, செயல், சிந்தனை, தூக்கம் அனைத்து அவருடைய தொழிலை பற்றியே இருந்தது.

மிக சரியாக ஒரு வருடம் கழிந்தது. கணக்குகள் அலசப்பட்டன. மிகச்சரியா 550 கோடி ரூபாய்கள் லாபம் ஈட்டி இருந்தது இவருடைய நிறுவனம். அடுத்த நாள் விடியற்காலை அந்த செல்வந்தர் கொடுத்த 500 கோடிக்கான செக்கை எடுத்துக் கொண்டு அந்த பூங்காவிற்கு விரைந்தார். சென்ற வருடம் அமர்ந்த அதே சாய்கதிரையில் அமர்ந்தார். காலை நேரம் ஆதலால் பனி மூட்டத்துடன் காணப்பட்டது. சற்று நேரம் கழித்து தூரத்தில் அந்த செல்வந்தரும் அவருக்குஅருகில் அவரை கைகளால் பிடித்துக்கொண்டு ஒரு பெண்மணியும் வந்தது பனி மூட்டத்தின் ஊடே தெரிந்தது. சில விநாடிகள் கழித்து பார்த்தால் அந்த பெண்மணி மட்டும் வருகிறார் அந்த செல்வந்தரை காணவில்லை.

இவர் சென்று அந்த பெண்மணியிடம் "எங்கே அம்மா உங்கள் கூட வந்தவர்?'' என்றார்

அதற்கு அந்த பெண்மணி பதற்றத்துடன் ''உங்களுக்கு அவர் ஏதாவது தொந்தரவு கொடுத்து விட்டாரா?'' என்றார்

இவர் ''இல்லை அம்மா, ஏன் கேட்கிறீர்கள்?'' என்றார்.

அந்த பெண்மணி "இல்லை ஐயா அவர் மனநிலை சரி இல்லாதவர், செக் தருகிறேன் என்று சொல்லி இங்கு இருப்பவர்களிடம் தனது பழைய செக்கை கிழித்து கையெழுத்திட்டு கொடுத்து விடுவார்'' என்றார்.

ஒரு நிமிடம் அந்த நிறுவனத் தலைவருக்கு பேசமுடியவில்லை 'நம்மால் முடியும் என்று நினைத்தால் நிச்சயம் முடியும். அதுவே நம்மை காப்பாற்றி இருக்கிறது' என்று நினைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சிண்டிகேட் போட்டு சாராயம்குடிக்கும் போது சில வேளைகளில் நான்கு பேர் சேர்ந்தால் இரண்டு, மூன்று போத்தல்களினை காலி செய்து விடுவார்கள்.

எப்படியென்றால் தனியாக குடிக்க பணம் போதாமல் இருக்கும். எனவே கூட்டு முயற்சியில் இறங்குவார்கள். தங்களிடம் உள்ள பணத்தை ஒருவரிடம் கொடுப்பார்கள். சாராயம் நூறு ரூபா என்றால் ஒருவர் 20 ரூபா மற்றவர் முப்பது ரூபா என்று தம்மிடம் இருப்பதை போட்டு கூட்டு முயற்சி தொடங்கும்.

முதல் தரம் போதை ஏறவில்லை என்றால் இரண்டாம் தரம் தொடங்கும். இப்போது போதையில் ஒளித்து வைத்த பணம், மீன் வாங்க வைத்திருந்த பணம் எல்லாம் வெளியில் வரும்.

''பார்ரா கள்ளனை வேட்டித் தலைப்பில் முடிஞ்சு வைச்சு அவுக்கிறான்ரா''

பின்னேரம் வேட்டி கட்ட முடியாமல் தானே வீடு போறது

கனகப்பா இப்படி ஒரு நாள் சிண்டிகேட் போட்டு நல்ல மப்பில் வீடு திரும்பினார். அன்றைய தினம் தன்னுடைய சைக்கிளுக்கு ரயர் ஒன்றும் மாற்றி இருக்கின்றார்.

பழைய ரயரை விட்டுட்டு வர விருப்பம் இல்லை. அதனை பலவாறு உபயோகப்படுத்தலாம். வண்டிலில் பிற்பலகையில் வைத்துக் காட்டலாம். நுகச்சாவி தேய்க் காமல் இருக்க வெட்டிக் கட்டலாம். எனவே ரயரை தோளில் மாட்டிக் கொண் டார். கனகப்பா போதை ஏறினால் மிகவும் குதூகலப் பேர்வழி.

அவர் எனக்கு குதூகாலத்தில் வைத்த பெயர் ஒன்று இருக்கின்றது. ''க்சபுளுகன்'' இதன் தமிழ் அர்த்தம் சனக்கு தெரியாது (சிலர் கூகுலில் தேடிப் பார்ப்பதாகவும் கேள்வி) ஆனால் கசபுளுகன் என்பது நிறையத் தகவல்களை விலவாரியாகவும், மிதமிஞ்சிய அலங்கரிப்புடனும் சொல்வதைக் குறிப்பதாக இருக்கலாம். கனகப்பா வைத்த பெயர், எழுத்தில் மட்டும் தொடர்வதாக நினைக்கின்றேன். உரையாடல் மிகவும் குறைந்து போய்விட்டது.

கனகப்பா தோளில் ரயர் தொங்க சைக்கிளில் பளை சந்தியால் திரும்பி புகையிரதக் கடவையைத் தாண்டி வரும் போது-

பின்னால் சைக்கிளில் வந்த இருவர் அவரை முந்துகின்றார்கள். கனகப்பா திரும்பிப் பார்க்கின்றார். இருவரும் இளைஞர்கள். ஒருவர் என்னுடை தாய் மாமன்-கந்தசாமி, இன்னொருவர் செல்லத்துரை அப்பாவின் மகன் சிவம் அண்ணை.

கனகப்பாவுக்கு வந்ததே கோபம்.

''என்னை கிழவனெண்டு நினைச்சிட்டியளோ''

கனகப்பா கிழவன் கிடையாது. இப்பொழுது நினைக்கும் போது அவருக்கு அப்போ ஒரு ஐம்பது, ஐம்பத்தைந்து வயதிருக்கலாம். எங்களுடைய உறவு நிலை, எங்களை வயதாளியாக்கி விடும்.

(மேலே சிவம் அண்ணையின் தகப்பன் செல்லத்துரையப்பாவைப் பற்றி அற்புதமான கதை இருக்கின்றது. மறக்காமல் எழுதுகின்றேன்.)

கனகப்பா தொடர்கின்றார்.

''முந்திக் கொண்டு போயிடுவியலோ

இப்ப பார், பார் முந்திறன்''

கனகப்பா முந்திக் கொண்டு போயிருக்கலாம். அவரது கெட்ட காலம்.

சைக்கிள் பெடலை ஊன்றி மிதிக்க நினைத்து நன்றாக நாரியை வளைத்து மிதித்து விட்டு நிமிரமுன், தோளில் கொளுவி இருந்த ரயர் பெடல் கட்டையில் கொழுவி விட, இவர் நிமிர சமநிலை குழம்பி விட, 'சடார் புடார்.'

''என்ரை ஐயோ''

பரவைக் குளத்து மதவுக்கால் உருண்டு பிரண்டு ,விழுந்து, வாங்கின மீனும், அரிசியும் கொட்டுப்பட்டு அல்லோல கல்லோலம்.

மாமாவும், சிவம் அண்ணையும் ஓடிப்போய் தூக்கி, நிறுத்தி மீனையும் பொறுக்கி கொடுத்து ஆள் வீடு போய் சேர்ந்தார்.

மாமா வந்து சொன்னார்.

''இண்டைக்கொராள் பனை வைரவர் கோயிலை மீன் போட்டு கும்பிட்டுட்டு வந்தவர்''

சொல்லவும் கனகப்பா பின்னால் வரவும்-

''அடச் சீ இந்த இழவு விழுந்த ரயர் கொழுவிப் போட்டுது

இல்லை யெண்டா இவை எங்கை என்னை முந்திறது''

''நான் முந்தியிருப்பன்''

''மதவுக்காலை என்னெண்டு முந்திறது'' மாமா மெதுவாகச் சொன்னார். கனகப்பா பின்னாளில் குடியை விட்டுவிட்டார்.

அவர்களது குடியும் போதையும் சமூகத்துக்கு அச்சுறுத்தலாக இருந்ததாக எனக்குத் தோன்றவில்லை.

> கோவலன் கண்ணகையில் அற்புதமாக நடிப்பார் என கனகப்பா சொல்லிக் கேட்டிருக் கின்றேன். அவர் நடித்ததை நான் பார்க்கவில்லை. ஆனால் அறத்தியம்மன் கோயில் கூத்தினை ஒழுங்குபடுத்துபவராகவும் பழக்கங்களை நிர்வகிப்பவராகவும் பலகாலம் செயற்பட்டவர்.

சரி, கூத்தினுடைய சிண்டிகேட் கதைக்கு போய் நிறைய இடம் சுற்ற வேண்டியதாகிவிட்டது.

சிவம் அண்ணையின் தகப்பன் செல்லத்துரை அப்பாவும் நல்லதொரு கூத்தாடிதான்.

(கனகப்பா வவுனியாவில் இறந்து போய்விட்டார். செல்லத்துரையப்பா வன்னியில் இறந்து விட்டார்.)


கோவலன் கண்ணகையில் அற்புதமாக நடிப்பார் என கனகப்பா சொல்லிக் கேட்டிருக்கின்றேன். அவர் நடித்ததை நான் பார்க்கவில்லை. ஆனால் அறத்தியம்மன் கோயில் கூத்தினை ஒழுங்குபடுத்துபவராகவும் கூத்துப் பழக்கங்களை நிர்வகிப்பவராகவும் பலகாலம் செயற்பட்டவர்.


கோயில் பஞ்சபுராணம் அழகாக ஓதுவார். முறைப்படி சங்கீதம் கற்ற' ர் இல்லை. ஆனால் அந்தத் துறமையை வளர்த்துக் கொண்டவர்.

இவரது புலமையையும் குரல் செழிப்பையும் கண்ட ஒருவர் இவரை வில்லிசை பாடுவதற்காக தனது கோயிலுக்கு அழைக்கின்றார்.

வில்லுப்பாட்டு எப்படி நடந்து முடிந்தது. ஒரு யுகம் கடந்தாலும் மறக்க முடியுமா?

(அடுத்தவாரமும் பொங்கல்)





# ஒரு விலைமகளின் கண்ணீர்......



என் மார்பின் மீது
முட்டி மோதும் இராட்சதர்கள் கூட்டம்
ஒரு பிணத்தின் மீது
இரைதேடி பசி ஆற்றுகிறார்கள்
என் அந்தரங்கங்களின் மீது
காமப்பேய்களின் நகக்கீறல்கள்

நேற்று இந்த தெருக்களில்தான்
வேலை தேடி அலைந்தேன்
- பிச்சை எடுக்க வைத்தார்கள்
பிச்சை கேட்டேன்
காறி உமிழ்ந்தார்கள்
இன்று கண்மணி என்று கட்டியணைத்து
காசு தருகின்றார்கள்

யார் யாரோ வருகிறார்கள்
புத்தகப்பை சுமப்பவனும்
புதிதாக திருமணமானவனும்
கூலியாய் உழைப்பவனும்
வேலியாய் குடும்பத்தைப் பார்ப்பவனும்

அரச அதிகாரிகளும்
அரசியல்வாதிகளும்
கூட வருகின்றார்கள்
புதைபொருள் தேடுவது போல்
புதிது புதிதாக வருகிறார்கள்

என்னைப் பெற்றவர்களும்
நான் பெற்றவர்களும்
என் உடம்பின் வியாபார
வருமானத்தில் பசியாற்றுகிறார்கள்

எனது நிம்மதிகளை தொலைத்து
[illegible]
நிவாரணத்தைப் பெறுவதற்காய்



கீ.பீ.நிதுன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியில் நிற்கும் உண்மைகள்

■ ந.மயூரரூபன்

## சித்தாந்தன் கவிதைகள்



மொழியின் பன்முகத்தன்மையைக் கொண்டுவரும் எழுத்துக்கள் எமது இலக்கியச் சூழலில் அபூர்வமானவை. மொழியைப் புனைவாக்குவதில் உள்ள அழகியல் அனுபவத்தினை சமகாலத்தில் இளம் எழுத்தாளர்கள் சிலரில் அவதானிக்க முடிகிறது. தனித்தலையும் கவிமொழி சித்தாந்தனுக்குரியது. சபாபதி உதயணன் என்ற இயற்பெயருடைய சித்தாந்தன் 90 களின் பிற்பகுதியில் இருந்து எழுதிவருகிறார். யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் ஆசிரியராகப் பணிபுரிகிறார். காலத்தின் புன்னகை (2000) துரத்தும் நிழல்களின் யுகம் (2010) என்பன இவரது கவிதைத் தொகுப்புகள். 'தருணம்' வலைப் பதிவில் தொடர்ந்து இயங்குகிறார்.

இவரது கவிதைகளின் ஆழ்மன [illegible] தனிமையும் துயரும் அடர்ந்துள்ளது.

"முகங்களின் உலகத்தில்
தனித்தலையும் எனது முகத்தை
புராதன மனிதச் சாயல் விழுந்திருப்பதால்
நண்பன் ஒருவன் சோன்னான்
அப்போதே நம்பியிருக்க வேண்டும்
நான் [illegible]ந்தவனின் விம்பம் என்பதை"
(செத்தவனின் விம்பமான நான்)

இன்று கவிதைக்கான மொழியைப் பயன்படுத்துபவர்களில், பிரக்ஞைபூர்வமாக மொழியின் உவமை, உருவக, படிம சாத்தியங்களை உணர்ந்து பயன்படுத்துபவராக சித்தாந்தனை அடையாளங்காண முடியும். இன்று பலர் சொற்களின் உயிர்ப்பினை உணராமல், அதன் இடத்தினை அறியாமல் பயன்படுத்துகிறார்கள். அதேபோல் மனம் சொல்லுகிற படிமத்தை மொழி கொண்டு தரும் நேர்த்தி பலரிடம் இல்லை. சித்தாந்தனது கவிதைகளில் அவரது பிரக்ஞையின் தெளிவைக் கண்டு கொள்ள முடிகிறது.

"மழை தாண்டவமாடுகிறது
இரகசியக் கால்வாய்களில் பெருகும் வெள்ளம்
பாறைகளை இழுத்துச் சுழிக்கிறது
எம்படுக்கையின் கீழ் கடல்
நீ உன் கடலில் இறங்கி நடக்கலானால்
நான் என் கடலில் இறங்கி நடக்கத் தொடங்கினேன்"
[பாறைகளுக்கிடையில்
விழித்திருப்பவனின் இரவு]

சித்தாந்தனின் 'துரத்தும் நிழல்களின் யுகம்' ஈழத்தில் நிகழ்ந்த போர்-போருக்குப் பின்னரான வலிகளைத் தன்மொழியில் பேசுவன. ஈழத்து மக்களின் அகவயத்தின் ஒரு குறுக்குவெட்டாயும் இந்தக் கவிதைகளின் மனத்தினை அடையாளங் காண முடியும். ஒரு மனிதன் தனது சூழலில் சந்திக்கின்ற நிகழ்வுகளின் அருட்டல்களாய் இந்தக் கவிதைகள் அமைகின்றன.

"துவைத்துக் காயவிட்ட சட்டைப் பையினுள்
நனைந்திருந்த கடதாசித் துண்டில்
எவனோ ஒருவனின்
மரணம் பற்றிய வாக்குமூலம்
எழுதப்பட்டிருந்தது"
(சொற்களுக்குள் ஒளிந்திருக்கும் மரணம்)





மிக இயல்பாக, ஆனால் சொல் முறையில் புதிய அனுபவத்தை தொற்றுகின்ற நுட்பத்தினை இங்கு காணமுடியும். இங்கு மரணத்தின் இயல்பும் அதன் சாதாரணமும் 'சொற்களுக்குள் ஒளிந்திருக்கும் மரணம்' கவிதையில் அழகாக வந்திருக்கிறது. [illegible] வற்றில் [illegible] சுகத்தை சித்தாந்தன் காட்டுகிறார்.

"காலையில் புறப்பட்டு
மாலையில் என் பிணத்தை நானே காவியபடி
வீடு திரும்புகிறேன்"

சித்தாந்தனின் கவிதைகளில் தெலுஸ், கத்தாரி சொல்லுகிற ஒரு விடயத்தை ஒப்புநோக்கிப் பார்க்க விரும்புகிறேன். 'மீறி நிற்றல்' என்கிற ஒரு விடயத்தைப் பற்றி இவர்கள் குறிப்பிடுகிறார்கள். பொதுவாக இதனை தத்துவத்தின் அடிப்படையாகப் பார்ப்பார்கள். பொதுவாகப் புறநிலையில் 'உண்மை'யை வெளியில் (அதாவது ஒரு படைப்பின் உள்நுழையாமல், நுழைத்துப் பார்ப்பதற்குரிய சாத்தியத்துடன் தெரிதல்) நாம் விருப்புடன் தேடும் ஒன்றாகச் சொல்ல முடியும்.

குறிப்பாக கடவுள், இருப்பு, உண்மை போன்றவற்றை இந்த மீறி நிற்கும் பொருண்மைகளாக இனங் காணலாம். சமகால இலக்கியப் படைப்புகளில் அரசியல் என்பதும் ஒரு வகை மீறி நிற்கும் உண்மையாகவே அமைந்து விட்டிருக்கிறது.

எழுத்துகளில் நாம் சொல்லப்படுகின்ற விடயங்களில் வேறு சில அர்த்தங்களைத் தேடுவதற்கான சாத்தியத்தை இந்த மீறி நிற்கும் உண்மை தருகிறது. ஒரு தனிமனிதன் அகவயச் சூழமைவு என்பது எப்போதும் மீறி நிற்கும் உண்மைகளால் கட்டப்பட்டவையே.

எமது படைப்புச் சிந்தனை; மீறி நிற்கும் புற விடயங்களைக் கொண்டே சமூகத்தில் உற்பத்தி செய்யப்படுகிறது.

சித்தாந்தனது படைப்புகள் மட்டுமல்ல, சமகாலப் படைப்புகள் பலவற்றில் இந்த மீறி நிற்கும் உண்மையைஉணர்ந்து கொள்ள முடியும்.

இதிலிருந்து ஒரு விடயத்தை சொல்ல முடியும்;ஒருபடைப்பு அதற்கான உள்ளும் புறமும் கொண்டது. தெலூஸ்-கத்தாரி சொல்கிற விடயம் இதுதான்; ஒரு கதவு என்பது உள்ளுக்கும் புறத்துக்கும் இடையே உள்ள எல்லை (Border) எனலாம். ஒரு றிபன் துண்டோ அல்லது காகிதமோ மடிக்கப்படும்போது அது உள்ளே-வெளியே தன்மைகளைப் பெறுகிறது. ஆனால் சாதாரணமாகப் பார்க்கிற போது ஒரு காகிதம் உள்ளே-வெளியே போன்ற தன்மைகள் எதுவுமற்றது.

இங்கு மடிப்பின் மூலமே உள்ளே-வெளியே தன்மை உருப்பெறுகிறது.

அதாவது ஒரு படைப்பில்-கவிதையில் மீறி நிற்றல் ஒரு மாயையை உற்பத்தி செய்கிறது. அதிலிருக்கும் பன்முகத் தன்மைகளையும், வேறு வேறான தன்மைகளாகப் பார்க்கும் குழப்பம் ஏற்படுகிறது. மொழி இதைத்தான் செய்கிறது. அது வித்தியாசங்களாலான விசை. அந்த விசை நாம் பேசுவதற்கான பல தளங்களை உற்பத்தி செய்கிறது.

இங்கு சிந்தாந்தனின் கவிதை ஒன்றினை இதற்கு எடுத்துக் காட்டாகத் தரலாம்;

மிகத்தாமதமானது உனதழைப்பு
கண்ணாடி வேளைகள் சிதறியுடையவில்லை
சுவரில் மாட்டப்பட்டிருந்த
புகைப்படங்களிலிருந்து
எமது விம்பங்கள் இறங்கி நடக்கவில்லை

நீர்வற்றிய நிலத்துப் பூஞ்செடியின்
அகால முகத்தில்
மழையின் ஓவியம் வரையப்பட்டிருக்கிறது

வரிசையாய்ச் செல்லும் எறும்புகளின்
உணர்முனைகளில்
புரியாத மொழியின் அருப அசைவுகள்

எதன் பொருட்டு
உன் குரல் தாகத்தின் சுணைகளை
மூடிவிட்டிருக்கிறது
உன் பிரார்த்தனைக் காலத்தில்
பெயாறியாத் தெய்வங்களும் வீட்டுக்குள்
வந்துவிடுகின்றன
எம் படுக்கையிலிருந்தவாறே
வசிய மந்திரங்களை உச்சரிக்கின்றன

அழைப்பின் அதிதிகளாகவும்
அழையா விருந்தாளிகளாகவும் வரும்
தெய்வங்களுக்கு
நீ படையலிட்டுப் பூஜிக்கும் நாள்களில்
சுவரில் மாட்டப்பட்டிருக்கும்
எமது புகைப்படத்தில் குத்தி நிற்கின்றன
தெய்வங்கள் எறிந்த கத்திகள்

தெய்வங்களின்
புகைப்படங்களுக்குள்ளும்
புத்தகங்களுக்குள்ளும் புதையுண்டிருக்கிறது
எமது வாழ்வு பற்றிய இரண்டொரு
சொற்களும்

உனதழைப்பு
தெய்வங்களை நோக்கி எனையீர்க்கும்
தந்திரமாய்க் கவிகிறது வீடெங்கும்
(தெய்வங்கள் எறிந்த கத்திகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாதக் குழலிசையில் முதுபெரும் கலைஞர்

# இசைஞான வாரிதி இராஜேஸ்வரி 86

■ வயாவிளான் தவமைந்தன்

ஆயிரம் வேரைக் கண்டவன், அரைப் பரியாரி என்பார்கள். ஒரு துறையில் ஒருவருக்கு இருக்க வேண்டிய ஆழமான தேடலையும் அனுபவத்தையுமே இந்தச் சொற்றொடர் உணர்த்தி நிற்கின்றது. இசைக்கலையிலும் ஒரு குருவிடம் கற்றுக் கொள்வதை விட இசை கேட்டலின் ஊடாகவே இசைஞானம் என்பது மெருகேறி உச்சமான வளர்ச்சியைப் பெறுகின்றது. ஆனால் தற்காலத்தில் இசைத்துறையில் பெரும் புள்ளிகளாக இருப்போர் தாய், சேய் இராகங்களுக்கிடையிலான வேறுபாடுகளைக் கூட அறிந்திராதவர்களாகவும் கமகம் என்றால் என்னவென்றே தெரியாதவர்களாகவும் இசைக்கச்சேரி அழைப்பிதழ்களைக் குப்பைத் தொட்டிகளில் வீசுவோராகவும் கடமைநேரத்தில் அலுவலகங்களில் பிறந்தநாள் கொண்டாட்டங்களை நிகழ்த்துவோராகவுமே விளங்கி வருகின்றனர்.

ஆனால் தனது சிறு வயதிலேயே எண்ணற்ற நாதஸ்வரக் கச்சேரிகளையும் கலை நிகழ்வுகளையும் கண்விழித்துப் பார்த்து, இரசித்து அதனால் கவரப்பட்டு இசைக் கலையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட ஒருவராகவும் தனது குழலிசையாலும் குரலிசையாலும் இறைவனைப் புகழ்ந்து போற்றி இசைத் தொண்டாற்றி வருகின்ற நாதஸ்வரக் கலைஞராகவும் ஈழத்திலும் தமிழகத்திலும் புகழ்பெற்ற சாதனைப் பெண்ணாகவும் கடந்த ஐம்பது ஆண்டுகளிற்கும் மேலாக இசைப்பணியாற்றி வருபவர் இசைஞான அருவி திருமதி இராஜேஸ்வரி சுந்தரலிங்கம்.

அமரர் மாணிக்கம் - சரஸ்வதி தம்பதியரின் மகளாக நெல்லியடியில் பிறந்த இவர் நெல்.மத்திய கல்லூரியில் கற்றுத் தனது தந்தையிடம் நாதஸ்வர, குரலிசைப் பயிற்சிகளைப் பெற்றுப் பத்தாவது வயதிலேயே முழுமைபெற்ற நாதஸ்வர வித்தகியாக ஆலயங்களிலும் தமிழரின் பண்பாட்டுச் சடங்குகளிலும் இசை மழை பொழிந்து மங்கல இசை மங்கையாக எம் தாயகம் எங்கும் வலம் வந்தார்.

நாதஸ்வர மேதைகளான தாவடி திருநாவுக்காசு, எம்.பி.பாலகிருஷ்ணன் ஆகியோரிடம் மேலதிக பயிற்சிகளைப் பெற்றுக் கொண்ட இவர் பல ஆண்டுகளாகத் தனது தந்தையின் இணை நாதஸ்வரக் கலைஞராகப் பணியாற்றி வந்ததுடன் தவில் கலைஞரான தனது சகோதரி புஸ்பராணியுடனும் இன்று வரை வாசித்து வருபவர். அதை விட ஈழத்தின் மங்கல இசை மன்னர்களான என்.கே.பத்மநாதன், எம்.பி.பாலகிருஷ்ணன், கோண்டாவில் பாலகிருஷ்ணன், கே.எம்.பஞ்சாபிகேசன், வீ.கே.கானமூர்த்தி, வீ.கே.பஞ்சமூர்த்தி, கே.ஆர்.சுந்தரமூர்த்தி, ஆர்.கேதீஸ்வரன், என். ஆர்.சின்னராசா, ஆர்.புண்ணியமூர்த்தி, தெ.உதயசங்கர், சி.ரவி.சி.சுதா போன்றவர்களுடன் இணைந்து இசைப்பணியாற்றி வருபவர்.

தனது மகனான சரவணாவைத் தவில் கலைஞராக உருவாக்கியிருக்கும் இவர் 1989இல் தமிழகம் சென்று பன்னிரண்டு ஆண்டுகள் அங்கேயே தங்கியிருந்து ஸ்ரீரங்கம், சமயபுரம், திருச்செந்தூர், திருச்செங்கோடு, தஞ்சாவூர் போன்ற இடங்களிலும் மதுரை மீனாட்சி அம்மன் கோவிலிலும் பல தடவைகள் நாதஸ்வரம் வாசித்து ஈழத்துப் பெண் கலைஞர்களிற்குப் பெருமை சேர்த்தவர்.

விஸ்தாரமான இராக ஆலாபனைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் இவர் கல்யாணி, சண்முகப்பிரியா, கரகரப்பிரியா, பந்துவராளி, தர்மவதி போன்ற இராகங்களை விரும்பி வாசிப்பவர். அத்துடன் வாசிக்கப்படும் கீர்த்தனைகளின் சாகித்தியங்களை உணர்ந்தும் இராக பாவத்தை அனுசரித்தும் சங்கதிகளை அழகாகவும் அழுத்தமாகவும் இனிமையாகவும் வாசிக்கும் இயல்புடைய இவர் ஈழத்தில் இருக்கின்ற பெண் மங்கல இசைக் கலைஞர்களுள் முதிர்ச்சி பெற்ற மூத்த வித்து

## சாதனைக் கலைஞரைச்
### சந்திப்போம் சிந்திப்போம்

வாட்டியாகவும் மதிக்கப்படுகின்றார்.

1980களில் மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளிற்கான இசைப் பயணங்களை மேற்கொண்ட இவர் அங்கே பல மாதங்கள் தங்கியிருந்து மங்கல இசை வழங்கியதுடன் குரலிசை வகுப்புக்களையும் நடாத்தியவர். மலேசிய மக்களால் மதிப்பளிக்கப்பட்டுப் போற்றப்பட்ட இக்கலைஞர் இன்று வரை கம்பீரத்துடனும் குறைவில்லாத உற்சாகத்துடனும் நாளாந்தப் பயிற்சியுடனும் புதிய கீர்த்தனைகளைக் கற்றுக் கொள்ளும் ஆர்வத்துடனும் இசைத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றமை போற்றுதற்குரியதே.

இராகங்களின் அம்சம் கொப்பளிக்க எழிலுடை சங்கதிகளுடன் எத்தனையோ கீர்த்தனைகள் நவநவமாய் அழகுடன் இருக்கின்ற போதும் ஒரு பாடலை மட்டுமே வாழ்நாள் முழுவதும் கற்பிப்போராகவும் மும்மூர்த்திகளின் கீர்த்தனைகளில் ஒன்றைக் கூடச் சரியாகப் பாடும் திறன் அற்றவர்களாகவும் நாற்காலிகளில் இலாவகமாக அமர்ந்து இசை கற்பித்து இசைக் கல்வி ஆசிரியத்துவத்தின் வரன்முறைகளையும் உயிர்ப்பையும் குழிதோண்டிப் புதைத்தவர்களாகவுமே சில நிறுவனங்களில் பணியாற்றுவோர் தமிழர் பண்பாட்டின் வேர்களை அறுத்து எமது இசைக் கல்வி எனும் பெருவிருட்சத்தைப் பட்டமரமாக்க முயற்சித்து வருகின்றனர்.

எனினும் அல்லும் பகலும் இசையோடு வாழ்ந்து தனது உடலை வருத்தி உயிரைக் கொடுத்து இசைமணம் பரப்பி நாதக் குழலிசையால் கேட்போரை மயக்கிவிடும் ஆற்றல் கொண்ட இந்த இசையரசி அரை நூற்றாண்டிற்கும் மேலான இசைப்பயணத்தின் ஊடாகக் கிடைத்திருக்கும் தனது பட்டறிவுக் கருத்துக்களை இவ்வாறு கூறுகின்றார்.

மங்கல இசைத் தொழில் என்பது மிகவும் புனிதமான தொழிலாகும். ஆலய வழிபாடுகளோடும் பண்பாட்டு நிகழ்வுகளோடும் இரண்டறக் கலந்து, இந்த நிகழ்வுகளின் அடி நாதமாக நாதஸ்வர, தவில் ஓசையானது திகழ்கின்றமை யாவரும் அறிந்ததே. ஆலயத் திரு விழாக்களும் மங்கல வைபவங்களும் மாறி மாறித் தொடர்ச்சியாக நடைபெறும் காலங்களில் நாதஸ்வர, தவில் கலைஞர்களாகிய நாம் ஓய்வின்றி, உறக்கமின்றி இசைத் தொழிலில் ஈடுபடுவோம்.

ஏனைய நாட்களில் ... ஓய்வாக இருப்போம். எனவே எமது மங்கல இசைத் தொழிலானது அரச உத்தியோகம் போன்றது அல்ல. இசைக் கருவிகளைக் கையில் எடுத்து இசையெழுப்புகின்ற வல்லமை உள்ளத்தில் இருந்தாலும் உடலில் இல்லாவிட்டால் தவிலையோ நாதஸ்வரத்தையோ இசைக்க முடியாது.

முதுமையடைந்து ... உடல் நலிவடைந்து போகும் மங்கல இசைக் கலைஞர்களிற்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டமானது இந்தியாவில் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளமையால் எத்தனையோ கலைஞர்கள் நன்மையடைந்து வருகின்றனர். இவ்வாறான சொல் திட்டங்களை அரச நிறுவனங்கள் இங்கேயும் உருவாக்கி நடைமுறைப் படுத்த முயற்சிக்க வேண்டும் என்று ஆலோசனை கூறுகின்றார் குழலிசை வித்தகி இராஜேஸ்வரி.

உதயனின் "சூரியகாந்தியில்" உங்களது படைப்புகளும் பிரசுரமாக வேண்டுமா? சிறுகதை, கவிதை, கட்டுரை , விமர்சனம், துணுக்குகள் என்பவற்றை உடனே எழுதி அனுப்புங்கள். தரமானவை பிரசுரமாகும்.
உங்கள் படைப்புகளை அனுப்ப வேண்டிய முகவரி;
... 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# முன்னேச்சர பொழுதுகள்...

■ எஸ்.எம்.கோபாலரத்தினம்


மகா சிவராத்திரிக்கு திருக்கேதீச்சரம் போகவேண்டுமென்ற ஆசை. இந்தச் சமயம் பார்த்து எனது மூத்த மகன் வந்திருந்தான். என் விருப்பத்தைத் தெரிவித்தேன். போய் வருவோம் என்று மகிழ்ச்சியுடன் சொன்னான். என் அண்ணன் மகனிடம் தெரிவித்துப் புறப்பட்டோம். பெரும்பான்மைச் சமூகத்துக்குப் பெரும் பங்களித்தவர்களில் என் அண்ணனும் ஒருவர். அவருக்கு மூன்று பெண்களும், எட்டு ஆண்களும் உள்ளனர். அந்தப் பதினொன்றும், இரண்டு, மூன்று, நான்கு என பெரும்பான்மைக்கு பங்களித்திருக்கின்றன. மக்கள் தமிழ் பேசுவார்கள். அவர் தமிழ் பகுதிகளிலும் அரச சேவையில் பணியாற்றியதால் தமிழ்ப் பள்ளிக்கூடங்களில் படித்ததால் சிலருக்கு தமிழ் எழுதவும், வாசிக்கவும் தெரியும். எனது அண்ணன் சிறு கதைகளும் எழுதியவர். பித்தன், அன்புதாசன், பரமஹம்சதாசன், எஸ்.பொ போன்ற எழுத்தாளர்களுடன் நெருங்கிய நட்புக் கொண்டிருந்தவர். இந்த நட்பு அண்ணன் இரண்டாவதாக சிங்களப் பெண்ணைக் கட்டிக் கொள்ளாத வரைதான் இருந்தது. அவர் சிங்களத்தில் சிறுகதை எழுதியதாகத் தெரியவில்லை! 18 ஆம் பாஷை என்றும் ஒரு பாஷை படிக்கத் தொடங்கியவர். ஐயா அதை எடுத்தெறிந்து விட்டார்.

மன்னாருக்கு காலையிலேயே அதாவது நான்கு மணிக்கே புறப்பட வேண்டுமென்று தீர்மானித்து நித்திரைக்குச் செல்லவே அதிகாலை இரண்டுமணி கடந்துவிட்டது. காலை ஏழு மணிக்குப் பயணம் தொடங்கியது. முதலில் முன்னேச்சரம் போவோம் என்று என் மகனே சொன்னான். இதுவரை நான் அங்கு போயிருந்ததில்லை. மகிழ்ச்சியுடன் முன்னேச்சரம் போயிறங்கினோம். சாதாரண நாளில்கூட சிங்களப் பெண்களும், ஆண்களும் தேங்காயில் சூடம் கொளுத்தி அர்ச்சனைத் தட்டுக்களை ஏந்தியபடியும் சிங்களத்தில் ஏதோ உச்சரித்தபடி வீதி வலம் வந்து கொண்டிருந்தார்கள். அர்ச்சகர்கள் தமிழிலும், சிங்களத்திலும் தரிசிக்க வந்தவர்களுக்கு விளக்கம் சொல்லியும் சம்பாஷித்தார்கள்; சம்பாதித்தும் கொண்டார்கள். காயில் சுத்தமாக அழகாகப் பராமரிக்கப்படுவதைப் பார்க்க முடிந்தது. கேரளத்துக் கோயில்கள் மாதிரி சுவாமி விக்கிரகங்கள், தீபங்கள் மற்றும் பூசைக்குரிய பொருள்கள் பளபளப்பாகக் காட்சியளிக்கின்றன. அர்ச்சனை சாமான்கள் விற்பனை செய்யும் கடைகள் ஒரே நிரையில் ஏராளமாகக் காட்சியளித்தன. அர்ச்சனைத் தட்டில் வாழைப்பழம், வெற்றிலை, பாக்கு, தேங்காயை விட காட்டுப்பழங்கள் தான் அதிகம் காட்சியளித்தன. ஒவ்வொரு தட்டும் 100, 200 , 500 ரூபாய்கள் என வசூலிக்கிறார்கள். திரும்பி வரும்பொழுது தட்டுத் திருப்பிக் கொடுக்க வேண்டும். அர்ச்சனைப் பொருள்கள் பொலித்தீன் பைகளுக்கு மாறிவிடும். கோயிலுக்கு அருகே சுத்தமான, அழகான சிற்றுண்டிச்சாலை, தோசை, இட்டலி, வடை, இடியப்பம் என்று நல்ல சாம்பார், சட்னி கொதி வாசனையுடன் மணம் குணமாகக் கிடைக்கிறது. ஆலயச்சூழல் நன்றாக பக்திபூர்வமாக இருக்கிறது.

முன்னேச்சரத்திலிருந்து புறப்பட்டு திருக்கேதீச்சரம் போவதற்காக மன்னாரை நோக்கிப் பயணித்தோம். மழை விழத் தொடங்கியது. சில நாள்களுக்கு முன்னர்தான் தொடர்ந்து பெய்த மழையும் வெள்ளமும் ஓய்ந்து சற்றுப் பயணம் செய்யக்கூடியதாக இருந்தது. மீண்டும் மழைவீழ்ந்ததால் வீதிகள் பயணம் செய்யக் கூடிய நிலையில் இருக்காது. வாகனம் பள்ளங்களில் விழுந்து எழுந்து சென்றது. இடையில் நின்றவர்கள் பாதை சரியில்லை என்று கூறி கொஞ்சம் நல்ல பாதை என்று வழிகாட்டியதால் நாங்கள் பாதை மாறிச் சென்றது மட்டுமல்ல வெள்ளத்துக்குள்ளும் அகப்பட்டுக் கொண்டோம். காட்டுக்குள் முளைத்த கிராமங்கள் பலவற்றைக் கடந்து சென்று கொண்டிருந்தோம். திடீரென்று ஒரு சந்தியில் நின்ற இருவர் எங்கள் வாகனத்தை நிறுத்தினர். வாகனம் நின்றதும் அருகே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கர வண்டியிலிருந்து இறங்கிவந்த பொலிஸ்காரர் ஒருவர் எங்கள் வாகனம் வேகக் கட்டுப்பாட்டை மீறிப் பயணம் செய்ததாகக் குற்றஞ்சாட்டினார்.

ஓட்டி வந்த அதன் உரிமையாளரான அண்ணனின் நாலாவது மகன் (அண்ணன் தனது பிள்ளைகளுக்கு அழகான நல்ல தமிழ்ப்பெயர்கள் வைத்திருந்தாலும் வீட்டில் அவர்களை சுருக்கமான சிங்களப் பெயர்களிலேயே அழைப்பது வழக்கம். நான் அவர்களை பிறந்த வரிசையில் எண்களையே கூறி விளிப்பதே வழக்கம்) வாகன நடமாட்டமும், மக்கள் நடமாட்டமும் அதிகமில்லாத அந்தப் பாதையில் வேகமாக வந்தோம் என்று கூறினார் பொலிஸ்காரர். வழக்குப் பதியாமல் போவதற்காக அரசாங்கப் பாஷையில் பேசியதாலும் அவர்களுள் ஒருத்தனாகவும் எனது அண்ணனின் மகன் இருந்த காரணத்தினால் இருநூறு ரூபாயை அந்தப் பொலிஸ்காரருக்குச் செலுத்திவிட்டு மீண்டும் பயணத்தைத் தொடர்ந்தோம். பயணம் செய்த வழிகள் எல்லாம் பாதை அபிவிருத்தி காரணமாக குன்றும் குழியும் தான். பாதி எழுந்திருந்த சுவர்களும் அவற்றுக்குள் நாட்டப்பட்டிருந்த இரும்புக் கம்பிகளும் வெள்ளத்துக்கு மேல்தலைகளை நீட்டி எங்கள் பயணத்தைத் தடுத்துக்கொண்டிருந்தன. சென்ற பாதையில் சந்தித்தவர்கள் காட்டிய 'சுகமான' பாதைகளில் சென்ற நாம் மன்னார் பன்னிரெண்டாம் கட்டையடி வீதியில் பயணித்தபோது ''இனியும் அந்த வாகனத்தில் பயணித்தால் அந்த விலையுயர்ந்த வாகனம். தமிழ்நாட்டில் காயலான்கடை என்று பழைய இரும்புகள்வாங்கிவிற்கும்இடத்துக்குப் போக வேண்டிய நிலை ஏற்படுமென்றும்'' வழிகாட்டிகள் சிலர் எச்சரித்தார்கள்.

*(நினைவுகள் நீளும்)*




## பாவம் அந்தப் பெண் பூக்கள்



ஆபிரிக்காவின் சோமாலியா
தங்கம் மிதக்கும் மண்ணில்
அவதரித்த
பெண் - பூக்களின்
கன்னித்தன்மையை
பால்ய பருவத்தில் பறித்தெடுத்து
அவர்களின் இனிமையான
வாழ்வை பாலைவன
ஒட்டகங்களுக்கு பறிகொடுத்த
அப்பாவி தந்தையர் ஏதும் அறியா
புன்னகை புரிகிறார்கள்
கருவில் சுமந்த தாயார்களோ
மௌனப் பொழுதில்
புலம்பித் தவிக்கிறார்கள்
அந்த பூவையரின்
எதிர்கால வாழ்வை எண்ணி,
எண்ணி
பாறைகள் சிவப்பு நிறம் பூசி
உயிர் பறி கொடுத்த
பாலகிகளை சுமந்து நிற்கிறது

ஆதவன் அடிவானம்
தொடுகிறான்
அவலம் தாங்காமல்
கருங்கழுகுகள்
வட்டமிடுகின்றன
சோமாலியா மண்மட்டும்
மரபு காத்த பெருமையில்
நிமிர்ந்து நிற்கிறது பாலம் அந்த
பெண் பூக்கள்
- முல்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சூது கவ்வும் திரைப்படத்தை முன்வைத்து சில குறிப்புகள்

# சிரிப்பில் மறையும் குரூரம்



■ ஆதங்கன்

நிறைய பயங்கரங்கள், திருப்பங்கள், துரத்தல்கள் என்று நிறைந்துள்ள ஒரு த்ரில்லர் படத்தை விழுந்து விழுந்து சிரிக்குமளவுக்கு படைக்கமுடியுமா? முடியும் என்று ஒற்றைச் சொல்லில் பதில் தருகிறது ''சூது கவ்வும்''

நல்லவன் கெட்டவன் என இருவர், கெட்டவன் வில்லன், நல்லவன் ஹீரோ, ஹீரோவை காதலிக்கும் ஹீரோயின், நகைச்சுவைக்கென தனியே ஒரு பாத்திரம் என எந்த வழக்கமான மரபார்ந்த தமிழ் சினிமாவின் முகம் இல்லாமல் வந்திருக்கும் படம் தான் இது. அதற்கே இயக்குனருக்கு பூங்கொத்து அனுப்பலாம். ஓர் அறையில் வேலையில்லாத மூன்று நண்பர்கள் தங்கியுள்ளனர். விஜய்சேதுபதியுடன் ஒரு மதுபானக்கடை சண்டையில் ஒன்று சேர்கிறார்கள். பிறகு சிறுசிறு கடத்தல்களை தம் பாட்டில் வெகு தீவிரமாக செய்து கொண்டு இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் வெகு தீவிரத்தனத்தோடு செய்கின்ற இந்தக்கடத்தல்கள் பார்ப்பவர்களின் வயிற்றைப் பதம் பார்த்து சிரிப்புச் சுனாமியை உருவாக்கி விடுகிறது.

ஒரு சந்தர்ப்பத்தில் அமைச்சரின் மகனையே கடத்தி 2 கோடி பெறும் திட்டம் உருவாகிறது. அவனைக் கடத்தி பணத்தையும் அமைச்சர் மகனின் உதவியுடனேயே பெறுகிறார்கள். ஆனால் பணத்துடன் போகும் வழியில் ஒரு விபத்து ஏற்படுகிறது. அதனைப் பயன்படுத்தி அமைச்சரின் மகன் பணத்தை தூக்கிச் சென்று விடுகிறான். பணமும் போய் ஒரு முரட்டு பொலிஸ் இன்ஸ்பெக்டரும் துரத்துவதால் நீதிமன்றில் சரணடைகிறார்கள். பிறகு என்னவானது, பிரச்சனையில் இருந்து தப்பினார்களா என்பதே படத்தின் கதை.

படத்தில் கதாநாயகனாக இல்லாமல் இயல்பான கதையின் முக்கிய கதாபாத்திரமாக நடித்து அசத்தியிருக்கிறார் விஜய்சேதுபதி. சற்று மனநலம் பிறழ்வு கொண்ட கதாபாத்திரம். கடத்துவதற்கு ஆறு சட்டங்களை போட்டு அதனை கடத்துபவர்களுக்கு பாடமாக எடுக்கும் போது திரையரங்குகளில் விசில் பறக்கிறது.

முதல் காட்சியே ஒரு பெண்ணை கடத்த முயற்சித்து அந்த பெண்ணிடமே அடி வாங்கி தப்பித்து ஓடும் காட்சியில் ஆரம்பிக்கும் விஜய் சேதுபதியின் அட்டகாசம் படத்தின் இறுதி வரை குறையாமல் இருக்கிறது.

கதாநாயகியாக சஞ்சிதா ஷெட்டி. தம்ப வெட்டோத்தி சுந்தரம் படத்தில் அஞ்சலியின் தோழியாக அறிமுகமாகி கொள்ளைக்காரன் படத்தில் விதார்த்துடன் நடித்தவர். அப்படிப்பட்டவரா இவர் என கேட்கும் வகையில் நாகரிக உடையில் எப்பொழுதும் விஜய்சேதுபதியின் உடன் வரும் கதாபாத்திரம். சற்று அலுப்பு ஏற்படும் போது பாதி படத்துடன் அனுப்பி வைத்து விடுகிறார்கள்.

வேலையில்லாத நண்பர்கள் கதாபாத்திரத்தில் ஒருவராக சிம்ஹா. ஊரில் நயன்தாராவுக்கு கோயில் கட்டி அதனால் பிரச்சினை ஏற்பட்டு ஊரே அடித்து துரத்தி சென்னைக்கு பிழைக்க வருகிறார். இன்ஸ்பெக்டருக்கு பயந்து உதட்டில் சிகரெட் பிடிக்க பயந்து இருக்கும் காட்சியில் பார்வையாளர்கள் எவரும் சிரிக்காமல் இருக்கமுடியாது.

மற்றொரு நண்பராக ரமேஷ். காலையில் சரியாக எட்டு மணிக்கு அலாரம் வைத்து எழுந்து குளித்து விபூதி வைத்து மேசையில் அமர்ந்து நிதானமாக சாராயம் அடிக்கும் இளைஞன். இருள்நிறைந்த அறையில் பொலிஸ் இன்ஸ்பெக்டர் வைத்து அடித்து துவைக்கும் போது ''இதுக்கு பேரு தான் இருட்டு அறையில் முரட்டு குத்தா'' என்று அவர் கேட்கும் போது கொப்பளிக்கிறது அரங்கு நிறைந்த சிரிப்பு. கவனிக்கப்பட வேண்டிய நடிகர். சரியான படங்கள் அமைந்தால் நல்ல எதிர்காலம் உண்டு.

கடைசி நண்பராக அசோக் செல்வன். வேலை பார்க்கும் இடத்தில் சைட் அடிக்கும் பெண்ணை கண்டு பயந்து விலகி ஓடும் பாத்திரம். அந்த பெண் காதலிக்க சொல்லி மிரட்டி கையை அறுத்துக் கொள்ள போய் இவரது கையில் வெட்டு பட்டு நின்று நகைச்சுவையில் பிளந்துகட்டுகிறார்.

இன்னும் படத்தில் கவனிக்க பலர் பெயர் தெரியாத நடிகர்கள் இருக்கின்றனர். வேட்டையாடு விளையாடு படத்தில் ஜோதிகாவின் முதல் கணவனாக நடித்து இந்த படத்தில்பொலிஸ் இன்ஸ்பெக்டராக வருபவர், உடன் வரும் கொன்ஸ்டபிள், இயக்குனர் டொக்டர், அமைச்சரின் மகன் இன்னும் பலர் இருக்கின்றனர். இவர்களுடன் அனுபவமிக்க ராதாரவியும் எம்.எஸ். பாஸ்கரும் இருக்கின்றனர்.

பொலிஸ் பாதுகாப்புடன் இரண்டு கோடி பணத்துடன் அமைச்சரின் மனைவி வரும் போது அவரிடம் இருந்து பணத்தை எடுக்கும் காட்சியில் எவருமே எதிர்பாராத வகையில் அந்தப்பணத்தை நால்வர் அணி அபேஸ் செய்வது அட்டகாசம். அதே போன்று படத்தின் இறுதிக்காட்சியின் கடைசி 5 நிமிடக்காட்சிகளும் யாரும் யூகிக்கமுடியாது. நீண்ட நாளைக்கு பின்னர் நல்லதொரு பொழுதுபோக்குப் படம் பார்க்க நினைப்பவர்கலின் மனதை சூது கவ்வும் படம் நிச்சயம் அள்ளும்.

## சாதனைச் சிறுமி



...ச் சிறுமியின் பெயர் விசாலினி. தமிழகத்தைச் சேர்ந்த 12 வயதான சிறுமி. (பிறந்த ...: 23.05.2000). பதினொரு வயதிலேயே நுண்ணறிவு மட்டம் 225. நம்ப முடி...? நம்பத்தான் வேண்டும். ஏனெனில், விசாலினி படைத்துள்ளது உலக சாதனை. ...ஸ் சாதனையாளரான கிம்-யுங்-யோங்கின் (Kim Ung&Yong) நுண்ணறிவு மட்ட...ன 210 என்பதைவிட, இது இன்னும் அதிகம். தமிழகத்தைச் சேர்ந்த தமிழ்ச் ...என்பதால் தான் இன்னும் இவள் புகழ் பரவவில்லை. விசாலினி மட்டும் வேறு ...லோ அல்லது வேறு நாட்டிலோ பிறந்திருந்தால் இப்போது உலகெங்கும் ...பெயர் பரவியிருக்கும். என்ன செய்வது? தமிழ்ச் சிறுமியாக பிறந்த குற்றம். விளக்காக இவளை மாற்றிவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலம் விழுங்கும் படைகள்




அதிரன்

தமிழர் தாயகப் பகுதிகளில் மக்களுக்குச் சொந்தமான காணிகளை படைகளுக்கு சுவீகரிக்கும் நடவடிக்கைகள் கனகச்சிதமாக முழுவீச்சில் இடம்பெற்று வருகின்றன.

இடம்பெயர்ந்து பல வருடங்களாக முகாம்களிலும், உறவினர் வீடுகளிலும் வாழும் மக்கள் சொல்லொணாத் துயரங்களை எதிர்கொண்டுள்ளனர். இருக்கப் போதிய இடமின்றியும் கல்வியைத் தொடர வசதியின்றியும் பொருளாதாரத்தைப் பெருக்க சொந்த நிலமின்றியும் அல்லற்படுகிறார்கள் இவர்கள். அகதி முகாம் வாழ்க்கை இவர்களுக்குக் கடும் வெறுப்பேற்றி விட்டது. அந்தளவுக்கு அவர்கள் அங்கு படும் வேதனைகள் சொல்லில் அடங்காதவை. அடிப்படை வசதிகளான மலசலகூடம், குடிதண்ணீர், இல்லிட வசதிகள் இல்லாமையால் நாளாந்தம் பெரும் மனக்குமுறலுடன் இவர்களது வாழ்வு கழிகிறது.

ஆனாலும் வலி.வடக்கு மக்களின் வேதனையோ சொல்லி மாளாது. 23 வருடங்களுக்கு முன்னர் சொந்த இடங்களிலிருந்து வெளியேற்றப்பட்ட அவர்கள் இதுவரை தமது இல்லிடங்களை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. 23 வருடங்களாக அவர்கள் நாடோடிகளாக பல இடங்களிலும் மாறிமாறி தமது வாழ்க்கையைக் கொண்டு நகர்த்துகிறார்கள். போர் முடிந்த பின்னராவது தமது சொந்த இடங்களுக்கு திரும்ப வழி கிடைக்கும் என நினைத்திருந்த அவர்களின் கனவு இப்போது நனவாகாமலே கலையும் நிலை ஏற்பட்டுள்ளது. தமது சந்ததிக்குக் கூட சொந்த இடத்தை காட்ட முடியாமல் தங்கள் வாழ்வு முடிந்துவிடுமோ என்ற மனக்கவலை அவர்களை ஆட்கொண்டிருக்கிறது.

வலிகாமம் வடக்கு வளம் நிறைந்த செல்வம் கொழிக்கும் பூமி. அங்கு மிகமுக்கிய இடங்களாக பலாலி விமான நிலையம், மயிலிட்டி மீன்பிடித் துறைமுகம், காங்கேசன்துறை சிமெந்து ஆலை, காங்கேசன்துறை துறைமுகம் ஆகியன காணப்படுகின்றன. இவை அனைத்தும் தமிழ் மக்களுக்கு பெரும் பொருளாதார வளத்தையும் வாழ்வியல் மேம்பாட்டையும் அள்ளி வழங்குவனவாக முன்னொரு காலத்தில் இருந்தன. இலங்கையின் இரண்டாவது மிகப் பெரிய மீன்பிடித் துறைமுகமான மயிலிட்டித் துறைமுகத்தினூடாக வடக்கு மீனவர்கள் பெற்றுக்கொண்ட வருமானமும் குடாநாட்டுக்குக் கிடைத்த பொருளாதார உயர்ச்சியும் சொல்லித் தெரிய வேண்டியதொன்றல்ல. அதேபோன்று வலி.வடக்கில் உள்ள இயற்கை வளம் நிறைந்த செம்பாட்டு மண் பூமி விவசாய நடவடிக்கைகளுக்கு மிகவும் உயர்ந்தவை. இற்றைக்கு 25 வருடங்களுக்கு முன்னர் அங்கு உற்பத்தியாகிய மரக்கறி வகைகள், வெற்றிலை, புகையிலை, திராட்சை ஆகியவற்றின் மூலம் அப்பகுதி மக்கள் தமது வாழ்வியலை உயர்த்தி வந்தமையும் யாரும் மறைக்கவோ, மறுக்கவோ முடியாது. அதே போன்று பலாலி சிவில் விமான நிலையம், காங்கேசன்துறை துறைமுகம், காங்கேசன்துறை சிமெந்து ஆலை ஆகியவற்றின் மூலம் குடாநாட்டில் உள்ள இளைஞர்களின் பெருமளவானோர் வேலை வாய்ப்பை சுலபமாகப் பெற்றிருந்ததுடன், பெரும் வருமானத்தையும் ஈட்டினர்.

அந்தளவுக்கு வலி.வடக்கு பூமி செல்வம் பொழியும் பூமியாக இருந்தது என்பதில் சந்தேகம் இல்லை. ஆயினும் 1990 களில் இலங்கைப் படைகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே மூண்ட மோதல்களால் வலி. வடக்கில் இருந்து ஒட்டுமொத்த மக்களும் முற்றாக வெளியேற்றப்பட்டனர். கால ஓட்டத்தில் இந்த வலி.வடக்குப் பூமி முழுமையான ஓர் இராணுவ நகரமாக்கப்பட்டது. அங்கிருந்த துறைமுகம், விமான நிலையம், தொழிற்சாலை, வளமான நிலம் என அனைத்தும் இராணுவத்தின் கையில் போய்ச் சேர்ந்தன.

23 வருடங்களாக ஏதிலிகளாக அலைந்த மக்கள் மீண்டும் சொந்த இடம் திரும்பும் நினைவிலிருந்து தளரவில்லை. நம்பிக்கையுடனும், எதிர்பார்ப்புடனும் காத்திருந்தார்கள் அவர்கள். சொந்த மண்ணுக்குத் திரும்பி வாழ்வை மீண்டும் வளமாக்கி நம்பிக்கையுடன் மீண்டெழுவோம் என நினைத்திருந்த அவர்களின் கனவில் மண் அள்ளிப் போட்டிருக்கிறது அரசு.

> 1990 களில் இலங்கைப் படைகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே மூண்ட மோதல்களால் வலி. வடக்கில் இருந்து ஒட்டுமொத்த மக்களும் முற்றாக வெளியேற்றப்பட்டனர். கால ஓட்டத்தில் இந்த வலி.வடக்குப் பூமி முழுமையான ஓர் இராணுவ நகரமாக்கப்பட்டது. அங்கிருந்த துறைமுகம், விமான நிலையம், தொழிற்சாலை, வளமான நிலம் என அனைத்தும் இராணுவத்தின் கையில் போய்ச் சேர்ந்தன.

வலி.வடக்கில் ஏற்கனவே விடுவிக்கப்பட்ட இடங்களைத் தவிர தற்போது இராணுவத்தின் பிடியில் உள்ள 21 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கிய சுமார் 6 ஆயிரத்து 381 ஏக்கர் நிலங்களை விழுங்குவதற்கு ஆவலுடன் கொட்டாவி விட்டுக்கொண்டு காத்திருக்கின்றன அரச படைகள். இந்த நிலப்பரப்புக்குள் உள்ள மக்களின் காணிகள், வீடுகள் என அனைத்தும் முற்றாகப் படைகளின் தேவைக்கென பறிக்கப்படவிருக்கின்றன. இதற்கான நடவடிக்கைகளை அரசு நன்கு திட்டமிட்டு மேற்கொண்டு வருகிறது. வடக்கில் மக்களின் காணிப் பிரச்சினைகளை கையாள்வதற்கெனக் கூறித் திறக்கப்பட்ட காணி அலுவலகங்களின் மூலம் படைகளுக்குக் காணிகளை அபகரிக்கும் நடைமுறைகள் உரியவாறு நடந்தேறுகின்றன. அரசன் இட்ட கட்டளையை சிரமேற்கொண்டு செயற்படும் சேவகர்களைப் போல மஹிந்த அரசின் கட்டளையை ஏற்று இங்குள்ள அரச அலுவலர்களும் இந்த காணி அபகரிக்கும் பணிகளை தமக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைய முன்னெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நிலைமை இப்போது அபாய கட்டத்தை எட்டியிருக்கிறது.

காணிகளைப் பறிப்பதற்கான பகிரங்க அறிவித்தல்கள் அந்தந்தக் காணிகளின் முன்பாக ஒட்டப்பட்டுள்ளன. இதுவரை காலமும் தமது நிலங்களை மீட்க பல போராட்டங்களை நடத்திப் பயனேதும் கிடைக்காமல் பார்த்திருந்த மக்கள் இந்த அறிவித்தல்களால் பதறிப் போனார்கள். பட்டு வேட்டி கட்டிய கனவில் இருந்தவனுக்கு கட்டியிருந்த கோவணமும் களவாடப் பட்டது போல திரிசங்கு நிலையில் இந்த மக்கள். ஆயினும் அவர்கள் தளர்ந்துவிடவில்லை. சொந்த இடங்களை மீட்க எந்த இடர்வரினும் போராடியே தீருவோம் என்று திடமாக இருக்கிறார்கள். எங்கள் நிலங்களை அபகரிக்க ஒருபோதும் விடமாட்டோம் என்ற ஒரே கொள்கையுடன் அவர்கள் தொடர்ந்தும் போராட்டங்களைத் தீவிரப்படுத்தவுள்ளனர்.

இதற்காக நீதிமன்றத்தில் 5ஆயிரம் வழக்குகளை தாக்கல் செய்வதற்கும் அவர்கள் நடவடிக்கைகளை ஆரம்பித்திருக்கிறார்கள்.

இந்த மக்களின் மன உணர்வுகளை சிறிதும் சிந்திக்காத அரசு நில அபகரிப்புச் செயற்பாடுகளை தொடர்ந்து கொண்டே இருக்கிறது. வலி.வடக்கு வளம் நிறைந்த பூமியை அபகரிப்பதன் மூலம் அந்த பகுதி மக்களை மட்டுமல்ல, ஒட்டுமொத்த தமிழர்களையும் தன் கட்டுக்குள் வைத்திருக்க நினைக்கிறது மஹிந்த அரசு. அதற்கான அத்திவாரமாக இந்த நில அபகரிப்பு முன்னெடுக்கப்படுகிறது. ஆயினும் மக்களின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் அரசின் இந்த அராஜக செயற்பாடு எவ்வாறு நிகழ்ந்தேறப் போகிறது என்பது இப்போதுள்ள எதிர்பார்ப்பு.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழ நாடக வரலாற்றில் மற்றொரு பாய்ச்சல்

**திறந்தவெளி அரங்கில் புதிய வட்ட மேடைகளுடன் வெற்றிகரமான ஒரு நாடகத் திருவிழா**



நிலம் விளைய மறுக்கிறது. வெறும் சப்பிகள் மட்டுமே பிரசவமாகின்றன. (கருப்பை தறுக்கணிப்பு நாடகக் காட்சி)

தேபிந், தட்ஜா.ஜோ

**ஈழத்து நாடக வரலாற்றில் அண்மையில் சத்தமின்றி ஒரு பாய்ச்சல் நிகழ்த்தப்பட்டுள்ளது.**

முத்திரைச் சந்தியில் கிட்டுப் பூங்காவில் (இப்போது சங்கிலியன் பூங்கா என்று மாற்றப்பட்டுள்ளதாம்) ஏப்ரல் மாதம் 6, 7ஆம் நாள்களில் அந்தப் பாய்ச்சல் தன்னெழுச்சியாக நிகழ்ந்தது. எனினும் வழக்கம் போலவே ஊடகங்கள் எவையும் அதனைக் கண்டுகொள்ளவில்லை.

செயல்திறன் அரங்க இயக்கத்தின் ஏற்பாட்டில் நடந்த 'திறந்த வெளி நாடகத் திருவிழா' ஈழத்து நாடக வெளியை மற்றொரு பரிமாணத்துக்கு விரிவாக்கி அந்தப் பாய்ச்சலை நிகழ்த்தியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் கடந்த 10 வருடங்களாக நாடகத்துக்காக மட்டுமே செயற்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு நிறுவனமே செயல்திறன் அரங்க இயக்கம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நாடகமும் அரங்கியலும் பட்டதாரியான தே.தேவானந்தினால் உருவாக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டு வரும் இந்த நிறுவனம், ஈழத்து நாடகச் சூழலில் முக்கிய பல நாடகங்களை மேடையேற்றி இருக்கிறது. பேசாப் பொருள்களை பேச முடியாக் காலங்களில் பேசிய பெருமை அந்த நாடகங்களுக்கு உண்டு.

மேடை நாடகச் சூழலில் இருந்து இளைஞர்கள் விலகிச் சென்று, தொலைக்காட்சிகளுக்குள் புகுந்து விடுவார்களோ என்ற அச்சம் விரவிப் பரந்திருந்த ஒரு காலத்தில் ஒரு நூறு வரையான இளைஞர்களை ஒன்றிணைத்துக் கொண்டு திறந்த வெளியில் ஒரு 10 நாடகங்களை மேடையேற்றியதன் மூலம் செயல் திறன் அரங்க இயக்கமும் அதன் பணிப்பாளர் தேவானந்தும் மீண்டும் ஒருமுறை தமது வரலாற்றுக் கடமையை காலமுணர்ந்து நிறைவேற்றியிருக்கிறார்கள்.

இவற்றை எல்லாம் மேடையில் பேச முடியுமா என்று ஒவ்வொருவரும் அஞ்சி ஒடுங்கியிருந்த நிலையில் அவற்றைத் திறந்த வெளியில் கொண்டு வந்து பல நூறு சனங்கள் மத்தியில் சேர்த்தமைக்கான தற்துணிபு பாராட்டப்பட வேண்டியது. நாடகம் பார்த்துக் கொண்டிருந்தவர்களின் பின்வரிசையில் இருந்து,

''நாளைக்கு உனக்குப் புனர்வாழ்வுதான்'' என்று பறந்த விமர்சனங்கள் நாடகம் பேசிய கருப்பொருள்களின் கனதியைச் சுட்டப் போதுமானவை.

கடந்த சில ஆண்டுகளாக பெருமெடுப்பில் நாடகங்கள் ஏதும் செய்யாது தாம் தறுக்கணித்துப் போய் இருந்ததால் ஏற்பட்ட கவலைதான் இந்த வரலாற்றுப் பாய்ச்சலுக்கான உந்துதலைத் தந்தது என்கிறார் தேவானந்த்.


தனிஆள் அரங்குகள் மற்றும் முழு நாடகங்களை அடக்கி இந்த இரு நாள்களிலும் 9 நாடகங்கள் மேடையேற்றப்பட்டன.

'கருப்பைத் தறுக்கணிப்பு' என்பதுதான் விழாவின் முதன்மை நாடகம். சுமார் ஒரு மணி நேரத்தைக் கொண்டிருந்த இந்த நாடகம் தாய் நிலம் விளைய மறுத்து ஏப்படித் தறுக்கணித்துப் போய் கிடக்கின்றது என்பதைப் பேசுகிறது.

உரப் பயன்பாட்டையும் கிருமி நாசினிகளையும் மிகை நம்பிக்கையாகக் கொண்ட விவசாயம், வெளிநாட்டுக்குப் படையெடுக்கும் மோகம், நுகர்வுக் கலாசாரம் என்பவற்றால் நிலம் எப்படித் தறுக்கணித்துப் போகிறது என்பதை இந்த நாடகம் வெளிப்படையாகப் பேசினாலும், தேவானந்தின் முன்னைய நாடகங்களைப் போலவே உள்ளார்ந்த கள அரசியலை இந்த நாடகம் ஆழமாகவே மறைபொருளாகக் கொண்டிருக்கிறது.

இந்த நாடகம் மட்டும் என்றல்ல எல்லா நாடகங்களும் சமகால அரசியலை மறைமுகமாக விமர்சிக்கும் வகையிலானவையே என்றாலும் வெளிப் பார்வைக்கு அவை குற்றங் காண முடியாப் பேசு பொருள்களையே கொண்டிருந்தன.

'கொடிது கொடிது', 'வெப்பக் குடுவை', 'வீடு பேறு', 'வண்டியும் தொந்தியும்' ஆகிய நாடகங்களும் 'வேடங்கட்டும் பட்டதாரி', 'நல்ல தங்காள்', 'கடலில் கிடந்த பெருமூச்சு', 'நான் தொலைத்த சைக்கிள்' தனியாள் நாடகங்களும் மேடையேற்றப்பட்டன. இவற்றில் 'நான் தொலைத்த சைக்கிள்' பார்த்தவர்கள் பலரின் நெஞ்சங்களைத் தொட்டது. ''சைக்கிள்களின் நகரம்'' என்று வர்ணிக்கப்பட்ட யாழ்ப்பாணத்தில் சைக்கிளுடன் உறவு கொண்டாடாதவர்கள் யாராவது இருக்க முடியுமா? 'டைனமோ' சுற்றி பாட்டுக் கேட்ட காலங்களையும் நினைவில் கொண்டு வந்த அந்த நடிப்பு பெரும் வரவேற்பைப் பெற்றது.





'கடலில் கிடந்த பெருமூச்சு' மீனவர்களின் பிரச்சினையைப் பேசியது. இந்திய மீனவர்களால் ஏற்படும் பாதிப்பைக் காட்ட, வீசிய வலையில் கடலில் இருந்து மன்மோகன் சிங்கின் தலைப்பாகை கிடைப்பதாகக் காட்டி அதிலிருந்து தொடர்ந்த கதையின் உத்தி பிரமாதமானது.

இந்த நாடக விழா, ''பழைய விடயங்களையும் நடப்பவற்றையும் மனக்கண் முன் அசைபோட வைத்த அழகான தருணங்களைத் தந்தது. தேவானந் மட்டுமே தற்காலச் சூழலில் உச்சக்கட்ட நாடகப் படைப்புக்களைத் தருகிறார். நாடகத்துறையைப் பொறுத்த வரையில் பலரும் ஆய்வாளர்களாக உள்ளார்களே தவிர செயற்பாட்டார்களாக இல்லை. இது வருத்தம் தருகிறது. தேவானந்த் அதில் ஒரு விடிவெள்ளி'' என்கிறார் விரிவுரையாளர் சிறிகணேசன். நாடகத் திருவிழாவைக் கண்டுகளித்த இவர், யாழ். பல்கலைக் கழக ஆங்கில மொழிப் பேராசிரியர். நாடகச் செயற்பாடுகளில் தீவிர ஈடுபாடு கொண்டநபர்.

மக்களின் கதைகளை அவர்களிடம் இருந்து பெற்று அவர்களுக்கே படைக்கும் தேவானந்தின் செயற்பாடுகள் வாழ்த்தி வளர்க்கப்பட வேண்டியவை என்கிறார் இவர்.

கட்டாயக் கல்வியையும் சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவதைத் தடுக்கும் அதிகாரிகளின் செயலையும் விமர்சித்த நாடகம் பற்றிய எதிர்வினைகள் உண்டு.

''சமூகத்திற்குப் பயன்தரக் கூடிய கட்டாயக் கல்வி போன்றவற்றையும் அதனை நடைமுறைப்படுத்த அதிகாரிகள் எடுக்கும் நடவடிக்கைகளை





கடலில் மீன்களுக்குப் பதில் மன்மோகன் சிங்கின் தொப்பிகள்தான் விளைகின்றன.

## படைப்புக்கான சூழலை கலைஞர்களேதான் உருவாக்கிக்

''இந்த நேரத்தில் இப்படி ஒரு நாடகத் திருவிழாவை நடத்த உங்களை எது தூண்டியது?''

''இன்று நாடகத்துறை ஒரு வகையான தறுக்கணிப்பு நிலைக்கு ஆளாயிருப்பதை நாடகத்துறை சார்ந்தவர்கள் அடிக்கடி பேசிக் கொள்வார்கள். படைப்பை மேற்கொள்வதற்கு உரியசூழல் இல்லை, படைப்புச் சுதந்திரத்துக்கான ஏது நிலை இல்லை, இன்றைய சமூக பொருளாதார நிலையில் நாடகத்துக்கு இளைஞர்கள் ஆர்வத்துடன் வருவதில்லை, நாடகம் பார்க்க ஆள்கள் கிடையாது என அதற்குப் பல காரணங்கள்.

நல்ல விட்டு வீதியான சுழலை வேறு யாரும் உருவாக்கித் தர, அதில் கலையைப் படைப்பதாக இருந்தால் கலைஞனின் பணி என்னவென்ற கேள்வி எனக்கு உண்டு. நெருக்கடியான சூழலுக்குள்தான் கலைஞன் பணியாற்ற வேண்டும். இதற்கு முயற்சி அவசியம். முயற்சித்துப் பார்க்க வேண்டிய ஒரு சூழலில் மேலே சொன்ன மூன்று காரணங்களையும் எப்படி வெல்வது என்று கலந்தாலோசித்தோம். அதன் போது பிறந்ததே இந்தத் தெருவெளி நாடகத் திருவிழா.

நாடகங்களைப் படைத்துக் [illegible] அருகில் இருக்கின்ற ஒரு [illegible] ஒரு புதிய மேடை போட்டு (இதனை 'வீ' வடிவ அரங்கு என்று அழைக்கின்றோம்) பார்வையாளர்களை நோக்கி சென்றோம். திட்டம் வெற்றி தந்தது.

அது தவிர, செயல் திறன் அரங்க இயக்கத்தின் 10ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் முகமாக ஒரு பெரிய நாடகத் திருவிழாவைச் செய்ய வேண்டும் என்ற எண்ணமும் இதற்கு உந்துதலைத் தந்தது.''



''புதிய மேடை அமைப்பு, திறந்த வெளி என்பன ஏன் உங்களுக்கு அவசியப்பட்டன?''

''ஏற்கனவே இருக்கின்ற வெளிக்கு ஆள்கள் வரவில்லை. பார்ப்பவர்களும் வரவில்லை. நாங்கள் அழைப்பிதழ்கள் கொடுத்துக் கூப்பிட்டாலும் வருகிறார்கள் இல்லை. இதனால் வெளியை நோக்கிப் போனோம். விரும்பியவர்கள் எல்லாம் வரலாம். வந்தார்கள். வெளியான ஓர் இடத்தில் செய்கின்ற போது மனதும் ஆறுதலடைகிறது. எமது அழுத்தங்களை வெளியேற்றிக்கொண்டு எம்மை ஆசுவாசப்படுத்தி தளர்வாக இருக்க உதவுகிறது.''

''நாடகத் தயாரிப்புக்காக எவ்வளவு காலம் எடுத்துக் கொண்டீர்கள்? நாடகம் என்றாலே இளைஞர்கள் ஓடிப்போய்விடும் இந்தக் காலத்தில் எப்படி இவ்வளவு [illegible]களைச் சேர்த்தீர்கள்?''


''[illegible] ஈடுபட இளைஞர் [illegible] தயாராக இருக்கிறார்கள். அவர்களிடம் நாம் போகவில்லை என்பதுதான் உண்மை. முதலில் ஐந்து இடங்களைத் தெரிவு செய்து நாடகக் களப் பயிற்சிகளை நடத்தினோம். பின்னர் அதில் இருந்து நாடகத்துக்கான நடிகர்களை தெரிவு செய்து முப்பது நாள்கள் ஒத்திகை பார்த்து நாடகத்தை தயாரித்தோம்.''

''இவ்வளவு நீண்ட திட்டத்தை நிறைவேற்ற நிதிக்கு என்ன செய்தீர்கள்?''

''தவிர்க்க முடியாமல் நிதிக்காக தன்னார்வத் தொண்டு நிறுவனங்களைத்தான் நாடவேண்டியிருக்கிறது. பார்வையாளர்களே பணம் தரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





'கொடிது கொடிது' மற்றும் 'வீடு பேறு' நாடகங்களின் காட்சிகள்.

யும் விமர்சிப்பதற்கு முன்னர் ஒன்றுக்குப் பல தடவைகள் யோசிக்க வேண்டும். இத்தகைய விமர்சனங்களால் சமூகத்திற்குப் பாதிப்பு வந்து ...க்கூடாது'' என்கிறார், ...காமம் வலய ஆசிரிய ...த்திய நிலைய முகாமையாளர் த.சிவகுமாரன்.

இந்தத் திருவிழாவின் மிக முக்கிய விடயங்கள் இரண்டு. அதில் முதலாவது கூத்துப் பாரம்பரியத்தின் பின்னர் திறந்த வெளியில் வட்ட மேடைகளை மீண்டும் பயன்பாட்டுக்குக் கொண்டு வந்தமை. ஆனால் புதிய பரிணாமத்தில் இந்த வட்ட மேடைகள் பயன்படுத்தப் பட்டன.

கூத்தில் ஒரே வட்ட களரி காணப்பட்டாலும், இந்த நாடகத் திருவிழாவில் மூன்று வட்ட மேடைகள் இருந்தன. நடுவில் பெரியதும் இரு பக்கங்களிலும் சிறியனவும் இருந்தன.

இரண்டாவது முக்கிய விடயம், பெருமெடுப்பிலான விளம்பரங்கள் ஏதுமின்றி ஒவ்வொரு நாளும் சுமார் 500 வரையான பார்வையாளர்கள் நாடகங்களைக் கண்டு களித்தனர்.

பெரியளவில் விளம்பரப் படுத்தியும் நூற்றுக்கணக்கில் 'ரிக்கெட்டுக்கள்' விற்ற பின்னரும்கூட கதிரைகளால் மட்டுமே நிறைந்திருக்கும் நாடக நிகழ்வுகள் பலவற்றை யாழ்ப்பாணத்தில் கண்ட பின்னர், இப்படி ஒரு ரசிகர் கூட்டத்தை காண்பது என்பது நாடகம் மீதான நம்பிக்கையைத் துளிர்விடச் செய்த ஒரு நிகழ்வு. அதற்காகவே செயல்திறன் அரங்க இயக்கத்திற்கும் அந்த இளம் நடிகர் பட்டாளத்திற்கும் தேவானந்திற்கும் எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

''மூடி மூடி வைத்து எதைச் செய்தாலும் சந்தேகத்துடன் பார்க்கும் இன்றைய சூழலில் நாங்கள் திறந்து வைத்து விட்டே மேடைக்குப்போனோம். பார்வையாளர்களுக்கும்கூட அதனால்தான் ஒரு அச்சம் நீங்கிய நிலை காணப்பட்டதோ தெரியவில்லை'' என்கிறார் தேவானந்த்.

இந்த இரண்டு விடயங்களும் ஈழ நாடக வரலாற்றில் மிக அண்மையில் நிகழ்த்தப்பட்ட வலிதான பாய்ச்சல்கள். இது தொடர வேண்டும். இன்னும் பலர் இதனைத் தொடரவேண்டும். நாடகம் வாழ வேண்டும்.

## கொள்ளவேண்டும்

காலம் வரும் வரை இந்த நிலை தொடரும் என்றே நினைக்கிறேன். எமக்கான நிதியை யுஎஸ் எய்ட் நிறுவனம் தந்தது. நிதி கொடுத்தது என்பதை விட எமக்குத் தேவையான எல்லாவற்றையும் அவர்களே பெற்றுத் தந்தார்கள் என்று சொல்லலாம். மேடை, வேட உடை என்று அனைத்தையும் அவர்களே பார்த்துக் கொண்டார்கள். அதனால் பெரும் சுமை எமக்குக் குறைக்கப்பட்டது.''

''தொடர்ந்து வேறு இடங்களில் இதனை மேடையேற்றும் எண்ணம் இருக்கிறதா?''

''நிச்சயமாக! வெவ்வேறு இடங்களில் திறந்த வெளி நாடகத் திருவிழாவை நடத்த வேண்டும் என்பதான் விருப்பம், அவா எல்லாம். அதற்கான வசதிகள் கிடைக்கின்றபோது பல இடங்களில் இவற்றை விரைவாகப் போடுவோம். ஆனால், அதுவும் அதிக நிதியை வேண்டி நிற்கக்கூடிய திட்டமே. மேடை, நூறு வரையான ஆள்கள், பொருள்கள் என்று எல்லாவற்றையும் காவ வேண்டும். போக்குவரத்துச் செலவு பெரும் சுமை. இருந்தாலும் மக்கள் ஆதரவுடன் ஆகக்குறைந்தது இவ்வாறான ஐந்து விழாக்களையாவது நடத்த வேண்டும் என்பதற்காகத் தீவிரமாக முயற்சிக்கின்றோம்.''

# தொழிலாளர்களின் உரிமைகளை மறந்த வடக்கு மே தினங்கள்

ஷோபா

வடக்கில் மற்றொரு மே தினம் வந்து போயிருக்கின்றது. போருக்குப் பின்னரான காலச்சூழலில் பெருமெடுப்பில் நடந்த இரண்டாவது மேதினக் கொண்டாட்டங்கள்இவை. பல்வேறு அரசியல் கட்சிகளின் ஏற்பாடுகளில் நடத்தப்பட்டன.

மே தினம் தொழிலாளர்களுக்கான நாள் என்றபோதும் வடக்கில் நடந்த மே தினக் கூட்டங்களில் தொழிலாளர்களின் உரிமைகளிலும் பார்க்க அரசியல் குரல்களே மேலெழுந்திருந்தன.

வடக்கில் நடந்த மேதினக் கொண்டாட்டங்களில் எதிலாவது தொழிலாளர்களின் உரிமைகள் தொடர்பில் பேசப்பட்டனவா, உரிமைகள் வலியுறுத்தப் பட்டனவா, தொழிலாளர்களின் தேவைகள் முதன்மைப்படுத்தப்பட்டனவா என்றால் இல்லை என்பதே பதிலாகின்றது. ஒவ்வொரு அரசியல் கட்சிகளும் தத்தமது கட்சிகளின் பலத்தைக் காட்டவும் பொதுக்கூட்டம் ஒன்றை நடத்தவுமே இந்த மே தினத்தைப் பயன்படுத்திக் கொண்டன. அதிலாவது அவை வெற்றி பெற்றனவா என்றால், அதற்கும் இல்லை என்பதே பதிலாகக் கிடைக்கின்றது.

உழைக்கும் மக்களது உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு குரல் கொடுக்கப்பட்ட நாளாக இந்த மே தினம் மே மாதம் முதலாம் திகதி பேரணிகளாகவும், பொதுக்கூட்டங்களாகவும் உலகம் முழுவதும் நடத்தப்படுகின்றன.

போர்க் காலத்தில் மே தினங்கள் விடுதலை முழக்கத்துக்குரிய தினமாகக் கொண்டாடப்பட்டது. அதற்கு மேல் தொழிலாளர் உரிமைகள் குறித்து அன்றும் கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை. இன்றும் சில கட்சிகள் அதனையே மீண்டும் உரத்த குரலில் கூறுகின்றன. இன விடுதலையில் மட்டுமே தமிழ்த் தொழிலாளர்களின் விடுதலை சாத்தியம் என்று அவை கூறுகின்றன. ஆனால் அரசுடன் இணக்க அரசியல் நடத்தும் கட்சிகளும் இடதுசாரிக் கட்சிகளும்கூட இந்த மே தினத்தில் வடக்கில் தொழிலாளர்களின் உரிமைகளுக்காகக் குரல் எழுப்பியதாகத் தெரியவில்லை.

இந்த வருடமும் அரசியல் கட்சிகள் தலைமை தாங்கிய மே தினப் பேரணிகள் கூட்டங்கள் அனைத்தும் அரசியல் பிரகடனங்களாகவும் ஊடகங்களை வசைபாடுவதாகவும் மட்டுமே நடத்தி முடிக்கப்பட்டிருக்கின்றன.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மே தினம் கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபை வளாகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த கூட்டத்தில் கலந்துகொண்ட கட்சியின் பிரமுகர்கள் ஒவ்வொருவரும் தமது கருத்துக்களை முன் வைத்திருந்தனர்.

தமிழ் மக்களது வாழ்விடங்களை இராணுவம் தமக்கு முகாம் அமைப்பதற்காகச் சுவீகரிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்ததும் கூட்டமைப்பை உடைப்பதற்கு அரசு செய்கின்ற சதியுமே இந்தக் கூட்டத்தின் பேசு பொருளாக இருந்தன.

இனத்தின் விடுதலையில் மட்டுமே தொழிலாளர்களின் விடுதலையும் சாத்தியமாகும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா கூறியது மட்டுமே கூட்டமைப்பின் தொழிலாளர் அக்கறையாக இருந்தது.

இன விடுதலை தொடர்பாக பேசப்பட்டபோது மக்களது உரிமைகள், சாதாரண குடும்பங்களின் வாழ்வாதாரத் தேவைகள், எதிர்பார்ப்புகள் தொடர்பாகவும் சுட்டிக் காட்டப்பட்ட்ருந்தன .

இதனைவிட வேலையற்ற இளைஞர் யுவதிகள் தொண்டர் ஆசிரியர்களின் வேலை வாய்ப்புகள் தொடர்பாகவும் தொழிலாளர்களின் தேவைகள் எதிர்பார்ப்புகள் தொடர்பாக, பேசியோர் ஆங்காங்கே தொட்டுச் சென்றனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னனியின் மே தினக் கூட்டம் கரவெட்டியில் நடத்தப்பட்டது. நிலப் பறிப்பும் ஊடகங்கள் மீதான வசையுமே அங்கு முதன்மைப் பேசு பொருள்களாக இருந்தன.

தமிழர் தாயகம் எங்கும் திட்டமிடப்பட்ட வகையில் சட்ட ரீதியாக நடத்தப்படுகின்ற நிலப்பறிப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் இந்த முயற்சி கொடூரமானது என்றும் அந்தக் கட்சியின் மே தினப் பிரகடனம் கூறியது.

தமிழ் மக்களை அவமானப்படுத்தும் ஜெனீவா தீர்மானத்தை நிராகரிப்போம் என்ற முழக்கமும் மே தினக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டது. கூட்டமைப்பு உட்பட ஏனைய அரசியல் கட்சிகளைச் சாடுவதற்கான களமாகவும் மே தின மேடையை இந்தக் கட்சி பயன்படுத்திக் கொண்டது. அதன் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தனது அரசியல் பலவீனத்தை ஊடகங்கள் மீதான தாக்குதலாக வெளிப்படுத்திக் கொண்டார்.

தொழிலாளர் உரிமைகள் தொடர்பாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மே தினக் கூட்டத்தில் பெரிதாக எதுவும் பேசப்படவில்லை. இன்னொரு கட்சியின் செயற்பாடுகளை குற்றம் கூறி கட்சிகளை இழிவுபடுத்திய மேடை என்பதற்கு மேல் அதற்கு தொழிலாளர் தினத்தில் முக்கியத்துவம் எதுவும் இருந்ததில்லை. தமது மற்றொரு அரசியல் கூட்டத்தை அந்தக் கட்சி மே தினத்தில் நடத்தியது என்று மட்டுமே சொல்ல வேண்டும்.

நடத்தப்பட்ட பேரணியில் கூட தொழிலாளர்களின் குரலோ தொழிலாளர்களுக்கான குரலோ ஓங்கி ஒலிக்கவில்லை.

புதிய ஜனநாய மாக்சிச லெனினிசக்கட்சியின் மே தினக் கூட்டமும் பேரணியும் சைக்கிள் ஊர்வலம் மற்றும் கூட்டத்துடன் நடத்தப்பட்டது. சுன்னாகம் பொதுச் சந்தையில் இருந்து சுமார் 10 கிலோ மீற்றர் சைக்கிள் ஊர்வலமாக யாழ். நகரை வந்தடைந்த பின்னர் கூட்டம் நடத்தினார்கள். கடந்த தசாப்த காலத்தில் இந்தக் கட்சி நடத்தியிருக்கக்கூடிய முக்கியமான நிகழ்வாக இதனைக் கருதலாம். தங்களை இடதுசாரிகளாகவும் முற்போக்குவாதிகளாகவும் அடையாளப்படுத்திக்கொள்ள விருப்பம் கொண்டவர்களே இந்தக் கட்சியில் அதிகம் உள்ளனர்.

இதன் மே தினக் கூட்டம் மற்றும் ஊர்வலத்தின் பேசு பொருளாகவும் பொருள்களின் விலை ஏற்றம் என்பதே முதன்மை பெற்றிருந்தது. விவசாயிகளின் உற்பத்தி மேம்பாடு, கல்வி சுகாதாரம் மக்களது மீள் குடியேற்றம் மக்களது அடிப்படை வசதிகள் என்று பல்வேறு விடயங்களையும் இந்தக் கட்சி பரவலாகத் தொட்டுச் சென்றது. எனினும் தொழிலாளர்களை ஒருங்கிணைக்கக் கூடிய தன்மையையோ, அவர்களுக்காகக் குரல் கொடுக்கக்கூடிய வல்லமையையோ அதில் காண முடியவில்லை.

யாழ். நகரில் இடம்பெற்ற அந்தக் கட்சியின் மே தினக் கூட்டத்தில் தொழிலாளர்களின் பிரச்சினைகள் சில முன்வைக்கப்பட்டமை மட்டுமே சற்று ஆறுதல் தரக்கூடிய விடயம். அரச உத்தியோகத்தர்களினதும் தனியார் நிறுவனங்களினதும் சம்பள உயர்வுகள் பற்றிப் பேசப்பட்டன.

ஊடகங்களின் ஜனநாயகமற்ற தன்மை குறித்து இந்தக் கட்சியின் தலைவர் ஒருவர் காரசாரமாக விமர்சித்தார். மக்கள் நடத்திய போராட்டம் ஒன்றில் தாங்களும் கலந்து கொண்டார்கள் என்பதை ஊடகங்கள் சொல்லாமல் விட்டுவிட்டன என்பதே அவரது கோபம். அதாவது, தாங்களும் மக்களுக்காகத்தான் போராடுகிறோம் என்ற 'பப்ளிசிட்டி'யை வழங்கி தங்கள் அரசியலுக்கு ஒத்துழைக்காமல் கூட்டமைப்பை மட்டும் இந்த ஊடகங்கள் வளர்க்கின்றன என்பது தான் அவரது கோபம்.

வடக்கில் பேரணியுடன் நடத்தப்பட்ட ஒரே மே தினக் கூட்டம் என்ற கவனிப்பைத் தவிர தொழிலாளர் தினம் என்ற கவனிப்பைப் பெறுவதற்கு இதிலும் பெரிதாக ஒன்றும் இருக்கவில்லை.

ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் மே தினக் கூட்டம் கிளிநொச்சியில் நடத்தப்பட்டது. தலைகளின் எண்ணிக்கையில் வடக்கில் அதிக தலைகளைக் கொண்ட கூட்டமாக அது இருந்தது. பல்வேறு சங்கங்களைச் சார்ந்தவர்கள் பிரதிநிதிகளாக கூட்ட அரங்கில் அமர்ந்திருந்தார்கள். அழைப்புக் கட்டளைகள் அனுப்பப் பட்டதால் தாம் வரவேண்டியதாயிற்று என்று வெளியில் வந்ததும் முணுமுணுத்தார்கள். அங்கும் தொழிலாளர் பிரச்சினைகளைவிட அரசியலே முதன்மை பெற்றிருந்தது. எதிர்பார்க்கப்படும் மாகாண சபைத் தேர்தலுக்கான முன்னோடிப் பரப்புரைக் கூட்டம் போன்று அது காட்சியளித்தது.

இவ்வாறு பல விதமாக அரசியல் கட்சிகளாலும் வடக்கில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தொழிலாளர் தினக் கொண்டாட்டங்களில் தொழிலாளர்களும் 'மிஸ்ஸிங்'; தொழிலாளர்களின் உரிமைகளுக்கான குரலும் 'மிஸ்ஸிங்'.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முன்னாள் பாக். ஆட்சியாளர் முஷாரப்பின் இன்றைய நிலை

* வினைவிதைத்து வினை அறுக்கும் பர்வேஸ் முஷாரப்
* குவாண்டனாமோ சிறையை மூடிவிட ஒபாமா திட்டம்
* சனிக்கிரகத்தின் நிரந்தர சூறாவளி

உலக நடப்புகள் ஒரு பார்வை

■ ரெங்கன்

முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்பது ஏதோ விளையாட்டாக கூறப்பட்டுள்ள பழமொழியாக கருதி விட முடியாது. வாழ்க்கையில் எத்தனையோ விதமான மனிதர்களைப் பார்க்கிறோம். அவர்களில் பலரும் தாம் தமக்கு அதிகாரமும் அந்தஸ்தும் இருக்கும் வரை ஆடிய ஆட்டங்களையும் பார்த்திருக்கிறோம். அவர்களில் பலம் நம் கண் முன்னாலேயே கரைந்து போய் விடுவதையும் அவர்கள் தாம் செய்த காரியங்களுக்காக அல்லது அந்தக் காரியங்களின் எதிர்விளைவுகளை அனுபவிப்பதையும் பார்த்திருக்கிறோம்.

உலகளவில் சமீபகாலத்தில் பார்த்தால் அவர்களில் நமக்கு உடனடியாக நினைவுக்கு வருபவர் உகண்டாவின் சர்வாதிகாரி இடி அமீன் என்பவர்தான்.

அந்த நாட்டு அதிபர் வெளிநாடு சென்றிருந்த வேளையில் இராணுவ புரட்சி நடத்தி சர்வாதிகாரியானார். பதவியிலிருந்த காலத்தில் அந்த நாட்டு மக்களை குறிப்பாக தமக்கு எதிராக செயற்பட்டவர்களை அவர் படுத்தியபாடு உலகப் பிரசித்தம். பிற்காலத்தில் இருந்த இடமே தெரியாமல் மறைந்து போனார். வெளிநாடொன்றில் தஞ்சம் புகுந்து கடைசி வரை மீட்சியின்றி வாழ்ந்து மறைந்தார் என்பார்கள்.

அதுவும் கூட பழங்கதை. அவரைப் பின்பற்றியவர்கள் பல நாடுகளில் பதவி வகித்துள்ளார்கள். அதற்கு முன்பும் பதவிகளில் இருந்துள்ளார்கள்.

சமீப கால அரசியலில் பாகிஸ்தானின் இராணுவ ஆட்சியாளராக விருந்து இப்போது கைதியாக காவலில் இருக்கும் பர்வேஷ் முஷாரப்பே நினைவுக்கு வருகிறார்.

முஷாரப் இராணுவத் தளபதியாக இருந்த காலத்தில் பிரதம மந்திரியாக இருந்த நவாப் ஷெரிப் இலங்கைக்கு வந்து திரும்பிச் சென்ற போது அங்கு முஷாரப் இராணுவ புரட்சியை மேற்கொண்டு ஆட்சியைக் கைப்பற்றினார். பல அரசியல் தலைவர்களைக் கைது செய்து காவலில் வைத்தார். பல நீதிவான்களை பதவி நீக்கம் செய்து காவலிலும் வைத்தார். பின்னர் ஏற்பட்ட அரசியல் பின்னடைவுகளையடுத்து வெளிநாடு சென்று 4 ஆண்டுகள் கழித்து அண்மையில் நாடு திரும்பினார். நாட்டை தீவிரவாதத்திலிருந்தும், பொருளாதார சீர்குலைவிலிருந்தும் காப்பாற்றுவதற்காக தேர்தலில் போட்டியிட வந்திருப்பதாக அறிவித்தார். ஆனால் தேர்தலில் போட்டியிட வந்த அவர் அவ்வாறு போட்டியிட முடியாதபடி நீதிமன்ற தீர்ப்புகள் வந்துள்ளதுடன் பெனாஸிர் பூட்டோ கொலை வழக்கில் அவர் மீதான வீட்டுக் காவல் உத்தரவை நீதிமன்றம் நீடித்திருப்பதால் தேர்தல் தினத்தன்று கூட அவர் காவலில் இருப்பார் என்று தெரியவந்துள்ளது.

2007 ஆம் ஆண்டு துப்பாக்கிச் சூடு மற்றும் குண்டுத் தாக்குதல் சம்பவத்தில் பிரதம மந்திரி பெனாஸிர் பூட்டோ கொல்லப்பட்டார். இந்த விசாரணை ராவல் பிண்டி பயங்கரவாதத் தடுப்பு நீதிமன்றம் ஒன்றில் விசாரணைக்கு வந்த போது முஷாரப்புக்கு 14 நாள் தடுப்புக் காவல் விதிக்கப்பட்டது. அவர் இப்போது தமது மாளிகையிலேயே தடுப்புக் காவலில் இருக்கின்றார். 2007 ஆம் ஆண்டு நவம்பரில் அவசர காலத்தை பிரகடனப்படுத்தி நீதிவான்களைச் சிறையில் அடைத்த வழக்கில் அவர் ஏற்கனவே மே 4 ஆம் திகதி வரை வீட்டுக்காவலில் இருந்து வருகிறார். வழக்கு தொடர்பான புலனாய்வுகளை மேற்கொள்வதற்கு வசதியாக பிணை வழங்கப்பட்டிருப்பதாகக் கூறிய அரசுத் தரப்பு வழக்கறிஞர் மே 3 ஆம் திகதியிலிருந்து தொடர்ச்சியாக விசாரணை நடைபெற இருப்பதாகவும் தெரிவித்தார்.

இரு தடவைகள் பாகிஸ்தான் பிரதம மந்திரியாக இருந்தவரான பெனாசீர் பூட்டோவைக் கொலை செய்வதற்கு சதி செய்ததாக முஷாரப் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. 2008 ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் பூட்டோவின் பாகிஸ்தான் மக்கள் கட்சி அறுதிப் பெரும்பான்மையைப் பெற்றது. பூட்டோவின் மரணத்தினால் ஏற்பட்டிருந்த அனுதாப அலை வெற்றிக்கு பெரும் காரணமாக அமைந்தது.

1999-2008 வரை ஆட்சியிலிருந்த காலத்தில் முஷாரப் இழைத்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான மூன்று வழக்குகளில் அவர் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார். இஸ்லாமாபாத்திலுள்ள முஷாரப்பின் ஆடம்பரமான மாளிகை வீட்டில் அவர் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார். ஆனால் அவருக்கு இரண்டு அறைகள் மட்டுமே பாவிப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் அவருடைய சொந்த அலுவலர்கள் நீக்கப்பட்டிருப்பதாகவும் அவருடைய வழக்கறிஞர்கள் கூறுகிறார்கள். அதேசமயம் முஷாரப்பை கொலை செய்யப் போவதாக தலிபான்களும் எச்சரிக்கை விடுத்திருக்கிறார்கள்.

பெனாஸிர் கொலை தொடர்பாக எவரும் இது வரையில் கைது செய்யப்படவுமில்லை, தண்டிக்கப்படவுமில்லை. ஆனால் முஷாரப்பின் ஆட்சிக் காலத்தில் பெனாசீர் கொலைக்கு தலிபான்களின் தலைவர் பெய்துல்லா மெக்ஷீத் என்பவரே காரணம் என்று அறிவிக்கப்பட்டது. அத்தலைவர் 2009 ஆம் ஆண்டு அமெரிக்க ஆளில்லா விமானத் தாக்குதலில் கொல்லப்பட்டு விட்டார். ஆனால் பூட்டோவின் புதல்வர் பிலாவால் பூட்டோ சர்தாரி தமது தாயாரின் கொலைக்கு முஷாரப்பே காரணம் என்று குற்றஞ்சாட்டியுள்ளார்.

### பொஸ்டன் குண்டு தாக்குதல்

பொஸ்டன் மரதன் போட்டி முடிவில் எல்லைக் கோட்டில் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல் தொடர்பான முதலாவது சந்தேகநபர் ரமர் லன் சர்னேவின் மனைவி வாழும் வீட்டிலிருந்து பொதி கணக்கில் தடயப் பொருள்களை அமெரிப்பப் புலனாய்வாளர்கள் கண்டுபிடித்திருப்பதாக அறிவித்திருக்கிறார்கள். 26 வயதான கெதரின் ரஸல் தமது கணவன் குண்டுத் தாக்குதல் சந்தேக நபருடன் வாழ்ந்த வீட்டில் சோதனையிட்ட புலனாய்வாளர்கள் டி என் ஏ - மரபணு தடயங்களைக் கண்டறிந்ததாகவும் அதன் மூலம் அந்தப் பெண்ணுக்கும் குண்டுத் தாக்குதலில் தொடர்பிருக்கலாம் என்று கண்டறிந்திருப்பதாகவும் அறிவித்திருந்தார்கள். குண்டுத் தாக்குதலில் சம்பந்தப்பட்டிருப்பதாக சந்தேகிக்கப்படும் இரண்டாவது சந்தேக நபர் சார்பான வழக்கு இப்போது விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றது. [illegible] கொல்லப்பட்டு 260 பேர் வரை காயமடைந்திருந்தனர்.

### கவுன்டனாமே சிறை மூடப்படும்

கியூபாவில் குவாண்டனாமோ சிறையில் வைக்கப்பட்டுள்ள பயங்கரவாத செயற்பாடுகளில் சம்பந்தப்பட்டவர்கள் என்று கருதப்படும் கைதிகளை விடுவிக்கும் விதத்தில் அச்சிறைச்சாலையை மூடுவது குறித்து அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா சிந்தித்து வருகின்றார். வெள்ளை மாளிகையில் தாம் இரண்டாவது தடவையாகவும் அதிபராகத் தெரிவுசெய்யப்பட்டு 100 நாள்கள் ஆகிவிட்டதையொட்டி பத்திரிகையாளர்கள் கூட்டத்தில் பேசும்போது இந்தக் கருத்தை ஒபாமா வெளியிட்டார்.

கவுன்டனாமோபேயில் அமெரிக்க இராணுவத்தால் நடத்தப்படும் தடுப்புக் காவல் நிலையத்தை மூடிவிடுவது தொடர்பாக தாம் மீண்டும் நாடாளுமன்றத்துடன் கலந்துரையாட விரும்புவதாக அவர் தெரிவித்துள்ளார்.

கவுன்டனாமோபே சிறையில் சாகும்வரை பட்டினிபோராட்டத்தில் 100 கைதிகள் ஈடுபட்டிருக்கும் நிலையில் அதிபரின் இந்த அறிவித்தல் வந்திருக்கிறது. 2008 ஆம் ஆண்டு முதல்தடவை அதிபர் பதவிக்குப் போட்டியிட்ட வேளையிலேயே குவாண்டனாமோ சிறையை மூடுவது பற்றி ஒபாமா அறிவித்திருந்தார்.

ஆனால் காங்கிரஸ் சபையின் அங்கீகாரம் கிடைக்காமையால் அந்த விடயம் கிடப்பில் போடப்பட்டிருந்தது.

சிறைக்கைதிகள் அமெரிக்க இராணுவ அதிகாரிகளால் துன்புறுத்தப்படுவதாகவும் அவர்களின் புனித குர்றான் நூல் இழிவு படுத்தப்பட்டதாகவும் குற்றச்சாட்டுக்கள் எழுந்தன. இதனால் 100 கைதிகள் வரை சாகும்வரை பட்டினி கிடக்கும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

குவாண்டனாமோவில் எமக்கு பிரச்சினைகள் இருப்பது எனக்கு ஆச்சரியமளிப்பதாய் இல்லை. குவாண்டனாமோ பாதுகாப்பாக இல்லை. அது பெரும் செலவை ஏற்படுத்துகிறது. அதனால் அமெரிக்க சார்பு நாடுகளின் ஆதரவு குறைகின்றது என்றார் ஒபாமா.

எனவே இது எமது நாட்டின் நலன்களுக்கு உதவுவதாய் இல்லை என்பதால் மீண்டும் காங்கிரஸ் சபையில் இதை விவாதிக்கும்படி கேட்கவிரும்புகிறேன் என்றார் ஒபாமா. கவுன்டனாமோபே கடல் பகுதியானது 19 ஆம் நூற்றாண்டிலிருந்து அமெரிக்காவின் வசம் இருந்துவருகின்றது. கியூபாவில் ஸ்பானிய காலனித்துவ ஆட்சியை அகற்றுவதற்கு உதவியதை அடுத்து அப்பகுதியைத் தன் வசம் வைத்துக் கொள்ள அமெரிக்கா கியூபாவுடன் ஒப்பந்தம் ஒன்றை செய்து கொண்டது. கரிபியன் பகுதியில் இந்தப் பிரதேசம் தனது மூலோபாய கொள்கைகளுக்கு அவசியம் என்று கருதியமையால் அமெரிக்கா மேலும் சில பகுதிகளை 1959 இல் முடிவடைந்த கியூபா புரட்சியின் பின் தன்னுடைமை ஆக்கிக் கொண்டது.

இந்தப் பிரதேசத்தைத் தனக்குத் திருப்பித் தரும் படியும் குவாண்டனாமோவில் வைத்திருக்கும் முகாம் மற்றும் சிறையை மூடிவிடும்படியும் கியூபா வற்புறுத்தி வருகின்றது.

சில தினங்களுக்கு முன் ஜெனிவா மனித உரிமைகள் சபையில் உரை நிகழ்த்திய கியூபா வெளியுறவு அமைச்சர் புருனோ றொட்றிகுஸ் குவாண்டனாமோ சிறையை மூடிவிட்டு அந்தக் கடற்பிரதேசத்தைத் தங்களிடம் திருப்பித் தர வேண்டும் என்று அமெரிக்காவை வற்புறுத்தினார்.

குவாண்டனாமோ சிறையில் கைதிகள் மீது மனித உரிமை மீறல்கள் இடம்பெற்று வருவதாகக் கூறிய அவர் அந்தப் பகுதியை அமெரிக்கா அபகரித்து வைத்துக் கொண்டிருக்கிறது என்றும் குறிப்பிட்டார்.

குவாண்டனாமோ சிறை அமெரிக்க நலன்களுக்கு மாறாக இருப்பதால் அதனை மூடிவிட விரும்புவதாக அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா வெள்ளை மாளிகை நிகழ்ச்சியொன்றில் அறிவித்ததையடுத்து கியூபா அமைச்சரின் இந்த கருத்து வெளியாகியுள்ளது.

### சனிக்கிரகத்தில் காணப்படும் மிகப்பெரிய சூறாவளி

சனிக்கிரகத்தில் நிகழும் கடும் சூறாவளியொன்றின் அதிஅற்புதமான வர்ண காட்சிப்படம் ஒன்று நாசாவின் காசினி விண்கலம் பூமிக்கு அனுப்பி வைத்திருக்கிறது. பூமியில் அவ்வப்போது ஏற்படுகின்ற சூறாவளிகளை ஒத்ததாக இந்தச் சூறாவளியும் காணப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சனிக்கிரக சூறாவளியின் மையப்பகுதியானது 1,250 மைல் விஸ்தீரணம் கொண்டிருப்பதாகவும் அது பூமியில் சாதாரணமாகத் தென்படும் சூறாவளிகளைவிட 20 மடங்கு அகலமானதெனவும் கூறப்படுகின்றது.

சாதாரணமாக பூமியில் தோன்றும் சூறாவளிகளின் மையப் பகுதி மிகச் சிறிதாகவும் வெளிவட்டம் மிக விஸ்தீரணம் கொண்டதாகவும் இருக்கும். ஆனால் சனிக்கிரக சூறாவளியின் மையப்பகுதி மட்டுமே 1250 மைல் என்றால் அதன் வெளிவிளிம்பு பல ஆயிரம் மைல்கள் அகலம் கொண்டதாக இருக்க வேண்டும். என்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

பூமியில் உருவாகும் சூறாவளியின் மிக கூடுதல் வேகமுள்ள காற்றானது அதன் மையப் பகுதியிலேயே காணப்படும். வெளிவிளிம்பை அடையும் போது வேகம் குறைந்து பலவீனமடையும். சனிக்கிரகத்தின் சூறாவளியின் விளிம்பில் காற்றின் வேகம் 330 மைல் என்றால் அதன் நடுப்பகுதியில் காற்றின் வேகமானது பூமியில் தென்படும் மிகப் பலமான சூறாவளிகளின் வேகத்தை விட நான்கு மடங்கு அதிகமாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. வழக்கமாக பூமியில் தோன்றும் சூறாவளிகள் பெருங்கடல்களில் இருந்துவரும் நீர் ஆவியை உள்ளீர்த்து சக்தி பெறுகின்றன. ஆனால் சனிக்கிரகத்தில் தண்ணீர் கிடையாது என்பதால் அதன் ஸீநதரசன் சூழலில் காணப்படும் சிறிதளவு நீராவியை உள்ளீர்த்துக் கொண்டு வேகம் பெறுகிறது என்கிறார்கள். இது பற்றிய இன்னொரு ருசிகரமான தகவல் என்னவென்றால் பூமியில் தோன்றும் சூறாவளிகள் பெரும்பாலும் வெப்ப மண்டலத்தில் அட்சர ரேகையிலிருந்து வடக்கு நோக்கியே நகர்வதுண்டு. ஆனால் சனிக்கிரகத்தின் சூறாவளியானது அக்கிரகத்தின் வட துருவத்தில் தோன்றியிருப்பதால் அதற்கு மேல் நகர முடியாது என்ற நிலையில் நிரந்தரமாக அங்கு நிலை கொண்டுள்ளது என்பதாகும். அதனால் இந்த சனிக்கிரக சூறாவளியானது பல வருடங்களாகவே அங்கு இருந்து வருவதாக நாசா விஞ்ஞானிகள் கருதுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org